ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

# முக்கிய அரசு ஆணைகள்
# 1997

©
தமிழ்நாடு அரசு
1999

# முக்கிய அரசு ஆணைகள்
# 1997

# பொருளடக்கம்.


| அரசாணை/ கடிதம் எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 63 | 1-1-1997 | இடைநிலை ஆசிரியர் தகுதி பெற்ற நபர்கள் இல்லாமையால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல். | 1 |
| 79 | 5-5-1997 | ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வகக் கட்டிடம் கட்டுதல். | 3 |
| 80 | 5-5-1997 | மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூட உபகரணங்கள் வழங்குதல். | 5 |
| 81 | 5-5-1997 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் கவரப்படாத இடத்தில் இரண்டு அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளிகள் அமைத்தல். | 7 |
| 82 | 5-5-1997 | 20 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு படிபெருக்கிகள் வழங்குதல் | 10 |
| 83 | 5-5-1997 | உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வு மேசையுடன் கூடிய நீள் இருக்கைகள் வழங்குதல் | 12 |
| 84 | 5-5-1997 | நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்துதல். | 15 |
| 95 | 15-5-1997 | உண்டுறை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வழங்குதல். | 19 |
| 96 | 15-5-1997 | ஆசிரியர் குடியிருப்பு கட்டுதல். | 21 |
| 109 | 24-5-1997 | பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் | 23 |
| 149 | 28-8-1997 | பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுதல் நிர்வாக ஒப்பளிப்பு அளித்தல் | 25 |
| 110 | 24-5-1997 | 12 ஆதிதிராவிடர் நல/அரசு உண்டுறை மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடங்கள் கட்ட நிதி ஒப்பளிப்பு | 27 |
| 6 | 17-6-1997 | Exclusion of certain categories of teachers from purview of Tamil Nadu Public Service Commission | 29 |
| 125 | 27-6-1997 | நீலகிரி மாவட்டம், காந்தல் செஞ்சிலுவை மழலையர் பள்ளிக்கு 1995-96 ஆம் ஆண்டுக்கு உணவு மானியம் ரூ.58,862 ஒப்பளிப்பு செய்தல் | 31 |
| 130 | 3-7-1997 | கணிப்பொறிக் கல்வியைத் துவக்குதல் | 33 |
| 131 | 11-7-1997 | Upgradation of Adi-Dravidar and Tribal Welfare Middle Schools into High Schools —Powers delegated to Head Masters to draw pay and other bills | 36 |
| 140 | 4-8-1997 | கைப்பந்து, கூடைப் பந்து, மட்டைப் பந்துக்கான பொருட்கள் வழங்குதல்- விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துதல் | 38 |
| 150 | 28-8-1997 | Upgradation of Adi-Dravidar and Tribal Welfare Middle Schools into High Schools—Powes delegated to Head Master to draw pay and other bills. | 40 |
| 153 | 3-9-1997 | பள்ளிகளில் பணிபுரியும் சில்லறைச் செலவினப் பணியாளர்களின் பணியினை விதிகள் தளர்வு செய்து வரன் முறை செய்தல் | 42 |
| 165 | 1-10-1997 | நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்பொழுது தொடக்கப் பள்ளிகள் தனித்து இயங்கவும் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்கள் பள்ளிக்கூடங்கள் தோற்றுவித்தல் | 48 |
| 73 | 5-5-1997 | 40 புதிய ஆதிதிராவிடர் நல விடுதிகள் தோற்றுவித்தல் | 51 |

| அரசாணை/ கடிதம் எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 16541/ஆதிந 9(2) 97-3 | 5-8-1997 | 40 புதிய ஆதிதிராவிடர் நல விடுதிகள் தோற்றுவிக்க ஆணை—பின்னேற்பு மற்றும் திருத்தங்கள் | 55 |
| 22930/ஆதிந 9(2) 97-2 | 21-10-1997 | 40 புதிய ஆதிதிராவிடர் நல விடுதிகள் தோற்றுவிக்க ஆணை—பின்னேற்பு மற்றும் திருத்தங்கள் | 57 |
| 74 | 5-5-1997 | ஆதிதிராவிடர் நல இல்ல 500 மாணவர்களுக்கு அறைகலன்கள் வழங்குதல் | 59 |
| 75 | 5-5-1997 | சென்னை, வில்லிவாக்கம் அரசு கல்லூரி மாணவர் விடுதியைச் சுற்றி சுவர் எழுப்புவதற்கு செலவினம் அனுமதி. | 61 |
| 76 | 5-5-1997 | சென்னை மாவட்டம், இராயபுரம் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு சின்டெக்ஸ் குடிநீர் தொட்டி அமைத்தல். | 63 |
| 77 | 5-5-1997 | சென்னை மாவட்டம், வில்லிவாக்கம் அரசு கல்லூரி மற்றும் தொழிற் நுட்ப பயிற்சி விடுதிகளுக்கு புதிய மின் வேலைகள் செய்தல். | 65 |
| 85 | 5-5-1997 | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்குதல் | 67 |
| 87 | 5-5-1997 | 301-க்கு மேற்பட்ட மாணவ/மாணவியரைக் கொண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு குழல் விளக்குகள், வாளிகள் மற்றும் எழுதுபொருள்கள் வழங்குதல். | 70 |
| 99 | 19-5-1997 | விடுதிகளில் பூச்சிக் கொல்லி மருந்து தெளித்தல். | 72 |
| 100 | 19-5-1997 | விடுதிகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல். | 74 |
| 101 | 19-5-1997 | சென்னை மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கும் திட்டத்தினை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல். | 76 |
| 102 | 19-5-1997 | மாணவர்/மாணவியர் சேர்க்கைக்கான வருமான வரம்பினை உயர்த்துதல். | 78 |
| 103 | 19-5-1997 | பயிற்சியாளர்கள் விடுதியில் சேர்த்திட நலவரம்பினை தளர்த்துதல். | 80 |
| 104 | 20-5-1997 | மைய அரசு நிதி உதவித் திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர் விடுதிகள் கட்டுதல். | 82 |
| 43 | 5-8-1997 | மைய அரசு நிதி உதவித் திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மாணவிகள் விடுதிகள் கட்டுதல்—விடுதிகள் தெரிவு செய்தல். | 85 |
| 122/ஆதிந 9(2) 97-7 | 19-9-1997 | மைய அரசு நிதி உதவித் திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி கட்டிடம் கூடுதலாக 6 விடுதிகள். | 87 |
| 119 | 12-6-1997 | கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதி மாணவ/மாணவியர்க்கான உணவுக் கட்டணத்தை உயர்த்துதல். | 89 |
| 174 | 4-11-1997 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் நகரம் ராஜா காலனி அரசு மாணவர் விடுதி 10-9-1997 அன்று இரவு பெய்த மழையில் விடுதி கான்கிரீட் சிலாப் இடிந்து விழுந்ததில் செல்வன் வி. விஜயகுமார் இறந்தது—முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் | 91 |
| 184 | 21-11-1997 | ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு எடுப்பு செய்தல் செலவினம் | 93 |
| 78 | 5-5-1997 | ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் 9 மற்றும் 10-வது வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 1997-98 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின் கீழ் சீருடை வழங்குதல் | 95 |
| 94 | 11-5-1997 | ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகளில் தங்கி +1 மற்றும் +2 பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சீருடை வழங்குதல். | 97 |

| அரசாணை/ கடிதம் எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 37 | 24-7-1997 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்களுக்கு 1997-1998 ஆம் ஆண்டு மற்றும் தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்கு சீருடை வழங்க கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மூலம் துணிகள் வாங்க ஏதுவாக அரசாணை (நிலை) எண் 75, நிதித்துறை, நாள் 19-2-1997-லுள்ள ஆணைகளுக்கு விலக்கு அளித்து ஆணை. | 99 |
| 213 | 29-8-1997 | பாரத ஸ்டேட் வங்கியின் நடப்புக் கணக்கிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்கத்தில் தொகையினை தாட்கோ நிறுவனத்தின் அரசு தன் வைப்புக் கணக்கிற்கு மாற்றுதல். | 101 |
| 160 | 19-9-1997 | மருத்துவம்—பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் மற்றும் பல்நோக்குத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்குக்கானது—திட்ட முறையில் மாற்றம். | 103 |
| 97 | 17-5-1997 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குனர் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள் பெயரிலுள்ள தன் பெயர் வைப்புக் கணக்குத் தொகையினை அதிகரித்தல் மற்றும் மாற்றி அமைத்தல். | 106 |
| 114 | 3-6-1997 | பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட மைய/மாநில அரசு கல்வி உதவித் தொகை விண்ணப்பப் படிவங்கள் அச்சிட்டு வழங்க அனுமதி. | 109 |
| 124 | 25-6-1997 | பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்வி பயிலும் மாணவர்களுக்கான மைய/ மாநில அரசு கல்வி உதவித் தொகை ஒப்பளிப்புப் பணிகளை கணினி மூலம் செயல்படுத்துதல். | 111 |
| 130 | 15-5-1997 | 1997-98ஆம் ஆண்டிற்கான உதவித் தொகை விண்ணப்பங்கள் ஒப்படைப்பு மற்றும் அனுப்புகை தற்காலிக முன்பணம் ஒப்பளிப்பு. | 114 |
| 217 | 24-7-1997 | பெரியார், மதுரை மற்றும் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டங்கள் தற்காலிக பணியாளர்கள் நியமனம் குறிப்பிட்ட நாட்களுக்கு மேலும் நீடித்தல். | 116 |
| 112 | 27-5-1997 | ஆதி திராவிடர் மாணவியரின் கல்வி மேம்பாடு தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஆதி திராவிட மாணவிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை அளித்தல். | 118 |
| 17322 ஆதி ந 9(1) 97-2 | 28-7-1997 | தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஆதி திராவிடர் மாணவிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் 1997-1998ஆம் ஆண்டிற்கு நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடுதல். | 120 |
| 164 | 29-9-1997 | தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஆதி திராவிட மாணவிகளுக்கு ஊக்குவிப்பு வழங்கும் திட்டங்களை பழங்குடியினர் மாணவியர்களுக்கும் நீட்டிக்க ஆணை. | 122 |
| 52 | 4-3-1997 | ஆதி திராவிடர் மாணவர்களுக்கு முன் தேர்வுப் பயிற்சிகள்—அசோசியேட் வங்கிகளுக்கான ஸ்டேட் வங்கிக் குழு/ வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம்/ மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவை 1997 ஆம் ஆண்டுக்கு அனைத்து பல்வேறு போட்டிகளுக்கு செல்லும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு முன் தேர்வுப் பயிற்சிகள நடத்துதல்—தாட்கோ வசமுள்ள சிறப்பு மத்திய நிதி உதவி வழங்கி ஒப்பளிப்பு அளித்தல். | 125 |
| 69 | 17-4-1997 | தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகள், விண்ணப்பப்படிவம் மற்றும் பதிவுக் கட்டணங்கள். வயது வரம்பு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு விலக்களித்தல். | 127 |
| 20 | 17-4-1997 | ஆதி திராவிடர்களுக்கு பிளாஸ்டிக் பிராசசிங் டெக்னாலஜியில் சிறப்பு சான்றிதழ் வகுப்புப் பயிற்சி சென்னை, கிண்டியிலுள்ள மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம் (சிப்பெட்) மூலம் பயிற்சியளித்தல்—தாட்கோ வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து நிதி வழங்கி ஒப்பளிப்பு ஆணை. | 128 |

| அரசாணை/ கடிதம் எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 71 | 23-1-1997 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் மாணவியர்களுக்கு பட்டயக் கணக்காயர் பயிற்சி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துதல். | 130 |
| 22 | 24-1-1997 | 1997-ஆம் ஆண்டு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கு செல்லும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி-மத்திய அரசின் ஆதரவு பெற்ற பயிற்சி மற்றும் அதைச் சார்ந்த திட்டங்களின்கீழ் செலவினம் ஒப்பளிக்கப்பட்டது - அரசாணை மீண்டும் செல்லுபடியாக்கப்படுவது. | 132 |
| 27 | 14-5-1997 | தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி 1997-1998க்கான செலவு-ஏற்பளிப்பு வழங்க இயக்குனருக்கு ஆணையுரிமை வழங்குதல். | 134 |
| 138 | 1-8-1997 | மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள்-ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவிகளுக்கு மட்டும் கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு பிரிவு தொடங்குதல். | 136 |
| 22607 ஆதிந 9(1)/97 | 21-8-1997 | மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள்- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு மட்டும் கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புப் பிரிவு தொடங்குதல். | 138 |
| 28669/யுI/97-1 | 12-8-1987 | 17 டயட் நிறுவனங்களில் SC/ST மாணவர் சேர்க்கை மற்றும் செலவினம் குறித்து. | 139 |
| 158 | 17-9-1997 | இடைநிலை ஆசிரியர் பயிற்சி பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டின்படி பணியிடங்கள் நிரப்புவதில் உள்ள தேக்க நிலையை நீக்க 17 மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்களில் (DIET) அவர்களுக்கு மட்டும் கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பிரிவு தொடங்க நிதி ஒப்பளிப்பு. | 141 |
| 161 | 22-9-1997 | சென்னை முன் தேர்வுப் பயிற்சி மையத்தின் முதல்வர் மற்றும் பேராசிரியர் பணியிடம் - மூன்று அல்லது நான்கு ஆண்டு காலம் மிகாமல் அயற்பணியில் நிரப்பப்படுதல். | 144 |
| 182 | 11-11-1997 | முன்தேர்வு பயிற்சி மையம், சென்னை-மைய அரசால் பொறுப்பேற்கப்பட்ட மைய மாநில சமபங்கீடு திட்டத்தின் கீழ் சென்னை முன்தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களின் உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.400 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி ஒப்பளிப்பு. | 145 |
| 184 | 12-7-1997 | ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பல்வேறு பயிற்சித் திட்டங்கள் விளம்பரம் வாயிலாகப் பயிற்சி நிறுவனங்களைத் தேர்வு செய்தல்- தாட்கோ வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து நிதி வழங்கி ஒப்பளிப்பு அளித்தல். | 147 |
| 246 | 11-11-1997 | முன்னோடித் தேர்வு பயிற்சி நிலையம், சென்னை-முன் தேர்வு 1997-ல் (Preliminary Examination 1997) தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு சிறப்பு கருத்துரை/அறிவுரை வகுப்பு 18-8-1997 அன்று நடத்தப்பட்டது. - செலவினம் ஒப்பளிப்பு. | 149 |
| 178 | 12-11-1997 | ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு சார்ந்த பல்வேறு பயிற்சித் திட்டங்கள் - விளம்பரம் வாயிலாக பயிற்சி நிறுவனங்கள் தேர்வு செய்ய தாட்கோ வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து நிதி வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. - பயிற்சி நிறுவனங்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்ய அரசுக்கு பரிந்துரை நல்க சிறு குழு அமைத்தல். | 151 |
| 182 | 11-11-1997 | முன்தேர்வுப் பயிற்சி மையம், சென்னை-மைய அரசால் பொறுப்பேற்கப்பட்ட மைய, மாநில சமபங்கீடு திட்டத்தின் கீழ் சென்னை முன்தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களின் உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 400 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தி ஒப்பளிப்பு. | 153 |

| அரசாணை/ கடிதம் எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 91 | 1-1-1997 | மாநில திராவிடர் நலக்குழு- திருத்தியமைத்தல். | 155 |
| 29 | 1-6-1999 | ஆதிதிராவிடர் நலக்குழு-திருத்தியமைக்கப்பட்ட முதல் கூட்டம் நடத்துதல் செலவினம் ஒப்பளிப்பு. | 159 |
| 65 | 9-4-1997 | பணி நியமனங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு மற்றும் சரியான பங்கேற்பு கண்காணிக்கவும் உறுதி செய்யும் துறைகளில் பற்றாளரைக் குறித்தறிதல். | 161 |
| 156 | 13-9-1997 | இட ஒதுக்கீடு-அரசுத் துறை மற்றும் அரசு சார் நிறுவனங்கள்-நியமனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு- ஒதுக்கீடு விதிகள் கடைப்பிடிக்கப்படுதல் மற்றும் ஒதுக்கீடு இருந்தும் நிரப்பப்படாது உள்ள பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமனத்தை உறுதி செய்தல்-மாநில அளவிலான கண்காணிப்புக் குழு அமைத்தல். | 163 |
| 163 | 29-9-1997 | அரசுத்துறை/பொதுத்துறை நிறுவனங்கள் வாரியங்கள் மற்றும் அனைத்திந்திய பணிகள் ஆகியவற்றில் பணியாளர் தேர்வுக்காக அமைக்கப்படும் தேர்வுக்குழுக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆதிதிராவிடர் உறுப்பினர் இடம் பெறுதல். | 166 |
| 166 | 16-10-1997 | இடம் ஒதுக்கீடு-சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகள்-ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நாடுநர்கள் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிக்கு சில தகுதிகள் தளர்த்தி சிறப்புத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல். | 167 |
| 11 | 27-10-1997 | மாநில அளவிலான கண்காணிப்புக் குழு - நியமனங்களில் ஒதுக்கீடு விதிகள் கடைப்பிடித்தல் மற்றும் ஒதுக்கீடு இருந்தும் நிரப்பப்படாது உள்ள பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமனத்தை உறுதி செய்தல் - ஆய்வுக் கூட்டம் - செலவினம் ஒப்பளிப்பு. | 170 |
| 5 | 9-1-1997 | சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து செயல்படுத்தப்படும் பட்டு வளர்ச்சித் திட்டங்கள்- பயனாளிகள் தேர்வு செய்தல். | 174 |
| 6 | 10-1-1997 | கலப்பினக்கன்று வளர்ப்புத் திட்டம்- 1995-1996ஆம் ஆண்டிற்கு அனுமதித்தது- மாட்டுத் தீவனத்தில் விலை ஏற்றம் - கூடுதல் தொகை மானியமாக வழங்குதல். | 176 |
| 19 | 10-2-1997 | கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், முதலிப்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள பின்னலாடைத் தொழிற்பேட்டைக்கு அரசு முதலீட்டு மான்யம் வழங்குவது. | 178 |
| 44 | 11-3-1997 | துணை செவிலியர் பயிற்சி - அல்ஃபோசோ இண்டர் நேஷனல் ஸ்தாபனம் - 25 ஆதி திராவிடர் பெண்களுக்கு துணைச் செவிலியர் பயிற்சி வழங்க மத்திய சிறப்பு நிதியுதவித் தொகையிலிருந்து நிதியுதவி அனுமதி உத்திரவு. | 180 |
| 66 | 10-4-1997 | சிறப்பு மத்திய நிதி உதவி - கதர் கிராமத் தொழில் வாரியம் - காதித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இதுவரையிலும் அனுமதிக்கப்பட்டு செலவழிக்கப்படாமல் உள்ள தொகையினை தாட்கோவிற்கு திரும்பச் செலுத்துதல். | 182 |
| 72 | 2-5-1997 | சிறப்பு உள்ளடக்கத்திட்டம் - தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் - 1996-1997 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் - கலப்பினக்கன்று வளர்ப்புத் திட்டம் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் - சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து மானியம் - ஒப்பளித்தல். | 185 |
| 88 | [illegible]-5-1997 | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் - தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் - 1997-98 ஆம் ஆண்டிற்கா[illegible] - கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம் மற்றும் [illegible] நவித் தொகையி[illegible] | 189 |

| அரசாணை/ கடிதம் எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 91 | 13-5-1997 | சிறப்பு உள்ளடக்கத் திட்டம்—1992-93—ஆடு அலகுகள் நிறுவுதல்—ஊழியர்களுக்குக் கூடுதல் செலவினம் மேற்கொண்டது—ஒப்பளிப்பு. | 193 |
| 92 | 13-5-1997 | சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் பட்டு சுற்றுதல் மற்றும் பட்டு முறுக்கேற்றுதல், தொழில்பேட்டை அமைத்தல்—பயனாளிகளுக்கு பயிற்சி அளித்தல். | 195 |
| 115 | 4-6-1997 | தாட்கோ—மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டம்—சென்னை மாவட்டத்தில் 30 ஆதி திராவிடப் பெண்களுக்கு ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி அளித்து ஆட்டோ வாங்கிக் கொடுக்க மத்திய சிறப்பு நிதியிலிருந்து நிதி அனுமதி. | 197 |
| 118 | 10-6-1997 | சிறப்பு உள்ளடக்கத் திட்டம்—வேளாண்மைத் துறை—1996-1997 ஆம் ஆண்டிற்கான திட்டம்—விதைப் பண்ணைகள் அமைத்தல்—சிறப்புமைய உதவித் தொகையிலிருந்து மானியம் ஒப்பளித்தது. | 199 |
| 126 | 27-6-1997 | கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், முதலிப்பாளையத்தில் பின்னலாடைத் தொழிற்பேட்டை அலகுகளுக்கு அரசின் முதலீட்டு மானியம், தாட்கோவின் விளிம்புத் தொகை, பங்கு முதலீட்டுக்கு சிறப்பு மைய நிதியுதவித் தொகையிலிருந்து வழங்கவிருக்கும் பங்குத் தொகை ஆகியவற்றினை விடுவிப்பது. | 201 |
| 146 | 8-8-1997 | ஆதி திராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்—ஆதி திராவிடர் நல சிறப்புக்கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி 1997-98 ஆம் ஆண்டிற்கான முதல் தவணை நிதியுதவியை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்திடம் ஒப்படைத்தல். | 204 |
| 146 | 8-8-1997 | Economic Development Schemes for Scheduled Castes — Special Central Assistance to Special Components Plan for Scheduled Castes for the year 1997-98—Release of first instalment to Tamil Nadu Adi-Dravidar Housing and Development Corporation. | 206 |
| 151 | 29-8-1997 | தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்—தாட்கோ மற்றும் அரசு நிறுவனங்கள் நிதி உதவி அரசு ஊழியர்களின் குடும்பத்தினர்கள் நிதியுதவி பெறுதல். | 208 |
| 169 | 20-10-1997 | கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம்—ஆய்வு செய்ய பணியாளர் நியமனம்—நிதியுதவி அனுமதி. | 210 |
| 172 | 27-10-1997 | தொழில் முனைவோர் முன்னேற்றத் திட்டம்—ஆதி திராவிடர் பொறியியல் பட்டதாரிகளுக்கு சிப்காட் மூலம் தொழிற் பயிற்சி—சிறப்பு மைய நிதியுதவியிலிருந்து நிதி அனுமதி. | 214 |
| 41 | 22-5-1997 | தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்—சிதம்பரம் நந்தனார் அரசு விடுதி வளாகத்தில் சுவாமி சகஜானந்தா நினைவரங்கம் கட்டி முடிக்க நிதி ஒதுக்கம். | 217 |
| 154 | 21-5-1997 | டாக்டர் அம்பேத்கார் தமிழ்நாடு அரசு விருது உயர் மட்டக் குழுவின் உறுப்பினர்களாகச் சட்ட மன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் நியமனம். | 219 |
| 120 | 12-6-1997 | கொடுமைகளால் பாதிக்கப்பட்டோர்—1997-98 வன் கொடுமைக்கு ஆளானோர், அவர்தம் குடும்பத்தார் மற்றும் அவரைச் சார்ந்திருப்போருக்கும் தீருதவி அளித்தல். | 221 |
| 128 | 2-7-1997 | கொடுமைகளால் பாதிக்கப்பட்டோர்—1997-98 வன் கொடுமைக்கு ஆளானோர் அவர்தம் குடும்பத்தார் மற்றும் அவரைச் சார்ந்திருப்போருக்கும் தீருதவி அளித்தல நிதி ஒதுக்கீடு. | 224 |

| அரசாணை/ கடிதம் எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 134 | 17-7-1997 | பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன் கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989—உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடுசெய்யும் வழக்குகள். | 226 |
| 142 | 5-8-1997 | வன்கொடுமைக்கு ஆளான பட்டியலில் கண்ட இனத்தவர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் அவர் தம் குடும்பத்தார் மற்றும் அவரைச் சார்ந்திருப்போருக்கு தீருதவி அளித்தல். | 228 |
| 144 | 6-8-1997 | இறந்தவர்களின் ஈமக்கிரியைச் சடங்கிற்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 200 லிருந்து ரூ 500 ஆகவும் ஆண்டு வருமான வரம்பை ரூ. 5,000 விருந்து ரூ 24,000 ஆகவும் உயர்த்தல். | 231 |
| 177 | 12-11-1997 | ஆதி திராவிடர் நலம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு வார விழாவுக்கான செலவினங்களுக்காக ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு. | 233 |
| 183 | 14-11-1997 | தீண்டாமையை ஒழிக்க உறுதிமொழி—திருத்திய ஆணை. | 236 |
| 122 | 20-6-1997 | கொத்தடிமை மறுவாழ்வு திட்டங்களைச் செயல் படுத்துதல்—மாநில அளவில் தலைமைச் செயலரின் தலைமையில் உயர்மட்டக்குழு அமைத்தல். | 238 |
| 123 | 2-5-1997 | கொத்தடிமை ஒழிப்புப் பற்றி தொலைக் காட்சி மற்றும் வானொலி மூலம் விளம்பரம் செய்ய ஒலி, ஒளி நிகழ்ச்சிகள் தயாரித்தல். | 241 |
| 177 | 26-6-1997 | கொத்தடிமை முறை ஒழிப்பு - விழிப்பணர்ச்சி இயக்கம் நடத்துதல்—தேசிய அளவிலான கூட்டம் நடத்துவதற்கு அனுமதி மற்றும் கூடுதல் நிதி வழங்குதல். | 243 |
| 207 | 14-8-1997 | கொத்தடிமை முறை ஒழிப்பு—விழிப்பணர்ச்சி இயக்கம் நடத்துதல்—தேசிய அளவிலான கூட்டம் நடத்த கூடுதல் நிதி வழங்குதல். | 245 |
| 14 | 31-1-1997 | நில எடுப்பு நடவடிக்கைகள் முடிப்பதற்கான கால வரையறை—திருத்தப்பட்ட காலவரையறை (நில எடுப்பு தொடர்பான திட்டம் மற்றும் ஆய்வு குறித்த மதிப்பாய்வு) அறிக்கை. | 247 |
| 34287 நி.எ.4(2) 96-1 | 3-2-1997 | நில எடுப்பு—கிராமப்புறங்களில் நபர் ஒன்றுக்கு 3 சென்ட் வீதம் உயர்த்தி வழங்க ஆணையிட்டது. சில விளக்கங்கள் கோரியது—பதில் அளித்தல். | 254 |
| 31074 நி.எ.4(2) 96-1 | 7-2-1997 | நில எடுப்பு—தனியார் பேச்சுவார்த்தை மூலம் விலைக்கு வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத் தீர்வை மறும் பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கக் கோரியது. | 255 |
| 4416 நி.எ.4(2) 97-1 | 3-3-1997 | நில எடுப்பு அறிக்கை விளம்பரம்—மாவட்டங்களில் நாளேடுகளில் மாதாமாதம் வெளியிடுதல்—அறிவுரைகள். | 256 |
| 127 | 1-7-1997 | ஆதி திராவிடர்களுக்கான நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்களில் பொது நன்மைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களில் ஆக்கிரமிப்பு முறைப்படுத்துதல் அறிவுரைகள். | 257 |
| 3/9539 நி.எ.4(2) 96-2 | 23-7-1997 | தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கு நில எடுப்புச் சட்டம் 31/78-ன் கீழ் தீர்வாணை வழங்குமுன் நில எடுப்பு செய்தல்—பட்டா வழங்குதல் குறித்து. | 258 |
| 171 | 22-10-1997 | மாவட்டங்களில் சமத்துவபுரம் குடியிருப்பு அமைத்தல்—புதிய திட்டம்—செலவினம் ஒப்பளிப்பு. | 260 |
| 181 | 14-11-1997 | அரசு புறம்போக்கு நிலங்கள்—மறுப்பு இல்லாத இனங்களில் ஆக்கிரமிப்புகளை வரன் முறைப்படுத்துதல்—பேரறிஞர் அண்ணா நினைவு நாளை ஒட்டி பட்டா வழங்கும் வார விழா கொண்டாடுதல்—அறிவுரைகள். | 263 |

| அரசாணை/ கடிதம் எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 18 | 1-4-1997 | பழங்குடியினருக்கான சாதிச்சான்றிதழ் வழங்குவதை சரிபார்க்க மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் குழுக்கள் அமைப்பது. | 264 |
| 58 | 26-3-1997 | கணினி அச்சு மற்றும் தொலைநகல் இயந்திரம் வாங்குவது—செலவினம் வழங்குதல். | 267 |
| 160 | 30-5-1997 | நிழற்பட நகலெடுக்கும் கருவி வாங்குதல். | 269 |
| 67 | 15-4-1997 | பிரிக்கப்பட்ட மாவட்டங்கள்—பணியாளர்—மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகங்களுக்கு பணியாளர். | 271 |
| 52 | 20-3-1997 | State Government Guarantee for repayment of loan extended by NSFDC. | 275 |
| 105 | 22-5-1997 | தாட்கோவிற்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்கு மூலதன உதவி—1997-98 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் பங்கு விடுவித்தல். | 277 |
| 186 | 15-7-1997 | Appointment of Nominee of National Scheduled Castes/Scheduled Tribes Finance and Development Corporation as Director in the Board of Directors of TAHDCO—Thiru P.K. Das, Deputy General Manager (Project), National Scheduled Castes/Scheduled Tribes Finance and Development Corporation, New Delhi. | 279 |
| 227 | 22-9-1997 | தாட்கோ நிறுவனத்தின் இயக்குனர் குழுமம் மற்றும் பங்காளர் பட்டியல்—சில மாற்றம் செய்தல். | 281 |
| 231 | 24-9-1997 | தாட்கோ நிறுவனத்தின் இயக்குனர் குழுமத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் ஒருவரையும் சிப்காட்டின் சார்பில் ஒருவரையும் இயக்குனர்களாக நியமித்து ஆணை. | 283 |
| 34 | 5-5-1997 | 1997-98 ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத் திட்டம்—பழங்குடியினர் குக்கிராமங்களுக்கு மின் வசதி அளித்தல் | 285 |
| 35 | 5-5-1997 | 1997-98 ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத் திட்டம்—ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியில் உள்ள பழங்குடியினர் குக்கிராமங்களுக்கு குடிநீர் வசதி அளித்தல். | 287 |
| 36 | 5-5-1997 | 1997-98 ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத் திட்டம் - பண்டைய பழங்குடியினர்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள். | 289 |
| 37 | 5-5-1997 | 1997-98 ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத் திட்டம்—சிதறிவாழும் பழங்குடியினர்க்கான சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள். | 291 |
| 38 | 5-5-1997 | பழங்குடியினர் துணைத் திட்டம் 1997-98 ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்துதல்—ஒப்பளிப்பு. | 293 |
| 145 | 7-8-1997 | பழங்குடியினர் ஆய்வு மையம், உதகமண்டலம்—ஆட்சிக் குழு, நிதிக்குழு அமைக்கப்படல். | 295 |
| 11 | 3-9-1997 | 1997-98 ஆம் நிதி ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் செயல்படுத்துதல். | 299 |
| 59 | 6-11-1997 | தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மூலம் பழங்குடியினர்களுக்காக 1997-98 ஆம் ஆண்டில் திட்டங்கள் செயல்படுத்துவது. | 316 |



—0—

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் - இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் - இடைநிலை ஆசிரியர் தகுதி பெற்ற நபர்கள் இல்லாமையால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.7) துறை.

*அரசாணை (நிலை) எண் 63* — *நாள்: 1-4-1997*

படிக்கப்பட்டது:—

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேர்முகக் கடித ந.க.எண் எ3/32267/96, நாள் 8-10-96 மற்றும் 7-11-96.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கடிதம் ப.ப. எண் 1/59412/96, நாள்: 25-10-96.
3. அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித்துறை, நாள்: 14-3-97.

---

**ஆணை:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்றும் அப்பணியிடங்களை நிரப்ப இடைநிலை ஆசிரியர் தகுதிபெற்ற நபர்கள் வேலைவாய்ப்பகத்தில் காத்திருப்போர் பட்டியலில் இல்லாததால் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக வைக்கப்படுவதைத் தவிர்க்க, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு இடைநிலை ஆசிரியப் பணியிடங்களை நிரப்பலாம் என்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கோரியுள்ளார். அண்மையில் சென்னையில் ஆய்வை மேற்கொண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தேசிய ஆணையத்தின் தலைவர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பின்னடைவைக் கடுமையாகச் சாடிச் சென்றுள்ளார். குறிப்பாக இடைநிலை ஆசிரியர் நியமனத்திலுள்ள பின்னடைவைச் சுட்டிக்காட்டி அதைச் சீர் செய்வதற்கு வழிமுறைகளை மேற்கொள்வதைக் கருத்தில் கொண்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்தினையும் ஏற்று காலியாகவுள்ள இடைநிலை ஆசிரியப் பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டதாரிகளைக் கொண்டு நிரப்ப தீர்மானித்துள்ளது.

2. அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித்துறை, நாள்: 14-3-97-ல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனச்சுற்றில் காலியாக உள்ள 1,340 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை வேலைவாய்ப்பக காத்திருப்போர் பட்டியலிலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பவும் அவர்களுக்கு மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி மையம் (DIET) மூலம் குழந்தை மனநிலை குறித்து ஒருமாதப் பயிற்சி அளித்துக் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தனி நிகழ்வாக பணி நியமனம் செய்திட அரசு ஆணையிட்டுள்ளது:—

(i) இவ்வாறு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பணி நியமனம் செய்யப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர்க்குரிய ஊதிய விகிதம் தான் வழங்கப்படும். வேறெந்த சிறப்புச் சலுகையும் அளிக்கப்படமாட்டாது;

(ii) உயர்கல்வித் தகுதிக்கான சிறப்பு ஊதிய உயர்வு வழங்கும் திட்டம் இவர்களுக்குப் பொருந்தாது;

(iii) இவ்வாசிரியர்கள் பின்னர் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு நேரடி பதவி உயர்வோ, தனி நேர்வோ கோர முடியாது;

(iv) இவர்கள் மாநிலத்தில் எங்கு வேண்டுமானாலும் பணிபுரிய இசையவேண்டும்;

(v) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளடங்கிய உறுதிமொழிச் சான்று சம்பந்தப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து பெறப்படவேண்டும்;

3. இதே ஆணை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குயிடினர் நலத்துறையின் கீழுள்ள பள்ளிகளுக்கான இடைநிலை ஆசிரியர் நியமனங்களுக்கும் பொருந்துமாறு அரசு ஆணையிடுகிறது. போதுமான இடைநிலை ஆசிரியர் தகுதி பெற்றோர் காத்திருப்போர் ப்ட்டியலில் இல்லாதபோது பட்டதாரி ஆசிரியர் தகுதியுடன் வேலை வாய்ப்பின்றி காத்திருப்போர் பட்டியலில் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின நாடுநர்களை அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித்துறை, நாள்: 14-3-97-ல் உள்ள நிபந்தனைகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியப் பணி நியமனம் செய்ய அரசு ஆணையிடுகிறது.

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மேலே பத்தி 3-ல் உள்ள ஆணையினை நடைமுறைப்படுத்தி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசுச் செயலர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, சென்னை-5.

நகல்:

அரசுச் செயலர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-9.

**உதிரிகள்.**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

/உண்மை நகல்/

**ஆ. நடராசன்,**
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - பள்ளிகள் - *1997-98* ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டம் - ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வகக் கட்டிடம் கட்டுதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

*அரசாணை (நிலை) எண் 79.* *நாள்: 5-5-1997.*

*படிக்கப்பட்டது:—*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண். *அஜ5/40751/96, நாள்: 26-12-96, 17-2-97, 13-3-97 மற்றும் 24-4-97.*

---

***ஆணை:***

*1997-98* ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் இணைப்பிலுள்ள ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வகக்கூடம் கட்ட அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி பள்ளி ஒன்றுக்கு கட்டுமானச் செலவு ரூ. *5.50* இலட்சம் வீதம் (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதினாயிரம் மட்டும்) ஐந்து பள்ளிகளுக்கும் செலவு ரூ. *27.50* இலட்சம் (ரூபாய் இருபத்தி ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் மட்டும்) ஆகும். இந்த இறுதிநிலைச் செலவுக்கு அரசு ஒப்புதல் வழங்குகிறது.

*2.* பத்தி *1*-ல் குறிப்பிட்டுள்ள இணைப்பில் கண்ட ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வகக் கட்டிடம் கட்டுவதற்காக இறுதிநிலைச் செலவில் *40%* சதவீதத் தொகையான ரூ. *11.00* இலட்சம் (ரூபாய் பதினொன்று இலட்சம் மட்டும்) நடப்பு நிதி *(1997-98)* ஆண்டில் வழங்க அரசு ஒப்புதல் வழங்குகிறது.

*3.* மேலே பத்தி *2*-ல் ஒப்பளிக்கப்பட்ட ஆய்வகக் கட்டிடம் கட்டுமானச் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

> "*4225,* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு - *01.* ஆதிதிராவிடர் நலன் - *277.* கல்வி - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II- மாநிலத்திட்டம். JB. ஆதிதிராவிடர் நலப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் - *16.* பெரும்பணிகள்" *(4225 01 277* JB *1601).*

*4.* ஆய்வக் கட்டிடம் கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக செயல்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும், அதனைத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் 'அலுவல் பெயர்வைப்புத் தொகைக் கணக்கில்' செலுத்தவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இத்தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் சரிக்கட்டல் என்ற வகையில் வரவு வைக்கப்பட வேண்டும்:

> ``K. Deposits and Advances (b) Deposits not bearing interest. 8443.00 Civil Deposits 800 Other Deposits. AE. Deposits of Government Companies, Corporation, etc. 50 Deposits of TAHDCO (D.P.C. 8443.00.800 AE 500 A (Receipt) D.P.C. 8443 00 800 AE 5000 (Out go).

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 20180/நிதி (சந)/97, நாள்: 17-3-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்/திருநெல்வேலி கட்டபொம்மன்/ எம்.ஜி.ஆர். மாவட்டம்/விழுப்புரம் ராமசாமி படையாச்சியார்.
நகல்: சம்பந்தப்பட்ட உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்.
நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பள்ளிக்கல்வித்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதி மற்றும் பந (ஆதிந.1/அந) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

முஹம்மத் கலீலுலா,
பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண் 79, நாள்: 5-5-97.

## இணைப்பு

| வ.எண் | பள்ளியின் பெயர். | மாவட்டம். |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, நடுவிக்குறிச்சி | தஞ்சாவூர் |
| 2. | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி (பெண்கள்), நல்லம்மாள்புரம். | திருநெல்வேலி-கட்டபொம்மன் |
| 3. | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, பெத்தகளகாட்டூர் | எம்.ஜி..ஆர். |
| 4. | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, கவரை | விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் |
| 5. | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, கோலப்பன்சேரி | எம்.ஜி..ஆர். |

/உண்மை நகல்/

முஹம்மத் கலீலுல்லா,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - பள்ளிகள் - 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டம் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல் நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்குதல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

அரசு ஆணை (நிலை) எண் 80 நாள்: 5-5-97.

படிக்கப்பட்டது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண் அஹ/5/40751/96-11, நாள்: 3-1-97.

ஆணை:

1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் 4 அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ரூ. 1.00 இலட்சம் வீதம் ரூ. 4.00 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) இணைப்பில் கண்ட நான்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்க அரசு ஒப்புதல் வழங்குகிறது.

2. ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்க ஒப்பளிப்பு செய்த தொகையினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக் கணக்கிலிருந்து எடுத்து வழங்கிட அதிகாரம் அளிக்கப்படுகிறது.

3. ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்குவது தொடர்பான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2225. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01. ஆதிதிராவிடர் நலன் - 277 - கல்வி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் - பணிகள் - II. மாநிலத் திட்டம் - JG. சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் பள்ளிக்கல்வி - 19. இயந்திரமும் சாதனமும் - 01. வாங்குதல். (த.தொ.கு.2225 01 277 JG. 1918).

4. இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 20179/நிதி(சந)/97, நாள்: 14-3-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மாநில கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம், திருச்சி/வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர்.

நகல்:

சம்பந்தப்பட்ட மேனிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்.
கல்வி/நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அ.ந./ஆதிந.I) துறை, சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

முஹம்மத் கலீலுல்லா,
பிரிவு அலுவலர்.

இணைப்பு

| வ.எண் | மேனிலைப்பள்ளியின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, துறையூர் | திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். |
| 2. | ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, பாம்பாட்டிபட்டி | திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். |
| 3. | ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, (பெண்கள்), காட்டூர்பாப்பாகுறிச்சி. | திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். |
| 4. | ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, காரை | வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம். |

(உண்மை நகல்)

முஹம்மத் கலீலுல்லா,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் - பழங்குடியினர் நலன் - கல்வி 1997-98 ஆம் ஆண்டின் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் கவரப்படாத இடத்தில் இரண்டு அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளிகள் அமைத்தல்-ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந7) துறை.*

*அரசாணை (நிலை) எண் 81* *நாள்: 5-5-97.*

*படிக்கப்பட்டது:—*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண் க்யூ 2/28860/96, நாள்: 17-12-96.

---

***ஆணை:***

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சின்னம்பதி மற்றும் தாலிங்கி ஆகிய இரண்டு இடங்களில் அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளிகளை துவக்கக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இயக்குநரின் கருத்துருவை ஆய்வு செய்து, சின்னம்பதி, கோயம்புத்தூர் தெற்கு தாலுக்கா, கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் தாலிங்கி, உடுமலைப்பேட்டை தாலுக்கா, கோயம்புத்தூர் மாவட்டம் ஆகிய இரண்டு இடங்களில் இரண்டு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளிகளைத் துவக்க அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது.

3. மேலே பத்தி 2-ல் 1997-98 ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் அரசு பழங்குடியினர் உண்டுறை பள்ளிகளை, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் கவரப்படாத இடத்தில் அமைக்க இணைப்பில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளவாறு, இரண்டு பள்ளிகளுக்கும் சேர்த்து, தொடரும் செலவாக ரூ. 5.37 இலட்சமும் தொடரா‌ச் செலவாக ரூ. 2 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 7.37 இலட்சமும் (ரூபாய் ஏழு இலட்சத்து முப்பத்து ஏழாயிரம் மட்டும்) செலவு செய்ய அரசு அனுமதி வழங்குகிறது.

4. மேலே பத்தி 3-ல் காணும் இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று செய்யப்படவேண்டும்.

"2225. ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02 பழங்குடியினர் நலன் - 277 கல்வி - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்-II மாநிலத் திட்டம் -JC மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும் பராமரித்தலும் (த.தொ.கு.2225 02 277 JC 0005)."

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு.எண் 20053/நிதி (சுநு)/97, நாள்: 13-3-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலர்.*

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், கோயம்புத்தூர்.
மாவட்டாட்சித் தலைவர், கோயம்புத்தூர்.
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்.

நகல்:

பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**பி. சரஸ்வதி,**
பிரிவு அலுவலர்.

---

**அரசாணை (நிலை) எண் 81, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 5-5-97-இன் இணைப்பு-1.**

**இணைப்பு**

ஒரு அரசு உண்டுறைப் பள்ளி துவங்குவதற்கான தொடரும் மற்றும் தொடரா செலவுகளின் விவரம்,

தொடர் செலவு:

1. ஒரு இடைநிலைத் தகுதி தலைமை ஆசிரியராகவும், காப்பாளராகவும் (ரூ. 1,400-40-1,600-50-2,300-60-2,600).
2. ஒரு இடைநிலை ஆசிரியர் (ரூபாய் 1,200-30-1,560-40-2,040).
3. ஒரு சமையலர் (ரூ. 750-12-870-15-945).
4. ஒரு பணியாளர் மற்றும் காவலர் (ரூ. 750-12-870-15-945) (one servant-*cum*-watchman).
5. சமையலருக்கு ஒரு உதவியாளர் மாதம் ரூ. 500 ஒப்பந்த சம்பளத்தில்.
6. தலைமை ஆசிரியருக்கு பயணப்படி மாதம் ரூ. 20 வீதம்.
7. 50 விடுதி மாணவர்களுக்கும் இரண்டு சமையலருக்கும், மாதம் ரூ. 180 வீதம் உணவுத் தொகையாக.
8. பல்வகை கட்டணமாக மாதம் ரூ. 10 வீதம் 50 விடுதி மாணவர்களுக்கு.
9. சொந்த கட்டிடம் கட்டும்வரை மாத வாடகை மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரி/ இயக்குநர்க்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்கு உட்பட்டு.
10. புத்தகம் மற்றும் ஆடைக்கு ஒரு விடுதி மாணவருக்கு ரூ. 65 வீதம் 50 மாணவருக்கு.
11. ஒரு தமிழ் 140-ம் செய்தித்தாள் வாங்குவதற்கு.

தொடராச் செலவு :

| | | | |
|---|---|---|---|
| 1. | பாத்திரங்கள் | ரூ. | 35,000/- |
| 2. | அறைகலன் | ரூ. | 26,000/- |
| 3. | உடனே தங்கும் வசதிக்காக தற்காலிக கட்டமைப்பு கட்டுமானத்திற்காக. | ரூ. | 30,000/- |
| 4. | ஒரு விடுதி மாணவருக்கு ஒரு பாய்க்கு ரூ. 20/- வீதம் 50 மாணவர்களுக்கு (இரண்டு ஆண்டுகளுக்கு). | ரூ. | 1,000/- |
| 5. | லிட்டர் அளவுகள் | ரூ. | 800/- |
| 6. | தராசு மற்றும் 5 கிலோ, 50 கிலோ எடை கற்கள் | ரூ. | 1,000/- |
| 7. | அரவை இயந்திரம் | ரூ. | 6,000/- |
| | மொத்தம் | | ரூ. 99,800/- |

/உண்மை நகல்/

**பி. சரஸ்வதி,**
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - பள்ளிகள் - 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டம் - 20 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு படிபெருக்கிகள் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (நிலை) எண் 82 நாள்: 5-5-97.

---

ஆணை:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழுள்ள 46 மேல்நிலைப் பள்ளிகளில், இதுவரை 26 மேல்நிலைப் பள்ளிகளுக்கு படிபெருக்கிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், இன்னமும் 20 மேல்நிலைப் பள்ளிகளுக்கு படிபெருக்கிகள் வழங்கப்பட வேண்டியுள்ளது என ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. இயக்குநரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, ஒரு படிபெருக்கியின் மதிப்பு ரூ. 15,000/- வீதம் 20 படிப்பெருக்கிகளை 20 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலைக்கொன்றாக வழங்க ரூ. 3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது. இந்த படிபெருக்கிகளை நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி வாங்கப்பட வேண்டும்.

3. மேலே பத்தி 2-ல் காணப்படும் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01. ஆதிதிராவிடர் நலன் - 277. கல்வி - ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்-II. மாநிலத் திட்டம் JG. சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் பள்ளிக்கல்வி. 19. இயந்திரமும் சாதனமும். 01. வாங்குதல்" (த.தொ.கு. 2225 01 277 JG 1918).

4. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக் கணக்கில் இருந்து எடுத்து வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 20177/நிதி(சநு)/97, நாள்: 14-3-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலர்.*

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

நகல்:

பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9 நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.1/அந) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கே.சி. ரபீந்தர்,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - பள்ளிகள் - 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டம் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு சாய்வு மேசையுடன் கூடிய நீள் இருக்கைகள் வழங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (நிலை) எண் 83 நாள்: 5-5-97.

படிக்கப்பட்டது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண் எ 6/58161/96, நாள்: 29-12-96, 8-3-97.

---

**ஆணை:**

1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்திவரும் பள்ளிகளில் தற்போது 5 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 19 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 32.40 இலட்சம் (ரூபாய் முப்பத்திரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் மட்டும்) செலவில் சாய்வு மேசையுடன் கூடிய நீள் இருக்கைகள் வழங்க கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:—

(அ) இணைப்பிலுள்ள 5 மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 19 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பள்ளி ஒன்றுக்கு ஒரு சாய்வு மேசையுடன் கூடிய நீள் இருக்கையின் செலவு ரூ. 4500/- வீதம் 30 சாய்வு மேசையுடன் கூடிய நீள் இருக்கைகள் ஒவ்வொரு பள்ளிக்கும் வழங்க அரசு அனுமதி வழங்குகிறது.

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ள தொகை ரூ. 32.40 இலட்சத்தினை அரசு கணக்கிலிருந்து எடுத்து வழங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது.

(இ) மேலே குறிப்பிட்டுள்ள தொகை ரூ. 32.40 இலட்சத்திற்கு மரச்சாமான்கள் சாய்வு மேசையுடன் கூடிய நீள் இருக்கைகள் வாங்க அரசு ஆணை (நிலை) எண் 708, நிதி (BPE) நாள்: 22-8-94-ல் உள்ள அறிவுரைகளைப் பின்பற்றி செயல்படுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2. மேற்கண்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01. ஆதிதிராவிடர் நலன் - 277. கல்வி - ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்-II. மாநிலத் திட்டம் JG. சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் பள்ளிக்கல்வி. 24. பொருள்களும் வழங்கலும். 02. அறைக்கலன்கள் வழங்குதல்" (2225 01 277 JG 2426).

3. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 20178/நிதி(சந)/97, நாள்: 17-3-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.
சம்பளம் கணக்கு அலுவலர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
நகல்: முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

முஹம்மது கலீலுல்லா,
பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண் 83 நாள்: 5-5-97.

## இணைப்பு

### 1997-98 பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் மரத்தளவாடங்கள் வழங்க தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளின் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மீனம்பாக்கம் | : | அண்ணா மாவட்டம் |
| 2. | வடகரை (பெண்கள்) | : | எம்.ஜி.ஆர். மாவட்டம் |
| 3. | பெருமுகை | : | வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் |
| 4. | கல்லூரணிக்காடு | : | தஞ்சாவூர் மாவட்டம் |
| 5. | மிளகுப்பாறை | : | திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் |
| 6. | கண்ணனூர் | : | மேற்படி |
| 7. | ஆலம்பாடி | : | மேற்படி |
| 8. | களரம்பட்டி | : | மேற்படி |
| 9. | கரிசல்குளம்பட்டி | : | காமராஜர் மாவட்டம் |
| 10. | நல்லம்மாள்புரம் (பெண்கள்) | : | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் |
| 11. | மாட்டுக்காரனூர் | : | சேலம் |
| 12. | கூக்கூர் | : | நீலகிரி மாவட்டம் |
| 13. | குன்னூர் | : | மதுரை மாவட்டம் |
| 14. | வாலிழபூத்துவயல் | : | கன்னியாகுமரி மாவட்டம் |
| 15. | தெலுங்குப்பட்டி | : | கரூர் தீரன் சின்னமலை மாவட்டம் |

### அரசு பழங்குடியினர் உண்டுறைவிடப் பள்ளிகள்

| | | |
|---|---|---|
| பெரும்பாறை | : | மன்னர் திருமலை மாவட்டம் |
| குஞ்சப்பனை | : | நீலகிரி மாவட்டம் |
| [illegible]வார் | : | பெரியார் மாவட்டம் |
| [illegible]ரி | : | தர்மபுரி மாவட்டம் |

மேல்நிலைப் பள்ளிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அலமேலுமங்காபுரம் | : | வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் |
| 2. | பில்லாந்திபட்டு | : | வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் |
| 3. | முள்ளங்குறிச்சி | : | புதுக்கோட்டை மாவட்டம் |
| 4. | டி. பொம்மிநாயக்கன்பட்டி | : | மதுரை மாவட்டம் |
| 5. | மல்லல் | : | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் |

/உண்மை நகல்/

முஹம்மது கலீலுல்லா,
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்—கல்வி—பள்ளிகள்—1997-98 ஆம் ஆண்டு பகுதி II திட்டம்—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்துதல்—ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந7) துறை

அரசாணை (நிலை) எண் 84 நாள்: 5-5-1997.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 166, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 10-11-1994.
2. அரசாணை (நிலை) எண் 135, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 19-7-1995.
3. அரசாணை (நிலை) எண் 110, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 13-9-1996.
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஇயக்குநரின் கடிதம் ந. க. எண் எ6/42940/96, நாள்: 17-2-1997.

---

ஆணை:

1997-98 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்திவரும் பள்ளிகளின் நிலையை உயர்த்த இணைப்பு 1-ல் காணப்பட்டவாறு அரசு இசைவு அளிக்கிறது. இப்பள்ளிகளுக்குப் பொதுக்கொடை (Public Contribution) ஏதும் பெற வற்புறுத்த வேண்டாமென்றும் அரசு ஆணையிடுகிறது.

2. (அ) இணைப்பு 2-ல் கண்டுள்ள பதவிகளை நிலையாக ஏற்படுத்தவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆ) இணைப்பு 3-ல் ஆசிரியர்கள் மற்றும் இதர ஊழியர்களுக்குத் தேவையான மரச்சாமான்கள் (மேசை, நாற்காலி, ஸ்டூல்) வாங்குவதற்குத் தொடரா செலவினங்களின்கீழ் ரூ. 1.70 இலட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதினாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

(இ) மேலே குறிப்பிட்டுள்ள தொகை ரூ. 1.70 இலட்சத்தினை அரசு கணக்கில் இருந்து எடுத்து வழங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அவர்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது.

(ஈ) மேலே குறிப்பிட்டுள்ள தொகை ரூ. 1.70 இலட்சத்திற்கு மரச்சாமான்கள் வாங்க அரசாணை (நிலை) எண் 708, நிதி (BPE), நாள் 22-8-1994-ல் உள்ள அறிவுரைகளைப் பின்பற்றி செயல்படுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதால் ஏற்படும் செலவினங்களைக் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலவிட வேண்டும்:—

"2225 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்—01. ஆதிதிராவிடர் நலன்—793. ஆதிதிராவிடர் சிறப்புக் கூறுத் திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி—ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்—II மாநிலத் திட்டம்—JD ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்—01 சம்பளம் (த.தொ.கு.2225 01 793 JD 0108)."

4. உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதால் ஏற்படும் செலவினங்களைக் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலவிட வேண்டும்.:—

"2225 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் —01. ஆதிதிராவிடர் நலன்—277. கல்வி—ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்—II. மாநிலத் திட்டம் JL. சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளிகளை மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்—01. சம்பளங்கள் (த.தொ.கு.2225 01 277 JL 0106)."

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு. எண் 84/துசெ (ஆர்பி)/97, நாள்: 20-3-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

*பெறுநர்:*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநில கணக்காயத் தலைவர், சென்னை-18,
மாநில கணக்காயத் தலைவர், சென்னை-6.
மாநில கணக்காயத் தலைவர், சென்னை-35,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.
மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

*நகல்:*

கல்வித்துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசுச் செயலரின் தனிச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) துறை,
சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

**பி. சரஸ்வதி,**
*பிரிவு அலுவலர்.*

## இணைப்பு 1

**[அரசாணை (நிலை) எண் 84 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந7) துறை, நாள்: 5-5-1997].**

### நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்

| வரிசை எண் | பள்ளியின் பெயர். | மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, செம்புலிச்சம்பட்டி | திருச்சிராப்பள்ளி—பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். |
| 2. | ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, தையூர், | அண்ணா மாவட்டம். |
| 3. | ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, மதுராந்தகநல்லூர் | தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம். |
| 4. | ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, சனப்பிரட்டி | கரூர்தீரன் சின்னமலை மாவட்டம். |
| 5. | ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, கோட்டமேடு | கரூர்தீரன் சின்னமலை மாவட்டம். |

### உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்துதல்

| வரிசை எண் | பள்ளியின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, சுந்தரராஜபுரம். | காமராசர். |
| 2. | அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, நல்லம்மாள்புரம். | நெல்லைகட்டபொம்மன். |
| 3. | அரசு பழங்குடியினர் உண்டுறை உயர்நிலைப்பள்ளி, ஆசனூர். | பெரியார். |
| 4. | அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, கண்ணனூர் | திருச்சிராப்பள்ளி. பெரும்பிடுகு முத்தரையர். |
| 5. | அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, கீழபுனல்வாசல். | தஞ்சாவூர். |

## இணைப்பு 2

[அரசாணை (நிலை) எண் 84, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந7) துறை, நாள்: 5-5-1997].

நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள்.

1. தலைமை ஆசிரியர் (நிலை உயர்த்தப்பட்டது), ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பணியிடம் வீதம் சம்பள விகிதம் ரூ. 2,000-60-2,300-75-3,200). (1X5) 5 (ஐந்து பணியிடங்கள்)
2. பட்டதாரி ஆசிரியர், ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பணியிடம் வீதம் சம்பள விகிதம் ரூ. 1,400-40-1,600-50-2,300-60-2,600. (1X5) 5 (ஐந்து பணியிடங்கள்)
3. இளநிலை உதவியாளர் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பணியிடம் வீதம் சம்பள விகிதம் ரூ. 975-25-1,150-30-1,660. (1X5) 5 (ஐந்து பணியிடங்கள்)
4. அலுவலக உதவியாளர் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒன்று வீதம் சம்பள விகிதம் ரூ. 750-12-870-15-945. (1X5) 5 (ஐந்து பணியிடங்கள்)

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள்.

1. தலைமை ஆசிரியர் (நிலை உயர்த்தப்பட்டது), ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பணியிடம் வீதம் சம்பள விகிதம் ரூ. 2,200-75-2,800-100-4,000. (1X5) 5 (ஐந்து பணியிடங்கள்)
2. முதுநிலை பட்டதாரி ஆசிரியர் ஒவ்வொரு பள்ளிக்கும் ஐந்து பணியிடங்கள் வீதம் சம்பள விகிதம் ரூ. 1,820-60-2,300-75-3,200. (5X5) 25 (இருபத்தைந்து பணியிடங்கள்)
3. பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர் (Part time vocational Instructor), ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பணியிடம் வீதம் ஒட்டுமொத்த ஊதியம் மாதம் ரூ. 400 மட்டும். (1X5) 5 (ஐந்து பணியிடங்கள்)

## இணைப்பு 3

[அரசாணை (நிலை) எண் 84, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள்: 5-5-1997].

| | | |
|---|---|---|
| தொடரா செலவு: | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| உயர்த்தப்பட்ட 5 உயர்நிலைப் பள்ளிகளுக்கு மரச்சாமான்கள் வாங்க | .. | 0.58 |
| உயர்த்தப்பட்ட 5 மேல்நிலைப் பள்ளிகளுக்கு மரச்சாமான்கள் வாங்க | .. | 1.12 |
| மொத்தம் | | **1.70** |

/உண்மை நகல்/

**பி. சரஸ்வதி,**
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - அரசு ஆதிதிராவிடர் நல/அரசு பழங்குடியினர் உண்டுறை உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு நூலகப்புத்தகங்கள் வழங்குதல் - 1997-98 ஆண்டு ஆண்டிற்கு நூலகப்புத்தகங்கள் வாங்க செலவினம் - ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

*அரசு ஆணை (நிலை) எண் 95.* நாள்:*15-5-97*

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (டி) எண் 100, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 6-9-96.
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், கடித எண் எ6/1036/97, நாள் 24-1-97.

- - - -

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், 1996-97 ஆம் ஆண்டில் 101 அரசு ஆதிதிராவிடர் நல/அரசு பழங்குடியினர் உண்டுறை உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வாங்கி வழங்குவதற்கு ஒரு பள்ளிக்கு ரூ. 1000 வீதம் 101 பள்ளிகளுக்கு ரூ 1,01,000 ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தனது கடிதத்தில், 1997-98 ஆம் ஆண்டில் அரசு ஆதிதிராவிடர் நல/அரசு பழங்குடியினர் உண்டுறை உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு நூலகப்புத்தகங்கள் வாங்கி வழங்க ஒரு பள்ளிக்கு ரூ. 1000 வீதம் 106 பள்ளிகளுக்கு ரூ. 1,06,000 தேவைப்படுகிறது என்றும், 106 பள்ளிகளின் எண்ணிக்கை தற்போது 1997-98-ல் நிலை உயர்த்தப்படுதல் மூலம் உருவாகும் 5 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 5 மேனிலைப்பள்ளிகளையும் உள்ளடக்கியது என்றும் தெரிவித்து, மேற்கண்ட ரூ. 1,06,000 தொகைக்கு தம்முடைய கருத்துருவை ஏற்று ஒப்பளிப்பு ஆணைகள் வழங்குமாறு கோரியுள்ளார். மேலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவருவதாலும், ஒவ்வொரு நிதியாண்டும் இதற்கென உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ. 1000 வீதம் திட்ட மதிப்பீட்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்துவருவதாலும், நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப இத்தொகையினை ஆண்டுதோறும் செலவு செய்யும் அதிகாரத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு வழங்கி ஆணையிடுமாறும் அரசை வேண்டியுள்ளார்.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து அதன்படி 1997-98 ஆம் ஆண்டில் 106 ஆதிதிராவிடர் நல/அரசுப்பழங்குடியினர் உண்டுறை உயர்நிலை/மேநிலைப்பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வாங்கி வழங்க ஒரு பள்ளிக்கு ரூ .1000 வீதம் ரூ 1,06,000-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஆறாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்குகிறது. மேலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாலும், ஒவ்வொரு நிதியாண்டும் இதற்கென உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ. 1000 வீதம் வரவு செலவுத்திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கீடு செய்து வருவதாலும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப இத்தொகையினை ஆண்டுதோறும் செலவு செய்யும் அதிகாரத்தினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்றுச் செலவிட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை குறித்த செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"2225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன். 01. ஆதிதிராவிடர் நலன். 277. கல்வி - I திட்டத்தில் சேராதது. AA.பள்ளிக்கல்வி - 18. பராமரிப்பு -03. நூலகப்புத்தகங்கள். *(2225.01.277.AA.1839)*".

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 207/து.செ.(ஆர்.பி)/97, நாள் 5-5-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர்நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, அவர்களின் நே.மு.உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அதிந.1/அந) துறை, சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

கே.சி. ரபீந்தர்,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - ஆசிரியர் குடியிருப்பு கட்டுதல் - 1997-98 ஆம் ஆண்டுக்கு நிதி ஒப்பளிப்பு ஆணை வழங்கப்படுகிறது.*

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

*அரசாணை (நிலை) எண் 96.* நாள்:15.5.97.

படிக்கப்பட்டது:-

அரசாணை (நிலை) எண் 31, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 24.2.97.

- - - -

*ஆணை:-*

அரசுப் பழங்குடியினர் உண்டுறைப்பள்ளி ஆசிரியர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்காக 1997-98 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 4.00 இலட்சத்தில், இராஜாஜி மாவட்டம், சென்கரை அரசு பழங்குடியினர் உண்டுறைப்பள்ளி ஆசிரியர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்காக ரூ. 3.00 இலட்சத்தையும், மீதி ரூ.1.00 இலட்சத்தினை ஆசிரியர் குடியிருப்புகளுக்கு பழுது பார்ப்பு வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யுமாறும் திட்ட நிதிக் குழுவிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கருத்துரு அனுப்பியிள்ளார்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்தது. அதன்படி 1997-98 ஆம் ஆண்டில் இராஜாஜி மாவட்டம், சென்கரை அரசுப் பழங்குடியினர் உண்டுறை பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு குடியிருப்பு கட்டித்தர ரூ 4.00 இலட்சம் (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) செலவு செய்ய நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2-ல் ஒப்புதல் அளிக்கப்பெற்ற தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225. பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன். 02. பழங்குடியினர் நலன் - 283, ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள். II. மாநிலத் திட்டம். JA. ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுதல். 17. சிறு பணிகள்".
(த.தொ.கு.2225.02.283. JA.1701)

4. 1997-98 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடான ரூ.4.00 இலட்சத்திற்கு மிகாமல் செலவு செய்யுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும், அதனை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் " அலுவல் பெயர் வைப்புத் தொகை" கணக்கில் செலுத்தவும் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இத்தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் சரிகட்டல் என்ற வகையில் வரவு வைக்கப்பட வேண்டும்.

"K. Deposits and Advances (b) Deposits not bearing interest. 8443.00 Civil Deposits. 800. Other Deposits of Government Companies, Corporations, etc. 50. Deposits of TAHDCO. (D.P.C. 8443.00 800 AE 500 A) (Receipts) (D.P.C. 8443.00 800 AE 5000) (Out go)

5. கட்டுமான பணி ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தினால் செய்து முடிக்கப்பட வேண்டும். மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ 4.00 இலட்சம் மேலாண்மை இயக்குநர், தாட்கோவின் அலுவல் பெயர் வைப்புத்தொகை கணக்கில் வைக்கப்பெற்று, பணியின் தேவைக்கேற்ப எடுக்கப்பட வேண்டும்.

6. மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் ஆசிரியர் குடியிருப்பு கட்டிடங்களைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டிட கட்டுமானப்பணி முன்னேற்றத்தினை நெருக்கமான முறையில் கண்காணிக்கவும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டிடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிபடுத்திக் கொள்ளும்படியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டுமானப் பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி மேலாண்மை இயக்குநர், தாட்கோ கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.எண் 241/து.செ.(ஆர்.பி)/97, நாள் 13.5.97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

*பெறுநர்:*

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், இராஜாஜி மாவட்டம், நாமக்கல்.
தலைமை ஆசிரியர், அரசுப் பழங்குடியினர் உண்டுறைப்பள்ளி, சென்கரை, இராஜாஜி மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.

*நகல்:*

நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடநல அமைச்சரின் நே.மு.உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் நே.மு. உதவியாளர், சென்னை-9.

*|ஆணைப்படி அனுப்பப்படுகிறது|*

**கே.சி. ரபீந்தர்,**
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் - கல்வி - ஆதிதிராவிடர் நல பள்ளிகள் 1997-98 ஆம் ஆண்டில் பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் - செலவினம் - ஒப்பளிப்பு ஆணை வழங்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

அரசாணை (நிலை) எண் 109. நாள்: 24.5.97.

படிக்கப்பட்டது:-

அரசாணை (நிலை) எண் 172. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.12.96.

----

ஆணை:-

1997-98 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் திட்ட நிதிக்குழுவிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து 11 ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டில் ரூ 172.69 இலட்சம்) (ரூபாய் ஒரு கோடியே எழுபத்திரண்டு இலட்சத்து அறுபத்தொன்பது ஆயிரம் மட்டும்) செலவில் 5 வகுப்பறை கொண்ட கூடுதல் கட்டிடம் கட்ட நிதி ஒப்பளிப்பு வழங்குகின்றது.

3. மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு. 01. பட்டியல் சாதியினர் நலன். 277. கல்வி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் - II . மாநில திட்டம்.JB. ஆதிதிராவிடர் நலப்பள்ளி கட்டிடங்கள் கட்டுதல். 16, பெரும்பணிகள். (த.தொ.எண் 4225.01.277.JB.1601)"

4. 1997-98 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடான ரூ. 172.69 இலட்சத்திற்கு மிகாமல் செலவு செய்யுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும் அதனை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் "அலுவல் பெயர் வைப்புத்தொகை" கணக்கில் செலுத்தவும் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இத்தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் சரிக்கட்டல் என்ற வகையில் வரவு வைக்கப்பட வேண்டும்.

"K. Deposits and Advances (b) Deposits not bearing interest. 8443.00 Civil Deposits. 800. Other Deposits. AE. Deposits of Government Companies, Corporations, etc., 52, Deposits of THADCO" (D.P.Code 8443.00. 800.AE. 520E (Receipts) (D.P.Code 8443.00. 800.AE 5204 (Out go)"

5. கட்டுமானப்பணி ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக்கழகத்தினால் செய்து முடிக்கப்பட வேண்டும். மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ.172.69 இலட்சம் தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் அலுவல் பெயர் வைப்புத்தொகை கணக்கில் வைக்கப்பெற்று, பணியின் தேவைக்கேற்ப எடுக்கப்பட வேண்டும்.

6. ஐந்து வகுப்பறைகள் கொண்ட கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு, வரைபடம் மற்றும் பள்ளிகளின் பெயர்களை அரசின் ஒப்புதலுக்காக விரைவில் அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் பள்ளிக் கட்டிடங்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவனை ஒன்றினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். கட்டிட கட்டுமானப்பணி முன்னேற்றத்தினை நெருக்கமான முறையில் கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டிடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்தி கொள்ளும்படியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், முன்னேற்ற அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டுமானப் பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி மேலாண்மை இயக்குநர், தாட்கோ கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 38881/Fin (SW)/97., நாள்: 23.5.97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

*பெறுநர்:*

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மாநில தலைமை கணக்காயர், சென்னை-18/சென்னை35/ சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

*நகல்:*

நிதித்துறை/திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிந அமைச்சரின் நே.மு.உதவியாளர், சென்னை-9.
ஆதி மற்றும் பந துறை செயலரின் நே.மு. உதவியாளர், சென்னை-9.
ஆதி மற்றும் பந (ஆதிந1/அந), துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**கே.சி. ரபீந்தர்,**
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை.

கடிதம் (நிலை) எண் 149. நாள்: 28-8-1997.

**அனுப்புநர்:**

திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
சென்னை-9.

**பெறுநர்:**

இயக்குநர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101,
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்—கல்வி—பள்ளிகள்—1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுதல்—நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது—கட்டிடங்கள் கட்ட பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண் 109, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 24-5-97.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண் கே1/15052/97, நாள் 22-7-97.

3. மேலாண்மை இயக்குநர், தாட்கோவின் நேர்முக கடித எண் சி/6530/95/டிஓ.1, நாள் 31-7-97.

---

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், 11 ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டில் 5 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 172.69 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், 1997-98 ஆம் ஆண்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட வேண்டிய பள்ளிகளின் பட்டியலை மேலே படிக்கப்பட்ட இரண்டாவது கடிதத்துடன் அனுப்பி ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் செயற்குறிப்பு அரசு பரிசீலனை செய்து, இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 11 இடங்களில் உள்ள பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்ட ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
முஹம்மத் கலீலுல்லா,
அரசு செயலருக்காக.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந.l/அநமு) துறை, சென்னை-9.

## இணைப்பு

**1997-98 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களின் பட்டியல்.**

**(அ) ஆரம்பப் பள்ளிகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | துலுக்கர்பட்டி ஆரம்பப் பள்ளி | : | திருநெல்வேலி மாவட்டம் |
| 2. | திருவிடைகாழி ஆரம்பப் பள்ளி | : | நாகப்பட்டினம் மாவட்டம் |
| 3. | அம்பேத்கார் நகர் ஆரம்ப பள்ளி | : | சேலம் மாவட்டம் |
| 4. | நல்லாடை ஆரம்பப் பள்ளி | : | தஞ்சாவூர் மாவட்டம் |
| 5. | நெல்லிக்குப்பம் மேல்பாதி டாக்டர் அம்பேத்கார் நகர் ஆரம்பப் பள்ளி | : | கடலூர் மாவட்டம். |

**(ஆ) நடுநிலைப் பள்ளிகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | தண்டலம் நடுநிலைப் பள்ளி | : | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. | மதுரவாயல் நடுநிலைப் பள்ளி | : | திருவள்ளூர் மாவட்டம் |
| 3. | மிட்டனமல்லி நடுநிலைப் பள்ளி | : | திருவள்ளூர் மாவட்டம் |

**(இ) உயர்நிலைப் பள்ளி:**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாலப்பட்டி உயர்நிலைப் பள்ளி | : | நாமக்கல் மாவட்டம் |

**(ஈ) மேல்நிலைப் பள்ளிகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்லம்மாள்புரம் மேல்நிலைப் பள்ளி | : | திருநெல்வேலி மாவட்டம் |
| 2. | துறையூர் மேல்நிலைப் பள்ளி | : | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

நகல்:

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்—கல்வி—பள்ளிகள்—1997-98 ஆம் ஆண்டு 12 ஆதிதிராவிடர் நல/அரசு உண்டுறை மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடங்கள் கட்ட நிதி ஒப்பளிப்பு—ஆணைகள் —வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,

அரசாணை (நிலை) எண் 110, நாள்: 24-5-1997

படிக்கப்பட்டது:-

அரசாணை (நிலை) எண் 109, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-9-96.

---

ஆணை:—

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நடத்தி வரும் 46 மேனிலைப்பள்ளிகளில் ஆய்வுக்கூட வசதி செய்துதர வேண்டியுள்ள 12 ஆதிதிராவிடர் நல மேனிலைப்பள்ளிகளில் ஆய்வுக்கூடம் கட்டுவதற்காகவும், ஆய்வுக்கூட கருவிகள் வாங்குவதற்கும் 1996-97 ஆம் ஆண்டு மொத்த இறுதி நிலைச் செலவினமாக ரூ. 72.00 இலட்சங்களுக்கு மேலே படிக்கப்பட்ட அரசாணையில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதில் ஆய்வுக்கூடம் ஒன்றின் கட்டுமானச் செலவு ரூ. 5.00 இலட்சம் ஆகும். பள்ளி ஒன்றுக்கு ஆய்வுக்கூடக் கருவிகளுக்கான செலவு ரூ. 1.00 இலட்சமாகும். ஆதிதிராவிடர் நல மேனிலைப்பள்ளிகளுக்காக ஆய்வுக்கூடங்கள் கட்டுவதற்காக ரூ. 25 இலட்சமும், ஆய்வுக்கூட கருவிகளுக்காக ரூ. 5 இலட்சமும், ஆக ரூ. 30.00 இலட்சத்தை 1996-97 ஆம் நிதியாண்டில் செலவழிக்க ஆணையிடப்பட்டது.

2. 1996-97 ஆம் ஆண்டு 12 ஆதிதிராவிடர் நல மேனிலைப்பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடங்கள் கட்டுவதற்காகவும், ஆய்வுக்கூட கருவிகள் வாங்குவதற்காகவும், ஏற்கனவே ஆணையிடப்பட்ட இறுதிநிலைச் செலவில் ஒப்பளிக்கப்பட வேண்டியுள்ள ரூ. 42.00 இலட்சத்தை நடப்பு நிதியாண்டான 1997-98 ஆம் ஆண்டில் வழங்க வேண்டியுள்ளது.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் ரூ. 35 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடக் கட்டிடம் கட்ட கருத்துரு அனுப்பியுள்ளார். இக்கருத்துருவை அரசு ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில் 12 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடக் கட்டிடம் கட்டுவதற்காகவும், ஆய்வுக்கூடக் கருவிகள் வாங்குவதற்காகவும், பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில் இறுதிநிலைச் செலவாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ. 72.00 இலட்சத்தில், ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ. 30.00 இலட்சம் போக மீதமுள்ள ரூ. 42.00 இலட்சத்தில், ஆய்வுக்கூட கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 35.00 இலட்சம்(ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) 1997-98 ஆம் ஆண்டில் செலவழிக்க ஏற்பளித்து அரசு ஒப்பளிப்பு வழங்குகின்றது.

4. மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுக்கூடக் கட்டிடங்கள் கட்டுதல் தொடர்பான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு—01. ஆதிதிராவிடர் நலன். 277. கல்வி—ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள். II. JB. மாநிலத் திட்டம். ஆதிதிராவிடர் பள்ளிக்கட்டிடங்கள். 16. பெரும் பணிகள். (த.தொ.கு. 4225 01 277 JB 1601)

5. ஆய்வுக்கூட கட்டுமானப் பணிகள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை தாட்கோவின் கீழ்க்கானும் அலுவல் பெயர் வைப்புத்தொகை கணக்குத் தலைப்பில் சரிக்கட்டல் என்ற வகையில் வரவு வைக்கப்பட வேண்டும்.

" K. Deposits and Advances (b) Deposits not bearing interest. 8443.00 Civil Deposits. 800. Other Deposits of Government Companies, Corporations, etc. 50. Deposits of Thadco.
(D.P. Code 8443.00 800 AE.500A) (Receipts)
(D.P. Code 8443.00 800 AE 5000 (out go)"

ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும், அதனை தாட்கோவுக்கு செலுத்தவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை போக மீதமுள்ள ரூ.7.00 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடக் கருவிகள் வாங்குவதற்காக 1997-98 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு ஆய்வு செய்யும்போது தேவையான கருத்துருக்களை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. பள்ளி ஆய்வுக்கூட கட்டிடங்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டிட கட்டுமானப் பணி முன்னேற்றத்தினை நெருக்கமான முறையில் கண்காணிக்கவும்., குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டிடங்கள் கட்டி முடித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப் படுத்திக்கொள்ளும்படியும் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் முன்னேற்ற அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டுமானப் பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி மேலாண்மை இயக்குநர், தாட்கோ கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 254/து.செ.(ஆர்.பி)/97, நாள் 22-5-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

**பெறுநர்:**

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மாநில கணக்காயர், சென்னை-18/ சென்னை-35/சென்னை-6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

**COPY OF:**

**GOVERNMENT OF TAMIL NADU**

**ABSTRACT**

Establishment - AD and TW Department—Tamil Nadu Adi Dravidar Educational Subordinate Service—Exclusion of certain categories of teachers from purview of Tamil Nadu Public Service Commission—Orders—Issued.

---

**Adi Dravidar and Tribal Welfare (ADW.7) Department**

G.O. 4 (D) No.6 Dated: 17-6-1997

Read:

1. G.O. Ms. No. 1319, Education Department, dated 17-8-1987.
2. From The Director of Adi Dravidar and Tribal Welfare, Madras, Lr.No.02/15248/89, dated 23-3-1989 and 11-4-1989
3. From the Tamil Nadu Public Service Commission, Madras, Lr.No.9162/BA 3/89, dated : 30-1-1990.

---

ORDER:

In the Order first read above, orders issued for exclusion of the following categories of teachers in Education Department from the purview of the Tamil Nadu Public Service Commission, Madras

**Tamil Nadu Higher Secondary Educational Service:**

Class II 1. Teachers in Academic subjects

Class III 2. Teachers in Languages

Physical Directors and Physical Directresses in Higher Secondary Schools.

**Tamil Nadu School Educational Subordinate Service:**

**Class and Category:**

| | | |
|---|---|---|
| Class I | 1 | Deputy Directors of Schools and School Assistants |
| Class II | 1 | Pandits in Tamil |
| Class III | 1 | Pandits and Mushis in Languages other than Tamil Grade I |
| Class VI | 1 | Regional Inspectors of Physical Education and Physical Directors/Directresses. |

2. On the same analogy this Department has also examined the proposal to exclude the following categories of teachers in Adi Dravidar and Tribal Welfare Department, from the purview of the Tamil Nadu Public Service Commission in consultation with the Director of Adi Dravidar and Tribal Welfare, Madras.

**Tamil Nadu Adi Dravidar Welfare Subordinate Service Rules:**

Class I. Category 2 .. B.T. Assistants

3. The views of the Tamil Nadu Public Service Commission on the above proposal have been obtained. The Commission has not agreed to the proposal.

4. The Government have carefully examined the proposals. They have decided that the post of B.T. Assistants in Adi Dravidar and Tribal Welfare Department which is now within the purview of the Tamil Nadu Public Service Commission be excluded from its purview by making an amendment to Annexure I to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, made under the proviso to clause (3) of Article 320 of the Constitution of India. The Government accordingly direct that the following category of post of teachers in Adi Dravidar and Tribal Welfare Department be excluded from the purview of the Tamil Nadu Public Service Commission with effect from the date of this order.

**Tamil Nadu Adi Dravidar Welfare Subordinate Service Rules:**

| | | |
|---|---|---|
| Class I | Category 2 | B.T. Assistants |

5. With reference to the orders in para 4 above, necessary amendments to Tamil Nadu Public Service Commission Regulations, 1954, will be issued by the Government in Personnel and Administrative Reforms (Per.M) Department.

6. Orders regarding the entrustment of the selection and appointment of B.T. Assistants in Adi Dravidar Welfare Schools, with Teachers Recruitment Board constituted by the Education Department as per G.O.Ms.No.1320 Education Department, dated 17-8-1987 will be issued separately.

(By Order of the Governor)

R. Christodas Gandhi

~~C. CHELLAPPAN~~

*Secretary to Government.*

**To**

The Secretary, TNPSC, Madras-2

/Forwarded/By Order/

*Section Officer.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - கல்வி-நீலகிரி மாவட்டம், காந்தல் செஞ்சிலுவை மழலையர் பள்ளிக்கு 1995-96 ஆம் ஆண்டுக்கு உணவு மான்யம் ரூ 58,862/- ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (நிலை) எண் 125, நாள் : 27.6.97.

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண் 127, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 4.10.96.
2. நீலகிரி மாவட்ட ஆட்சியர், கடித எண் எச்.4/90918, நாள்: 5.12.96.
3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண் அஉஊ3/56472/96, நாள்: 27.2.97.

- - - -

ஆணை:-

நீலகிரி மாவட்டம், காந்தல் செஞ்சிலுவை மழலையர் பள்ளிக்கு 1995-96 ஆம் ஆண்டுக்கு மொத்த செலவினத்தில் கல்வி மானியம் போக மீதமுள்ள தொகையில் 75 சதவிகித தொகையான ரூ 58,862/-ஐ உணவு மான்யமாக ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அப்பள்ளியின் தாளாளர் கோரியுள்ளார் என்று நீலகிரி மாவட்ட ஆட்சியர் தெரிவித்து, மேற்கண்ட மான்ய தொகையை வழங்க மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார். மேலும் 1996-97 ஆம் ஆண்டுக்காக கடந்த ஆண்டு ஒப்பளிப்பில் 75 சதவிகிதம் முன்பணமாகப் பெறவும் பரிந்துரை செய்துள்ளார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரும் இக்கருத்துருவிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. அரசு ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சியரின் கருத்தை ஏற்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பரிந்துரை செய்தவாறு நீலகிரி மாவட்டத்திலுள்ள காந்தல் செஞ்சிலுவை மழலையர் பள்ளிக்கு 1995-96 ஆம் ஆண்டுக்கு மொத்த செலவினத்தில் கல்வி மான்யம் போக மீதமுள்ள தொகையில் 75 சதவிகிதத் தொகையான ரூ 58,862/- ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. கல்வித்துறையின் மூலம் பின்னர் தணிக்கை செய்யப்படும்போது அதிகத்தொகை எனக் கணக்கிடப்பட்டால் அத்தொகையை அப்பள்ளியின் நிர்வாகத்திடமிருந்து வசூல் செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் ஒட்டுமொத்த மான்யம் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

3. பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்த தொகையை நீலகிரி ஆதிதிராவிடர் நல அலுவலர் அரசு கணக்கிலிருந்து எடுத்து தகுந்த அத்தாட்சிகள் பெற்று அப்பள்ளிக்கு வழங்க அதிகாரமளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225. பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் - 01. பட்டியல் சாதியினர் நலன். 277. கல்வி - I திட்டத்தில் சாராதது. AA. பள்ளிக்கல்வி. 09. உதவி மான்யங்கள். 01. உணவு மான்யம்" (த.தொ.கு. 2225 01 277 AA 0910)

5. மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை முழுவதற்கும் உபயோகச் சான்றிதழை அப்பள்ளியிடமிருந்து பெற்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல

இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட வேண்டும். ஒப்பளிக்கப்பட்ட தொகையில் அரசுக்கு திருப்பி செலுத்த வேண்டிய தொகை இருந்தால் அரசுக் கணக்கில் திருப்பி செலுத்த வேண்டும், இல்லையெனில் நிலுவை ஏதும் இல்லை என்ற சான்றிதழை அளிக்க வேண்டும்.

*6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 265/து.செ/ஆர்.பி/97, நாள் 26.5.97ல் பெற்று வெளியிடப்படுகிறது.*

*(ஆளுநரின் ஆணைப்படி)*

இரா. கிருத்துதாசு காந்தி,
*அரசு செயலர்.*

*பெறுநர்:*

தாளாளர், காந்தல் செஞ்சிலுவை மழலையர் பள்ளி, உதகமண்டலம்.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம்; உதகமண்டலம்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/சென்னை-35/ சென்னை-6.
கருவூலக்கணக்கு அலுவலர், உதகமண்டலம்.

*நகல்:*

நிதித்துறை, சென்னை-9.

*|ஆணைப்படி அனுப்பப்படுகிறது|*

*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - பள்ளிகள் - 1997-98 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளில் மற்றும் பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகளில் "கணிப்பொறிக் கல்வி"யைத் துவக்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (நிலை) எண் 130 நாள்: 3-7-97.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 173, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், நலத் துறை, நாள்: 31-12-96.
2. அரசாணை (நிலை) எண் 60, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 27-3-97.

---

ஆணை:

மேலே படிக்கப்பட்ட முதல் அரசாணையில் 1996-97 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ரூ. 30.00 இலட்சம் செலவில் 10 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளில் கணிப்பொறிக் கல்வியைத் துவக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலே படிக்கப்பட்ட இரண்டாவது அரசாணையில் மேலும் 30 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணிப்பொறிக் கல்வியை ரூ. 90.00 இலட்சம் செலவில் துவக்குவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

2. 1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்காக வரவு-செலவு திட்டத்தில் ரூ. 58.64 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ. 58.64 இலட்சத்திலிருந்து ரூ. 30.25 இலட்சம் செலவில் 47 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 8 பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பள்ளி ஒன்றுக்கு ரூ. 0.55 இலட்சம் வீதம் கணிப்பொறிக் கல்வியை துவக்க இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் தனது கருத்துருவை திட்ட நிதிக்குழுவிற்கு அனுப்பியுள்ளார்.

3. இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து 1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 58.64 இலட்சத்தில் 11 ஆதிதிராவிடர் நல மேனிலைப்பள்ளிகளிலும், 9 உயர்நிலைப்பள்ளிகளிலும், பள்ளி ஒன்றுக்கு ரூ. 3.00 இலட்சம் செலவில் கணிப்பொறி கல்வியைத் துவக்க ரூ. 60.00 இலட்சம் (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 58.64 இலட்சத்திற்கு கூடுதலாக தேவைப்படும் ரூ. 1.36 லட்சத்தினை 1997-98-ல் திருத்திய மதிப்பீட்டில் நிதிஒதுக்கம் செய்யப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த கீழ்க்கண்ட நிபந்தனைகளை பின்பற்ற இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(அ) பள்ளிக்கல்வி இயக்குநர் வெளியிட்டுள்ள 2-8-95 ஆம் நாளிட்ட 30-ஆ எண்ணிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிக்கை செய்யப்பட்ட பகுதி 6, பிரிவு 2-ல் கணிப்பொறிக் கல்வி பிரிவுடன் பயிலக்கூடிய பாடங்கள் குறிப்பிடப்பட்டுள்ள இப்பாடங்களையே இக்கணிப்பொறிக் கல்வி பயிற்சிக்கும் பயன்படுத்தி அனுமதிக்கலாம்.

(ஆ) கணிப்பொறி பயிற்றுவிக்கும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையில் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண் 588, நாள்: 21-7-95-ல் உள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி அத்துறையில் வழங்குவதுபோல் ஒரு வேளை பகுதிநேர ஆசிரியராக இருந்தால் மாதம் ஒன்றுக்கு ரூ. 500/-, இருவேளை பகுதி நேர ஆசிரியராக இருந்தால் மாதம் ஒன்றுக்கு ரூ. 1000/-ம் தொகுப்பூதியமாக வழங்கலாம்.

(இ) கணிப்பொறிக் கருவிகள் வாங்கும்போது தலைமைச் செயலாளரின் நேர்முக கடித எண் 7225/NIC/93, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, நாள் 10-1-94 மற்றும் அதற்குத் திருத்தம் வெளியிடப்பட்ட நேர்முக கடித எண் 596/NIC/95-ல் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளையும் வழிமுறைகளையும் பின்பற்றி அதாவது கணிப்பொறி வாங்கும்போது அரசு மேலாண்மை தகவல் அமைப்புக்கான துணைக் குழுவின் (Working Group on Government Management Information System) அனுமதி பெறுதல், கொள்முதல் குழு அமைத்தல், திறந்த முறை ஒப்பந்த அறிவிப்பு முறையைப் பின்பற்றுதல் முதலியவற்றைப் பின்பற்றிச் செயல்படுமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. 1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்காக "2225 01 800, LW. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் - 24. பொருள்களும், வழங்கலும்" என்ற கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 58.64 இலட்சத்தினை ஒப்புவிப்பு செய்யவும், ஆதிதிராவிடர் நல உயர்நிலை மற்றும் மேனிலைப்பள்ளிகளுக்கு கணிப்பொறிக் கல்வி துவக்க ரூ. 60.00 இலட்சம் 1997-98 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டிற்கு கருத்துரு அனுப்பும்போது சேர்த்து அனுப்பவும் இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3-ல் அனுமதிக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நல மேனிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் கணிப்பொறிக் கல்வி துவக்குவதால் ஏற்படும் செலவினங்களை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்- 01. பட்டியல் சாதியினர் நலன். 277 கல்வி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள். II மாநிலத் திட்டம். JG சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் பள்ளிக்கல்வி. 01 சம்பளங்கள் - 01 அடிப்படைச் சம்பளங்கள்.

(த.தொ.கு. 2225 01 277 JG 0115)

17 சிறு பணிகள்

(த.தொ.கு.2225 01 277 JG 1703)

18 பராமரிப்பு

(த.தொ.கு.2225 01 277 JG 1801)

19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்

(த.தொ.கு. 2225 01 277 JG 1918)

24 பொருள்களும் வழங்கலும்

(த.தொ.கு. 2225 01 277 JG 2408)

47 பண்டகசாலைப் பொருள்களும் சாதனங்களும்

(த.தொ.கு. 2225 01 277 JG 4700)

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையை தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் பெயர் வைப்புத் தொகைக் கணக்கில் முன்பணமாக செலுத்தும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தேவைப்பட்டியல் அனுப்புவதன் பேரில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் மேற்கண்ட பணம் நேர்செய்யப்படல் வேண்டும்.

7. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகைக்கான பட்டியலை பட்டியல் சரியாக இருப்பின் அங்கீகரிக்கும்படி சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 3-ல் அனுமதிக்கப்பட்ட தொகைகளை செலவழித்த பின்னர் மேலே பத்தி 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பில் நேர்செய்து அறிக்கை அனுப்புமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண் 321/து.செ./ஆர்பி/97, நாள் 1-7-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5, சென்னை-35.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை-6.

நகல்:

திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை/நிதித்துறை (சந)/நிதித்துறை (வரவு-செலவு-பொது.I) துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அந/ஆதிந.I) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

முஹம்மது கலிலுல்லா,
பிரிவு அலுவலர்.

## GOVERNMENT OF TAMIL NADU

### ABSTRACT

Adi Dravidar and Tribal Welfare—Schools—Upgradation of Adi Dravidar and Tribal Welfare Middle Schools into High Schools—Powers delegated to Headmasters to draw pay and other bills—Orders—Issued.

---

**Adi Dravidar and Tribal Welfare (ADW.7) Department**

G.O. (Ms.) No. 131, Dated: 14-7-97

Read:

1. G.O. Ms. No. 110/AD and TW, dated 13th September 1996.
2. From the Director of AD and TW. Lr. Rc. No. 86/43006/96, dated 27-11-1996 and 16-6-1997.

---

**ORDER:**

The Government in their Order read above, have upgraded the following Adi Dravidar and Tribal Welfare Middle Schools into High Schools during the year 1996-97:—

(1) Adi Dravidar Welfare Middle School, Telungapathi, Karur District.

(2) Adi Dravidar Welfare Middle School, Kunnur, Madurai District.

(3) Adi Dravidar Welfare Middle School, Vazhanthivayal, Kanniyakumari District.

(4) Government Tribal Residential Middle School, Melanai Papanasam, Tirunelveli Kattabomman District.

(5) Government Tribal Residential Middle School, Sitheri, Dharmapuri District.

2. The Director has requested the Government to authorise the Headmasters of the above schools to draw pay bills and other bills for themselves as well as the other teaching and non-teaching staff employed in the schools.

3. The Government accept the proposal of the Director of Adi Dravidar and Tribal Welfare and they hereby authorise the Headmasters of the schools detailed in para 1 above, to draw pay bills and other bills in respect of themselves and other teaching and non-teaching staff employed in their schools. The Government also direct that Treasury Officers concerned should admit the pay bills and other bills drawn and presented by the said Headmasters if they are otherwise in order.

4. This order issues with the concurrence of Finance Department vide its U.O.No. 54825/Fin(SW)/97-1, dated 11-7-1997.

(By order of the Governor)

**S. RANGANAYAKI,**
*Deputy Secretary to Government.*

To

The Director of Adi Dravidar and Tribal Welfare, Chennai-5.
The Director of Elementary Education, Chennai-6.
The Director of Government Examinations, Chennai-6.
The Director of School Education, Chennai-6.
The Accountant General (A&E), Chennai-18/Chennai-6.
The Accountant General (C&S), Chennai-18/Chennai-6.
The Collector of Karur, Madurai, Kanniyakumari, Tirunelveli and Dharmapuri Districts.
The District Adi Dravidar Welfare Officers of Karur, Madurai, Kanniyakumari, Tirunelveli and Dharmapuri Districts.
The Treasury Officers of Karur, Madurai, Kanniyakumari, Tirunelveli, and Dharmapuri Districts.
The Headmaster of Adi Dravidar Welfare High School, Telungapathi, Karur District.
The Headmaster of Adi Dravidar Welfare High School, Kunnur, Madurai District.
The Headmaster of Adi Dravidar Welfare High School, Vazhanthivayal, Kanniyakumari District.
The Headmaster of Government Tribal Residential High School, Melanai Papanasam, Tirunelveli District.
The Headmaster of Government Tribal Residential High School, Sitheri, Dharmapuri District.

**Copy to:**

(1) The Finance Department.
(2) The Adi Dravidar and Tribal Welfare (OP) Department, Chennai-9.
SF/SC.

/forwarded by order/

**கா. மகாலிங்கம்,**
*Section Officer.*

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்—கல்வி—பள்ளி—ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்—விளையாட்டுப் பொருட்கள்—கைப்பந்து, கூடைப்பந்து, மட்டைப்பந்துக்கான பொருட்கள் வழங்குதல்—விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துதல்—நிதி ஒப்பளிப்பு ஆணை—வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

*அரசாணை (நிலை) எண் 140* *நாள்: 4-8-1997.*

*ஆணை:*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கும் 101 ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு ரூ. 5,000 செலவில் விளையாட்டுப் பொருட்களான கைப்பந்து, கூடைப்பந்து, மட்டைப்பந்து முதலான பொருட்கள் வாங்கி வழங்கவும் மற்றும் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தவும், 1997-98 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 5.05 இலட்சத்திற்கு புதிய செயற்குறிப்பினை திட்ட நிதிக்குழுவிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அனுப்பியுள்ளார். 1997-98 ஆம் ஆண்டில் ஆசிரியர் குடியிருப்புக் கட்டிடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 5.03 இலட்சத்தை இத்திட்டத்திற்கு மாற்றி செலவழிக்கலாம் எனவும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்தது. அக்கருத்துருவை ஏற்கலாமென முடிவெடுத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கும் 101 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு ரூ. 5,000 செலவில் விளையாட்டுப் பொருட்களான கைப்பந்து, கூடைப்பந்து, மட்டைப்பந்து முதலான பொருட்களை வாங்கி வழங்கவும் மற்றும் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தவும், 1997-98 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 5,05,000 (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) செலவழிக்க அரசு ஒப்பளிப்பு வழங்குகின்றது.

3. 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஆசிரியர் குடியிருப்புக் கட்டிடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 5.03 இலட்சத்தை (ரூபாய் ஐந்து இலட்சத்து மூன்று ஆயிரம் மட்டும்) 1997-98 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதிநிலை நிதி ஒதுக்கத்தில் ஒப்பளிப்பு செய்யும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பில் கோரிக்கை எண் 30-ன்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் —01. பட்டியல் சாதியினர் நலன். 277 கல்வி -I திட்டத்தில் சேராதது. BA—ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல் மற்றும் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தல்."

*(த.தொ.கு. 2225 01 277 BA 0008)*

*18 பராமரிப்பு*

*(த.தொ.கு. 2225 01 277 BA 1801)*

*24 பொருள்களும் வழங்கலும்*

*(த.தொ.கு. 2225 01 277 BA 2408).*

5. தேவையான நிதி ஒதுக்கம் 1997-98 திருத்திய மதிப்பீடு/இறுதிநிலை ஒதுக்கீட்டில் செய்யப்படும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் திருத்திய மதிப்பீடு/இறுதிநிலை ஒதுக்கீட்டிற்கு கருத்துரு அனுப்பும்போது மேற்காணும் செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும், அதனை செலவழிக்கவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7. இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் (0301) மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

8. மேலே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இத்திட்டத்தின் செயல்பாடு மற்றும் முன்னேற்றம் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண் 343/து.செ. (ஆர்.பி.)/97, நாள் 31-7-1997-ல் பெற்று வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5.
அனைத்து தலைமை ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி/ மேல்நிலைப்பள்ளிகள். (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மூலமாக)

நகல்:

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.1/அந) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

முஹம்மத் கலீலுல்லா,
பிரிவு அலுவலர்.

GOVERNMENT OF TAMIL NADU

## ABSTRACT

Adi Dravidar and Tribal Welfare - Schools - Upgradation of Adi Dravidar and Tribal Welfare Middle Schools into High Schools - Powers Delegated to Head Masters to draw pay and other bills - Orders - Issued.

### Adi Dravidar and Tribal Welfare (ADW-VII) Department

G.O. (Ms.) No. 150 Dated: 28-8-97.

Read:

1. G.O.Ms.No.84/AD & TW, Dated 5-5-1997.
2. From the Director of AD & TW Lr.Rc.No. ka.42940/96, Dated 2-7-97.

---

**ORDER:**

The Government in their order read above, have upgraded the following Adi Dravidar and Tribal Welfare Middle Schools into High Schools during the year 1997-98:

(1) Adi Dravidar Welfare High School, Chempulichanpatti, Tiruchirappalli District.

(2) Adi Dravidar Welfare High School, Thaiyur, Kancheepuram District.

(3) Adi Dravidar Welfare High School, Madhuranthaganallur, Cuddalore District.

(4) Adi Dravidar Welfare High School, Sanapiratti, Karur District.

(5) Adi Dravidar Welfare High School, Kottamedu, Karur District.

2. The Director has requested the Government to authorise the Head Masters of the above schools to draw pay bills and other bills for themselves as well as the other teaching and non-teaching staff employed in the schools.

3. The Government accept the proposal of the Director of Adi Dravidar and Tribal Welfare and they hereby authorise the Head Masters of the schools detailed in para 1 above, to draw pay bills and other bills in respect of themselves and other teaching and non-teaching staff employed in their schools. The Government also direct that Treasury Officers concerned should admit the pay bills and other bills drawn and presented by the said Head Masters if they are otherwise in order.

4. This order issues with the concurrence of the Finance Department *vide* its U.O.No. 61670/Fin(SW)/97-1, Dated 5-8-97.

(By Order of the Governor)

**R. CHRISTODAS GANDHI,**
*Secretary to Government.*

To

The Director of Adi Dravidar and Tribal Welfare, Chennai-5.
The Director of Elementary Education, Chennai-6.
The Director of Government Examinations, Chennai-6.
The Director of School Education, Chennai-6.
The Accountant-General (A&E), Chennai-6.
The Accountant-General (C and S), Chennai-6.
The Collector of Tiruchirappalli, Kancheepuram, Cuddalore, Karur(2).
The District Adi Dravidar Welfare Officers of Tiruchirappalli, Kancheepuram, Cuddalore, Karur(2).
The Treasury Officers of Tiruchirappalli Kancheepuram, Cuddalore, Karur(2).
The Head Masters of Adi Dravidar Welfare School, Sempulichenpatti, Tiruchirappalli District.
The Head Master of Adi Dravidar Welfare School, Thaiyur, Kancheepuram District.
The Head Master of Adi Dravidar Welfare School, Madhuranthaganallur, Cuddalore District.
The Head Master of Adi Dravidar Welfare School, Sanapiratti, Karur District.
The Head Master of Adi Dravidar Welfare School, Kottamedu, Karur District.

**Copy to:**

The Finance Department, Chennai-9.
The Adi Dravidar and Tribal Welfare (OP) Department, Chennai-9.
SF/SC.
G.P. 28.8

/Forwarded/by Order/

கா. மகாலிங்கம்,
*Section Officer.*

சத்யமேவ ஜெயதே

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்—கல்வி—பள்ளிகள்—ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் மற்றும் அரசு உண்டுறைப் பள்ளிகளில் பணிபுரியும் சில்லரைச் செலவினப் பணியாளர்களின் பணியினை விதிகள் தளர்வு செய்து வரன்முறை செய்தல்—ஆணைகள்—வெளியிடப்படுகின்றன.

---

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந.7) துறை*

*அரசாணை (நிலை) எண் 153* *நாள்: 3-9-1997.*

*பார்வை:*

1. அரசாணை (நிலை) எண் 1190, சமூக நலத்துறை நாள்: 28-4-1988.
2. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் நேர்முகக் கடித எண் எ2/82196/90, நாள்: 19-5-1993, 21-6-93, 17-6-1993, 11-8-1993 மற்றும் 9-10-1996.
3. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் கடித எண் கே1/5437/90, நாள்: 28-4-1995, 15-5-1995 மற்றும் 7-8-1996.

**ஆணை:**

ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் உண்டுறைப் பள்ளிகளில் பணியாற்றும் சில்லரைச் செலவின பணியாளர்கள் முறையே காவலர், ஏவலர், துப்புரவு பணியாளர், தோட்டப் பணியாளர் மற்றும் சமையலர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கான செயற்குறிப்பை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

2. அரசு ஆணை (நிலை), எண் 42, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை (பணி.எஸ்) நாள் 5-2-1992 மற்றும் அ.சா.கு.எண் 16076/பணி.எஸ்/95-9, நாள் 5-2-1996-ல் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி 5-2-1992-க்கு முன்னதாக நியமனம் செய்யப்பட்ட முறையற்ற நியமனங்கள் யாவும் முன் தேதியிட்டு வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

3. மேற்கூறிய சூழ்நிலையில் இணைப்பு 1-ல் கண்டுள்ள 33 சில்லரைச் செலவினப் பணியாளர்களின் பணியினை அவர்கள் பணியேற்ற நாள் முதல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் சிறப்பு விதிகளின் கீழ் பொதுவிதி 10ஏ(எ) மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல காவலர் மற்றும் ஏவலர் பதவிக்கான தற்காலிக விதிகளில் விதி 6(ஏ)/6(பி) மற்றும் இணைப்பு 2-ல் உள்ள ஒரு தற்காலிக சமையலரின் பணியினை அவர் பணி ஏற்ற நாள் முதல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் சிறப்பு விதிகளின் கீழ் சமையலர்களுக்கான தற்காலிக விதிகளில் விதி 6(எ) ஆகியவற்றை அவரவருக்கெதிரே குறிப்பட்டவண்ணம் தளர்வு செய்து வரன்முறை செய்யப்படுகின்றது. இதனால், 34 காவலர், ஏவலர் மற்றும் சமையலர் பணியிடங்கள் ரூ. 750—12—870—15—945 என்ற சம்பள ஏற்ற முறையில் புதிதாகத் தோற்றுவித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. 1987 ஆம் ஆண்டு பணியாளர் தொகுதி நூலின் தொகுதி I-ல் உள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் சிறப்பு விதிகளின் கீழ் பொது விதி 48-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு ஆளுநர் இணைப்பு I மற்றும் IIல் கண்டுள்ள 34 சில்லரைச் செலவினப் பணியாளர்களின் பணியினை அவர்கள் பணியமர்த்தப்பட்ட நாள் முதலே வரன்முறை செய்வதற்கேதுவாக மேற்படி விதிகளில் பொது விதி 10ஏ(எ)/10ஏ(எ) மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை காவலர் ஏவலர் மற்றும் சமையலருக்கான தற்காலிக விதிகளில் விதி 6(எ)/6(பி) ஆகியவற்றை அவரவருக்கெதிரே குறிப்பிட்டவாறு

தளர்வு செய்து ஆணையிடுகிறார்.

5. இணைப்பு I(ம) 2-லுள்ள 34 சில்லரைச் செலவினப் பணியாளர்கள் முறையற்ற முறையில் நியமனம் செய்த அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு.எண் 171/சிசெ/97, நாள் 12-8-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்டாட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18 பெயரில்.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-1) சென்னை-6.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-2) சென்னை-35 பெயரில்.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை-5.

நகல்:

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
நிதி (சமூகநலம்) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந.4) துறை, சென்னை-9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

## இணைப்பு - 1

**அரசாணை (நிலை) எண் 153, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந.7) துறை நாள்: 3-9-97.**

| வ.எண் (1) | பணியாளர் பெயர் மற்றும் பள்ளியின் பெயர் (2) | கல்வித் தகுதி (3) | பிறந்த தேதி (4) | பணியில் சேர்ந்த நாள் (5) | பணியாளர் விதி மற்றும் பொது விதி தளர்த்தப்படும் விதிகள். (6) |
|---|---|---|---|---|---|
| **திருச்சி மாவட்டம்:** | | | | | |
| 1. | திரு. பி. கலியமூர்த்தி, காவலர் (ம) ஏவலர், அரசு உயர்நிலைப்பள்ளி, மலையாளப்பட்டி. | பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெறாதவர். | 02-08-44 | 04-10-70 | 10ஏ(எ) |
| 2. | திரு. ஆர். சுந்தரவடிவேல், காவலர் (ம) ஏவலர், சிலையூர். | 6 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர். | 05-05-48 | 19-08-74 | 10ஏ(எ) |
| 3. | திரு. என். ராபர்ட்ரோஸ், காவலர் (ம) ஏவலர், அரசு உண்டுறைப்பள்ளி, இராமநாதபுரம். | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற வில்லை. | 05-06-53 | 18-10-79 | கருணை அடிப்படையில் நியமனம். |
| 4. | திரு. வி. பழனியாண்டி, காவலர் (ம) ஏவலர், அரசு உண்டுறைப்பள்ளி, நெசக்குளம். | பள்ளிக்கல்வி இறுதி வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. | 02-04-55 | 31-10-79 | 10ஏ(எ) |
| 5. | திருமதி எம். ஜெயகொடி, காவலர் (ம) ஏவலர், அரசு உண்டுறை மாணவியர், விடுதி, அம்மாவூர். | பள்ளிக்கல்வி இறுதி வகுப்பு | 07-01-55 | 12-02-81 | கருணைஅடிப்படையில் நியமனம். |
| 6. | திரு. ஜி. இளங்கோவன், காவலர் (ம) ஏவலர், அரசு உண்டுறைப்பள்ளி, டாப்செங்காட்டுப்பட்டி. | பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. | 25-04-63 | 12-05-81 | கருணைஅடிப்படையில் நியமனம். |
| 7. | திருமதி எஸ். ஜெயம், காவலர் (ம) ஏவலர், அரசு உண்டுறை மாணவர், விடுதி, பெருமாள் பாளையம். | எட்டாம் வகுப்பு தேர்ச்சி. | 23-05-50 | 12-08-81 | கருணை அடிப்படையில் நியமனம். |
| 8. | பி. முத்து, தோட்டக்காரர், ஆதிதிராவிடர் நலப்பள்ளி, திருத்தலையூர். | பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. | 24-11-52 | 31-10-79 | 10ஏ(எ) |
| 9. | திரு. எம். ராமசாமி, காவலர் (ம) ஏவலர், அரசு உண்டுறைப்பள்ளி, கானப்பாடி. | பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. | 11-05-58 | 12-10-82 | 6(எ) |
| 10. | திரு. ஆர். வடமலை, காவலர் (ம) ஏவலர், அரசு உண்டுறைப்பள்ளி, கிழக்கரை. | 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. | 05-04-50 | 13-10-82 | 6(எ) |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| **கோயம்புத்தூர் மாவட்டம்:** | | | | | |
| 11. | திரு. ஏ. மருதன், பணியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, முட்டத்துவயல். | 5 ஆம் வகுப்பு | 12-04-50 | 22-04-70 | 10ஏ(எ) |
| 12. | திரு. கே. பாண்டியன், காவலர், ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி, தொண்டமுத்தூர். | எழுதப்படிக்கத் தெரியும். | 01-07-30 | 21-11-79 | 10ஏ(எ) மற்றும் 6(எ) |
| 13. | திரு. வி. பழனிச்சாமி, பணியாளர், அரசு உண்டுறைப்பள்ளி, திருமூர்த்திமலை. | 9 ஆம் வகுப்பு தேர்ச்சி. | 16-06-62 | 01-07-80 | 10ஏ(எ) |
| 14. | திரு. ஆர். பாபநாசம், பணியாளர், அரசு உண்டுறைப்பள்ளி, சிங்கம்பதி. | 8 ஆம் வகுப்பு தேர்ச்சி. | 22-05-58 | 01-01-80 | 10ஏ(எ) |
| **பெரியார் மாவட்டம்:** | | | | | |
| 15. | திரு. பங்காரு, பணியாளர், அரசு உண்டுறைப்பள்ளி, ஆசனூர். | எழுதப்படிக்கத் தெரியும். | 14-01-39 | 01-08-66 | 10ஏ(எ) |
| **கன்னியாகுமரி மாவட்டம்:** | | | | | |
| 16. | திரு. தாமோதரநாயர், காவலர், அரசு உண்டுறைப்பள்ளி, பேச்சிப்பாறை. | 6 ஆம் வகுப்பு | 11-02-25 | 05-06-61 | 6(எ) |
| **நீலகிரி மாவட்டம்:** | | | | | |
| 17. | திரு. என். தங்கப்பன், பணியாளர், அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளி, பொன்னாணி. | தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். | 28-05-57 | 24-01-74 | 10ஏ(எ) |
| 18. | திரு. கே. கரியன், பணியாளர், அரசு உண்டுறைப்பள்ளி, எனமன்னா. | தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். | 19-08-50 | 08-02-69 | 10ஏ(எ) |
| 19. | திரு. கு. நஞ்சன், பணியாளர், அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளி, சோலூர். | தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். | 04-01-60 | 01-01-80 | 10ஏ(எ) |
| 20. | திரு. கே. ரஞ்சன், பணியாளர், அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளி, ஆணைப்பள்ளம். | தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். | 01-07-42 | 01-03-82 | 6(எ) |
| 21. | திரு. கோமன், பணியாளர், அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளி, தலிக்கால். | தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். | 01-07-31 | 16-03-81 | 6(எ) |

| (1) | (2) | (3) | (4) | | (6) |
|---|---|---|---|---|---|
| கடலூர் மாவட்டம்: | | | | | |
| 22. | திரு. ஆர். விஸ்வகேது, காவலர், ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி (ஆண்கள்), சிதம்பரம். | எட்டாம் வகுப்பு தேர்ச்சி. | 21-10-37 | 13-05-72 | 10ஏ(எ) மற்றும் 6(எ) |
| 23. | திரு. ஆர். ராமச்சந்திரன், காவலர், அரசு உண்டுறைப் பள்ளி, இந்நாடு. | எஸ்.எஸ்.எல்.சி. | 15-04-60 | 25-05-79 | |
| 24. | திரு. எல். இராமச்சந்திரன், காவலர், ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, புளிச்சம்பள்ளம். | பத்தாம் வகுப்பு இடையில் நின்றுவிட்டார். | 17-04-53 | 24-10-81 | 10ஏ(எ) |
| 25. | திரு. கே. மூர்த்தி, காவலர், ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, சேப்பாக்கம். | 11 ஆம் வகுப்பு தோல்வி. | 15-06-52 | 30-04-81 | 10ஏ(எ) |
| 26. | திரு. எ. இளஞ்செழியன், காவலர், அரசு பழங்குடியினர் உண்டுறைப்பள்ளி, கோமுகி அணை. | 10 ஆம் வகுப்பு | 02-04-62 | 01-05-81 | 10ஏ(எ) |
| 27. | திரு. எஸ். மோகன், காவலர், சங்கராபுரம். | எஸ்.எஸ்.எல்.சி. தோல்வி. | 01-07-51 | 30-04-81 | |
| 28. | திரு. இ. பெரியசாமி, காவலர், அரசு பழங்குடியினர் உண்டுறைப்பள்ளி, சங்கராபுரம். காஞ்சிபுரம் மாவட்டம் | எழுதப்படிக்கத் தெரியும். | 02-11-42 | 02-05-81 | 6(எ) |
| காஞ்சிபுரம் மாவட்டம்: | | | | | |
| 29. | திரு. எ. தனராஜூ, காவலர், அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளி, பாலூர். | எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி. | 13-08-55 | 12-06-80 | 10ஏ(எ) |
| 30. | திரு. எஸ். வெயில் முத்து, காவலர், ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, நாகல்கேணி. | 5 ஆம் வகுப்பு தேர்ச்சி. | 05-05-51 | 21-04-80 | 10ஏ(எ) |
| திருவள்ளூர் மாவட்டம்: | | | | | |
| 31. | திரு. எம். அய்யாசாமி, காவலர், அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, செவ்வாய்ப்பேட்டை. | எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி. | 04-08-57 | 05-06-80 | |
| தஞ்சாவூர் மாவட்டம்: | | | | | |
| 32. | திரு. கோ. கண்ணையன், இரவுக் காவலர், ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, நெடுங்குளம். | எஸ்.எஸ்.எல்.சி. | 03-06-49 | 19-10-83 | 10ஏ(எ) |

சென்னை மாவட்டம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 33. | திரு. இஸ்ரேல், காவலர், ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி (ஆண்கள்), கன்னிகாபுரம். | படிக்காதவர். | 10-02-45 | 04-11-77 | 10ஏ(எ) மற்றும் 6(பி) |

இணைப்பு - 2

சேலம் மாவட்டம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 34. | திரு. வி. வேலு, சமையலர், அரசு பழங்குடியினர் உண்டுறைப்பள்ளி, ஒடைக்காட்டப்புதூர். | எட்டாம் வகுப்பு. | 24-06-50 | 24-03-86 | 6(எ) |

/உண்மை நகல்/

கா. மகாலிங்கம்,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் — கல்வி — நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்பொழுது தொடக்கப்பள்ளிகள் தனித்து இயங்கவும், தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்கள் பணியிடங்கள் தோற்றுவித்தல் — ஆணைகள் — வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.7) துறை**

*அரசாணை (நிலை) எண் 165* — *நாள்: 1-10-1997.*

*படிக்கப்பட்டது:*

(1) அரசு நே.மு.க. எண் 10763/ஆதிந.7/97-1, நாள் 21-4-1997.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் ந.க. எண் எ6/20331/97, நாள் 9-5-1997.

------

**ஆணை:**

நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தும்போது ஆரம்பப்பள்ளிகளைத் தனியாகப் பிரித்து அதற்கென ஒரு தலைமையாசிரியர் தனியாக நியமிக்கப்படுவர் என்றும், அதற்கென 24 (இருபத்து நான்கு) பணியிடங்கள் உருவாக்கப்படும் என சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள்.

2. இத்திட்டத்தை செயல்படுத்த, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் அறிக்கை கோரப்பட்டது. நடுநிலைப்பள்ளிகள் 1 முதல் 8 வகுப்புகள் கொண்டதாகவும், உயர்நிலைப்பள்ளிகள் 6 முதல் 10 வகுப்புகள் கொண்டதாகவும் செயல்படுகின்றன. நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்படும்போது ஏற்கனவே நடுநிலைப்பள்ளிகளாக இருந்த சமயத்தில் 1 முதல் 5 வகுப்புகள் தனியாக பிரிக்கப்பட்டு ஆரம்பப்பள்ளிகளாக செயல்படுவதும், 6 ஆம் வகுப்பு முதல் உயர்நிலைப்பள்ளிகளுடன் செயல்படுவதும் மரபாகும். இவ்வாறாக 1990-91 ஆம் ஆண்டு முதல் 1996-97 ஆம் ஆண்டு வரை 24 ஆரம்பப்பள்ளிகள் தனியாகப் பிரித்து அப்பள்ளிகளுக்கு தலைமையாசிரியர் நியமிக்கப்பட வேண்டும். ஆரம்பப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டிய நிலை வருவதால், ஆரம்பப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் தனி வகையாக ரூ. 1,400-40-1,600-50-2,300-60-2600 என்ற சம்பள ஏற்ற முறையில் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, அதில் நியமனம் பெறும் நபர் சம்பளம் பெறுகின்ற வகையில் ஆரம்பப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துவது அவசியமாகிறது. இவ்வாறு பணியிடங்கள் புதியதாகத் தோற்றுவிப்பதினால் பள்ளி ஒன்றுக்கு உயரளவாக ஆண்டொன்றுக்குத் தொடரும் செலவு ரூ. 63,840 வீதம் 24 பள்ளிகளுக்கும் ரூ. 15.32 லட்சம் செலவாகும் என்றும் தெரிவித்து, 24 தலைமையாசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கோரியுள்ளார்.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு ஆழ்ந்து ஆய்வு செய்தது. நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்போது, உயர்நிலைப்பள்ளிகளிலிருந்து ஆரம்பப்பள்ளிகளைப் பிரித்து, ஆரம்பப்பள்ளிகளாகத் தனித்து செயல்படவும் அவ்வாறு தனித்து செயல்படும் இணைப்பில் உள்ள 24 ஆரம்பப்பள்ளிகளுக்கும் கல்வித்துறையில் உள்ளது போல் ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கவும் அதற்கேற்ப தற்போதுள்ள 24 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை (ரூ. 1,200-30-1,560-40-2,040) ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக ரூ. 1,400-40-1,600-50-2,300-60-2,600 என்ற சம்பள விகிதத்தில் நிலை உயர்த்தியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட சம்பள ஏற்ற முறையில் பணியிடங்கள் நிலை உயர்த்தும்போது அப்பணியிடங்களுக்கு ஏற்படும் செலவினங்களைக் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலவிட வேண்டும்.

"2225. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01. ஆதிதிராவிடர் நலன் 277. கல்வி - எஎ. பள்ளிக்கல்வி 01. சம்பளங்கள் (த.தொ.கு. எண்2225 01 277 0009)".

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு. எண் 305/DS(RP)/97, நாள் 27-6-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலாளர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-35.
மாநிலக் கணக்காயர், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்டாட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள்.
தொடக்கப்பள்ளி இயக்குநர், சென்னை-6.

நகல்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

**இணைப்பு.**

***(அரசாணை நிலை எண் 165, ஆதி(ம) பந, நாள் 1-10-1997)***

| வ.எண். | அரசாணை விபரம். | பள்ளியின் பெயர். |
|---|---|---|
| 1. | அ.ஆ. எண் 1392, ஆதி(ம)பந, நாள் 20-8-1990. | 1. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, கப்பூர், கடலூர் மாவட்டம். |
| | | 2. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, மதுராந்தக நல்லூர் மற்றும் |
| | | 3. பாலப்பட்டி, சேலம். |
| | | 4. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, ஹூக்கர், நீலகிரி மாவட்டம். |
| | | 5. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, பூவானப்பட்டு, திருச்சி மாவட்டம். |
| | | 6. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, நல்லாடை, தஞ்சாவூர் மாவட்டம். |

| | |
|---|---|
| 2. அ.ஆ.ப. எண்178, ஆதி(ம)பந, நாள் 6-8-1992. | 7. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, பேரணாம்பட்டு, வேலூர் மாவட்டம். |
| | 8. அரசு பழங்குடியினர் உண்டுறை உயர்நிலைப்பள்ளி, டாப்செங்காட்டுப்பட்டி, திருச்சி மாவட்டம். |
| 3. அ.ஆ.ப. எண்169, ஆதி(ம)பந, நாள் 22-7-1993. | 9. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, மணமை, காஞ்சிபுரம் மாவட்டம். |
| | 10. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, புள்ளம், திருச்சி. |
| | 11. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, தொண்டமுத்தூர், கோயம்புத்தூர். |
| 4. அ.ஆ.ப. எண் 166, ஆதி(ம)பந, நாள் 10-11-1994. | 12. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, பாலாவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| | 13. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, முருகன்பட்டி, திண்டுக்கல். |
| | 14. பழங்குடியினர் நல உண்டுறை உயர்நிலைப்பள்ளி, ஓடைக்காட்டுப்புதூர், சேலம் மாவட்டம். |
| 5. அ.ஆ.ப. எண் 135, ஆதி(ம)பந, நாள் 19-7-1995. | 15. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, மௌலிவாக்கம், காஞ்சிபுரம். |
| | 16. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, குடியநல்லூர், விழுப்புரம். |
| | 17. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, எலமானூர், மதுரை. |
| | 18. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, முத்துவிருகண்டியம்பட்டி, தஞ்சாவூர். |
| | 19. பழங்குடியினர் உண்டுறை உயர்நிலைப்பள்ளி, ஆணைக்கட்டி, கோயம்புத்தூர். |
| 6. அ.ஆ.ப. எண் 110, ஆதி(ம)பந, நாள் 13-9-1996. | 20. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, தெலுங்குப்பட்டி, கரூர். |
| | 21. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, குன்னூர், மதுரை. |
| | 22. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, வாழையுத்துவயல், கன்னியாகுமரி. |
| | 23. பழங்குடியினர் உண்டுறை உயர்நிலைப்பள்ளி, மேலணை பாபநாசம், திருநெல்வேலி. |
| | 24. பழங்குடியினர் உண்டுறை உயர்நிலைப்பள்ளி, சித்தேரி, தர்மபுரி. |

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதி திராவிடர் நலம் - கல்வி - விடுதிகள் - 1997-98-ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் 40 புதிய ஆதி திராவிடர் நல விடுதிகள் தோற்றுவித்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

அரசு ஆணை (நிலை) எண் 73 நாள் 5-5-1997.

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண். 113, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 17-9-1996.

2. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நேர்முக கடித எண். ட்டி1/2339/97, நாள் 31-1-1997 மற்றும் 12-2-1997.

- - - -

**ஆணை:**

ஆதி திராவிடர்களின் கல்வித்தரத்தை உயர்த்த அவர்களுக்கு விடுதி வசதியை ஏற்படுத்துவது அரசின் கொள்கையாகும். இதனைப் படிப்படியாக சந்திக்கும் வகையில் ஆதி திராவிடர்களுக்கு ஆண்டுதோறும் புதிதாக விடுதிகள் துவக்கப்படுகின்றன. 1996-97-ம் ஆண்டில் பார்வையில் கண்டுள்ள அரசாணையில் 40 ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகள் துவக்க ஆணையிடப்பட்டது.

2. 1997-98-ல் புதிய விடுதிகள் திறப்பது குறித்த இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் செயற்குறிப்பை அரசு ஆய்வுசெய்து மொத்தம் 40 புதிய ஆதி திராவிடர் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் தோற்றுவிக்க முடிவு செய்து அவ்வாறே இணைப்பு 1-ல் குறிப்பிட்டுள்ளவாறு 2 முதுகலை பட்டதாரி விடுதிகள், 3 கல்லூரி விடுதிகள் மற்றும் 35 உயர்நிலைப்பள்ளி விடுதிகள் தோற்றுவிக்க ஆணையிடுகிறது. ஒவ்வொரு விடுதியிலும் 50 இடங்கள் இருக்கும்.

3. புதிதாகத் தோற்றுவிக்கப்படும் 40 விடுதிகளுக்குப் பணியாளர்கள் மற்றும் இதர செலவினங்களுக்கு இணைப்பு 2-லும் 3-லும் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு விடுதி துவக்கப்பட்ட நாள் முதல் செலவினம் ஏற்படுத்த இசைவு வழங்கப்படுகிறது.

4. தொடரா இனச் செலவு பொறுத்தமட்டிலும் இணைப்பு 3-ல் தெரிவிக்கப்பட்டுள்ள உச்ச செலவினத்திற்குட்பட்டு செலவு செய்ய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது. தொடரினம் மற்றும் தொடரா இனச் செலவுகள் யாவும் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.171-07 இலட்சத்திற்கு மிகாதவாறு செலவிடப்படவேண்டும்.

5. தங்களது அதிகார வரம்புக்குட்பட்டு மாவட்ட ஆட்சியர் அல்லது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் புதிய விடுதிகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படுகிறது. புதிய விடுதிகளுக்கு அரவை இயந்திரம், பாத்திரங்கள், மரத்தளவாடங்கள், பாய்கள், எடைபோடும் இயந்திரங்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கு அரசாணை (நிலை) எண். 708, நிதித் துறை, நாள் 22-8-1994-ல் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

6. மேலே பத்தி 3-ல் தெரிவிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்.01. பட்டியல் சாதியினர் நலன்.793.பட்டியல் சாதியினர் சிறப்புக்கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்.II. மாநிலத் திட்டம். JG.புதிய மாணவர் இல்லங்கள்.

(த.தொ.கு.2225 01 793 JG 0004)

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 140 து.செ.(ஆர்.பி)/97, நாள் 10 ஏப்ரல் 1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் 'ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-5.
மாநில தலைமை கணக்காயர், சென்னை-18/சென்னை-35/ சென்னை-6.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அதிகாரிகள்.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு/தெற்கு), சென்னை-5/ சென்னை-35.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்கள்.
ஆதி திராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.

## இணைப்பு-1

### 1997-98 ஆம் ஆண்டில் புதிதாக தோற்றுவிக்கப்படும் விடுதிகளின் விவரம்

**முதுகலைப்பட்டதாரி மாணவர் விடுதிகள்:**

| | | |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 2. | மதுரை கே.கே. நகர் .. | மதுரை மாவட்டம் |

**கல்லூரி மாணவர் விடுதிகள்:**

| | | |
|---|---|---|
| 3. | பரமக்குடி மாணவியர் விடுதி .. | இராமநாதபுரம் மாவட்டம் |
| 4. | மதுரை அண்ணாநகர் மாணவர் விடுதி .. | மதுரை மாவட்டம் |
| 5. | புதுக்கோட்டை மாணவர் விடுதி .. | புதுக்கோட்டை மாவட்டம் |

**உயர்நிலை மாணவர் விடுதிகள்:**

| | | |
|---|---|---|
| 6. | அகரம்சேரி மாணவர் விடுதி .. | வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் |
| 7. | புளியம்பட்டி ஐ.டி.ஐ. மாணவர் விடுதி .. | வ.உ.சி. மாவட்டம். |
| 8. | ஆனியூர் மாணவர் விடுதி .. | காமராஜர் மாவட்டம் |
| 9. | இலுப்பையூர் : | காமராஜர் மாவட்டம் |
| 10. | சித்தலம்பட்டு மாணவர் விடுதி .. | விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் |
| 11. | சௌந்திரவல்லிபாளையம் | விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம். |
| 12. | சேந்தநாடு கிராமம் .. | விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம். |
| 13. | மு. பரூர் மாணவர் விடுதி .. | தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம். |
| 14. | பண்ருட்டி .. | தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் |
| 15. | வடலூர் .. | தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் |
| 16. | கம்பூர் .. | தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம். |
| 17. | மேலநெட்டூர் .. | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் |
| 18. | மல்லல் .. | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் |
| 19. | கொல்லங்குடி .. | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் |
| 20. | இடைகாட்டூர் மாணவர் விடுதி .. | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் |
| 21. | பட்டிவீரன்பட்டி மாணவர் விடுதி .. | திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம் |
| 22. | தாந்தோனிமலை .. | கரூர் தீரன் சின்னமலை மாவட்டம் |
| 23. | தரகம்பட்டி .. | கரூர் தீரன் சின்னமலை மாவட்டம். |
| 24. | குன்னம் பெண்கள் விடுதி .. | பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம். |
| 25. | கொளக்காநத்தம் மாணவர் விடுதி .. | பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் |
| 26. | ஆடுதுரை மாணவர் விடுதி .. | பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் |
| 27. | மத்தகிரி .. | தர்மபுரி மாவட்டம் |
| 28. | வேட்ரப்பட்டி அரூர் .. | தர்மபுரி மாவட்டம் |
| 29. | நல்லம்பள்ளி .. | தர்மபுரி மாவட்டம் |
| 30. | திருச்செந்தூர் .. | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் |
| 31. | வில்லூர் .. | மதுரை மாவட்டம் |
| 32. | ஐங்குளம் .. | திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் |
| 33. | கோட்டப்பாளையம் மாணவர் விடுதி .. | நாமக்கல் ராஜாஜி மாவட்டம் |
| 34. | கொல்லிமலை மாணவர் விடுதி .. | நாமக்கல் ராஜாஜி மாவட்டம் |

உயர்நிலை மாணவர் விடுதிகள்—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| 35. | குடவாசல் மாணவர் விடுதி | .. | நாகை காயிதேமில்லத் மாவட்டம் |
| 36. | சீர்காழி மாணவர் விடுதி | .. | தஞ்சாவூர் மாவட்டம் |
| 37. | செவ்வாய்பேட்டை மாணவர் விடுதி | .. | திருவள்ளூர் எம்.ஜி.ஆர். மாவட்டம் |
| 38. | பூந்தோட்டம் பள்ளி மாணவர் விடுதி | .. | ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் |
| 39. | வெள்ளக்கிணறு மாணவர் விடுதி | .. | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 40. | சர்க்கார் சாமக்குளம் மாணவர் விடுதி | .. | கோயம்புத்தூர் மாவட்டம் |

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

## இணைப்பு-2

### தொடர் இனச்செலவினத்தின் விபரம்

1. 40 பட்டதாரி ஆசிரியர் நிலை காப்பாளர்/காப்பாளினி சம்பள விகிதம் ரூ.1400-40-1600-50-2300-60-2600
2. 40 சமையலர்கள் சம்பள விகிதம் ரூ.750-12-870-15-945
3. 40 காவலாளர் மற்றும் ஊழியர் (40 Servant-*cum*-Watchman) சம்பள விகிதம் ரூ.750-12-870-15-945
4. 40 உதவி ஊழியர்கள் மாதம் ரூ.500/- தொகுப்பு ஊதியத்தில்
5. உணவுக் கட்டணம் - அவ்வப்பொழுது அரசு நிர்ணயிக்கும் விகிதப்படி
6. முடிதிருத்தம் - மாணவன் ஒருவனுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.10/-
7. மாதம் ஒன்றிற்கு ரூ.140/- வீதம் செய்தித்தாள் வாங்க 40 விடுதிகளுக்கு
8. கட்டிட வாடகை மாவட்ட ஆட்சித்தலைவர்/இயக்குநர் வரம்பிற்குட்பட்டது.

## இணைப்பு-3

### தொடரா இனச்செலவு விபரம் 40 விடுதிகளுக்கு

| வ.எண். | செலவினத் தலைப்பு | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | விடுதி ஒன்றிற்கு ரூ.57,100/- வீதம் சமையல் எரிவாயு, அரவை இயந்திரம், வண்ணத்தொலைக்காட்சி பெட்டி வாங்க | 22,84,000 |
| 2. | விடுதி ஒன்றிற்கு ரூ.42,000/- வீதம் பாத்திரம் வாங்க | 16,80,000 |
| 3. | விடுதி ஒன்றிற்கு ரூ.35,750/- வீதம் மேசை, நாற்காலி, விளையாட்டு பொருட்கள் முதலியன வாங்க | 14,30,000 |
| 4. | விடுதி ஒன்றிற்கு ரூ.7,625/- வீதம் நூலகப் புத்தகங்கள் வாங்க | 3,05,000 |
| 5. | மாணவர்/மாணவி ஒருவருக்கு ரூ. 2075/- வீதம் 2,000 பேருக்கு பாய், வாளி, எழுதுபொருள், குழல் விளக்குகள் முதலியன வாங்க | 83,000 |

(உண்மை நகல்)

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

கடித எண் 16541/ஆதிந.9(2)/97-3, நாள் 5-8-1997.

அனுப்புநர்

திரு.இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-9.

பெறுநர்

இயக்குநர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-5.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை/கடலூர்/சிவகங்கை/திண்டுக்கல்/
காஞ்சிபுரம்/பெரம்பலூர்/கோயம்புத்தூர்/தூத்துக்குடி/
திருநெல்வேலி/தஞ்சாவூர்/நாமக்கல்/திருவள்ளூர்/
நாகப்பட்டணம் மாவட்டம்.

ஐயா,

பொருள்: ஆதி திராவிடர் நலம் - கல்வி - விடுதிகள் - 1997-98 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் 40 புதிய ஆதி திராவிடர் நல விடுதிகள் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டது. - பின்னேற்பு மற்றும் திருத்தங்கள் வெளயிடப்படுகிறது.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண் 73, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 5-5-1997.

2. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நேர்முக கடித எண் தி1/2339/97, நாள் 27-6-1997.

----

அரசாணை (நிலை) எண் 73, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 5-5-1997-ல், 1997-98 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் 40 புதிய ஆதி திராவிடர் நல விடுதிகள் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசாணையில் இணைப்பு-I—க்கு கீழ்க்கண்ட திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

திருத்தங்கள்

| வரிசை எண் | அரசாணையின் இணைப்பில் உள்ள வரிசை எண் | திருத்தம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | 5 | "புதுக்கோட்டை கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை மாவட்டம்" என்பதற்குப் பதிலாக "பூலாங்குறிச்சி கல்லூரி மாணவர் விடுதி, சிவகெங்கை மாவட்டம் என்றும் |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 2 | 14 | "பண்ருட்டி மாணவர் விடுதி, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்" என்பதற்குப் பதிலாக "பண்ருட்டி மாணவியர் விடுதி, கடலூர் மாவட்டம்" என்றும் |
| 3 | 15 | "வடலூர் மாணவர் விடுதி, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் என்பதற்கு பதிலாக வடலூர் மாணவியர் விடுதி, கடலூர் மாவட்டம்" என்றும் |
| 4 | 21 | "பட்டிவீரன்பட்டி மாணவியர் விடுதி திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம்" என்பதற்குப் பதிலாக "பெருநகர் மாணவர் விடுதி, காஞ்சிபுரம் மாவட்டம்" என்றும் |
| 5 | 24 | "குன்னம் பெண்கள் விடுதி, பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்" என்பதற்குப் பதிலாக "காடம்பாறை மாணவர் விடுதி, கோயம்புத்தூர் மாவட்டம்" என்றும் |
| 6 | 30 | "திருச்செந்தூர், சிதம்பரனார் மாவட்டம்" என்பதற்குப் பதிலாக "சோலைச்சேரி மாணவியர் விடுதி, திருநெல்வேலி மாவுட்டம்" என்றும் |
| 7 | 33 | "கோட்டப்பாளையம் மாணவர் விடுதி, நாமக்கல் ராஜாஜி மாவட்டம்" என்பதற்குப் பதிலாக "கோட்டப்பாளையம் மாணவியர் விடுதி, நாமக்கல் மாவட்டம்" என்றும் |
| 8 | 35 | "குடவாசல் மாணவர் விடுதி, நாகை காயிதேமில்லத் மாவட்டம்" என்பதற்குப் பதிலாக "குடவாசல் மாணவியர் விடுதி, நாகப்பட்டினம் மாவட்டம்" என்றும் |
| 9 | 36 | "சீர்காழி மாணவர் விடுதி, தஞ்சாவூர் மாவட்டம், என்பதற்குப் பதிலாக "நல்லாடை மாணவர் விடுதி, தஞ்சாவூர் மாவட்டம்", என்றும் |
| 10. | 37 | செவ்வாய்பேட்டை மாணவர் விடுதி, திருவள்ளூர் எம்.ஜி.ஆர் மாவட்டம் என்பதற்குப் பதிலாக "பெரியபாளையம் மாணவர் விடுதி, திருவள்ளூர் மாவட்டம்" |

என்றும் மாற்றம் செய்யப்படுகிறது.

2. மேலே பத்தி 1ல் வரிசை எண்கள் 2,7 மற்றும் 8-ல் உள்ள இடங்களில் மாணவர் விடுதிகளை மாணவியர் விடுதிகளாக இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் அவர்களால் ஏற்கெனவே மாற்றிய செயலுக்கு அரசால் பின்னேற்பு வழங்கப்படுகிறது.

நகல்

மாநில தலைமைக் கணக்காயர், சென்னை-18/சென்னை-35/ சென்னை-6.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/சென்னை-35.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அதிகாரிகள்.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்கள்.
ஆதி திராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
பிற்பட்டோர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.

தமிழ்நாடு அரசு

ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

கடித எண். 22930/ஆதிந.9(2)/97-2, நாள் 21-10-1997.

அனுப்புநர் :

திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

பெறுநர் :

இயக்குநர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-5.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்/நாகப்பட்டினம்/திருவாரூர்/மதுரை/திருநெல்வேலி/
கோயம்புத்தூர்/தேனி மாவட்டம்.

ஐயா,

பொருள்: ஆதி திராவிடர் நலம்—கல்வி—விடுதிகள்—1997-98 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் 40 புதிய ஆதி திராவிடர் நல விடுதிகள் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டது —பின்னேற்பு மற்றும் திருத்தங்கள் வெளியிடப்படுகிறது.

பார்வை: 1. அரசாணை (நிலை எண். 73, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 5-5-1997.

2. அரசு கடித எண் 16541/ஆதிந.9(2)/97-3, நாள் 5-8-1997.

3. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், கடித எண் த1/2339/97, நாள் 22-8-1997 மற்றும் 23-9-1997.

- - - -

அரசாணை (நிலை) எண். 73, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 5-5-1997-ல், 1997-98 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் 40 புதிய ஆதி திராவிடர் நல விடுதிகள் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசாணைக்கு பார்வை 2-ல் உள்ள அரசுக் கடிதத்தில் திருத்தங்கள்/பின்னேற்பு வெளியிடப்பட்டன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அனுப்பியுள்ள முன்மொழிவின் அடிப்படையில் மேற்கூறிய அரசாணைக்கும் பார்வை 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசுக் கடிதத்திற்கும் கீழ்கண்ட திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன:—

## திருத்தங்கள்.

| வரிசை எண் | அரசாணையின் இணைப்பில் உள்ள வரிசை எண்/ அரசுக் கடிதத்தின் பத்தி 1-ல் உள்ள வரிசை எண் | திருத்தம். |
|---|---|---|
| 1. | அரசு கடிதம், பத்தி 1-ல் வரிசை எண் 5 | "காடம்பாறை மாணவர் விடுதி, கோயம்புத்தூர் மாவட்டம்" என்பதற்கு பதிலாக "டி. பொம்மிநாயக்கன்பட்டி மாணவியர் விடுதி, தேனி மாவட்டம்" என்று திருத்தம் வெளியிடப்படுகிறது. |
| 2. | அரசு கடிதம் பத்தி 1-ல் வரிசை எண் 6 | "சோலைசேரி மாணவியர் விடுதி, திருநெல்வேலி மாவட்டம்" என்பதற்கு பதிலாக "கரிவலம்வந்தநல்லூர் மாணவியர் விடுதி" என்று திருத்தம் வெளியிடப்படுகிறது. |
| 3. | அரசு கடிதம் பத்தி 1-ல் வரிசை எண் 8 | "குடவாசல் மாணவியர் விடுதி, நாகப்பட்டினம் மாவட்டம்" என்பதற்கு பதிலாக "குடவாசல் மாணவியர் விடுதி, திருவாரூர் மாவட்டம்" என்று திருத்தம் வெளியிடப்படுகிறது. |
| 4. | அரசாணையின் இணைப்பில் உள்ள வரிசை எண் 31. | "வில்லூர் மாணவியர் விடுதி, மதுரை மாவட்டம்" என்பதற்கு பதிலாக "டி. கல்லுப்பட்டி மாணவியர் விடுதி, மதுரை மாவட்டம்" என்று திருத்தம் வெளியிடப்படுகிறது. |

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலருக்காக.

*நகல்:*

மாநில தலைமைக் கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை-5/சென்னை-35.
சம்பந்தப்பட்ட கருவூல அதிகாரிகள்.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்கள்.
ஆதி. & ப.ந. அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் — கல்வி — விடுதிகள் 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டம் — ஆதிதிராவிடர் நல இல்ல 500 மாணவர்களுக்கு அறைகலன்கள் வழங்குதல் — ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.4) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 74, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(ஆதிந.4) துறை நாள் : 5-5-1997.

படிக்கவும்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண். அஊ1/56937/95, நாள் 6-5-96 மற்றும் 21-12-96.

---

**ஆணை:**

சென்னை மாவட்டத்தில் 6 ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளும், 2 ஆதி திராவிடர் நல தொழிற் பயிற்சி மாணவர் விடுதிகளும், 1 கல்லூரி மாணவியர் விடுதியும், 1 தொழிற் பயிற்சி மாணவியர் விடுதியும் இயங்கி வருகிறது. இவ்விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதென்றும், இவர்களுக்குத் தேவையான மேசை, நாற்காலி மற்றும் பெஞ்சுகள் இல்லையென்றும், விடுதிகளுக்குத் தேவையான அறைகலன்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மாணவர்களிடமிருந்து வந்துள்ளது என்றும், இரும்புக் கட்டில், மெத்தை, தலையணை, நாற்காலி மற்றும் தேனீர் அருந்த பயன்படும் மேசை ஆகியவைகள் மாணவர்களுக்கு அத்தியாவசியமானவை என்றும், குறிப்பாக தேர்வு காலங்களில் தேவைப்படுகிறதென்றும், ஒரு மாணவனுக்கு கீழ்க்கண்ட அறைகலன்கள் வழங்க ரூ. 3,500 தேவைப்படும் என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. இரும்புக்கட்டில் | .. | 1 |
| 2. மெத்தை | .. | 1 |
| 3. தலையணை | .. | 1 |
| 4. நாற்காலி | .. | 1 |
| 5. தேநீர் அருந்த பயன்படும் மேசை | .. | 1 |
| மொத்தம் | .. | 5 |

1,000 மாணவர்களுக்கு ரூ. 35.00 இலட்சம் செலவில் 1997-98 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டத்தில் சென்னையில் உள்ள ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிபயிலும் 1,000 மாணவ/மாணவிகளுக்கு அறைகலன்கள் வழங்க ஆணையிடுமாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசை கேட்டுள்ளார்.

2. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அவர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து சென்னை நகரில் உள்ள ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 500 மாணவர்களுக்கு 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ரூ. 17.50 இலட்சம் (ரூபாய் பதினேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவில் அறைகலன்கள் வாங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அரசு அனுமதித்து ஆணையிடுகிறது. விடுதியிலுள்ள இடவசதியை கருத்தில் கொண்டு விடுதி மாணவர்களின் தேவைக்கேற்ப அறைகலன்கள் வழங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் மற்றும் சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்ட அறைகலன்கள் வாங்குவது சம்பந்தமாக அரசு ஆணை (நிலை) எண் 708, நிதி (பிப்பிஇ), நாள்: 22-8-1994ல் உள்ள அறிவுரையை பின்பற்றி செயல்படுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்—01. ஆதிதிராவிடர் நலன்—277. கல்வி-ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் 2—மாநிலத் திட்டம்—கே.டி மாணவரில்லங்கள் 24. பொருள்களும் வழங்கலும் 01. அறைகலன்கள் வழங்குதல் (த.தொ.கு. 2225 01 277 கே.டி 2412).

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அ.சா.கு.எண் 20190/நிதி(சமூகநலம்)/97, நாள்: 17-3-1997ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், சென்னை-1.
மாநிலத் தலைமை கணக்காயர், சென்னை-18.
மாநிலத் தலைமை கணக்காயர், சென்னை-18 (பெயர் உறையில்)
மாநிலத் தலைமை கணக்காயர், தணிக்கை-1, சென்னை-6.
மாநிலத் தலைமை கணக்காயர், தணிக்கை-2, சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்கள்.

நகல்:

நிதி (சமூக நலம்)த் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் [ஆதிந.1(அநமு)] துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் — சென்னை மாவட்டம் — *1997-98* ஆம் ஆண்டு பகுதி *2* திட்டம் — சென்னை வில்லிவாக்கம் அரசு கல்லூரி மாணவர் விடுதியைச் சுற்றிச் சுவர் எழுப்புவதற்கு செலவினம் அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.4) துறை*

*அரசு ஆணை (நிலை) எண் 75,* *நாள் 5-5-1997.*

*படிக்க:*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் *எண் ஆஊ1/3403/95, நாள் 17-3-1995, 29-3-1996 மற்றும் 19-3-1997.*

---

*ஆணை:*

சென்னை நந்தனம் அரசு கல்லூரி மாணவர் விடுதிக்கு சுற்றுச் சுவர் எழுப்புவது மிகவும் அவசியம் என்றும், வெளி ஆட்கள் அத்து மீறி விடுதியின் இடத்தை ஆக்ரமிப்பு செய்வது, வெளி ஆட்கள் விடுதிக்குச் சென்று பொருட்களை விற்பனை செய்வது மற்றும் தடுப்புச் சுவர் இல்லாததால் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அவ்வப்போது தகராறு ஏற்படுவது ஆகியவைகளை தவிர்க்கும் பொருட்டு நந்தனம் அரசு கல்லூரி மாணவர் விடுதிக்கு ரூ. 1.50 இலட்சம் செலவில் சுற்றுசுவர் கட்ட ஆணையிடுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார். இக்கருத்துரு *1997-98* ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்விடப்பட்டது.

2. நிதிநிலைக் குழுக் கூட்டத்தில் சென்னை வில்லிவாக்கம் அரசு கல்லூரி மாணவர் விடுதிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவது இன்றியமையாதது எனக் கருதப்பட்டு நந்தனம் அரசு கல்லூரி மாணவர் விடுதிக்குப் பதிலாக வில்லிவாக்கம் அரசு கல்லூரி மாணவர் விடுதிக்குச் சுற்றுச் சுவர் கட்ட ரூ. *4.50* இலட்சத்திற்கு நிதிநிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி சென்னை மாவட்டம் வில்லிவாக்கம் அரசு கல்லூரி மாணவர் விடுதிக்கு *1997-98* ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் சுற்றுச் சுவர் கட்ட ரூ. *4.50* இலட்சம் செலவினத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இதன் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தாட்கோவிடம் பெற்று அரசுக்கு *19-3-1997* நாளிட்ட கடிதத்தில் அனுப்பியுள்ள வரைபடம் மற்றும் மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது. இப்பணி தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்படுகிறது.

3. மேலும் மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும் அதனை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் "அலுவல் பெயர் வைப்புத்தொகை கணக்கில்" செலுத்தவும் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 2-ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"*4225*. ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் குறித்த மூலதனச்செலவு *01* ஆதிதிராவிடர் நலன்—277. கல்வி — ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் 2. மாநிலத் திட்டம் — ஜெஎ. ஆதிதிராவிடர்களுக்கான விடுதிகள் கட்டுதல் — *16*. பெரும் பணிகள் (த.தொ.கு.*4225 01 277* ஜேஎ *1603*)."

5. மேலே குறிப்பிட்ட தொகையினை (ரூ. 4.5 இலட்சம்) பண...க தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநருக்கு செலுத்தக்கூடாது. இத்... கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் சரிக்கட்டல் என்ற வகையில் வரவு (Contra Credit) வைக்கப்பட வேண்டும்.

"கே. வைப்பீடுகளும் முன்பணங்களும்—(பி) வட்டிபெறாத வைப்புத் தொகைகள் — 8443.00 சிவில் வைப்பீடுகள் 800—ஏனைய வைப்பீடுகள் எஈ அரசு நிறுவனங்கள், கழகங்கள் முதலியற்றின் வைப்பீடுகள்—50. தாட்கோ நிறுவனத்தின் வைப்பீடுகள் (த.தொ.கு. 8443 00 800 எஈ 500ஏ) (வரவுகள்) (Receipts) (த.தொ.கு. 8443 00 800 எஈ 5000 பற்று) (outgo)".

6. மேலே பத்தி 4-ல் கூறியுள்ளபடி சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5-க்கு ஒரு சரிக்கட்டுப்பட்டியலை தாக்கல் செய்து, சரிக்கட்டி, பட்டியல் சரிக்கட்டப்பட்ட விவரத்தினை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநருக்கு தெரிவிக்கும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 143/டிஎஸ் (ஆர்பி)/97, நாள் 16-4-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநர் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
*அரசு செயலர்.*

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம், சென்னை-101.
மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-18 (பெயர் உறையில்)
மாநில கணக்காயர், (தணிக்கை-1) சென்னை-6.
மாநில கணக்காயர் (தணிக்கை-2) சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5.
காப்பாளர், அரசு கல்லூரி மாணவர் விடுதி, வில்லிவாக்கம், சென்னை.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.1) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் - கல்வி — விடுதிகள் — 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டாம் திட்டம் - சென்னை மாவட்டம் - இராயபுரம் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு சின்டெக்ஸ் குடிநீர் தொட்டி அமைத்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.4) துறை**

அரசு ஆணை (நிலை) எண் 76 நாள் 5-5-1997.

படிக்கவும்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேர்முக கடித எண் அஊ1/73806/93, நாள் 18-10-1995, 18-08-1996, 21-12-1996 மற்றும் 7-4-1997.

---

**ஆணை:**

சென்னை இராயபுரத்தில் அரசுக்கு சொந்தமான ஒரே கட்டிடத்தில் இராயுபுரம் கல்லூரி மாணவியர் விடுதியும், இராயபுரம் தொழிற்பயிற்சி பயிலும் மாணவியர் விடுதியும், இராயபுரம் உயர்நிலைப்பள்ளி மகளிர் விடுதியும், கீழ்ப்பாக்கம் மகளிர் விடுதி, இருப்பு இராயபுரம் ஆகிய நான்கு பெரிய விடுதிகள் இயங்குவதாகவும், இதில் 445 மாணவியர்கள் உள்ளதாகவும், சேமித்து வைக்கும் தண்ணீர் போதுமானதாக இல்லை என்றும் மாணவியர்கள் உடல் ஆரோக்கியத்தினை முன்னிட்டு இராயபுரம் ஆதிதிராவிடர் நல மகளிர் விடுதியில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் குடிநீர் தொட்டியினை அமைக்க 1997-98-ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் ரூபாய் 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அனுமதித்து ஆணையிடுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இயக்குநரின் கோரிக்கையை ஏற்று, சென்னை இராயபுரம் அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி கட்டிடத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் குடிநீர் தொட்டி அமைக்க நிறுவுவதற்கு ஆகும் செலவு உட்பட ரூபாய் 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலவிடப்படும் :

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் நலன் - 01 ஆதிதிராவிடர் நலன் - 793 ஆதிதிராவிடர் நல சிறப்புக் கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி உள்ளடக்குத்திட்டம் - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்—2 மாநிலத் திட்டம் - ஜேஜி புதிய மாணவர் இல்லங்கள் - 24 பொருள்கள் வழங்குதலும் - 02 பாத்திரங்கள் முதலியவை வாங்குதல் (த.தொ.கு 2225 01 793 ஜேஜி 2422)"

4. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 20189/நிதி (சமூகநலம்)/97, நாள் 14-3-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது..

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலர்.

பெறுநர்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்,
சென்னை-5.
மாவட்ட ஆட்சித்தலைவர், சென்னை-1
மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், சென்னை-600 001.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-18 (பெயர் உறையில்)
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-1), சென்னை-5.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-2), சென்னை-35.
சம்பளம் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
காப்பாளர், ஆதிதிராவிடர் நல விடுதி, இராயபுரம், சென்னை-13.

நகல்

நிதி துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந.1) துறை,
சென்னை-9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பி. சரஸ்வதி,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் — கல்வி — விடுதிகள் — 1997-98-ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டம் - சென்னை மாவட்டம் வில்லிவாக்கம் அரசு கல்லூரி மற்றும் தொழிற்நுட்ப பயிற்சி விடுதிகளுக்கு புதிய மின் வேலைகள் செய்ய ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.4) துறை

அரசு ஆணை (நிலை) எண் 77 நாள் 5-5-1997.

படிக்கவும்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண் அஊ1/11549/93, நாள் 28-2-1995 மற்றும் 21-12-1996.

ஆணை:

சென்னை மாவட்டம் வில்லிவாக்கம் அரசு கல்லூரி விடுதியும், தொழிற்பயிற்சி விடுதியும் 1993 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருவதாகவும், இக்கட்டிடங்கள் ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தினால் கட்டப்பட்டதென்றும், செம்புக் கம்பியால் ஆக்கப்பட்ட மின்வயர்களுக்கு பதில் அலுமினியக் கம்பியால் ஆக்கப்பட்ட வயர்களால் மின் வேலைகள் செய்யப்பட்டதின் காரணமாக அடிக்கடி பழுது நீக்கும்பணி மேற்கொள்ளப்பட்டதின் காரணமாக மிகுந்த செலவினங்கள் ஏற்பட்டுள்ளன என்றும், விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை தவிர்க்கும் பொருட்டு வில்லிவாக்கம் கல்லூரி விடுதி மற்றும் வில்லிவாக்கம் தொழிற்பயிற்சி விடுதிகளுக்கு மின் வேலைகள் செய்ய முறையே ரூ. 1.26 இலட்சம் மற்றும் ரூ. 0.46 இலட்சம், ஆகமொத்தம் ரூபாய் 1.72 இலட்சம் செலவாகும் என்றும் தெரிவித்து, இப்பணி மேற்கொள்ளப்படவேண்டியது இன்றியமையாததென மேற்குறிப்பிட்ட இரண்டு விடுதிகளுக்கும் புதிய மின்வேலைகள் செய்ய ரூபாய் 1.72 இலட்சம் செலவினத்தை அனுமதித்து ஆணை வழங்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இயக்குநரின் பரிந்துரையை ஏற்று 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டம் வில்லிவாக்கம் அரசு கல்லூரி விடுதிக்கு புதிய மின் வேலைகள் செய்ய ரூ. 1.26 இலட்சமும் வில்லிவாக்கம் தொழிற்பயிற்சி விடுதிக்கு புதிய மின்வேலைகள் செய்ய ரூ. 0.46 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 1.72 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்திரெண்டாயிரம் மட்டும்) செலவினத்திற்கு அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2-ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்—01 ஆதிதிராவிடர் நலன்—277—கல்வி-ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்—2 மாநிலத் திட்டம் — கே.டி மாணவரில்லங்கள்— 17 சிறுபணிகள் (த.தொ.கு.2225 01 277 கே.டி. 1708)"

4. இவ்வாணை நிதித்துறை ஒப்புதலை அதன் அசா.கு. எண் 20188/நிதி (சமூகநலம்/97, நாள் 17-3-1992-ல் பெற்று வெளியிடப்படுகிறது.)

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், சென்னை-1.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-18 (பெயர் உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை-1), சென்னை-6.
மாநில கணக்காயர் (தணிக்கை-2), சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
காப்பாளர், அரசு கல்லூரி விடுதி மற்றும் தொழிற் பயிற்சி விடுதி, வில்லிவாக்கம், சென்னை.

நகல்:

நிதித் (சமூக நலம்) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.1/அநமு) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி படிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதி திராவிடர் நலம் — கல்வி — விடுதிகள் — 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டம் — ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்குதல் — ஆணை — வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை**

*அரசு ஆணை (நிலை) எண் 85* — *நாள் 5-5-1997.*

*படிக்கப்பட்டது:*

1. *அரசாணை (நிலை) எண் 237, நாள் 10-10-1991.*
2. *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண் டி1/56637/96, நாள் 18-12-1996.*

----

**ஆணை :**

1991-92 ஆம் ஆண்டில் 10 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்க மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. தற்பொழுது 390 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் அரசுக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன என்றும், இவற்றில் 101 விடுதிகளுக்கு 1991-92 வரை சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள 289 விடுதிகளுக்கு சமையல் எரிவாயு வழங்க வேண்டியுள்ளது என்றும் கூறி இவற்றில் 1997-98 ஆம் ஆண்டில் 15 விடுதிகளுக்கு ரூ. 7.00 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்பு வழங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் செயற்குறிப்பை அரசு ஆய்வு செய்து, 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ரூ. 7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) செலவில் இணைப்பில் குறிப்பிடப்பட்ட 15 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு (விடுதி ஒன்றுக்கு ரூ.48,000 வீதம்) சமையல் எரிவாயு இணைப்பு வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 15 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு, வைப்புத் தொகை முதலியவற்றிற்கு ரூ. 7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) செலவு செய்ய இசைவு வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத்தலைப்பின் கீழ் பற்றி வழங்கப்படவேண்டும் :

"2225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் நலன் - 01 ஆதிதிராவிடர் நலன் - 793. ஆதிதிராவிடர் நல சிறப்புக் கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் -II மாநிலத் திட்டம்- JG. புதிய மாணவர் இல்லங்கள்-24. பொருள்களும் வழங்கலும் - 01. சமையல் வாயு, அரவை இயந்திரம், வண்ணத் தொலைகாட்சி பெட்டிகள் முதலியன வழங்குதல் (த.தொ.கு. .2225 01 793 JG. 2413)

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு பகிர்ந்தளிக்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 20181/Fin(SW)/97, நாள் 14-3-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அதிகாரிகள்.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
சம்பந்தப்பட்ட ஆதி திராவிடர் விடுதி காப்பாளர்கள்.

நகல்:

ஆதி திராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதி மற்றும் பந (அநமு) துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

பிரிவு அலுவலர்.

அரசு ஆணை (நிலை) எண் 85 நாள் 5-5-1997.

## இணைப்பு

1997-98 ஆம் ஆண்டில் ஆதி திராவிட மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட வேண்டிய விடுதிகளின் பட்டியல் :

1. டாக்டர் அம்பேத்கார் அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்.
2. அரசினர் கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர்.
3. அரசு மாணவியர் விடுதி, நிலக்கோட்டை, திண்டுக்கல் மன்னர் திருமலை.
4. அரசு மாணவியர் விடுதி, வத்தலகுண்டு, திண்டுக்கல் மன்னர் திருமலை.
5. மாணவர் விடுதி, ஒத்தக்கடை, மதுரை.
6. மாணவியர் விடுதி, போடி, வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம்.
7. மாணவியர் விடுதி, தேனி, வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம்.
8. மாணவியர் விடுதி, சின்னமனூர், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம்.
9. அரசு மாணவர் விடுதி, தென்காசி, திருநெல்வேலி-கட்டபொம்மன்.
10. அரசு மகளிர் விடுதி, தென்காசி, திருநெல்வேலி-கட்டபொம்மன்.
11. அரசு மகளிர் விடுதி, சங்கரன்கோயில், திருநெல்வேலி கட்டபொம்மன்.
12. அரசு பள்ளி மாணவர் விடுதி, ஓசூர், தர்மபுரி.
13. அரசு மாணவர் விடுதி, அந்தியூர், பெரியார்.
14. அரசு மாணவியர் விடுதி, அந்தியூர் பெரியார்.
15. அரசு கல்லூரி மாணவர் விடுதி, வேலூர், வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம்.

(உண்மை நகல்)

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - விடுதிகள் -301க்கு மேற்பட்ட மாணவ/மாணவியரைக் கொண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு குழல் விளக்குகள், வாளிகள் மற்றும் எழுதுபொருட்கள் வாங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.4) துறை

அரசு ஆணை (நிலை) எண் 87 நாள் 5-5-1997.

படிக்கவும்:

1. அரசு ஆணை (நிலை) எண் 1773, சமூகநலத்துறை, நாள் 10-7-1986.
2. அரசு ஆணை (நிலை) எண் 102, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 10-9-1996.
3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண் அஊ1/ 41344/96, நாள் 26-10-1996.

----

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழும் இயங்கும் விடுதிகளுக்கு தேவையான குழல் விளக்குகள், வாளி மற்றும் எழுதுபொருட்களை ஆண்டு ஒன்றிற்கு வாங்கிக் கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு தொகை நிர்ணயிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு குழல் விளக்குகள், வாளிகள் மற்றும் எழுதுபொருட்களை வாங்குவதற்கு மாணவர்/மாணவியர் எண்ணிக்கை 100 வரை உள்ள விடுதிகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.600/- (ரூபாய் அறுநூறு மட்டும்), 100க்கு மேல் 200 வரை உள்ள விடுதிகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.1,200/- (ரூபாய் ஆயிரத்து இருநூறு மட்டும்), 200-க்கு மேற்பட்டுள்ள விடுதிகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வரையிலும், செலவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் மேலே பார்வை மூன்றில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், 301 முதல் 2,000 மாணவ மாணவியர்களைக் கொண்ட 8 ஆதிதிராவிடர் நல விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும், 300 மாணவ/மாணவியர்களைக் கொண்ட விடுதிகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் தொகையான ரூ.2,000/- ஆண்டு ஒன்றுக்கு போதுமானதாக இருக்காததால் 301 முதல் 2,000 மாணவ/ மாணவியர்களைக் கொண்ட 8 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு கீழ்க்கண்டவாறு தொகையினை விதிக்கக் கோரி அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

| வ.எண். | விடுதிகளின் விவரம் | தற்போது நடப்பிலுள்ள தொகை | இனிமேல் ஆண்டு ஒன்றுக்கு ஒரு விடுதிக்கு அளிக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | 301 முதல் 400 வரை உள்ள விடுதிகள் | 2,000 | 4,000 |
| 2 | 401 முதல் 500 வரை உள்ள விடுதிகள் | 2,000 | 6,000 |
| 3 | 501 முதல் 1,000 வரை உள்ள விடுதிகள் | 2,000 | 10,000 |
| 4 | 1001 முதல் 2,000 வரை உள்ள விடுதிகள் | 2,000 | 20,000 |

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்கலாமென முடிவெடுத்து 301-க்கும் மேற்பட்ட மாணவ/மாணவியரைக் கொண்ட விடுதிகளுக்கு குழல் விளக்குகள், வாளிகள் மற்றும் எழுது பொருட்கள் வாங்குவதற்கு மேலே பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ளவாறு தொகையினை விதித்து அரசு ஆணையிடுகிறது.

4. 1997-98 ஆம் ஆண்டில் 301-க்கும் மேற்பட்ட மாணவ/மாணவியரைக் கொண்ட 8 விடுதிகளுக்கு குழல் விளக்குகள், வாளிகள், எழுதுபொருட்கள் வாங்க ரூ. 0.46 இலட்சம் (ரூபாய் நாற்பத்தாறாயிரம் மட்டும்) செலவினத்திற்கு அரசு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட செலவினம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225, பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01, பட்டியல் சாதியினர் நலன்-277, கல்வி-I, திட்டத்தில் சேராதது-ஏஇ, மாணவர் இல்லங்கள்-99, பல்வகை-03, குழல் விளக்குகள், வாளிகள், எழுதுபொருட்கள் முதலியவை வாங்குதல் (த.தொ.கு.2225-01-277-ஏஇ-9931)

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.37/கூடுதல் செயலர் (எஸ்)/97-1, நாள் 28-4-97-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

பெறுநர்

இயக்குநர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை-1) சென்னை-35.
மாநில கணக்காயர் (தணிக்கை-2) சென்னை-6.

நகல்:

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-9.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-5.
நிதித்துறை, சென்னை-9 (இரு படிகள்)
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - விடுதிகள் - விடுதிகளில் பூச்சிகொல்லி மருந்து தெளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.4) துறை

அரசு ஆணை (நிலை) எண்.99 நாள் 19-5-97

படிக்கவும்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண்.ட்டி1/19137/97, நாள் 21-4-97.

- - - -

ஆணை:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கென 1034 விடுதிகள், 234 உண்டுறை பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளின் மற்றும் உண்டுறை பள்ளிகளின் தூய்மையைக் கைக்கொள்ளும் பொருட்டு கொசு, மூட்டைப்பூச்சி, கரப்பான் போன்ற, பூச்சிகொல்லி மருந்துகள் தெளிப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார். இப்பரிந்துரையை ஏற்று அரசு கீழ்வரும் ஒப்பளிப்பை நல்குகிறது.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து விடுதிகள் மற்றும் உண்டுறை பள்ளிகள் ஒவ்வொன்றிற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 500 செலவில் பூச்சிகொல்லி மருந்து தெளிக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு பூச்சி மருந்து வாங்கி தெளிக்க ரூ. 6.34 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்தி நான்கு ஆயிரம் மட்டும்) அரசு ஒப்பளிப்பு அளிக்கிறது.

3. இது புதுப்பணி குறித்த செலவாகும், காலப்போக்கில் இதற்கு சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பெறப்படும், ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்துறை (பிஜி.I)-ல் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இருபடிகளில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இச்செலவினம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

1. 2225.பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01. பட்டியல் சாதியினர் நலன்-277. கல்வி-I-திட்டத்தில் சேராதது - ஏ.இ. மாணவர் இல்லங்கள்-24. பொருள்களும் வழங்கலும் (த.தொ.குறியீடு 2225 01 277 ஏஈ 2401).

2. 2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01. பட்டியல் சாதியினர் நலன் -793 பட்டியல் சாதியினர் சிறப்புக் கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி — ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-II, மாநிலத் திட்டம்- - ஜேஜி. புதிய மாணவர் இல்லங்கள் -24. பொருள்களும் வழங்கலும் (த.தொ.குறியீடு 2225 01 793 ஜேஜி 2404).

3. 2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், நலன் - 02. பட்டியல் பழங்குடியினர் நலன்-277. கல்வி-I. திட்டத்தில் சேராதது-ஏஎப். பழங்குடியினர் உணவு இல்லங்களை பராமரித்தல்-24. பொருள்களும் வழங்கலும் (த.தொ.குறியீடு 2225 02 277 ஏஎப்.2408).

4. 2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-02. பட்டியல் பழங்குடியினர் நலன்-277. கல்வி-ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-II. மாநிலத் திட்டம்- ஜேஏப். பழங்குடி மாணவியர் இல்லங்களை தொடங்குதல்-24. பொருள்களும் வழங்கலும் (த.தொ.குறியீடு 2225 02 277 ஜேஏப்.2401).

5. 2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-02-பட்டியல் பழங்குடியினர் நலன்-277. கல்வி-I. திட்டத்தில் சேராதது - ஏஎச். மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகள் தொடங்குதலும் பராமரித்தலும்-24. பொருள்களும் வழங்கலும்-(த.தொ.குறியீடு 2225 02 277 ஏச் 2404).

5. இந்த ஆணைய நிதித்துறையின் அ.சா.கு.எண்.1827/FS/P/97, நாள் 16-4-97-ல் ஒப்புதல் பெற்று ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர் (தணிக்கை-1), சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை-2), சென்னை-35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
கருவூலம் மற்றும் கணக்கு இயக்குநர், சென்னை-35.

நகல்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அனைத்து பிரிவுகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் - கல்வி - விடுதிகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

*அரசாணை (நிலை) எண்.100* *நாள்:19-5-1997*

படிக்கப்பட்டது :-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கடித எண். ட்டி1/19137/97 நாள் 21-4-1997.

- - - -

**ஆணை:**

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்களுக்கென 1034 விடுதிகள், 234 உண்டு உறைவிடப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வெளியரங்க /உள்ளரங்க விளையாட்டுப் பொருட்கள் வழங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார். இப்பரிந்துரை ஏற்று கீழ்வரும் ஒப்பளிப்பை அரசு நல்குகிறது.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளுக்கும் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கும் விடுதி ஒன்றுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலவில் விளையாட்டுச் சாதனங்கள் வாங்கி வழங்க அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.25.36 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து முப்பத்தாறாயிரம் மட்டும்) விளையாட்டுச் சாதனங்கள் வாங்குவதற்கு அரசு அனுமதித்து ஒப்பளிப்பு அளிக்கிறது.

3. இது புதுப்பணி குறித்த செலவாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்துறை (B.G.I)ல் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இருபடிகளில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இச்செலவினம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத்தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(1) 2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், நலன் - 01. பட்டியல் சாதியினர் நலன் - 277. கல்வி -I. திட்டத்தில் சேராதது - ஏஈ. மாணவர் இல்லங்கள் - 24. பொருள்களும் வழங்கலும் (த.தொ.கு. 2225 01 277 ஏஈ 2401)

(2) 2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், நலன் - 01. பட்டியல் சாதியினர் நலன் - 793. பட்டியல் சாதியினர் சிறப்புக்கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - ஜேஜி. புதிய மாணவர் இல்லங்கள் - 24. பொருள்களும் வழங்கலும் (த.தொ.கு.2225 01 793 ஜேஜி 2404)

(3) 2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02. பட்டியல் பழங்குடியினர் நலன் - 277, கல்வி-I. திட்டத்தில் சேராதது - ஏ.ஏப் பழங்குடியினர் உணவு இல்லங்களை பராமரித்தல் - 24. பொருள்களும் வழங்கலும் (த.தொ.கு 2225 02 277 ஏ.எப் 2408)

(4) 2225. பட்டியல் சாதியினர், பட்டியில் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02. பட்டியல் பழங்குடியினர் நலன் - 277. கல்வி -ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - ஜேஎப். பழங்குடி மாணவியர் இல்லங்களை தொடங்குதல் - 24. பொருள்களும் வழங்களும் (த.தொ.கு. 2225 02 277 ஜே.எப் 2401).

(5) 2225. பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 0-2. பட்டியல் பழங்குடியினர் நலன் 277. கல்வி - I திட்டத்தில் சேராதது - ஏ.எச். மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகள் தொடங்குதலும் பராமரித்தலும் - 24. பொருள்களும் வழங்கலும் (த.தொ.கு. 2225 02 277 ஏ.எச் 2404).

5. இந்த ஆணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு.எண். 1827/FS/P/97 நாள் 16-4-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்,
சென்னை-5.
அனைத்து மாவட்டாட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர் (தணி-1) சென்னை-18.
மாநில கணக்காயர் (தணி-2), சென்னை-35.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5
சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35
சம்பளக்கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79
அனைத்து கருவூல அலுவலர்கள்.
கருவூல மற்றும் கணக்கு இயக்குநர், சென்னை-35

நகல்:

அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து
பிரிவுகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பி. சரஸ்வதி,
பிரிவு அலுவலர்.

## தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்-கல்வி-விடுதிகள்-சென்னை மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கும் திட்டத்தினை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

***ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந4)த் துறை,***

*அரசு ஆணை(நிலை) எண் 101,*

*நாள்: 19-5-1997*

படிக்கவும்:—

1. அரசாணை (நிலை) எண் 3110, சமூக நலத்துறை, நாள் 27-11-1986.
2. அரசாணை (நிலை) எண் 116, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 19-9-1996.
3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண். ட்டி1/7480/97, நாள் 10-3-1997 மற்றும் ட்டி1/19137/97, நாள் 21-4-1997.

- - - -

**ஆணை:**

சென்னை மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு மட்டும் ஐந்து விழாக்காலங்களில் சிறப்பு உணவு வழங்குவதற்காக கல்லூரி மாணவ/மாணவியர்களுக்கு தலைக்கு ஒரு ரூபாய் ஐம்பது காசுகள் வீதமும், உயர்நிலைப்பள்ளி விடுதி மாணவ/மாணவியர்களுக்கு தலைக்கு ரூபாய் ஒன்று வீதமும் செலவிட பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் இந்தக் கட்டணத்தை ஒவ்வொரு விழாக்காலத்திற்கும் கல்லூரி விடுதி மாணவ/மாணவி ஒருவருக்கு ரூ. 3/- (ரூபாய் மூன்று மட்டும்) என்றும், பள்ளி விடுதி மாணவ/மாணவி ஒருவருக்கு ரூ.2/- (ரூபாய் இரண்டு மட்டும்) என்று உயர்த்தி பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. விழாக்காலங்களில் சிறப்பு உணவு வழங்குவதை சென்னை மாவட்டம் மட்டிலும் அல்லாமல் பிற மாவட்டங்களிலுள்ள விடுதிகளுக்கும் மற்றும் உண்டு உறைவிட பள்ளிகளுக்கு விரிவுபடுத்துமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் பரிந்துரையை அரசு ஆய்வு செய்து ஏற்கலாமென முடிவெடுத்துள்ளது. தற்பொழுது சென்னை மாவட்டத்திலுள்ள விடுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து பண்டிகை நாட்களில் வழங்கும் சிறப்பு உணவுக் கட்டணத்தினை பிற மாவட்டங்களில் உள்ள விடுதிகளுக்கும் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தி அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்திற்கு 1997-98-ம் ஆண்டிற்கு ஆகும் செலவினமான ரூ.9.18 லட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து பதினெட்டு ஆயிரம் மட்டும்) அரசு ஒப்பளிப்பு அளிக்கிறது.

4. இது புதுப்பணி குறித்த செலவாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்துறை (பி.ஜி.1-ல்) தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இருபடிகளில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

1. 2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், நலன்-01. பட்டியல் சாதியினர் நலன் 277. கல்வி-I திட்டத்தில் சேராதது -ஏஈ மாணவர் இல்லங்கள் 67. உணவளிக்கும் / உணவுச் செலவுகள் (தகவல் தொகுப்புக் குறியீடு 2225 01 277 ஏஈ 6701).

2. 2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01. பட்டியல் சாதியினர் நலன்-793. பட்டியல் சாதியினர் சிறப்புக் கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் - II மாநிலத் திட்டம் - ஜேஜி. புதிய மாணவர் இல்லங்கள் -67. உணவளிக்கும்/உணவுச் செலவுகள் (தகவல் தொகுப்புக் குறியீடு 2225 01 793 ஜேஜி 6704).

3. 2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -02. பட்டியல் பழங்குடியினர் நலன் -27 கல்வி - I திட்டத்தில் சேராதது - ஏஎப். பழங்குடியினர் உணவு இல்லங்களை பராமரித்தல் - 67. உணவளிக்கும் /உணவுச் செலவுகள் (தகவல் தொகுப்பு குறியீடு 2225 02 277 ஏஎப் 6708).

4. 2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02. பட்டியல் பழங்குடியினர் நலன் 277 கல்வி - I திட்டத்தில் சேராதது - ஏ.ஹெச். மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகள் தொடங்குதலும் பராமரித்தலும் - 67. உணவளிக்கும் / உணவுச் செலவுகள். (தகவல் தொகுப்பு குறியீடு 2225 02 277 ஏ.ஹெச்.6704).

5. 2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02. பட்டியல் பழங்குடியினர் நலன் 277. கல்வி-ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - II மாநிலத்திட்டம் ஜேஎப் பழங்குடி மாணவியர் இல்லங்கள் தொடங்குதல் - 67. உணவளிக்கும் உணவுச் செலவுகள். (தகவல் தொகுப்பு குறியீடு 2225 02 277 ஜே.எப்.6709).

6. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.கு.எண்1827/எப்எஸ்/பி/97, நாள் 16-4-1997 இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்

பெறுநர்:

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர் (தணி-1) சென்னை-18.
மாநில கணக்காயர் (தணி-2), சென்னை-35.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5
சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35
சம்பளக்கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79
அனைத்து கருவூலம் அலுவலர்கள்.
கருவூல மற்றும் கணக்கு இயக்குநர், சென்னை-15.

நகல்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிமபந துறையின் அனைத்துப் பிரிவுகள்.

(ஆணைப்படி/அனுப்பலாகிறது)

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் - மாணவர்/மாணவியர் சேர்க்கைக்கான வருமான வரம்பினை உயர்த்துதல் - ஆணையிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

அரசு ஆணை (நிலை) எண் 102. நாள் 19-5-1997.

படிக்கவும்:-

1. அரசு ஆணை (நிலை) எண்658, சமூகநலத் துறை நாள் 1-9-1981.
2. அரசு ஆணை (நிலை) எண்2336, சமூகநலத் துறை, நாள் 4-10-1982.
3. அரசு ஆணை (நிலை) எண்486, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள் 7-12-1988.
4. அரசு ஆணை (நிலை) எண்529, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், நலத் துறை, நாள் 17-4-1989.
5. அரசு ஆணை எண்42, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-3-1995.
6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், கடித எண் ந.க. ட்டி1/748/97, நாள் 26-2-1997.

- - - -

ஆணை:

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கிவரும் விடுதிகளில் மாணவர்/மாணவியர் சேர்க்கைக்கு அவர்களின் பெற்றோரின்/காப்பாளர்களின் ஆண்டு வருமானம் தற்போது ரூ.15,000/-ஆக உள்ளது. அதே வேளை மாநில கல்வி உதவித்தொகை பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டுக்கு ரூ.50,000/- என அரசு ஆணை (நிலை) எண்42, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 22-3-1995-ல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

2. அரசு ஆணை (நில்லை) எண்.42, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22-3-1995 வழங்கப்படும் வரை கல்வி உதவித் தொகைக்கும், விடுதிச் சேர்க்கைக்கும் ஒரே வருமான வரம்புதான் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆதலின் மீண்டும் இதே நிலையை நிலை நிறுத்த அரசு முடிவு செய்துள்ளது.

3. அதன்படி ஆதி திராவிடர் நலத்துறை நடத்தும் அனைத்து விடுதிகளிலும் மாணவர் சேர்க்கைக்கு மாணவர் தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என அரசு ஆணை இருக்கிறது. 1997-98 ஆம் கல்வி ஆண்டு தொடங்கி இது நடைமுறைக்கு வரும். 1997-98 ஆம் ஆண்டு தொடங்கி ஆதி திராவிடர் நலத்துறை வழங்கும் மாநிலக் கல்வி உதவித் திட்டங்களுக்கும், இத்துறை நடத்தும் விடுதிகளில் மாணவர் சேர்க்கைக்கும் ஒருமுகமான வருமான வரம்பு கடைப்பிடிக்கப்படும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாறு நிதித்துறையின் இசைவை அதன் அலுவல் சார்பற்ற எண்182/DS (RP)/97, நாள் 5-5-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

பெறுநர்:

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-6.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5
அனைத்து மாவட்ட ஆதி-திராவிடர் நல அலுவலர்கள்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9..
ஆதி திராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதி மற்றும் பந துறையின் அனைத்து பிரிவுகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் - கல்வி - ஆதிதிராவிடர் நல தொழிற்பயிற்சி விடுதிகள் - பயிற்சியாளர்கள் விடுதியில் சேர்த்திட வயது வரம்பினை தளர்த்துதல் - ஆணை வெளியிடல்.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.4) துறை**

அரசாணை (நிலை) எண்.103, நாள் 19-5-1997.

படிக்கப்பட்டது:

(1) அரசாணை (நிலை) எண்.2470, உள்துறை, நாள் 20-7-1962.

(2) 9-2-1977ஆம் நாளிட்ட சமூகநலத்துறையின் அரசாணை நிலை எண்.144.

(3) 27-1-1978ஆம் நாளிட்ட சமூக நலத்துறையின் அரசாணை நிலை எண்.62.

(4) மதுரை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், துணை இயக்குநர்/முதல்வர் அவர்களது 25-10-1994ஆம் நாளிட்ட கடிதம் எண். 8978/43/94.

(5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநரது 14-7-1995 ஆம் நாளிட்ட கடிதம் எண்.அஊ1/62789/94.

----

**ஆணை:**

அரசு ஆணை (நிலை) எண்.2470, உள்துறை, நாள் 20-7-1962-ல் வெளியிடப்பட்ட அரசு விடுதிகளில் மாணவர் சேர்க்கையை கட்டுப்படுத்தும் விதிகளில் விதி.2 குறிப்பு 4-ல் உள்ளபடி ஆதிதிராவிடர் நல தொழிற்பயிற்சி விடுதிகளில் 16 வயதிற்குக் குறைந்த மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் விடுதியில் சேர்த்துக் கொள்ள தகுதி அற்றவர் ஆகின்றனர். இதனைத் தொடர்ந்து அரசு ஆணை (நிலை) எண்.144, சமூக நலம், நாள் 9-2-1977-ல் மாவட்ட ஆட்சியர்கள் உயரளவாக ஐந்து ஆண்டுகள் வயது வரம்பினைத் தளர்த்தி விடுதியில் சேர்த்து கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2) பார்வை மூன்றில் படிக்கப்பட்ட ஆணையில் ஆதிதிராவிடர் நல தொழிற்பயிற்சி விடுதியில் சேர்வதற்கு வயது வரம்பினை 27 ஆக உயர்த்தித் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தம் கடிதத்தில் மதுரை அரசு தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கைக்கு தற்பொழுது உள்ள வயது வரம்பு 14 வயது முதல் 27 வயது என நிர்ணயம் செய்து மாற்றப்பட்டுள்ளதாலும், அரசு ஆதிதிராவிடர் நல தொழிற்பயிற்சி விடுதியில் சேர்வதற்கான வயது வரம்பினை 14 வயது முதல் 27 வயது வரை நிர்ணயம் செய்து ஆணை பெற்றுத் தருமாறு மதுரை மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளாரென்றும், அன்னாரின் கோரிக்கையை ஏற்று பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் நிர்ணயிக்கப்பட்ட 16 முதல் 27 வயது வரம்பினை இத்துறையின் கீழ் இயங்கும் ஆதிதிராவிடர் நல தொழிற் பயற்சி விடுதிகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விடுதியில் சேருவதற்கான வயது வரம்பினை '14 முதல் 27 வயது வரை' என மாற்றி ஆணை வழங்குமாறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார். மேலும் 1995-96ஆம் ஆண்டில் அரசின் ஆணையினை எதிர்நோக்கி 14 வயது நிரம்பிய மாணவர்களை விடுதியில் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த செயலுக்கு அரசின் பின்னேற்பினை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

4) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரது செயற்குறிப்பினை அரசு ஆய்வு செய்தது. குறும்/உச்ச வயது ஏதும் இல்லாமல் எவரெவர் எந்தெந்த வயதினர் ஆயினும் தொழிற் கல்வி பயில்வராயின் பிற தகுதிகளுக்குப்பட்டு ஆதிதிராவிடர் நல தொழிற்கல்வி விடுதியில் சேர்க்கப்படலாம் என்று, அரசு விடுதிகளில் மாணவர் சேர்க்கையை கட்டுப்படுத்தும் விதிகளில், விதி.2 குறிப்பு 4-க்கு திருத்திய ஆணையினை இதன் மூலம் அரசு வெளியிடுகிறது. மேலும் 1995-96ஆம் ஆண்டு முதல் 14 வயது நிரம்பிய மாணவர்களை ஆணையினை எதிர்நோக்கி அரசு ஆதிதிராவிடர் தொழிற்பயிற்சி விடுதியில் சேர்த்துக்கொள்ள அனுமதியளித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து தொழிற்பயிற்சி விடுதிக்காப்பாளர்கள்,
ஆணையர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-5.
அனைத்து மாவட்டாட்சியர்கள்.
முதல்வர், அரசு தொழிற்பயிற்சி நிலையம், மதுரை.

நகல்:

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை,
சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து
பிரிவுகள், முதுநிலை உதவியாளர், அமைச்சர் (ஆதிந)
அலுவலகம், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - விடுதிகள் - மைய அரசு நிதி உதவித் திட்டம் - 1997-98ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மாணவ/மாணவியர் விடுதிகள் கூடுதல் - நிர்வாக ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசு ஆணை (நிலை) எண்104, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்:20-5-1997

படிக்கப்பட்டது:-

1. அரசு ஆணை (நிலை) எண்.1, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 2-1-1997.
2. அரசு ஆணை (நிலை) எண்.25, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 21-2-1997.

ஆணை:-

1997-98 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு விடுதிகள் கட்டுவதற்கு ரூ.8.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1996-97 ஆம் ஆண்டுவரை 1008 ஆதிதிராவிடர் நல விடுதிகள் இயங்கிவருகின்றன. இவ்விடுதிகளில் 418 விடுதிகள் அரசு கட்டிடங்களிலும், 590 விடுதிகள் வாடகை கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. 1996-97ஆம் ஆண்டில் 19 மாணவியர் விடுதியும், 9 மாணவர் விடுதியும் கட்டுவதற்கு ரூ.8.40 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. விடுதிகள் கட்டுவதில் பெரும்பாலும் மாணவியர் விடுதிகளுக்கு முன்னுரிமை அளிப்பது அரசின் கொள்கையாகும். மகளிர் விடுதியைப் படிப்படியாக 3 ஆண்டுகளில் கட்டிமுடிக்கக் கருதுவது அரசின் மற்றுமொரு கொள்கையாகும்.

2. 1997-98ஆம் ஆண்டிற்கு மைய அரசு நிதி உதவியின் கீழ் 26 மாணவியர் விடுதிகள் ரூ.858 இலட்சம் (ரூ.33 இலட்சம் x 26) செலவில் கட்டுவதற்கு இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் திட்ட நிதிக்குழுவிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் அனுப்பியுள்ள செயற்குறிப்பை அரசு ஆய்வு செய்து, மாணவியர் விடுதி ஒன்றுக்கு ரூ.33.00 இலட்சம் வீதம், 1997-98 ஆம் ஆண்டில் 26 மாணவியர் விடுதி கட்டிடம் கட்ட ரூ.8.58 கோடி (ரூபாய் எட்டு கோடி ஐம்பெத்தெட்டு இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளிக்கிறது.

4. ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகள் கட்ட உள்ள இடங்களை தேர்ந்தெடுத்து, இடத்தின் புல எண் மற்றும் பரப்பளவு ஆகிய விவரங்களுடன் முன்மொழிவை உடனடியாக அரசுக்கு அனுப்பும்படி இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார். அத்துடன் சரியான வரைபடம் மற்றும் மதிப்பீடு பெற்று அரசின் ஒப்புதலுக்காக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார். ஆதி திராவிடர் நல விடுதி கட்டிடம் கட்டும்போது கணிணிபொறி அமைப்பதற்காக இடவசதி செய்துகொள்ளுமாறு இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 1998-99 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகள் கட்டத்தகுந்த முன்மொழிவினை உரிய நேரத்தில் அனுப்பும்படியும் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலும் பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையை விடுதிகள் தெரிவு செய்யப்பட்டபின்னர் பிரித்துத் தருவது தொடர்பாக மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசிக்கும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் அவர் அனைத்து மாணவியர் விடுதிகள் கட்டுவதற்குண்டான தொகை ரூ.858 இலட்சத்திற்கு (ரூபாய் எட்டு நூற்றி ஐம்பத்தெட்டு லட்சம் மட்டும்) மிகாமல் இருக்க உறுதி செய்ய வேண்டும்.

6. மேலும் பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதி திராவிடர் நல விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல் தொடர்பான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"4225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 01. பட்டியல் சாதியினர் நலம் - 277. கல்வி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் - VI மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் - UA ஆதி திராவிடர் அரசு மாணவியர் இல்லக் கட்டிடங்கள் கட்டுதல் - 16. பெரும்பணிகள் - II. மாணவியர் விடுதி" (த.தொ.கு. 4225 01 277.UA. 1611).

7. மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை பணமாக மேலாண்மை-இயக்குநர், தாட்கோவுக்கு செலுத்தக்கூடாது. ஆனால் இத்தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் சரிக்கட்டல் என்ற வகையில் வரவு (Contra Credit) வைக்கப்பட வேண்டும்.

"கே. வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (B) வட்டி சாராத வைப்புத் தொகைகள் - 8443.00 -உரிமையியல் வைப்புத்தொகைகள். 800 மற்றும் வைப்புத் தொகைகள். AE. அரசு நிறுவனங்கள், கூட்டுநிறுவனங்கள் முதலியவற்றின் வைப்புத்தொகைகள். 50 தாட்கோ நிறுவனத்தின் வைப்புத்தொகைகள்.
[த.தொ.கு.8443.00.800.AE 500 A (பெறுதல்)]
[த.தொ.கு.8433.00.800 AE 5000 (வெளியே)]

ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும், அதனை தாட்கோவுக்கு செலுத்தவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

8. வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.850 இலட்சத்திற்கு மேல் கூடுதலாக உண்டாகும் செலவான ரூ.8.00 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்திய ஒதுக்கீட்டில் (RE/FMA) ஒதுக்கீடு செய்ய முன்மொழிவை நிதித்துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னைக்கு ஒரு சரிக்கட்டுப் பட்டியலை மேலே பத்தி 7-ல் கூறியுள்ளபடி தாக்கல்செய்து சரிக்கட்டி பட்டியல் சரிக்கட்டப்பட்ட விவரத்தினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுக்கு தெரிவிக்கும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசித்து மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட மாணவியர் விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒரு கால அட்டவணை குறித்தும், பணி ஆரம்பிக்கப்பட்ட விவரம், முடிக்கப்பட்ட விவரம் மற்றும் இடம் ஆதிதிராவிடர் நலத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான விவரங்கள் போன்றவற்றை குறிப்பெடுத்து அனுப்ப ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். அவர் அத்துடன் முடிக்கப்பட்ட விவரம் தொடர்பாக அறிக்கையை அரசுக்கு அனுப்பவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. அரசாணை (நிலை) எண்.2116, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 3-11-1989ல் அறிவித்துள்ளபடி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களுக்கு தனிச்சலுகை அளிக்க மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

12. இந்த விடுதிகளின் கட்டுமானப்பணி, முன்னேற்றம் குறித்து காலாண்டு முன்னேற்ற அறிக்கை மற்றும் அரசால் தொகை விடுவிக்கப்பட்டதற்குண்டான பயன்பாட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை அனுப்பும்படி மேலாண்மை இயக்குநர், தாட்கோ கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

13. மைய அரசிடமிருந்து மைய நிதி உதவிபெறுவது குறித்த முன்மொழிவை உரிய படிவத்தில் மைய அரசுக்கு விரைவில் அனுப்பி அதன் நகலை இத்துறைக்கு அனுப்புமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

14. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண். 251/DS/(RP)97, நாள்: 20-5-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில தலைமைக்கணக்காயர், சென்னை-18/சென்னை-35/
சென்னை-6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
செயலர், நல அமைச்சகம், இந்திய அரசு, புது டெல்லி-1.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
ஆதிந அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பபடுகிறது./

தமிழ்நாடு அரசு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

கடிதம் (நிலை) எண்143. நாள்: 5-8-1997.

அனுப்புநர்:

திரு.இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

பெறுநர்

இயக்குநர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - விடுதிகள் மைய அரசு நிதி உதவித் திட்டம் - 1997-98ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மாணவியர் விடுதிகள் கட்டுதல் - நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது - கட்டிடங்கள் கட்ட விடுதிகள் தெரிவு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்104, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 20-5-1997.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், கடித எண் கே.1/2409/97, நாள் 20-6-1997.

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் 1997-98 ஆம் ஆண்டில் 26 இடங்களில் ஆதி திராவிட நல மாணவியர் விடுதிகள் கட்ட ரூ.858 இலட்சம் (ரூ.33.00 இலட்சம் X 26) செலவிட நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது.

2. 1997-98 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகள் கட்ட நிலங்கள் தயாராகவுள்ள விடுதிகளின் பட்டியலை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்துடன் விடுதிகளின் பட்டியலை அனுப்பி ஆணை வழங்குமாறு கோரியுள்ளார். இயக்குநரின் செயற்குறிப்பை அரசு பரசீலனை செய்து இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 20 இடங்களில் மாணவியர் விடுதிகள் கட்ட ஆணையிடுகிறது.

3. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் அவர்கள் மேலும் 6 விடுதிகள் தெரிவு செய்ய பட்டியலை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

தங்கள் உண்மையுள்ள,

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்ன-9.
ஆதி திராவிடர் நல அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதி மற்றும் பந (ஆதிந.1/அநமு) துறை, சென்னை-9.

**1997-98ஆம் ஆண்டில் மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களின் பட்டியல்**

| வ.எண். | விதியின் பெயர் | மாவட்டம். |
|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, சில்லாங்குள்ம் | தூத்துக்குடி |
| 2. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, தேவக்கோட்டை | சிவகெங்கை |
| 3. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, சிங்கம்புனரி | சிவகெங்கை |
| 4. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, காரைக்குடி | சிவகெங்கை |
| 5. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, காரைக்குடி | சிவகெங்கை |
| 6. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, கண்டரமாணிக்கம் | சிவகெங்கை |
| 7. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, நத்தம் | திண்டுக்கல் |
| 8. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, உத்தமபாளையம் | தேனி |
| 9. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, வாணியம்பாடி | வேலூர் |
| 10. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, சூனாம்பேடு | காஞ்சிபுரம் |
| 11. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, சிந்தல்பாடி | தர்மபுரி |
| 12. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, திருசிற்றம்பலம் | தஞ்சாவூர் |
| 13. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, பாளையம்கோட்டை | கடலூர் |
| 14. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, சுசீந்தரம் | கன்னியாகுமரி |
| 15. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, அருமனை | கன்னியாகுமரி |
| 16. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, மீனாம்பேடு | காஞ்சிபுரம் |
| 17. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, வேலூர், | வேலூர் |
| 18. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, தும்பல் | சேலம் |
| 19. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, மணல்மேல்குடி | புதுக்கோட்டை |
| 20. | ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி, உதகை | நீலகிரி |

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலர்.*

## தமிழ்நாடு அரசு

### ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

கடித எண் 122/ஆதிந.9(2)/97-7, நாள் : 19-9-1997.

**அனுப்புநர்**

திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-9.

**பெறுநர்**

இயக்குநர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள்.
மாவட்ட மேலாளர், தாட்கோ,
சம்பந்தப்பட்ட காப்பாளர்கள், ஆதி திராவிடர் நல விடுதிகள்.

ஐயா,

பொருள்: ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - விடுதிகள் மைய அரசு நிதி உதவித் திட்டம் - 1997-98ஆம்ஆண்டில் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி கட்டிடம் கூடுதலாக 6 விடுதிகளுக்கு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.104, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 20-5-1997.
2. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கடித எண்.கே1/2409/97, நாள் 21-7-1997.
3. மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், ஈரோடு, தொலையச்சு எண்.29054/97, டி1, நாள் 1-8-1997.
4. அரசு கடிதம் (நிலை) எண்.143, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 5-8-1997.

----

மேலே பார்வை 4-ல் காணும் அரசு கடிதத்தில், 20 இடங்களில் மாணவியர் விடுதிகள் கட்ட தேர்வு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் செயற்குறிப்பின்

அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் 6 இடங்களில் மாணவியர் விடுதிகள் கட்ட அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | விடுதியின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, முள்ளுக்குறிச்சி, | நாமக்கல் |
| 2. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, பொன்னமராவதி, | புதுக்கோட்டை |
| 3. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, திருமயம், | புதுக்கோட்டை |
| 4. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, காரையூர், | புதுக்கோட்டை |
| 5. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, சென்னம்பட்டி, | ஈரோடு |
| 6. | ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, ஆலம்பாளயம், | ஈரோடு. |

2. பார்வை 4-ல் வெளியிடப்பட்ட 20 இடங்களில், வரிசை எண்.17-இல் குறிப்பிட்டுள்ள மாணவியர் விடுதி, வேலூர் என்பதற்குப் பதிலாக திருவண்ணாமலை மாவட்டம், கீழ்க்கொடுங்காலூரில் மாணவியர் விடுதி கட்டவும் அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)..........................................

அரசு செயலாளருக்காக.

நகல்.

சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி- விடுதிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் உள்ள கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதி மாணவ /மாணவியர்களுக்கான உணவுக் கட்டணத்தை உயர்த்துதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (ஆதிந.4)துறை

*அரசாணை (நிலை) எண்.119* *நாள் 12-6-97*

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண். 200, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 23-11-1995.
2. அரசாணை (நிலை) எண். 148, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 6-11-1996.
3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண்.ட்டி.1/61100/96, நாள் 17-12-1996.

- - - -

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் கல்லூரி விடுதிகள் (தொழிற்பயிற்சி விடுதிகள் உட்பட) பள்ளி விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டுறை பள்ளிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டண விகிதங்கள் பின்வருமாறு உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

| வ.எண். | விடுதி | ஒரு மாணவருக்கு ஒரு மாதத்திற்கு அனுமதிக்கப்பட்ட உணவுக்கட்டணம். |
|---|---|---|
| 1. | சென்னை மாவட்டத்திலுள்ள கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி மாணவ/ மாணவியர்கள் அரசு விடுதிகள் | ரூ.202.50 |
| 2. | வெளியூர் பகுதியிலுள்ள கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி மாணவ/ மாணவியர் அரசு விடுதிகள். | ரூ.197.50 |
| 3. | உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவ/மாணவியர், விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டுறைப்பள்ளிகள் | ரூ.138.75 |

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு உணவுக் கட்டணத்தை 1-12-1996 முதல் ரூ.138.75 லிருந்து ரூ.180/-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தனது கடிதத்தில் அரசு கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர்களுக்கு போதுமான அளவு உணவுக் கட்டணத்தினை மாதமொன்றிற்கு ரூ.72.50 வீதம் உயர்த்தி வழங்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. இயக்குநரின் பரிந்துரையை அரசு பரிசீலனை செய்து இத்துறையின் கீழ் இயங்கும் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு உணவுக் கட்டணத்தினை 1-6-1997 முதல் அல்லது கல்லூரி/தொழிற்பயிற்சி விடுதிகள் திறக்கப்படும் நாள் இவற்றில் எது பிந்தையதோ அந்த நாளிலிருந்து ரூ.300/-ஆக உயர்த்தி ஆணையிடுகிறது.

5. 1997-98ம் வருடத்திற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.80.90 லட்சத்திற்கு (ரூபாய் எண்பது லட்சத்தி தொண்ணூறாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. இது புதுப்பணி குறித்த செலவாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்துறை (பிஜி.1)-ல் தனியாகப் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இரு படிகளில் இந்த ஆணையின் நகலுடன் நிதி (வரவு செலவு பொது.1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேற்காணும் செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

1. ஆதிதிராவிடர் நல விடுதிகள்

2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01. பட்டியல் சாதியினர் நலன்-277 கல்வி -I திட்டத்தில் சேராதது - AE மாணவர் இல்லங்கள் - 67 உணவளிக்கும்/உணவுச் செலவுகள் (த.தொ.கு.2225 01 277 AE6701).

2. ஆதிதிராவிடர் நல புதிய விடுதிகள்:

2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01 பட்டியல் சாதியினர் நலன்-793 பட்டியல் சாதியினர் நல சிறப்புக் கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் - பணிகள் - II மாநிலத் திட்டம் - JG புதிய மாணவர் இல்லங்கள் - 67 உணவளிக்கும்/ உணவுச் செலவுகள். (த.தொ.கு.2225 01 793 JG 6704).

8. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அத்துறையின் அ.சா.கு.எண் 297/DS(RP/97, நாள், 12-6-1997ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-18 (பெயரில்)
மாநில கணக்காயர், (தணிக்கை - 1), சென்னை-35
மாநில கணக்காயர், (தணிக்கை - 2), சென்னை-35
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5.
அனைத்து கருவூல அலுவலர்கள்,
கருவூல இயக்குநர், சென்னை-35.

நகல்:

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (பிசி.1) சென்னை-9.
நிதித் (சமூகநலம்) துறை, சென்னை-9.
நிதித் (பி.ஜி.1) துறை, சென்னை-9.
முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-8
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பி. சரஸ்வதி,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

முதலமைச்சரின் பொது நிவாரண நிதி - திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் நகரம் - ராஜா காலனி - அரசு மாணவர் விடுதி - 10-9-1997 அன்று இரவு பெய்த மழையில் விடுதி காங்கிரீட் சிலாப் இடிந்து விழுந்ததில் செல்வன், வி. வி.ஜயகுமார் இறந்தது - முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை**

*அரசாணை நிலை எண் 174,* *நாள்: 4-11-1997*

*படிக்கப்பட்டது:*

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக கடிதம் ந.க.டபிள்பு.7/44193/97 நாள் 11-9-1997.
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் கடித எண். ந.க.த2/44167/97 நாள் 17-9-1997.

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் நகரில் ராஜா காலனியில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி 10-9-1997 அன்று பெய்த மழையின் காரணமாக காங்கிரீட் சிலாப் கீழே விழுந்து பத்து வயது மாணவரான வி. விஜயகுமார் என்பவர் தலத்திலேயே இறந்து விட்டதாகவும், இறந்து போன மாணவரின் குடும்பம் ஏழைக் குடும்பம் எனவும், அரசுப் பொறுப்பில் தங்கிக் கல்வி பயில வந்த இளம் மாணவர், அரசுக் கட்டிடத்தில் ஏற்பட்ட விபத்தின் மூலமாக இறந்து போனதன் காரணமாக அக்குடும்பத்திற்கு நிவாரண தொகையாக ரூ. 1 லட்சம் மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கலாமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

2. இந்நேர்வில் விடுதி கட்டிடம் இடிந்து விழுந்ததால் இறந்த செல்வன் விஜயகுமார் பள்ளி மாணவர். தொழிலாளி அல்ல. எனவே, அரசாணை (நிலை) எண்.471, நிதித்துறை, நாள் 23-5-1989-ன்படி விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்க இயலாது. அதேபோல் செல்வன் விஜயகுமார் பொருளீட்டும் குடும்பத்தலைவராக இல்லாததால், அரசாணை (நிலை) எண்.470, நிதித்துறை, நாள் 23-5-1989-ன்படி நலிந்தோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்க இயலாது. எனினும் கருணை அடிப்படையில், இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, மாவட்டாட்சியரின் பரிந்துரையை ஏற்று, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,00,000/-(ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) இறந்து போன செல்வன் விஜயகுமார் குடும்பத்திற்கு நிவாரணமாக வழங்க அரசு ஆணையிடுகிறது.

3. நிதித் துறையின் அரசு துணைச் செயலர் மற்றும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியின் பொருளாளர் மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகைக்கு காசோலையை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியருக்கு உடன் வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இத்தொகையினை இறந்தவரின் குடும்பத்திற்கு காசோலையாகவோ அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கு மூலமாகவோ வழங்கி பணம் அவருக்கு முழுமையாகப் போய்ச்சேரும் வகையில் செயல்பட்டு, அவரிடமிருந்து வரிவில்லையிட்ட பற்றுச்சீட்டைப் பெற்று நிதித்துறைக்கு அனுப்புமாறும், மேலும் இதுகுறித்து அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்குத் தெரிவிக்குமாறும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண் 89559/முஅபொநிதி/97-1 நாள் 4-11-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்

பெறுநர் :

மாவட்ட ஆட்சியர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்,
சென்னை-600 005.
முதன்மைக் கணக்காயர், சென்னை-18/35
கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி.
அரசு துணைச்செயலர், நிதி (முஅபொநிதி) துறை, சென்னை-9.(2 படிகள்).
திரு. வீரப்பன், அசூர் கிராமம், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆட்சியர் மூலமாக.

நகல்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பி. சரஸ்வதி,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் - ஆதிதிராவிட மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு நில எடுப்பு செய்தல் - செலவினம் அனுமதிக்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசு ஆணை (நிலை, எண் 184. நாள் 21-11-1997.

படிக்கப்பட்டவை:-

1. அரசு ஆணை (நிலை) எண். 20, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 11-2-1997.

2. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், அவர்களின் நேர்முக கடித எண். க1/32998/97, நாள் 31-7-1997 மற்றும் 8-10-1997.

ஆணை:

மேலே பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில் 1996-97ஆம் ஆண்டிற்கு வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் மாணவியர் விடுதிகளுக்கு கட்டிடங்கள் கட்ட அரசு நிலங்கள் கிடைக்காத இடங்களில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகள் கட்டுவதற்காக நிலங்கள் கையகப்படுத்த ரூ.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

2. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் அவர்கள் நடப்பு நிதி ஆண்டில் (1997-98) பொதுப்பணித்துறை, தலைப்பின் கீழ் ஆதிதிராவிட மாணவியர் விடுதிகளுக்கு [illegible] நிலம் கையகப்படுத்துவதற்கு ரூ.49.99 இலட்சத்திற்கு ஒதுக்கப்பட்டதை வழங்கும்படி [illegible].

3. அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை ஆய்வு செய்து வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் மாணவியர் விடுதிகளுக்கு கட்டிடங்கள் கட்ட அரசு நிலங்கள் இல்லாத இடங்களில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகள் கட்டுவதற்காக நிலங்கள் கையகப்படுத்த ரூ.49.99 இலட்சம் (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து தொன்னூற்றி ஒன்பதாயிரம் மட்டும்) அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.49.99 இலட்சத்தை (ரூபாய் நாற்பத்தொன்பது லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரம் மட்டும்) பெற்று ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு அரசு நிலங்கள் இல்லாத இடங்களில் நிலம் கையகப்படுத்த தேவைப்படும் மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட பொதுப்பணித்துறை கணக்கின் கீழ் செலவிடப்பட வேண்டும்:-

"4059. பொதுப்பணிகள் குறித்த மூலதனச்செலவு - 80 பொது 201. நிலம் கையகப்படுத்துதல் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத்திட்டம் JA ஆதிதிராவிடர் மாணவியர் இல்லக்கட்டிடங்களுக்கு நிலம் கையகப்படுத்தல் 16. பெரும்பணிகள் (த.தொ.கு.4059 80 201 JA 1609)".

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் ச. [illegible] எண்90873/நிதி(சந/97, நாள் 17-11-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்.

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5.
மாநில தலைமைக்கணக்காயர், சென்னை-18/சென்னை-35/
சென்னை-6.

நகல்:

நிதி(சந)/பொதுப்பணித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (அந) துறை,
சென்னை-9.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது.

பிரிவு அலுவலர்.

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்- ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 9 மற்றும் 10-வது வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 1997-98ம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் சீருடை வழங்குதல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.*

---

***ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-3) துறை***

*அரசாணை (நிலை) எண் 78,* *நாள் 5-5-97*

*படிக்கப்பட்டது:*

*(1) அரசு ஆணை (நிலை) எண் 2375, உள்துறை, நாள் 17-8-68.*

*(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேர்முக கடிதம் எண் டி4/40848/96, நாள் 21-12-1996.*

*ஆணை:*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தற்போது இரண்டு இணை சீருடை இலவசமாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகளில் 8-ம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கும், 12-ம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவிகளுக்கும், மற்றும் ஆதிதிராவிட நல விடுதிகளில் தங்கியுள்ள 10-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும், இரண்டு இணை சீருடை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகளில் 9 மற்றும் 10-ம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் அவர்கள் பயனடையும் பொருட்டும் அம்மாணவர்களுக்கும் இரண்டு இணை சீருடை வழங்க 1997-98-ம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் ஆய்வு செய்து ஒப்பளிப்பு வழங்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் வேண்டியுள்ளார்.

(3) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து, 1997-98-ம் நிதி ஆண்டிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகளில் 9 மற்றும் 10-ம் வகுப்புகள் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இரண்டு இணை சீருடை அதாவது இரண்டு அரைக்கால் சட்டை மற்றும் இரண்டு அரைக்கை மேல் சட்டை வழங்கப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது. இதற்காக ஒரு இணை சீருடைக்கு ரூ.181 வீதம் ரூ. 22.81 இலட்சம் (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சம் மற்றும் எண்பத்தி ஓராயிரம் மட்டும்) தொடர் செலவாகச் செலவிடவும் அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது.

(4) மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "2225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01. ஆத்திராவிடர் நலன் -277 கல்வி ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள்- II. மாநிலத் திட்டம் JG சிறப்புக் கூறுத் திட்டத்தின் கீழ் பள்ளிக் கல்வி - 46, உடைகள், கூடாரச் செலவு மற்றும் பண்டகச்சாலைகள் - 01. சிறுவர்கள்" (த.தொ.குறியீடு 2225 01 277 JG 4611) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(5) இவ்வரசாணைக்குப் பிறகு இதுநாள் தொடங்கி ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளிலும், விடுதிகளிலும் தங்கி பத்தாம் வகுப்பு வரையிலும் அனைத்து மாணவர்களுக்கும், அவ்வாறே +2 வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவியர்க்கும் இரண்டு இணை சீருடை வழங்கப்படும். எனவே இதுகுறித்து அரசாணை

(நிலை) எண்.292, சமூக நலம், நாள் 2-4-74-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசு கடித எண்36225/ஆதிந. 3/90-27, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 6-4-93 மூலம் திருத்தப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடைமுறை நூலுக்குத் தக்க திருத்தம் வெளியிடப்பட வேண்டும்.

(6) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண் 71/து.செ. (ஆர்.பி)/97 நாள் 7-3-1997-இல் அளிக்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை-18/ சென்னை-35/சென்னை-6.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்கள்.
பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை,
சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின்
நேர்முக உதவியாளர்.
இருப்புக் கோப்பு/உதிரிகள்/அநமு. பிரிவு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ஒம்)..............................................
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகளில் தங்கி +1 மற்றும் +2 பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சீருடை வழங்குதல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

*அரசாணை (நிலை) எண் 94, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை, நாள் 14 மே 1997.*

*படிக்கப்பட்டவை:*

(1) *அரசாணை (நிலை) எண் 2375, உள்துறை, நாள் 17-8-1968.*

(2) *அரசாணை (நிலை) எண் 78, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 5-5-1997.*

(3) *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அ.சா.கு. எண் 11226/ ஆதிந1/97-1, நாள் 21-4-97.*

(4) *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க. எண் அஉ4/21590/97, நாள் 13-5-1997.*

*ஆணை:*

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில் தங்கி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இரண்டு இணை சீருடை வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது, 10ஆம் வகுப்பு வரை ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மற்றும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சீருடை வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(2) அவ்வாறே +1 மற்றும் +2 பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சீருடை வழங்குவது பற்றி அரசு ஆய்விட்டு வழங்கலாம் என முடிவு செய்துள்ளது. அதன்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகளிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில் தங்கி +1 மற்றும் +2 பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இரண்டு இணை சீருடை அதாவது, இரண்டு இணை அரைக்கை மேல் சட்டை மற்றும் இரண்டு இணை முழுக்கால் சட்டை நடப்பு ஆண்டிலிருந்தே அதாவது, 1997-98-லிருந்தே ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

(3) மேலே பத்தி 2-ல் ஏற்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தை "2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01. பட்டியல் சாதியினர் நலன. 277. கல்வி I.திட்டத்தில் சேராதது-AA. பள்ளிக் கல்வி - 46 உடைகள், கூடாரச் செலவுகள், பண்டக சாலைப் பொருட்கள் -02. சிறுவர்" (த. தொகுப்பு குறியீடு 2225 01 227 AA 4621) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(4) மேற்படி செலவினத்திற்கான கூடுதல் நிதியினை 1997-98-க்கான திருத்திய மதிப்பீட்டில் அல்லது இறுதி மாற்ற மதிப்பீட்டில் சேர்க்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் வேண்டப்படுகின்றார்.

(5) அரசு (ஆணை) நிலை எண் 292. சமூக நலம், நாள் 2-4-74ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசு கடிதம் எண் 36225/ஆதிந. 3/90-27, ஆதி (ம) பகுந, நாள் 6-4-93-ன் மூலம் திருத்தப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடைமுறை நூலுக்கு (Departmental Manual) தக்க திருத்தம் வெளியிடப்பட வேண்டும்.

(6) இவ்வாணை நிதித்துறையில் அ.சா.கு. எண் 2299/செயலாளர் (நிதி)/பி/97, நாள் 12-5-97-ல் அளிக்கப்பட்ட இசைவுப்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்

பெறுநர் :

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5
மாநில கணக்காயர் சென்னை-18, சென்னை-6, சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு சென்னை-5
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை, சென்னை-9
நிதித்துறை, சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
அநமு பிரிவு/இருப்புக் கோப்பு/ உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - சீருடை - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு 1997-98ஆம் ஆண்டு மற்றும் தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்கு சீருடை வழங்க கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மூலம் துணிகள் வாங்க ஏதுவாக அரசாணை (நிலை) எண்.75, நிதித்துறை, நாள் 19-2-1997-லுள்ள ஆணைகளுக்கு விலக்கு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை.

அரசாணை (நிலை) எண் 137, நாள் 24-7-97.

**படிக்கப்பட்டது:**

(1) அரசாணை (நிலை) எண்.75, நிதித்துறை, நாள் 19-2-1997.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் கடிதம் எண். அஉ4/56400/96, நாள் 11-3-1997.

------------

**ஆணை:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் இரண்டு இணைச் சீருடைகளுக்கான துணிகளை இதுகாறும் 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் வழங்கி வந்தது. அரசாணை (நிலை) எண்.75, நிதித்துறை, நாள் 19-2-1997-ல் கூட்டுறவு நிறுவனத்திற்குத் தரப்பட்ட முன்னுரிமை எடுக்கப்பட்டமையால், சீருடைக்குத் தேவையான துணிகளைத் திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்க வேண்டிய சூழ்நிலை எழுந்தமையால் 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திற்கு நேரடியாக ஆணை வழங்க இயலாத சூழ்நிலை எழுந்துள்ளது.

(2) 1997-98-ம் ஆண்டுக்குரிய சீருடைத் துணிகளின் தேவைப்பட்டியலை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் 26-2-1997-ல் கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநருக்கு அனுப்பி முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, 1997-98ஆம் ஆண்டுக்குரிய சீருடைத் துணிகளின் தேவையை 'கோ-ஆப்டெக்ஸ்' மூலமாகவே பெற்றுக் கொள்ள அரசாணை (நிலை) எண்.75, நிதித்துறை, நாள் 19-2-1997-ல் வழங்கப்பட்ட ஆணைகளுக்கு விதிவிலக்கு அளிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டார்.

(3) இதுபற்றி அரசு தீர ஆய்வு செய்து அரசாணை (நிலை) எண். 75, நிதித்துறை, நாள் 19-2-1997-ல் வழங்கப்பட்ட ஆணைகளுக்கு விலக்கு அளித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளி மற்றும் விடுதி மாணவ மாணவியர்க்கான சீருடைத் துணிகளை 1997-98ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மூலம் வாங்க வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

(4) 1997-98ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளி மற்றும் விடுதி மாணவர்க்கு வழங்கப்பட வேண்டிய சீருடைத் துணிகளை செப்டம்பர் '97 இறுதிக்குள் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் வழங்க வேண்டும்.

(5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளி மற்றும் விடுதி மாணவர்களுக்கான சீருடைகளை சமூக நலத்துறையின் கீழுள்ள தையலகங்கள் உடனுக்குடன் தைத்து அக்டோபர் '97 இறுதிக்குள் வழங்க சமூக நலத்துறை இயக்குநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(6) எதிர்வரும் கல்வியாண்டு தொடங்கி இந்தச் சீருடைகளைப் பள்ளி திறக்கும் நாளன்றே வழங்கப்படும் வகையில் முன் நடவடிக்கைகள் முந்தைய ஆண்டிலேயே எடுக்கப்பட வேண்டும். அதற்குரிய தேவைப்பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் இறுதிக்குள் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் வழங்கிட வேண்டும். கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு 1998-99 ஆண்டிற்கான தேவைப்பட்டியலை 'செப்டம்பர் '97க்குள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அனுப்ப வேண்டும். கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் சீருடைத் துணிகளை டிசம்பர் 1997 வாக்கில் வழங்கி முடிக்க வேண்டும். சமூக நலத்துறை ஏப்ரல் 1998-ற்குள் சீருடைகளைத் தைத்து முடிக்க வேண்டும். 1998 மே மாத இறுதிக்குள் தைத்து முடிக்கப்பட்ட சீருடைகளை மாணவர்களுக்கு வழங்கப்படத் தயாராக இருக்க வேண்டும்.

(7) இவ்வாணை அ.சா.கு.எண் 3462/FS/P/97, நாள் 15-7-97-ல் வழங்கப்பட்ட நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை-108.
மேலாண்மை இயக்குநர், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், சென்னை-8.
சமூகநலத்துறை இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-35.
மாநிலக் கணக்காயர், சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5.

நகல்:

பிற்பட்டோர் (ம) மிகவும் பிற்பட்டோர் நலத்துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9
கைத்தறி, கைவினைகள் மற்றும் துணிநூல் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலாளரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
'அநமு' பிரிவு
இருப்புக்கோப்பு/உதிரிகள்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - புத்தக வங்கித் திட்டம் - பாரத ஸ்டேட் வங்கியின் நடப்புக் கணக்கிலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தில் தொகையினை 'தாட்கோ' நிறுவனத்தின் அரசு தன் வைப்புக் கணக்கிற்கு மாற்றுதல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை.

அரசாணை (டி) எண் 213, நாள் 29 ஆகஸ்ட் 1997.

**படிக்கப்பட்டது:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண் எப்4/32343/97, நாள் 22-7-1997.

**ஆணை:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தால் சென்னை-5, பொதுப்பணித்துறை வளாகத்தில் இயங்கி வரும் பாரத ஸ்டேட் வங்கியில் (S.B.I.) 14-10-1987 முதல் தொடங்கப்பட்ட நடப்புக் கணக்கு எண். டி. 008-ல் புத்தக வங்கித் திட்டத்திற்கென அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ. 2,33,04,357 உள்ளதாகவும், முழுத்தொகையினையும் செலவு செய்ய மேலும் சில காலம் ஆகுமெனவும், இக்கணக்கிலுள்ள தொகையினை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் அரசு தன் பெயர் வைப்புக் கணக்கிற்கு மாற்ற அரசின் அனுமதி வேண்டுமெனவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கோரிக்கையினை அரசு தீர ஆய்வு செய்து, பாரத ஸ்டேட் வங்கியின் நடப்புக் கணக்கு எண் டி.008-லுள்ள தொகையான ரூ. 2,33,04,357 (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து நான்காயிரத்து முன்னூற்று ஐம்பத்தேழு மட்டும்)ஐ 'தாட்கோ' வின் அரசு தன் பெயர் வைப்புக் கணக்கிற்கு மாற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

(3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை 'தாட்கோ'வின் அரசு தன்பெயர் வைப்புக் கணக்கிற்கு உடனடியாக மாற்ற வேண்டும்.

(4) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நடப்புக் கணக்கிலிருந்து மாற்றப்படும் ரூ. 2,33,04,357-னை உடனடியாக 'தாட்கோ'வின் அரசு தன்பெயர் வைப்புக் கணக்கில் வரவு வைக்குமாறு 'தாட்கோ'வின் மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், புத்தக வங்கித் திட்டத்தினை செயற்படுத்தும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல திட்டத்தினை செயற்படுத்தும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் அவ்வப்போது கேட்புகள் பெறும்போது உரிய தொகையினை விடுக்கவும் தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(5) இவ்வாணை அ.சா.கு.எண் 62585/நிதி (சந)/97-1, நாள் 20-8-97-ல் பெறப்பட்ட நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர் :

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மேலாண்மை இயக்குர், தாட்கோ, சென்னை-101.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-35.
மாநிலக் கணக்காயர், சென்னை-6
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
'அநமு' பிரிவு
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - புத்தக வங்கித் திட்டம் - மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் மற்றும் பல்நோக்குத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கானது - திட்ட நடைமுறையில் மாற்றம்- ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை

*அரசாணை (நிலை) எண்.160,* *நாள் 19-9-97.*

**படிக்கப்பட்டது:**

*(1) அரசாணை (நிலை) எண்.1385, சமூக நலத்துறை, நாள் 26-12-78.*

*(2) அரசாணை (நிலை) எண்.17, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 29-1-93.*

**மீண்டும் படிக்கப்பட்டது:**

*(3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண். ஜே.1/22963/95 நாள் 25-7-97.*

**ஆணை:**

அரசு ஆணை (நிலை) எண்.1385, சமூக நலத்துறை, நாள் 26-12-78ல் தொழிற்கல்வி மற்றும் பல்நோக்குத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் பயின்று, மத்திய அரசின் கல்வி உதவித்தொகை பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்மூலம் 1979-80-ம் ஆண்டு முதல் புத்தக வங்கித் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, புத்தகங்கள் வாங்கத் தேவையான தொகை கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் 1991-92 வரையிலும் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 1992-93 முதல் இந்நடைமுறையினை மாற்றி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் கல்வி நிறுவனங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி வழங்கும் திட்டம் அரசு ஆணை (நிலை) எண்.17, நாள் 29-1-93ல் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறையிலுள்ளது.

(2) தற்போதுள்ள நடைமுறையின் மூலம், கல்வி நிறுவனங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்க வல்லுநர் குழுவால் முடிவுகள் எடுக்க காலதாமதம் ஆனதாலும், பதிப்பாளர்களால் ஒரே சமயத்தில் அதிகமான அளவு புத்தகங்களை விநியோகிக்க முடியாததாலும், ஒவ்வொரு கல்வி நிறுவனங்களுக்கும் தேவையான புத்தகங்களை வெவ்வேறு பதிப்பாளரிடமிருந்து பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டதாலும் 1994-95 முதல் இத்திட்ட செயல்பாட்டில் சுணக்கம் ஏற்பட்டது.

(3) இது குறித்து அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருடனும், மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் நிர்வாகிகளுடனும், நூலகர்களுடனும் மற்றும் சில மாணவர்களுடனும் விரிவாக கலந்தாலோசித்தது. அதனடிப்படையில் இத்திட்ட நடைமுறையினை எளிமை படுத்துவது தொடர்பான சில கருத்துக்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசின் பரிசீலனைக்கு அனுப்பினார். இத்திட்ட செயற்பாட்டில் உள்ள சுணக்கத்தை தவிர்க்கும் பொருட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, இணைப்பில் கண்ட புதிய நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

(4) இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி 1997-98-லிருந்து தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்குத் தேவையான புத்தகங்கள் புத்தக வங்கித் திட்டத்தின் கீழ் வாங்கப்பட வேண்டும் ஏனைய விதிமுறைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(5) இவ்வாணை அ.சா.கு. எண்.212/எஸ்எஸ்/97, நாள் 29-8-97-ல் பெறப்பட்ட நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
தொழிற்கல்வி இயக்குநர் சென்னை-25
பதிவாளர், விவசாயப் பல்கலைக் கழகம், கோவை
பதிவாளர்,
தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை-7.
மருத்துவக்கல்வி இயக்குநர், சென்னை-5
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை-18./சென்னை-18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை-35. சென்னை-6
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.

நகல்:

நிதித்துறை, சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
'அநமு' பிரிவு இருப்புக்கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பி. சரஸ்வதி,
பிரிவு அலுவலர்.

## இணைப்பு

### புத்தக வங்கித் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான நடைமுறைகள்.

(1) தொழிற்கல்வி மற்றும் பல்நோக்கு தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் மத்திய அரசு கல்வி உதவித்தொகை பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியரின் பட்டியலை மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் பெற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

(2) இத்திட்டத்திற்கென ஒப்பளிப்பு செய்யப்படும் நிதியினை மத்திய அரசு கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கையில் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பகிர்ந்தளிக்க வேண்டும்.

(3) மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் இத்திட்டத்திற்கான நிதியினை ஒவ்வொரு கல்வி நிறுவனங்களுக்கும் புத்தகங்கள் வாங்கியதற்கான செலவுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டபின் உடனுக்குடன் விடுவிக்க வேண்டும்.

(4) ஒவ்வொரு மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரியும் அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் ஒரே வழங்கலாணையில் தொகை வழங்க வேண்டும். (மாவட்டத்திற்கு ஒரு பட்டியல்) வழங்கலாணை பட்டியல் படிவம் மாநில முழுமையும் ஒரே வகையாதல் வேண்டும்.

(5) முந்தைய ஆண்டு மத்திய அரசு போஸ்ட்மெட்ரிக் உதவித்தொகை வழங்கப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் (மார்ச் முடிவில் இது அறியப்பட்டு விடும்) ஏப்ரல் இறுதிக்குள் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஆணை வெளியிடப்பட வேண்டும். காசோலையும் வழங்கப்படலாம்.

(6) ஒவ்வொரு கல்வி நிறுவனங்களுக்கும் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை மற்றும் பயன்பெற்ற மாணவர்கள் விவரம் போன்ற கணக்குகள் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் பேணப்படவேண்டும். இதனை ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

(7) சூலை இறுதிக்குள் கல்வி நிறுவனங்கள் புத்தகங்களை வாங்கி இறுதி அறிக்கை தர வேண்டும்.

(8) ஆகஸ்ட் 15 சுதந்திர நாள் விழாவின்போது கல்வி நிறுவனங்களுக்கு புத்தகங்கள் வழங்கப்படுவதை உறுதி செய்யலாம்.

(9) கல்வி நிறுவனங்களில் மாணவர் கூட்டுறவுச் சங்கம் இருந்தால் அச்சங்கத்தின் மூலம் மட்டுமே இத்திட்டத்திற்கு தேவையான புத்தகங்கள் வாங்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவர்/ மாணவியர் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் இடம் பெற வேண்டும்.

(10) மாணவர் கூட்டுறவுச் சங்கம் இல்லாத கல்வி நிறுவனங்களில் நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள் வாங்கும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(11) அந்தந்த கல்வி நிறுவன நூலகர் தலைவராகவும், பயனாளி மாணவர் (இரண்டாம் ஆண்டு பயில்பவராக இருத்தல் வேண்டும். மூன்றாண்டுகள் அவரே நீடிக்கலாம்) துணைத் தலைவராகவும், கல்வி ஆண்டுக்கு ஒருவராக ஐந்து பேருக்கு மிகாமலும், பயனாளி மாணவர்களை உறுப்பினராகவும் கொண்ட குழு நூல்கள் வாங்குதல், பேணுதல், ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரிக்கு தலைவர், துணைத் தலைவர், இருவரும் கையெழுத்திட்டு அறிக்கை அனுப்ப வேண்டும்.

(12) டிசம்பர் இறுதிக்குள் இயக்குநர் அரசுக்கு நிறைவறிக்கையை கல்வி நிறுவன வாரியாக விவரங்களைப் புத்தக வடிவில் அளிக்க வேண்டும்.

இரா. கிருத்துதாச காந்தி,
*அரசு செயலர்.*

/உண்மை நகல்/

ப. சரஸ்வதி.
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - உதவித் தொகைகள் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் பெயரிலுள்ள தன் பெயர் வைப்புக் கணக்குத் தொகையினை அதிகரித்தல் மற்றும் மாற்றி அமைத்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை,

அரசாணை (நிலை) எண்.97, நாள் 17-5-97.

படிக்கப்பட்டவை:

(1) அரசாணை (நிலை) எண்.2259, சமூக நலத்துறை, நாள் 21-9-1982

(2) அரசாணை (நிலை) எண்.2356, சமூக நலத்துறை, நாள் 6-10-1982

(3) அரசாணை (நிலை) எண்.160, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 14-7-1993.

மீண்டும் படிக்கப்பட்டவை:

(4) வடாற்காடு அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவரின் நே.மு.க. எண். கே.6/ஆர்சி. 42220/96, நாள் 17-6-96.

(5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண் ஐ1/ 27878/96, நாள் 6-8-1996 மற்றும் 11-4-1997.

(6) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண் ஐ2/16139/97, நாள் 11-4-1997.

(7) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண்.ஐ1/9240/97, நாள் 11-4-1997, நாள் 17-4-97.

----

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பெயரிலும், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் பெயரிலும் உள்ள தன்பெயர் வைப்புக் கணக்கில் கல்வி உதவித் தொகைகள் வழங்கும் பொருட்டு ரூ.385 இலட்சம் அறுதியிட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

(2) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவர் அம்மாவட்டத்திற்கு தன்பெயர் வைப்புக் கணக்கில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை கல்வி நிறுவனங்களுக்கு முதல் தவணையாக ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டிய கல்வி உதவித் தொகையான 60% செலவினத்தைச் சரிகட்ட போதுமானதாக இல்லை எனவும், அவ்வப்போது கருவூலத்தில் மீட்சி செய்து செலவழிப்பதிலுள்ள இடர்களையும் காலச்சுணக்கத்தையும் தவிர்க்க தன்பெயர் வைப்புத் தொகையினை உயர்த்த வேண்டும் என பார்வை 4ல் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசினைக் கேட்டுக் கொண்டார். மேலே பார்வை 5 முதல் 7 வரை படிக்கப்பட்ட கடிதங்களில் கல்வி உதவித்தொகைகளை உரிய நேரத்தில் ஒப்பளிப்புச் செய்ய இயக்குநர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் பெயரிலுள்ள தன்பெயர் வைப்புத்தொகை கூட்டப்பட

வேண்டுமெனவும், புதிய மற்றும் சீரமைக்கப்பட்ட மாவட்டங்களான எம்.ஜி.ஆர், வைகைவீரன் அழகுமுத்து, இராஜாஜி, நாகை காயிதேமில்லத், மதுரை, சேலம், தஞ்சாவூர், ஏ.டி. பன்னீர் செல்வம் ஆகிய மாவட்டங்களுக்கும் தன் பெயர் வைப்புத் தொகை பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனவும் மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்கக தன்பெயர் வைப்புத் தொகை சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கும், சென்னை மாவட்ட தன்பெயர் வைப்புத் தொகை இயக்குநருக்கும் மாற்றி ஆணையிட வேண்டுமெனவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டார்.

(3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் செயற்குறிப்பை அரசு தீர, ஆய்ந்து, கல்வி உதவித்தொகைகள் வழங்கும் தற்போதுள்ள நடைமுறையிலுள்ள காலச்சுணக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மற்றும் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் பெயரிலும் தற்போதுள்ள தன்பெயர் வைப்புத் தொகையினை மாற்றியமைத்து உயர்த்த முடிவு செய்துள்ளது. மேலும் சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரின் தன்பெயர் வைப்புத்தொகையை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கும், இயக்குநரின் தன்பெயர் வைப்புத் தொகையினை சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கும் மாற்றி அமைத்தும் புதிய மாவட்டங்களுக்கு தன் பெயர் வைப்புக் கணக்கைத் துவக்கவும் அரசு ஆணையிடுகிறது. அதற்கிணங்க, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மற்றும் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பெயருக்கும் தன்பெயர் வைப்புத் தொகையினை இவ்வாணையின் இணைப்பில் உள்ளவாறு 1997-98 ஆம் ஆண்டிலிருந்து திருத்தியமைத்து அரசு ஆணையிடுகிறது.

(4) இவ்வாணை, அ.சா.கு.எண்.153/து.செ. (வரவு செலவு திட்டம்)/97, நாள் 16-5-97ல் வழங்கப்பட்ட நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை-35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்
அனைத்து கருவூல அலுவலர்கள்.
மேலாளர், ரிசர்வ் வங்கி, சென்னை.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
நகல்:செயலாளர் நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
அநமு பிரிவு/இருப்புக் கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

## இணைப்பு

**கல்வி உதவித் தொகைகள் ஒப்பளிப்பு வழங்கும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அதிகரிக்கப்பட்ட/மாற்றியமைக்கப்பட்ட தன்பெயர் வைப்புக் கணக்கு தொகைகளின் விவரம்.**

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | தற்போதுள்ள தன்பெயர் வைப்புத்தொகை ரூ. | 1997-98 முதல் மாற்றியமைக்கப்பட்ட வைப்புத்தொகை. ரூ. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம் | 54.00 | 10.00 |
| (2) | சென்னை | 3.00 | 143.00 |
| (3) | எம்.ஜி.ஆர் | 9.00 | 39.00 |
| (4) | அண்ணா | 10.00 | 39.00 |
| (5) | தென்னாற்காடு வள்ளலார் | 10.00 | 71.00 |
| (6) | விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் | 14.00 | 33.00 |
| (7) | தஞ்சாவூர் | 13.00 | 28.00 |
| (8) | ஏ.டி. பன்னீர்செல்வம் | 11.00 | 39.00 |
| (9) | நாகை காயிதே மில்லத் | 10.00 | 20.00 |
| (10) | திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் | 20.00 | 57.00 |
| (11) | பெரம்பலூர் திருவள்ளுவர் | 9.00 | 25.00 |
| (12) | கரூர் தீரன் சின்னமலை | 9.00 | 25.00 |
| (13) | வைகைவீரன் அழகுமுத்து | 8.00 | 58.00 |
| (14) | மதுரை | 19.00 | 69.00 |
| (15) | இராமநாதபுரம் | 11.00 | 16.00 |
| (16) | திருநெல்வேலி கட்டபொம்மன் | 20.00 | 62.00 |
| (17) | கன்னியாகுமரி | 9.00 | 21.00 |
| (18) | இராஜாஜி | 8.00 | 48.00 |
| (19) | சேலம் | 17.00 | 34.00 |
| (20) | தர்மபுரி | 5.00 | 29.00 |
| (21) | கோயம்புத்தூர் | 22.00 | 59.00 |
| (22) | நீலகிரி | 4.00 | 17.00 |
| (23) | புதுக்கோட்டை | 7.00 | 52.00 |
| (24) | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் | 9.00 | 37.00 |
| (25) | பெரியார் | 5.00 | 35.00 |
| (26) | காமராஜர் | 9.00 | 30.00 |
| (27) | திண்டுக்கல் மன்னர் திருமலை | 16.00 | 59.00 |
| (28) | வடஆற்காடு அம்பேத்கார் | 20.00 | 54.00 |
| (29) | திருவண்ணாமலை சம்புவராயர் | 11.00 | 36.00 |
| (30) | சிதம்பரனார் | 13.00 | 53.00 |
| | மொத்தம் | **385.00** | **1298.00** |

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

/உண்மை நகல்/

*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் - கல்வி - பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட மைய/மாநில அரசு கல்வி உதவித் தொகை - விண்ணப்பப் படிவங்கள் அச்சிட்டு வழங்க அனுமதி - ஆணை வெளியிட்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை

*அரசு ஆணை (நிலை) எண். 114,* *நாள் 3-6-97.*

*படிக்கப்பட்டது.*

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேர்முக கடிதம் எண் இ1/10458/94, நாள் 14-5-1997.*

**ஆணை**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள் மைய/மாநில அரசு கல்வித உதவித் தொகைக் திட்டங்களின்கீழ் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு இருவிதமான விண்ணப்பப் படிவங்கள் தற்போது உபயோகத்தில் உள்ளன. இவ்விண்ணப்பப் படிவங்களை எளிமைப்படுத்தி கல்வி உதவித் தொகை வழங்கும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆய்வு செய்தது.

(2) அவ்வாறே, கல்வி உதவித் தொகை விண்ணப்ப படிவத்தை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அமையும் வகையில் சுருக்கி கீழ்க் குறிப்பிடப்படும் படிவங்களை தேவைக்கேற்ப அச்சிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

| | படிவத்தின் பெயர் | | தேவை |
|---|---|---|---|
| (அ) | மைய/மாநில அரசு கல்வி உதவித் தொகைத் திட்டம்- பள்ளி இறுதி தேர்வுக்க மேற்பட்ட படிப்பிற்குரிய உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பம் | .. | 1,20,000 |
| (ஆ) | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை- கல்வி உதவித் தொகை - புதியது - குறியீட்டுத்தாள் | .. | 1,20,000 |
| (இ) | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை - கல்வி உதவித்தொகை - குறியீட்டுத்தாள்- புதுப்பித்தல் | .. | 50,000 |

(3) மேலே பத்தி இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களை முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக அச்சிட எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநருக்கு அனுமதி அளிப்பதுடன், அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் படிவங்களைப் பகிர்ந்தளிக்கும் வகையில் ஜூன் மாதத்திற்குள் விண்ணப்படிவங்களை அச்சிட்டு அனைத்து படிவங்களையும் இலவசமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு வழங்க அரசு ஆணையிடுகிறது.

(4) மேலே பத்தி 2ல் வரிசை எண்கள் அ மற்றும் ஆ-விலுள்ள படிவங்கள் இணைப்பில் வரையறுத்தபடி நிலைப்படுத்தப்பட்ட படிவங்களாக இனி அமையும். ஏற்கெனவே, தற்போது புழக்கத்தில் இருக்கும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்களான DHW எண்2,9,10,12,14,15A, 18, 22, 25,29,31,33,34,35,38,39,41 மற்றும் 42 படிவங்கள் தேவையற்றன என்பதால் அப்படிவங்களை அச்சிட வேண்டாம் என எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

(5) மேலே பத்தி 2ல் வரிசை எண்கள் அ மற்றும் ஆ-விலுள்ள படிவுங்களை அவ்வப்போது தேவைக்கேற்ப எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரிடமிருந்து அச்சிட்டு பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு உரிமை அளிக்கப்படுகிறது.

(6) இவ்வாணை அலுவல் சார்பற்ற எண்.13082/செ.கு.2/97-1, செ.கு. (எ.அ.2) துறை, நாள் 22-5-97ல் வழங்கப்பட்ட செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது .

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

**பெறுநர்,**

இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை-2.
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-79.
தனி அலுவலர் (படிவம்)
அரசு மைய அச்சகம், சென்னை-79.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/சென்னை-35/ சென்னை-6.
நலத்துறைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
அநமு பிரிவு/இ.கோ./உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

/உண்மை நகல்/

*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்வி பயிலும் மாணவர்களுக்கான மைய/ மாநில அரசு கல்வி உதவித் தொகை - ஒப்பளிப்புப் பணிகளை கணினி மூலம் செயற்படுத்துதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை

அரசாணை (நிலை) எண்.124, நாள் 25-6-97

படிக்கப்பட்டவை:

(1) அரசாணை (நிலை) எண்.1788, சமூக நலத்துறை, நாள் 15-7-82.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேர்முக கடித எண்.ஐ1/10458/94, நாள் 14-5-97.

ஆணை:

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான மைய/மாநில அரசு கல்வி உதவித் தொகைத் திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்க ஒப்பளிப்பு செய்திடும் செயலுரிமை கல்வி நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ளது. ஆயினும், உரிய காலத்தில் கல்வி உதவித்தொகை மாணவர்களுக்கு சென்று அடைவது இல்லை என்று பல்வேறு தரப்பில் இருந்து முறையீடுகள் அரசிற்கு வந்தவண்ணமுள்ளன எனவே கல்வி உதவித் தொகை வழங்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல், காலச் சுணக்கம் போன்றவற்றைத் தவிர்க்கத் தற்போதுள்ள நடைமுறையை எளிமைப்படுத்துவது குறித்த தேசிய தகவல் தொடர்பு மையத்தின் உதவியுடன் கல்வி உதவித்தொகை வழங்கும் பணியினைக் கணினி மயமாக்கல் குறித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருடன் அரசு தீர ஆய்வு செய்தது.

(2) ஆய்வின் வழி, 1997-98ஆம் ஆண்டிலிருந்து கல்வி உதவித்தொகை வழங்கும் பணியைக் கணினி மயமாக்கவும், கீழ்க்குறிப்பிடப்படும் முறைமைகளை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களும், கல்வி நிறுவனத் தலைவர்களும், தவறாது கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(அ) கல்வி உதவித்தொகை விண்ணப்ப படிவத்தினை மாணவரிடமிருந்து நிரப்பப் பெற்று, குறியீட்டுத்தாளை (Coding sheet) கல்வி நிலையத் தலைவர் நிரப்பி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

(ஆ) குறியீட்டுத்தாளில் உள்ள விவரங்களை கணினியில் ஏற்றி செயல்முறைகளை அச்சிட்ட படிவத்தில் கணினியிலிருந்து மாவட்ட ஆதிதிராரிடர் நல அலுவலர் பெறுதல் வேண்டும். இதற்கென கல்வி உதவித்தொகை வழங்கும் விதிமுறைகள், பராமரிப்புத் தொகை ஆகிய விவரங்களை கணினியில் தனியே முன்கூட்டியே முதன்மைக் கோப்பில் நிலைப்படுத்தப்படும்.

(இ) கணினி மூலம் பெறப்படும் செயல்முறைப் படிவம் ஐந்து படிகள் கிடைக்கப் பெறும் வகையில் எடுக்கப்பட்டு மூன்று படிவங்கள் கல்வி நிறுவன முதல்வருக்குக் காசோலையுடன் அனுப்பப்படும். அதில் ஒரு படி கல்வி நிலையத் தகவல் பலவகையில் ஒட்டப்பட வேண்டும். கல்வி உதவித்தொகை வழங்கப்பட்ட மாணவரின் கையொப்பம் இரண்டாவது படியில் பெறப்பட்டு கல்வி நிலையத்தில் பராமரிக்கப்பட வேண்டும். மொத்தத் தொகை வழங்கப்பட்டதற்கான சான்றிதழ் கல்வி நிறுவனத்திடமிருந்து தற்போது பெறப்படுகின்ற முறை நீடிக்கும். மாணவர் தேர்வில் தேர்ச்சி பெற்று அடுத்த ஆண்டிற்கான படிப்பில் தொடர்ந்து பயில அனுமதிக்கப்பட்டுள்ளாரா என்றும், மாணவரது வருகைப்பதிவு ஆகியவற்றைக் குறித்து மூன்றாவது செயல்முறை படியை கல்வி நிலையத் தலைவர் மாவட்ட

ஆதிதிராவிடர் நல அலுவலகத்திற்கு அடுத்த கல்வி ஆண்டின் தொடக்கத்திலே அனுப்ப வேண்டும். இதன் மூலம் அடுத்த ஆண்டிற்கான புதுப்பித்தல் உதவித்தொகைக்கான செயல்முறைகள் கணினி மூலம் தயாரிக்கப்படும்.

(ஈ) கல்வி உதவித்தொகை செயல்முறைகளின் நான்காவது படி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலக்தில் ஆவணமாகக் கையாளப்பட வேண்டும். தன் வைப்புக் கணக்கிலிருந்து செலவிடப்படும் தொகையினை அந்தந்த தலைப்புக் கணக்கின் கீழ் பற்று செய்து தன் வைப்புத் தொகையினை அவ்வப்போது பட்டியல் தயார் செய்து கருவூலத்திற்கு அனுப்பப்படுவதற்கு ஐந்தாவது படி பயன்படுத்தப்படும். செயல்முறைகளில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஏற்பாணை (Pass Order) செய்தல் வேண்டும்.

(உ) செயல்முறைகளுக்கான தொகைக்குரிய காசோலை/ கேட்பு வரைவு தன் பெயர் வைப்புக் கணக்கில் இருந்து கல்வி நிலையத் தலைவருக்கு மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலரால் அனுப்பப்பட வேண்டும்.

(3) கல்வி உதவித் தொகை கணினி மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதன் செயலாக்கம் குறித்து அரசிற்கு அறிக்கை அனுப்பி வைக்க வேண்டும் என ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

(4) கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு பணியினை கணினி மூலம் செயற்படுத்துவதற்கு தேவைப்படும் எழுது பொருட்களுக்காகும் செலவினம் ஒரு ஆண்டிற்கு ரூ.58,000/- (ரூபாய் ஐம்பத்தெட்டு ஆயிரம் மட்டும்) (ஒரு ஆண்டிற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.2,000 வீதம் 29 மாவட்டங்களுக்கு) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வழங்குகிறது.

(5) பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -01. பட்டியல் சாதியினர் நலன் - 277. கல்வி - I. திட்டத்தில் சேராதது - AD பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடி மாணவர்களுக்கு மெட்ரிகுலேசனுக்கு மேற்பட்ட படிப்புக்கான படிப்புதவித் தொகைகளின் நிருவாகம்-05. அலுவலகச் செலவுகள் - 02. ஏனைய சில்லறைச் செலவுகள்" (தகவல் தொகுப்பு குறியீடு 2225 01 277 AD 0521) என்ற செலவுத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(6) தேவையான நிதி ஒதுக்கம் 1997-98ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்படும்.

(7) மேற்கண்ட செலவுத் தொகையை திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்திய மதிப்பீடு 97-98-ம் ஆண்டிற்கு கருத்துரு அனுப்பும் போது சேர்த்து அனுப்புமாறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(8) இவ்வாணை அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.279/து.செ. (ஆர்.பி)/97, நாள் 3-6-97-ல் வழங்கப்பட்டுள்ள நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5,
பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நல இயக்குநர்,
சென்னை-5.
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொழிற் கல்வி இயக்குநர், சென்னை-25.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-5.
சட்டக் கல்வி இயக்குநர், சென்னை-35.
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், சென்னை-5.
அனைத்து பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
அநமு பிரிவு,
இருப்புக் கோப்பு/ உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - உதவித் தொகை - 1997-98 ஆம் ஆண்டிற்கான உதவித்தொகை விண்ணப்பங்கள் ஒப்படைப்பு மற்றும் அனுப்புகை - தற்காலிக முன்பணம் - ஒப்பளிப்பு - ஆணைகள் - வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை

அரசாணை (வாலாயம்) எண்.130, நாள் 15-5-97

படிக்கப்பட்டவை

(1) அரசாணை (வாலாயம்) எண்.275, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 31-7-96

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண்.ஐ6/19746/97, நாள் 23-4-97.

ஆணை:

தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி (1)ன் பிரிவக்கூறு 99ன் கீழ் 1997-98ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை விண்ணப்பப் படிவங்களை அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையிலிருந்து சென்னையிலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு வாகனம் மூலம் ஏற்றிச் செல்லும் செலவினத்திற்காகவும் அதன் பின்னர் அவற்றை கல்வி நிறுவனங்களில் தலைவர்களுக்கு அனுப்புவது தொடர்பான செலவினங்களுக்காகவும் ரூ.2,000/-யை (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) தற்காலிக முன்பணமாகப் பெற அரசு ஒப்பளிப்பு செய்கிறது.

(2) மேலே பத்தி 1ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான விவரப்பட்டி மற்றும் செலவுச்சீட்டை பெற்று செலவினம் சரியான முறையில் சரிகட்டப்பட வேண்டும் என ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(3) இச்செலவினம் "2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -01. பட்டியல் சாதியினர் நலன். 277 கல்வி- I.திட்டத்தில் சேராதது - AI. பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடி மாணவர்களுக்கு மெட்ரிகுலேஷனுக்கு மேற்பட்ட படிப்புக்கான படிப்புதவித் தொகைகளின் நிர்வாகம் - 05.அலுவலகச் செலவுகள் - 02. ஏனைய சில்லறைச் செலவுகள்" (தகவல் தொகுப்பு குறியீடு 2225 01 277 AD 0521) என்ற செலவுத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(4) இவ்வாணை அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.238/ஆசெ. (ஆர்பி)/97 நாள் 13-5-97ல் வழங்கப்பட்டுள்ள நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**திரு. கோ. வரதன்,**
அரசு துணைச் செயலர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5
மாநிலக் கணக்காயர், சென்னை-18, சென்னை-35/ சென்னை-6.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
கிளைப் பணி மேலாளர், அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

நகல்:

நிதித்துறை, சென்னை-9/செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9.
அநமு பிரிவு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - கல்வி உதவித் தொகை - 1996-97- பெரியார், மதுரை மற்றும் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டங்கள் - தற்காலிக பணியாளர்கள் நியமனம் - குறிப்பிட்ட நாட்களுக்கு மேலும் நீடித்தல் - பின்னேற்பு வழங்குதல்.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை**

*அரசாணை (வாலாயம்) எண்.217,* *நாள் 24 ஜூலை 1997.*

**படிக்கப்பட்டது:-**

(1) *அரசாணை (நிலை) எண்.397, சமூக நலத்துறை, நாள் 27-6-69.*

**மீண்டும் படிக்கப்பட்டவை:**

(2) பெரியார் மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண்.71363/96, த5 நாள் 3-1-97

(3) மதுரை மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண்.94372/95, எல் 2, நாள் 26-11-96.

(4) தென்னாற்காடு வள்ளலார் மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண். டபிள்யூ 3/47009/96, நாள் 19-3-97.

(5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்குநரின் கடிதம் எண்.ஐ1/ 48190/96, நாள் 19-6-97.

- - - -

**ஆணை:**

மேலை பார்வை 2 முதல் 5 வரையுள்ள கடிதங்களில் பெரியார், மதுரை மற்றும் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டங்களின் ஆட்சியர்களால் விவரிக்கப்பட்டும் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டுமுள்ள நிலையில் கீழே குறிப்பிடப்படும் மூன்று மாவட்டங்களிலுமுள்ள தற்காலிகப் பணியாளர்களை பார்வை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்கிணங்க, அம் மாவட்டங்களிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மற்றும் கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு 1996-97ஆம் ஆண்டில் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு பணிகளைக் கவனிக்கும் பொருட்டு அம்மாவட்ட ஆட்சியர்கள் பணி நியமனம் செய்தமைக்கு ஒப்பளிப்பு அனுமதி கீழ் விவரித்தவாறு வழங்கப்படுகிறது.

| வ.எண். (1) | பணியின் பெயர் (2) | பதவிகளின் எண்ணிக்கை (3) | பதவி காலம் முதல்-வரை (4) | சம்பள ஏற்ற முறை (5) |
|---|---|---|---|---|
| *பெரியார் மாவட்டம்* | | | | |
| 1. | உதவியாளர் | 2 | 18-11-96<br>30-11-96. | ரூ.1200-30-1500-40-2040 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| **மதுரை மாவட்டம்** | | | | |
| 1. | சிறப்பு வட்டாட்சியர் | 1 | 1-12-96-<br>31-1-97 | ரூ. 2000-60-2300-75-3200/- |
| 2. | உதவியாளர் | 5 | 1-12-96-<br>31-1-97 | ரூ. 1200-30-1500-40-2040/- |
| 3. | தட்டச்சர் | 1 | 1-12-96-<br>31-1-97 | ரூ. 975-25-1150-30-1660/-<br>சிறப்பு ஊதியம் ரூ.40/- |
| **தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்** | | | | |
| 1 | சிறப்பு வட்டாட்சியர் | 1 | 26-12-96-<br>31-3-97 | ரூ. 2000-60-2300-75-3200 |
| 2 | உதவியாளர் | 1 | 1-1-97<br>31-3-97 | ரூ. 1200-30-1500-40-2040/- |
| 3 | உதவியாளர் | 1 | 8-1-97<br>31-3-97 | ரூ. 1200-30-1500-40-2040/- |
| 4 | தட்டச்சர் | 1 | 11-3-97-<br>31-3-97 | ரூ.975-25-1150-30-1660/-<br>சிறப்பு ஊதியம் ரூ.40 |

(2) பெரியார், மதுரை மற்றும் தென்னாற்காடு வள்ளலார் மாவட்ட ஆட்சியர்கள் அரசு ஆணையினை எதிர்நோக்கி சிறப்பு பணியாளர்களின் பணிக்காலத்தை பத்தி 1-ல் குறிப்பிட்டுள்ள காலங்களுக்கு நீட்டித்த செயலினை சிறப்பு நேர்வாகக் கருதி அரசு பின்னேற்பளிக்கிறது. இனிவரும் காலங்களில் இவ்வாறு அரசு முன் அனுமதி பெறாமல் செய்யப்படும் சிறப்புப் பணியாளர்கள் பணிக்கால நீட்டிப்பு ஒருபோதும் அரசினால் பின்னேற்பு செய்யப்படமாட்டாது என்பதோடு இதற்கு பொறுப்பானவர் மீது நடவடிக்கை தொடர வேண்டி வரும் என்பதும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெளிவு படுத்தப்படுகிறது.

(3) இவ்வாணை அ.சா.கு.எண். 54841/சந/97-1, நாள் 14-7-97-ல் வழங்கப்பட்டுள்ள நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**திரு. கோ. வரதன்,**
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
பெரியார்/மதுரை/தென்னாற்காடு வள்ளலார் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-18 (பெயரிடப்பட்ட உறையில்)
மாநிலக் கணக்காயர், சென்னை-6/சென்னை-35.
நகல்: மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
பெரியார்/மதுரை/தென்னாற்காடு வள்ளலார் மாவட்டங்கள்,
நிதித்துறை, சென்னை-9.
அநமு பிரிவு/இருப்புக்கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - ஆதிதிராவிட மாணவியரின் கல்வி மேம்பாடு - தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஆதி திராவிட மாணவிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை அளித்தல்-1997-98ஆம் ஆண்டிற்கு நிதி ஒப்பளிப்பு ஆணை- வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,

*அரசாணை (நிலை) எண்.112,* நாள் *27-5-97.*

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண். 135, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30-8-94.
2. அரசாணை (நிலை) எண்.41, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22-3-95
3. அரசாணை (நிலை) எண்.193, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 20-11-95
4. அரசாணை (நிலை) எண்.169, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 23-12-96.

- - - -

**ஆணை:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், 1997-98ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் 3 முதல் 5ஆம் வகுப்பு வரையில் பயிலும் ஆதிதிராவிட மாணவியரின் கல்வித் தரத்தை மேம்படுத்த தொடர்ந்து கல்வி பயல சிறப்பு ஊக்குவிப்புத் தொகை திட்டத்திற்காக ரூ. 3 கோடியும், 5ஆம் வகுப்பு முடித்து 6ஆம் வகுப்பு தொடர்ந்து பயிலும் ஆதிதிராவிடர் மாணவியரின் கல்வித்தரத்தை மேம்படுத்த சிறப்பு ஊக்குவிப்புத் தொகை திட்டத்திற்காக ரூ. 3 கோடியும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இத்திட்டங்களை 1997-98ல் செயல்படுத்துவதற்காக ரூ. 6 கோடிக்கு ஒப்பளிப்பு அளிக்குமாறு திட்ட நிதிக் குழுவிற்கு அனுப்பிய கருத்துருவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில் 1997-98ஆம் ஆண்டிற்கு தர்மபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், தென்னாற்காடு-வள்ளலார், காமராஜர், எம்.ஜி.ஆர்., அண்ணா, வடஆற்காடு-அம்பேத்கார், பெரம்பலூர் திருவள்ளுவர், திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் கரூர் தீரன்சின்னமலை, நாகப்பட்டினம் காயிதேமில்லத், சேலம் மற்றும் இராஜாஜி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிட மாணவியர் 2வது வகுப்பிற்குப் பின்னர் அவர்கள் கல்வியைத் தொடரவியலாத நிலையைப் போக்கி தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஆண்டுக்கு ரூ.500/-வீதம், 60,000 மாணவிகளுக்கு மூன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஒவ்வோர் ஆண்டு முடிவிலும் அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்க ரூ. 3 கோடிக்கும் (ரூபாய் மூன்று கோடி மட்டும்), மேலும் ஆதிதிராவிட மாணவியர் 5வது வகுப்பிற்குப் பின்னர் கல்வியை கைவிடும் நிலையைப் போக்கி அவர்கள் தொடர்ந்து ஆறாம் வகுப்பில் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும்பொருட்டு அக்கல்வியாண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100/-வீதம் பத்து மாதத்திற்கு மாநிலம் முழுவதும் 30,000 மாணவிகள் பயன்பெறும் வகையில் ஊக்குவிப்புத் தொகை வழங்க ரூ. 3 கோடிக்கும் (ரூபாய் மூன்று கோடி மட்டும்) ஆக மொத்தம் ரூ. 6.00 கோடிக்கு (ரூபாய் ஆறு கோடி மட்டும்) செலவு செய்வதற்கு அரசு ஒப்புதல் வழங்குகிறது.

3. மேலே பத்தி 2ல் குறிப்பிட்டுள்ள செலவினங்கள் கீழ்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225. பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் 01. பட்டியல் சாதியினர் நலன்.277 கல்வி- ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள். II. மாநிலத் திட்டம், JX. மூன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலுகின்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவியரிடையே படிப்பு நிலை வளர்சுச் சிறப்பு ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டம், 39 வெகுமதிகள். (த.தொ.கு.2225.01.277. JX.3903)

2225. பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் 01. பட்டியல் சாதியினர் நலன். 277 கல்வி ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II. மாநிலத் திட்டம். JY. ஆறாம் வகுப்புப் பயிலுகின்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவிரிடையே படிப்பறிவை வளர்க்க சிறப்பு ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டம்.-39. வெகுமதிகள். (த.தொ.கு.2225-01-277, JY. 3901)

4. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.260/து.செ.(ஆர்.பி.)/97, நாள் 26-5-97ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்,

இயக்குநர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை-18/ சென்னை-35/சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.

நகல்:

நிதித்துறை/திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.1/அந) துறை சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தமிழ்நாடு அரசு

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

கடித எண். 17322/ஆதிந.9(1)/97-2, நாள் 28-7-1997.

அனுப்புநர்

திருமதி சீ. ரங்கநாயகி, பி.ஏ.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.

ஐயா,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - கல்வி - ஆதி திராவிடர் மாணவியரின் கல்வி மேம்பாடு - தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஆதி திராவிடர் மாணவிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் - 1997-98 ஆம் ஆண்டிற்கு நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டது - திருத்தம் வெளியிடப்படுகின்றது.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண். 112, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 27-5-1997.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண். க4/27209/97, நாள் 6-6-1997.

- - - -

அரசாணை (நிலை) எண். 112, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 27-5-1997க்கு கீழ்க்கண்டவாறு அரசு திருத்தம் வெளியிடுகின்றது :—

**திருத்தம்**

(i) அரசாணையில் பத்தி 3-க்குப் பிறகு கீழ்க்கண்டவை பத்தி 4 மற்றும் பத்தி 5 ஆக சேர்க்கப்படுகின்றன:-

"4 மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும் அதனை தாட்கோவின் "அலுவல் பெயர் வைப்புத் தொகை கணக்கில்" செலுத்தவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இத்தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் சரிக்கட்டல் என்ற வகையில் வரவு வைக்கப்பட வேண்டும்:—

"K. Deposits and advances (b) Deposits not bearing interest 8443.00 Civil Deposits 800. Other Deposits. 50. Deposits of TAHDCO.
(D.P.Code. 8443.00 800. AE 500 A) (Receipts)
(D.P.Code.8443.00 800.AE 50000) (Out go)

5. இவ்விரு திட்டங்களும் ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்பட வேண்டும். அதற்காக அனுமதிக்கப்படும் தொகையினை ரூ. 6.00 கோடி தாட்கோ மேலாண்மை இயக்குநரின் அலுவல் பெயர் வைப்புத் தொகைக் கணக்கில் வைக்கப்பெற்று பணியின் தேவைக்கேற்ப எடுக்கப்பட வேண்டும்".

(ii) அரசாணையில் பத்தி 4 தற்போது பத்தி 6 ஆக மாற்றி படிக்கப்பட வேண்டும்.

2. இக்கடிதம் நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண். 54826/நிதி/97-1, நாள் 14-7-1997-ல் பெற்று வெளியிடப்படுகின்றது.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்)

அரசு துணைச் செயலருக்காக.

நகல்:

நிதி/திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (ஆதிந.1/அநபி) துறை, சென்னை-9.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - ஆதி திராவிட மாணவியரின் கல்வி மேம்பாடு - தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஆதிதிராவிட மாணவிகளுக்கு ஊக்குவிப்பு வழங்கும் திட்டங்களை பழங்குடியினர் மாணவியர்களுக்கும் நீட்டிக்க ஆணை - வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,

அரசாணை (நிலை) எண்.164, நாள் 29-9-97.

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.135, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30-8-94.
2. அரசாணை (நிலை) எண்.41, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22-3-95.
3. அரசு கடித எண். 2354/ஆதிந.7/95-5, நாள் 11-9-95
4. அரசாணை (நிலை) எண். 193, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 20-11-95.
5. அரசாணை (நிலை) எண். 169, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 23-12-96.
6. அரசாணை (நிலை) எண்.112, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 27-5-97.
7. அரசு கடிதம் எண்.17322/ஆதிந.9 (1)/97-2, நாள் 28-7-97.

மீண்டும் படிக்கப்பட்டது:-

8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எ4/30429/95, நாள் 7-7-95 மற்றும் 5-3-97.
9. மேலாண்மை இயக்குநர், தாட்கோ, கடித எண். ஜி4/1230/94, நாள் 11-7-97.

- - - -

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆதி திராவிட மாணவியர் 2வது வகுப்புக்குப் பின்னர் அவர்கள் கல்வியைத் தொடரவியலாத நிலையினைப் போக்கி அவர்கள் தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டுக்கு ரூ.500/- வீதம் அவர்கள் 3 முதல் 5ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி பயிலும் ஒவ்வோர் ஆண்டு முடிவிலும் அவர்களுககு ஊக்குவிப்புத் தொகை வழங்க ஆணையிடப்பட்டது. தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களின் இத்திட்டம் முதலில் செயல்படுத்தப்பட்டது. மேலும் ஆதிதிராவிட மாணவியர் 5வது வகுப்புக்குப் பின்னர் கல்வியைக் கைவிடும் நிலையினைப் போக்கி அவர்கள் தொடர்ந்து 6ஆம் வகுப்பில் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, அக்கல்வியாண்டில், மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் மாநிலம் முழுவதும் 30,000 மாணவிகள் பயன்பெறும் வகையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 3 முதல் 5ஆம் வகுப்புவரை கல்வி பயிலும் ஆதி திராவிடர் மாணவியர்களை ஊக்குவிக்கும் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு (திருவள்ளூர், வேலூர், திருச்சி நாகப்பட்டினம் மற்றும்

சேலம்) விரிவுபடுத்தப்பட்டது. மேற்கண்ட அரசாணைகள் 1994-95ல் வெளியிடப்பட்டதால், சம்பளம் மற்றும் கருவூல கணக்கு அலுவலகம் கேட்டுக் கொண்டபடி, 1995-96ஆம் ஆண்டில் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட அரசாணைகள் மறு ஒப்பளிப்பு செய்யப்பட்டு இருவகை திட்டங்களும் தாட்கோ மேலாண்மை இயக்குநரால் செயல்படுத்தப்பட்டன. மேலே ஐந்தாவது மற்றும் ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் 1996-97 மற்றும் 1997-98ஆம் ஆண்டுகளில் இத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளன.

2. 3வது வகுப்பு முதல் 5வது வகுப்புவரையில் ஊக்குவிப்பு வழங்கும் திட்டத்தை 3,000 பழங்குடி மாணவிகளுக்கு செயல்படுத்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார். மேற்கண்ட திட்டங்கள் 1995-96ல் செயல்படுத்தப்பட்டதில் 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்புவரை படிக்கும் ஆதி திராவிட பெண்களுக்கு ரூ.103.72 இலட்சமும், 5ஆம் வகுப்பிலிருந்து 6ஆம் வகுப்பு போகும் ஆதி திராவிட பெண்களுக்கு ரூ.56.75 இலட்சமும் செலவிடாமல் நிலுவையில் உள்ளது எனவும், ஆகையால் மேற்கண்ட திட்டத்திற்கான நிலுவையில் உள்ள தொகை (103.72 + 56.75) ரூ.160.47 இலட்சத்தை 1997-98 ஆம் நிதி ஆண்டில் செலவு செய்து கொள்ள அரசின் அனுமதியை மேலாண்மை இயக்குநர், தாட்கோ வேண்டியுள்ளார்.

3. அரசு இது குறித்து நன்கு ஆய்வு செய்து, அதன்படி 2ஆம் வகுப்பு முடிவில் படிப்பை நிறுத்திவிடும் நிலையைப் போக்கி 3வது முதல் 5வது வகுப்புவரையில் பயில்பவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் ஆண்டொன்றுக்கு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் மற்றும் 5ஆம் வகுப்பிற்குப் பின்னர் கல்வியைக் கைவிடும் போக்கை நீக்க தொடர்ந்து 6ஆம் வகுப்பில் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு அக்கல்வி ஆண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) வீதம் 10 மாதங்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் ஆகிய இரண்டு திட்டங்களையும், கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யாமலேயே, சென்ற ஆண்டுகளில் வழங்கப்பட்டு செலவழிக்காமல் உள்ள தொகைகளில், 1997-98ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் பயிலும் அனைத்து பழங்குடி மாணவிகளுக்கும் நீடிக்க அரசு ஆணையிடுகின்றது.

4. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறியில், மாணவியரின் இருப்பிடத்திலிருந்து தூரம், ஆண்டு வருமானம் மற்றும் வீட்டின் தரம் ஆகியவற்றை நீக்கவும் அரசு ஆணையிடுகின்றது.

5. மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்ட இரண்டு திட்டங்களையும் செயல்படுத்த ஏற்கெனவே 1995-96ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டு செலவிடப்படாமல் உள்ள தொகையான ரூ.103.72 இலட்சம் + ரூ.56.75 இலட்சம் = ரூ.160.47 இலட்சங்கள், மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட ரூ.600/- இலட்சங்கள் மற்றும் மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட தொகையாக ரூ.600/- இலட்சங்கள் ஆகிய தாட்கோவிடம் உள்ள தொகையிலிருந்து செலவழிக்க மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்கு அரசு அதிகாரம் வழங்குகின்றது.

6. தகுதியுள்ள பழங்குடி மாணவிகளைக் கண்டறிந்து, மாவட்ட வாரியான பட்டியலை, உரிய தொகைக்கு அனுமதியளிப்பதற்காக மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்கு அனுப்புமாறு துவக்ககல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.408/து.செ.(ஆர்.பி)/97, நாள் 25-9-97ல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலாளர்.

பெறுநர்,

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
இயக்குநர், துவக்கக்கல்வி, சென்னை-6.
அனைத்து இயக்குநர்கள், கல்வித்துறை, சென்னை.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5.
மாநில கணக்காய்வுத்தலைவர், சென்னை-18/சென்னை-35/
சென்னை-6.

நகல்:

நிதித்துறை, சென்னை-9

செயலர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள்.

சிறப்பு அதிகாரி, ஐ.டி.டி.பி (ITDP)

அனைத்து பழங்குடி இன பஞ்சாயத்து ஒன்றியத்தலைவர்கள்.

அனைத்து லேம்ப் (LAMP) சங்கத் தலைவர்கள்.

வனத்துறைத் தலைவர், சென்னை-6.

வனத்துறை கன்சர்வேடர், வேலூர்.

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

ஆதி திராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை-9.

செயலர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
(அநமு/ஆதிந.I/MEC) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு முன்தேர்வுப்பயிற்சிகள் - அசோசியேட் வங்கிகளுக்கான ஸ்டேட் வங்கிக்குழு/வங்கிப்பணியாளர் தேர்வு வாரியம்/மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் ஆகியவை 1997 ஆம் ஆண்டுக்கு நடத்தும் பல்வேறு போட்டி தேர்வுகளுக்கு செல்லும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு முன்தேர்வுப்பயிற்சிகள் நடத்துதல் - 'தாட்கோ' வசமுள்ள சிறப்பு மத்திய நிதி உதவி வழங்கி ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது - அரசாணை வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

அரசாணை (டி) எண். 52, நாள்:4-3-1997.

படிக்கப்பட்டது:

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடிதம் எண். தொ.ஆ/61476/96, 12-11-1996, 27-11-1996, 31-12-1996, 5-2-1997 மற்றும் 13-2-1997.

- - -

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடிதங்களில் அனுப்பப்பட்ட செயற்குறிப்புகள் மற்றும் ஆணையுரிமை வழங்கப்பெற்ற குழுவின் (Empowered Committee) முடிவினை அடிப்படையாகக்கொண்டு கீழ்வரும் பல்வேறு முன்தேர்வுப்பயிற்சித் திட்டங்களுக்காகத் தேவைப்படும் ரூ.35,50,850/-யினை (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) 'நாட்கோ' வசமுள்ள சிறப்பு மத்திய நிதியிலிருந்து வழங்க அரசு ஒப்புதல் அளிக்கிறது.

| வ. எண். | பயிற்சித்திட்டத்தின் பெயர். | பயிற்சி மையங்களின் எண்ணிக்கை. | மனுதாரர்களின் எண்ணிக்கை. | பயிற்சியின் கால அளவு | ...ப்படும் செலவுத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | | ரூபாய் |
| 1. | அசோசியேட் வங்கிகளுக்கான ஸ்டேட் வங்கிக்குழு அலுவலர் தேர்வு 1997. | 10 | 500 | 40 நாட்கள் 21-11-1996 முதல் 31-12-1996 வரை. | 5,37,250/- |
| 2. | (1) வங்கிப்பணியாளர் தேர்வு வாரியம் 2) ரிசர்வ் வங்கி நடத்தும் பிரோபசனரி அலுவலர் தேர்வு 1997. | 10 | 500 | 10 நாட்கள் | 2,72,300/- |
| 3. | மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் கலால்/வருமானவரி ஆய்வாளர் தேர்வு 1997. | 10 | 500 | 10 நாட்கள் | 5,37,250/- |
| | ...ப்பணியாளர் தேர்வு ... நடத்தும் ...ழுத்து தேர்வு 1997 | 28 | 2000 1000 3000 | 30+10 நாட்கள் | 21,62,050/- |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 5. | மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் எழுத்தர் தேர்வில் வெற்றி பெற்று தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத்தேர்வு செல்வதற்கு தகுதிபடைத்த மனுதாரர்களுக்கு தட்டச்சு சுருக்கெழுத்துப்பயிற்சி. | - | 120 | 20 நாட்கள் | 42,000/- |
| | | | மொத்தம் | .. | ரூ.35,50,850/- |

(2) மேலே பத்தி 1-இல் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையகத்தின் உதவி இயக்குநர் (சிறப்புப்பிரிவு)-க்கு முன்பணமாக உடனே வழங்குமாறு மேலாண்மை இயக்குநர், 'தாட்கோ' கேட்டுக்கொள்ளப்படுகிறார். அத்தொகையினை முன்பணமாகப்பெற்று வழங்குவதற்கு உதவி இயக்குநர் (சிறப்புப்பிரிவு)-க்கு ஆணையுரிமை வழங்கப்படுகிறது.

(3) மேற்கூறிய பயிற்சிகள் முடிவுற்ற பின்னர் பயனீட்டு சான்றிதழினை மேலாண்மை இயக்குநர் 'தாட்கோ'விற்கு உடனே அனுப்பி வைக்கும்படியும், இப்பயிற்சி நடத்தப்பட்டதற்கான செலவின விவரங்களையும் மற்றும் வழங்கப்பட்ட பயிற்சிகளின் விவரங்களையும் அரசுக்கு அனுப்பி வைக்கும்படியும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(4) ஏதேனுமொரு பயிற்சி மையத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாகவோ, அல்லது குறைவாகவோ பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் விருப்பம் தெரிவித்தால் குறிப்பிடப்பட்டுள்ள மையங்களில் பயிற்சி கொடுத்திட ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கைக்கும் மிகாமல் தேவையான மாற்றங்களை செய்துகொள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

(5) மேலே பத்தி 1-இல் குறிப்பிடப்பட்டுள்ள "அசோசியேட் வங்கிகளுக்கான ஸ்டேட் வங்கிக்குழு அலுவலர் தேர்வு 1997" க்கு மட்டும் அரசாணையை எதிர்நோக்கி டிசம்பர் 1996-இல் பயிற்சி துவக்கி நடத்தி முடித்த வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் செயலுக்கு அரசு பின்னேற்பு ஆணை அரசு அளிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலர்.

**பெறுநர்:**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், 'தாட்கோ', திருமங்கலம், சென்னை-600 101.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.

**நகல் பெறுநர் :**

அரசு செயலர், நிதித்துறை, சென்னை-5.
செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)-ன் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (கம்பா), சென்னை-9.
அநமு பிரிவு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
இ.கோ./உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகள் - விண்ணப்பப் படிவம் மற்றும் பதிவுக் கட்டணங்கள் - வயது வரம்பு - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு விலக்களித்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-3) துறை**

*அரசு ஆணை (நிலை) எண் 69* — *நாள்: 17-4-1997*

**ஆணை:**

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, சட்டம் போன்ற தொழிற் கல்வியில் சேர்வதற்காக நுழைவுத் தேர்வுகளை தமிழ்நாடு அரசு ஆண்டாண்டு நடத்துகிறது.

*(2)* இந்த நுழைவுத் தேர்வு விண்ணப்பத்திற்காகவும் பதிவு செய்வதற்காகவும் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன.

*(3) 1998-99* ஆம் ஆண்டு தொடங்கி இந்த விண்ணப்பம் மற்றும் பதிவுக் கட்டணங்களை ஆதிதிராவிட, பழங்குடியின விண்ணப்பதாரர்கள் செலுத்த வேண்டுவதில்லை என அரசு ஆணையிடுகிறது. விண்ணப்பப் படிவத்தில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் எனக்குறிப்பிட்டுள்ள கட்டத்தில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்கள் குறிப்பு செய்வதே போதுமானது. விண்ணப்பத்தோடு தன் இனச்சான்று இணைக்கப்பட வேண்டுவதில்லை.

*(4)* இந்த நுழைவுத்தேர்வுகள் எழுதுவதற்குப் பட்டியல் இனத்தவர்க்கும் பழங்குடியினர்க்கும் உச்ச வயது வரம்பு எதுவும் விதிக்கப்பட வேண்டுவதில்லை. எனவும், தேர்வு எழுதுவதற்கான முயற்சிகளின் உயர் எண்ணிக்கை மட்டும் அனைத்து கல்விகளுக்கும் ஒருமுகமாக மூன்று என விதிக்கப்படலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

*(5)* இவ்வாணைத் தவறாது கடைபிடிக்கவும், விண்ணப்பப் படிவங்களிலும் தகவல் தொகுப்பேட்டிலும் தெளிவாகக் குறிப்பிடவும் நுழைவுத் தேர்வு செயலர்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலர்.*

பெறுநர்

பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை-*25*.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-*5*.
செயலர், உயர்கல்வித் துறை, சென்னை-*9*.
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-*25*.
மருத்துவக் கல்லூரி இயக்குநர், சென்னை-*5*.
சட்டக் கல்வி இயக்குநர், சென்னை-*35*.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
நிதித்துறை, சென்னை-*9*.
செயலரின் நேர்முக உதவியாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-*9*.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-*9*.
அநமு பிரிவு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-*9*.
இ.கோ./உதிரிகள்.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது.

*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - ஆதிதிராவிடர்களுக்கு "பிளாஸ்ட்டிக் பிராசசிங் டெக்னாலஜி"யில் சிறப்பு சான்றிதழ் வகுப்பு பயிற்சி - சென்னை கிண்டியிலுள்ள மத்திய பிளாஸ்ட்டிக் பொறியியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம் (சிப்பெட்) மூலம் பயிற்சியளித்தல்- `தாட்கோ' வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து நிதிவழங்கி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (ஆதிந-3)

அரசு ஆணை(2டி) எண்.20 நாள்: 17-4-1997

படிக்கப்பட்டது.

சென்னை, 'சிப்பெட்' முதுநிலை மேலாளர் கடிதம் எண். எஸ்.எம்.டி.பி/டி..ஆர்.ஜி - எல்.டி.சி/எஸ்.ஸி/எஸ்.டி/96-97, நாள் 5-2-1997.

- - - -

ஆணை:

சென்னையிலுள்ள 'சிப்பெட்' நிறுவன (மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம்) முதுநிலை மேலாளர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அனுப்பியுள்ள கருத்துருவினை அடிப்படையாகக் கொண்டு பி.எஸ்சி. படித்த 60 ஆதிதிராவிட பட்டதாரிகளுக்கு "பிளாஸ்ட்டிக் பிராஸஸிங் டெக்னாலஜி"யில் ஆறுமாத காலத்திற்கு சிறப்புச் சான்றிதழ் வகுப்புப்பயிற்சி (Special Certificate Course) அளிக்க உரிமைக்குழுவின் (Empowered Committee) ஒப்புதல் பெற்று அரசு ஆணை வழங்குகிறது.

2. இப்பயிற்சி இருதொகுதிகளில் தொகுதிக்கு 30 பேர் வீதம் நடத்தப்படும் இந்தப் பயிற்சிக்கு மாணவர் ஒருவர்க்கு ரூ.20,000/-பயிற்சிக்கட்டணமாக சிப்பெட்டுக்கு வழங்கப்படும். இத்தொகையில் 1/4 பங்கை (அதாவது ரூ.5,000/- மட்டும்) அந்தந்த மாணவரும், 3/4 பங்கை (அதாவது ரூ.15,000/-மட்டும்) அரசும் 'சிப்பெட்' நிறுவனத்திற்கு அளிக்கும். இதற்கான செலவினமாக ரூ.9,00,000/-(ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்) மத்திய சிறப்பு நிதியிலிருந்து 'சிப்பெட்'டிற்கு வழங்க உரிமைக்குழுவின் ஒப்புதல் பெற்று அரசு ஆணை வழங்குகிறது. "தாட்கோ"வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து 'சிப்பெட்'டிற்கு இந்நிதியை வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

3. பயிற்சியாளர்களில் 30 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யுமாறு 'சிப்பெட்' நிறுவன மேலாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 1-இல் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையினை 'சிப்பெட்' நிறுவனத்திற்கு 50 சதவீதம் பயிற்சித் துவக்கத்தின் போதும் மீதி 50 சதவீதம் பயிற்சி முடிந்த பிறகும் வழங்குமாறு தாட்கோவின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேற்கூறிய பயிற்சிகள் முடிவுற்றபின்னர் பயனீட்டு சான்றிதழினை (Utilisation Certificate) 'சிப்பெட்' நிறுவனம் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், 'தாட்கோ'விற்கு அனுப்ப வேண்டும்.

5. மேலும், மேலே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள பயிற்சித்திட்டத்தை தாட்கோ, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரும் 'சிப்பெட்' நிறுவனமும் ஒருங்கிணைந்து செயற்படுத்தவேண்டும். இப்பயிற்சி

நடத்தப்பட்டதற்கான செலவின விவரங்களையும் மற்றும் வழங்கப்பட்ட பயிற்சிகளின் விவரங்களையும் சிப்பெட் நிறுவனம் "தாட்கோ" அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

**பெறுநர்:**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
'தாட்கோ' திருமங்கலம், சென்னை-101.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நல இயக்குநர், சென்னை-5.
முதுநிலை மேலாளர் (பயிற்சி),
'சிப்பெட் நிறுவனம்'
**(Central Institute of Plastic Engineering & Technology).**
கிண்டி, சென்னை-600 032.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, அநமு பிரிவு, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, க.ம.பாசறை பிரிவு, சென்னை-9.
இ.கோ./உதிரிகள்.

/ஆணைப்படி/அனுப்படுகின்றது/

பிரிவு அலுவலர்.

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் /மாணவியர்க்கு பட்டயக் கணக்காயர் பயிற்சி - தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துதல் - ஆணைகள் - வெளியிடப்படுகிறது.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதி.ந.3) துறை

அரசாணை (நிலை) எண். 71. நாள் 23-1-1997

படிக்கப்பட்டது:

1) அரசு ஆணை (நிலை) எண். 319, சமூக நலத்துறை, நாள் 3-1-1972

2) அரசு ஆணை (நிலை) எண். 273, சமூக நலத்துறை, நாள் 4-4-1975

3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் கடிதம் ந.க.எண். ஓ1/63921/93-1, நாள் 21-1-1971

**ஆணை:**

மேலே முதலாவது மற்றும் இரண்டாவது படிக்கப்பட்ட அரசாணைகளில் சென்னை மாவட்டத்திலுள்ள பட்டயக் கணக்காயரிடம் பட்டயக் கணக்காயர் பயிற்சி பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவ, மாணவியர்க்கு பயிற்சி அளிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2) அவ்வாறே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பட்டயக் கணக்காயரிடம் பட்டயக் கணக்காயர் பயிற்சி (Chartered Accountants Training) பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவ, மாணவியர்க்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றி அரசு ஆய்வு செய்து, விரிவு படுத்தலாம் என முடிவு செய்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பட்டயக் கணக்காயரிடம் பட்டயக் கணக்காயர் பயிற்சி (Chartered Accountants Training) பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் பயன்பெறும் பொருட்டும், அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் இத்திட்டத்தைத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தி அரசு ஆணையிடுகிறது.

3) இத்திட்டத்தைத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம் ஆகும் செலவினம் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிற்குள் இருக்க வேண்டும்.

4) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 122/நிதி(சந)/97, நாள் 21-1-1997-ல் அளிக்கப்பட்ட இசைவுப்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-35.
மாநிலக் கணக்காயர், சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை,
சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
'அநமு' பிரிவு ஆதி மற்றும் பழங்குடியினர் நலத்துறை
சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்—1997-ம் ஆண்டு தொழிற்கல்வி நுழைவுத்தேர்வுக்கு செல்லும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவச பயிற்சி—மத்திய அரசின் ஆதாவுப் பெற்ற "பயிற்சி மற்றும் அதைச் சார்ந்த திட்டங்களின்" கீழ் செலவினம் ஒப்பளிக்கப்பட்டது - அரசாணை மீண்டும் செல்லுபடியாக்கப்படுவது—ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதி.ந.3) துறை**

அரசாணை (2டி) எண். 22 நாள் 21-1-1997

படிக்கப்பட்டது:

1) அரசாணை (2டி) எண். 11, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 11-3-1997.

2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கடிதம் எண். எம்.1/8068/97 நாள் 17-1-1997.

---

**ஆணை:**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் 1997-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத்தேர்வுக்குச் செல்லும் 1050 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகளை மாநிலத்தின் 23 மாவட்டங்களில் 21 நாட்களுக்கு பயிற்சி மற்றும் அதைச்சார்ந்த பயிற்சித் திட்டங்களின் கீழ் மத்திய மாநில சமபங்கு விகிதாச்சார அடிப்படையில் செலவினை ஏற்று நடத்துவதற்காக ரூ.5,80,025/- செலவினம் அரசு ஒப்புதல் அளித்தது.

2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மேலே இரண்டாவது படிக்கப்பட்ட கடிதத்தில் ரூ.5,80,025/-க்கு பட்டியல் தயாரித்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5-க்கு 24-3-1997 அன்று அனுப்பப்பட்டது என்றும் 1996-97 ஆம் ஆண்டு இறுதி மாற்றம் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் (FMA) நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) அந்த பட்டியலை தணிக்கை செய்து திருப்பி அனுப்பியுள்ளார் என்றும் கூறியுள்ளார். இப்பயிற்சி 1-1-1997-இல் தொடங்கப்பட்டுவிட்டபடியால் மேற்கூறப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பில் குறிப்பிட்டுள்ள எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு பதிலாக ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம் என்று குறிப்பிட்டு அவ்வரசாணையினை மீண்டும் செல்லுபடியாக்க வேண்டும் என்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கோரியுள்ளார்.

3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கூறியுள்ள சூழ்நிலையில் பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளை மீண்டும் செல்லுபடியாக்கி அரசு ஆணையிடுகிறது.

4) 1997-98 திருத்திய மதிப்பீட்டில்/இறுதித் திருத்திய ஒதுக்கீட்டில் தேவையான கூடுதல் நிதி ஒதுக்கப் செய்யப்படும். எனவே சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5 இதற்கான செலவினப்பட்டியல் சமர்ப்பிக்கப்படும்போது அப்பட்டியலை அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) ஆதிதிராவிடர் நல இயக்குநர் 1997-98 திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்திய ஒதுக்கீட்டிற்கு நிதி ஒதுக்கம் கோரும்போது மேற்கண்ட செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்

6) இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:—

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01 ஆதிதிராவிடர் நலன்-800, ஏனைய செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - VI மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் - UM தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகள் எழுதும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்குப் பயிற்சி".
(த.தொ.கு.எண் 2225.01.800 UM 0001)

05. அலுவலகச் செலவுகள் 02. ஏனைய சில்லறைச் செலவுகள்
(த.தொ.கு.எண் 2225 01 800 UM 0522)

33. தொழிற்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல்
(த.தொ.கு.எண் 2225 01 800 UM 3305)

71. அச்சிடும் செலவுகள்
(த.தொ.கு.எண் 2225 01 800 UM 7105)

7) இவ்வரசாணை அ.சா. குறிப்பு எண் 157/DS/RP/97, நாள் 23-1-1997-ல் அளிக்கப்பட்ட நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.கோ. வரதன்,
அரசு துணைச் செயலாளர்.

**பெறுநர்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/சென்னை-18 (பெயரில்)/
சென்னை-6/சென்னை-35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5.

**நகல்:**

1) திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9
2) நிதித்துறை, சென்னை-9
3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
4) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
5) மூல அரசாணை (2டி) எண் 11, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 11-3-1997.
6) அநமு பிரிவு.
7) இருப்புக்கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பபடுகிறது/

(உண்மை நகல்)

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தொடர் திட்டம் - தமிழ்நாடு தொழிற் கல்வி நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி - 1997-98-க்கான செலவு - ஏற்பளிப்பு வழங்க இயக்குநருக்கு ஆணையுரிமை வழங்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதி ந.) துறை.

அரசாணை (2ப) எண். 27. நாள் 14-5-1997

**பார்வை:**

அரசு ஆணை (2டி) எண்.11, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. நாள் 14-3-1997

**ஆணை:**

ஒவ்வொரு ஆண்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்விற்கு மத்திய அரசு ஆதரவிலான "பயிற்சி மற்றும் அது சார்ந்த திட்டங்களின்" கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அரசு ஆணை வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை பயிற்சி அளித்து வருகிறது.

(2) திட்ட நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் 1997-98-ம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு 1998-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத்தேர்வுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிக்கான கருத்துருவை அரசுக்கு அனுப்பி அதற்கான செலவினத்திற்காக அனுமதி பெறத் தேவையில்லை எனவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரே இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஏற்பளித்து வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் மூலம் இத்திட்டத்தினைச் செயல்படுத்தலாம் எனவும் ஆணையுரிமை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(3) பயிற்சி முடித்தபின் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை, பயிற்சி நடந்த இடங்கள், இதற்குண்டான செலவுகள், மத்திய அரசிடம் இருந்து பெறப்பட வேண்டிய தொகை போன்ற விபரமாக அறிக்கையினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அரசுக்கு அனுப்ப வேண்டும். மேலும், மைய அரசிடமிருந்து பெற வேண்டிய தொகையை விரைவில் பெற இயக்குநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(4) திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அலுவல் சார்பற்ற எண்.5157/ சி.எஸ்.II/97-1, நாள் 5-5-1997 மற்றும் நிதித்துறை அசா.எண்.239/து.செ (ஆர்.ப) /97-1, நாள் 5-5-1997 மற்றும் நிதித்துறை அசா.எண்.239/து.செ (ஆர்.ப)/97, நாள் 13-5-1997-ல் அளிக்கப்பட்ட இசைவுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலாளர்

பெறுநர் :

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநில தலைமைக் கணக்கு அலுவலர், சென்னை-18/சென்னை-35/
சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-5.
திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந.1)துறை,
சென்னை-9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

தமிழ்நாடு அரசு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

கடிதம் (நிலை) எண் 138. நாள் 1-8-1997

**அனுப்புநர்:**

திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
ஆதி திராவிடர் மற்று பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

**பெறுநர்:**

டாக்டர் சி. பழனிவேலு, எம்.எஸ்ஸி., பி.டி., பி.எச்டி.,
இயக்குநர்,
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை-6.

ஐயா,

பொருள்: ஆதி திராவிடர் மற்று பழங்குடியினர் நலம்—கல்வி மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள்—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவிகளுக்கு மட்டும் கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு பிரிவு தொடங்குவது குறித்து.

பார்வை: 1. பள்ளிக்கல்வித்துறையின் கடித எண் 26930/யு1/96-7, நாள் 14-5-1997.

2. தங்கள் கடித எண் 195/பி2/92, நாள் 28-7-1997.

---

இணைப்பில் கண்டுள்ள 17 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் ஒவ்வொரு நிறுவனத்திலும் கூடுதலாக ஐம்பது (50) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவை/மாணவிகளை இந்தக் கல்வி ஆண்டு (1997-98) தொடங்கி சேர்ப்பதற்காக அரசு ஆணைகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன. இது குறித்துப் பார்வை 1ல் கண்ட கடிதத்தில் பள்ளிக்கல்விச் செயலர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநருக்கு ஏற்கனவே எழுதியுள்ளார்.

2. அந்தந்த மாவட்டக்கல்வி பயிற்சி நிறுவனங்களில், அந்தந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கப்படலாம் என்ற விதி கடைபிடிக்கப்படலாம். வேண்டிய அளவு விண்ணப்பங்கள் இல்லையென்றபோதிலும் பிற மாவட்ட விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ளலாம். மொத்தம் உள்ள 850 (17X50) இடங்களில் 10 சதவீத இடங்களை அதாவது 85 இடங்களைப் பழங்குடியினருக்கென ஒதுக்கலாம். பழங்குடியினர் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, அந்தந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் எவ்வளவு இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரே முடிவு செய்துகொள்ளலாம். நாமக்கல், கோத்தகிரி, இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் பழங்குடியினர்க்குக் கூடுதல் விண்ணப்பங்கள் வர வாய்ப்புண்டு.

3. இந்த 17 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் சேர்க்கைகள் முடிக்கப்பட்ட விவரங்களை 15 நாட்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலருக்கும், பள்ளிக்கல்வித்துறைச் செயலருக்கும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் தெரிவிக்கலாம்.

**தங்கள் உண்மையுள்ள,**

அரசு செயலருக்காக.

நகல்:

அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
அனைத்து முதல்வர்கள், மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள்.
இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6.
இயக்குநர், அரசுத் தேர்வுத்துறை, சென்னை-6.
செயலர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

**[அரசு கடிதம் (நிலை) எண் 138, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 1-8-1997]**

**இணைப்பு**

1. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் திரூர், திருவள்ளூர் மாவட்டம்
2. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் நாமக்கல், நாமக்கல் மாவட்டம்
3. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் ட்டி, கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்
4. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் திருமூர்த்திநகர், கோயம்புத்தூர் மாவட்டம்
5. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் மாயனூர், கரூர் மாவட்டம்
6. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்
7. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.
8. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் கோத்தகிரி, உதகமண்டலம் மாவட்டம்
9. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்
10. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் சென்னை, சென்னை மாவட்டம்
11. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் பெருந்துறை, ஈரோடு மாவட்டம்
12. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் காளையார்கோவில், சிவகெங்கை மாவட்டம்
13. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்
14. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
15. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் வானரமுட்டி, விருதுநகர் மாவட்டம்.
16. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் மஞ்சூர், ராமநாதபுரம் மாவட்டம்.
17. மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனம் கீழ்பெண்ணாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்.

---

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்.

(உண்மை நகல்)

பிரிவு அலுவலர்

தமிழ்நாடு அரசு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

கடித எண்.22607/ஆதிந.9(1)/97. நாள்:21-8-1997.

**அனுப்புநர்:**

திருமதி சீ. ரங்கநாயகி, பி.ஏ.,
அரசு துணைச்செயலாளர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

**பெறுநர்:**

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-5 (இ) அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.(இ)
அனைத்து முதல்வர்கள்.
மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள்.(இ)
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6(இ)
இயக்குநர், அரசு தேர்வுத்துறை, சென்னை-6(இ)

ஐயா,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி-மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள் - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு மட்டும் கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு பிரிவு தொடங்குவது குறித்து.

பார்வை: 1. அரசு கடிதம் (நிலை) எண்.138, ஆதி மற்றும் பந துறை, நாள் 1-8-1997.

2. இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை, கடிதம் எண்.195/பி2/97, நாள் 6-8-1997.

3. அரசு கடித எண்.28669/யு1/97-1, பள்ளிக் கல்வித்துறை நாள் 12-8-1997

---

பார்வை 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின் நகல் தகவலுக்காகவும் தகுந்த நடவடிக்கைக்காகவும் இணைத்தனுப்பப்படுகின்றது.

தங்கள் உண்மையுள்ள,

**முஹம்மத்கனிலுல்லா,**

அரசு துணைச்செயலருக்காக.

தமிழ்நாடு அரசு

பள்ளிக்கல்வித்துறை

கடித எண்.28669/யு1/97-1. நாள் 12-8-1997.

அனுப்புநர்:

திரு.எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.,
அரசுச்செயலாளர்.

பெறுநர்

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை-6.

அய்யா,

பொருள்: மாணவர் சேர்க்கை - 17 டயட் நிறுவனங்களில் SC/ST மாணவர் சேர்க்கை மற்றும் செலவினம் குறித்து.

பார்வை: 1. அரசுக்கடித (நிலை) எண்.138, ஆதி திராவிடர், மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 1-8-1997.

2. தங்களது கடித எண்.195/பி2/97, நாள் 6-8-1997

பார்வையில் காணும் கடிதத்தில் கோரியவாறு SC/ST மாணவர்/மாணவியர் சேர்க்கையை, கீழ் குறிப்பிட்டுள்ள இடங்களில் உள்ள 17 டயட் நிறுவனங்களில், அதனெதிரே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களை அதிகார வரம்புக்குட்படுத்தி விண்ணப்பங்களை வரவேற்குமாறு கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

| 17. டயட் நிறுவனம் உள்ள இடம் (1) | மாவட்டத்தின் பெயர் (2) |
|---|---|
| 1. திரூர் | (1) திருவள்ளூர்<br>(2) காஞ்சிபுரம் |
| 2. நாமக்கல் | (1) நாமக்கல்<br>(2) சேலம் |
| 3. டி. கல்லுப்பட்டி | (1) மதுரை<br>(2) தேனி |
| 4. திருமூர்த்தி நகர் | கோவை |
| 5. முனைஞ்சிப்பட்டி | திருநெல்வேலி |
| 6. மாயலூர் | (1) கரூர்<br>(2) பெரம்பலூர் |
| 7. பாளையம்பட்டி | விருதுநகர் |
| 8. கோத்தகிரி | நீலகிரி |
| 9. இராணிப்பேட்டை | (1) (வடற்காடு) வேலூர்<br>(2) தர்மபுரி |
| 10. சென்னை | சென்னை |
| 11. பெருந்துறை | (1) ஈரோடு<br>(2) (தென்னாற்காடு) கடலூர் |
| 12. காளையார்கோயில் | (1) சிவகங்கை<br>(2) நாகப்பட்டினம் |

| 17. டயட் நிறுவனம் உள்ள இடம் (1) | மாவட்டத்தின் பெயர். (2) |
|---|---|
| 13. ஒட்டன்சத்திரம் | (1) திண்டுக்கல்<br>(2) திருச்சிராப்பள்ளி |
| 14. புதுக்கோட்டை | (1) புதுக்கோட்டை<br>(2) தஞ்சாவூர் |
| 15. வானரமுட்டி | (1) தூத்துக்குடி<br>(2) கன்னியாகுமரி |
| 16. மிஞ்சூர் | (1) இராமநாதபுரம்<br>(2) திருவாரூர் |
| 17. கீழ் பெண்ணாத்தூர் | (1) திருவண்ணாமலை<br>(2) விழுப்புரம் |

SC/ST மாணவர் சேர்க்கையில் விகிதாசார முறையை அரசு கடித எண்.138, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 1-8-1997-ல் தெரிவித்துள்ளவாறு அந்தந்த பகுதிக்கேற்றாற்போல் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரே முடிவு செய்து கொள்ளலாம். இது குறித்து உடனடி நடவடிக்கை எடுத்து செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். விளம்பர செலவுக்கான கருத்துருவினை உரிய செல்லுச்சீட்டுடன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு அனுப்பும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
**எம்.ஏ. கௌரிசங்கர்.**
*அரசுச் செயலாளர்.*

*நகல்:*

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

/உண்மை நகல்/

*பிரிவு அலுவலர்.*

சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்-கல்வி-இடைநிலை ஆசிரியர் பயிற்சி பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் - இடஒதுக்கீட்டின்படி பணியிடங்கள் நிரப்புவதில் உள்ள தேக்க நிலையை நீக்க 17 மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்களில் (DIET) அவர்களுக்கு மட்டும் கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பிரிவு தொடங்க நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகின்றது.

---

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (நிலை) எண். 158, நாள்:17-9-1997.

படிக்கப்பட்டது:

1. அரசு பள்ளிக்கல்வித்துறையின் கடிதம் எண்.26930/யு1/96-7, நாள் 14-5-1997.
2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கடிதம் எண்.195/பி2/97, நாள் 26-5-1997 மற்றும் 13-6-1997.
3. அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கடிதம் (நிலை) எண்.138, நாள் 1-8-1997.
4. அரசு பள்ளிக்கல்வித்துறையின் கடிதம் எண்.28669/யு1/97-1, நாள் 12-8-1997.

---

ஆணை:-

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் மேலே இரண்டாவதில் படிக்கப்பட்ட கடிதங்களில் 17 மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி (டயட்) நிறுவனங்களில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப்பிரிவு தொடங்க அனுப்பியுள்ள கருத்துருவை அரசு ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில் மாநில அளவில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டின்படி ஆசிரியர்களை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்குவதற்காக தேசிய ஆசிரியர் கல்விக்குழுமம் (National Council for Teacher Education) தென்மண்டல குழுவின் அங்கீகாரத்துடன் தமிழகத்திலுள்ள 17 மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள் (District Institute of Education and Training) ஒவ்வொன்றிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மட்டும் கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புப் பிரிவு ஒன்று 50 மாணவ/மாணவிகளுடன் என்.சி.டி.இ.ன் விதிமுறைப்படி துவக்க கீழ்க்கண்ட இன்றியமையா இனங்களுக்காக ரூ.508.49 இலட்சம் (ரூபாய் ஐந்து கோடியே எட்டு லட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்குகின்றது.

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | 17 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உபகரணங்கள் தளவாட சாமான்கள் வசதிக்காக (இணைப்பில் உள்ளபடி) | 262.99 |
| 2. | கூடுதல் வகுப்பறைகள் கட்ட (17 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் இரண்டு வகுப்பறைகள்) | 102.00 |
| 3. | செயல்முறைக்கூடங்கள் கட்ட (3 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில்) | 6.00 |
| 4. | நூலகக் கட்டிடங்கள் (நாமக்கல் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்) | 7.50 |
| 5. | கைத்தொழில் செயல்முறைக்கூடங்கள் (நாமக்கல் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்) | 5.00 |
| 6. | மாணவியர் தங்கும் விடுதிக்கட்டிடங்கள் (10 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 25 மாணவியர் வீதம்) | 125.00 |
| | | **508.49** |

2. கீழ்வரும் பதினேழு (17) மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் இனி ஆண்டுதோறும் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கைக்கு மேலாகக் கூடுதலாக ஐம்பது ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இந்த எண்ணிக்கையில் பத்து விழுக்காடு (10%) பழங்குடியினருக்கு வழங்கப்படும். பழங்குடியினருக்கான எண்ணிக்கையை வரும் விண்ணப்பங்களுக்கேற்ப நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிப்பதை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை இயக்குநரே முடிவு செய்து கொள்ளலாம்.

(1) திரூர்
(2) நாமக்கல்
(3) டி. கல்லுப்பட்டி
(4) திருமூர்த்தி நகர்
(5) முனைஞ்சிப்பட்டி
(6) மாயனூர்
(7) பாளையம்பட்டி
(8) கோத்தகிரி
(9) இராணிப்பேட்டை
(10) சென்னை
(11) பெருந்துறை
(12) காளையார்கோவில்
(13) ஒட்டன்சத்திரம்
(14) புதுக்கோட்டை
(15) வானாமுட்டி
(16) மஞ்சூர்
(17) கீழ்பெண்ணாத்தூர்

3. எதிர்வரும் ஆண்டிலிருந்து மாணவர் சேர்க்கைக்கு அனைத்து பாலர்களுக்கான ஒருங்கிணைந்த விளம்பரம் செய்யப்படலாகும். சேர்க்கைக்கான இறுதி நாளுக்கு அடுத்து மூன்று தினங்களுக்குள் ஆதி திராவிடர்/பழங்குடியினர் பற்றிய புள்ளிவிவரங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

4. இத்திட்ட நடைமுறையை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரும் அவ்வப்போது தணிக்கை ஆய்வு மேற்கொள்ளுவார்.

5. மேலே பத்தி 1-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்புகளில் கோரிக்கை எண்.61 மற்றும் 30-ன கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4202. கல்வி, போட்டி விளையாட்டுக்கள், கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு - 01. பொதுக்கல்வி - 202. இடைநிலைக்கல்வி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் - II மாநிலத் திட்டம் - JF மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவனங்களில் (DIET) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பிரிவிற்கான கட்டிடங்கள் கட்டுதல் " 16 பெரும்பணிகள்
(த.தொ.கு. 4202 01 105. JF 1607)

"2202. பொதுக்கல்வி - 02. இடைநிலைக்கல்வி - 105 - ஆசிரியர் பயிற்சி - ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - II மாநிலத் திட்டம் - JB மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்களில் (DIET) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு கூடுதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பிரிவுத் தொடங்குதல் - 24. பொருள்களும் வழங்குதலும்".
(த.தொ.கு. 2202 02 105. JB 2407)

6. மேலே பத்தி 1-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும், அதனை செலவழிக்கவும் இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறைக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7. இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

8. மேலே பத்தி 1ல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளக்கணக்கு அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. பத்தி 1 வரிசை எண் 2-லிலும், வரிசை எண்.3-லிலும் ஒப்பளிக்கப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், விடுதிக்கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணி தாட்கோ நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

10. இச்செலவினம் புதுப்பணி குறித்த செலவினமாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்துறை (பிஜி.1)-ல் தனியாகப் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்குத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இரு படிகளில் நிதித்துறை (பிஜி.1)-க்கு அனுப்புமாறு இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. மேலே படிக்கப்பட்ட அரசு கடிதங்களான 1, 3 மற்றும் 4-ல் அனுமதிக்கப்பட்டவாறு கூடுதல் வகுப்புகளை நடப்பு கல்வி ஆண்டான 1997-98ல் உடனே தொடங்கி சேர்க்கை விவரங்களை விரைந்து அனுப்புமாறு இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இத்திட்டத்தின் செயல்பாடு மற்றும் முன்னேற்றம் குறித்து அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறைக்கு அறிக்கை அனுப்புமாறு இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண். 372/து.செ.(ஆர்.பி)/97, நாள் 16-9-1997ல் பெற்று வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்துறை,
சென்னை-6.
இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவன முதல்வர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/சென்னை-35/
சென்னை-6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5/சம்பளக்
கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை-35.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | தொழில் நுட்பக்கல்விக்கு (Educational Technology) தேவைப்படும் உபகரணங்கள் | 2.80 |
| 2. | மனவியல் ஆய்வகங்கள் (Psychology Laboratories) அமைப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்கள் (ஒவ்வொரு இனத்திற்கும் 4 செட்டுகள் அடங்கியது) | 1.00 |
| 3. | நூலகம் | 1.00 |
| 4. | அறிவியல் ஆய்வகங்கள் | 1.22 |
| 5. | வேலை அனுபவம் கலைக்கல்வி | 0.30 |
| 6. | உடற்பயிற்சி மற்றும் உடல் நலக்கல்விக்கு (Physical and Health Education) தேவைப்படும் பொருள்கள் | 0.15 |
| 7. | கணிப்பொறி 5 பிசி வுடன் (Computers with 5 P.C. குளிர்சாதன வசதியுடன்) | 5.00 |
| 8. | மின்னணு சங்கீத செட் (Electronic Music set) | 2.00 |
| 9. | வகுப்பறை மற்றும் அலுவலக அறைகலன்கள் (Office furniture) | 2.00 |
| | மொத்தம் | **15.47** |

ஒரு பயிற்சிப் பள்ளிக்கு ரூ. 15.47 இலட்சம் வீதம் 17 பயிற்சிப் பள்ளிகளுக்கு
மொத்த செலவு ரூ. 262.99 இலட்சம்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - சென்னை முன்தேர்வுப் பயிற்சி மையத்தின் முதல்வர் மற்றும் பேராசிரியர் பணியிடம் - மூன்று அல்லது நான்கு ஆண்டு காலம் மிகாமல் அயற் பணியில் நிரப்பப்படுவதற்கு ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை**

*அரசாணை (நிலை) எண்.161,* *நாள்: 22-9-1997*

**ஆணை:**

முன்தேர்வு பயிற்சி மையத்திற்கு தற்போது முதல்வர் பணியிடமும் ஒரு பேராசிரியர் பணியிடமும் கல்லூரித் துறையிலிருந்து பணிபுரியும் ஆசிரியர்களைக் கொண்டு மாற்றல் முறையில் நிரப்பப்பட்டு வருகிறது. அடிக்கடி இவர்கள் மாற்றப்படுவதால் பணியில் தொய்வு விழுகிறது. இதை மாற்றும் முகத்தான் இந்தப் பணியிடங்களை கல்லூரிப் பேராசிரியரை அயற்பணி அடிப்படையில் நிரப்ப அரசு ஆணை இடுகிறது. இந்த அயற்பணி பொதுவான அயற்பணி நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்கும். விருப்பமுடையோர் விண்ணப்பங்களைப் பெற்று, ஆதிதிராவிடர் நலத்துறையே பணியிடங்களை நிரப்பவும் அரசு முடிவெடுத்து ஆணையிடுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

**பெறுநர்:**

இயக்குநர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5.
முதல்வர்,
முன்தேர்வுப் பயிற்சி மையம் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக)
அண்ணாநகர் (மேற்கு), சென்னை-40
நகல்: செயலர், உயர்கல்வித்துறை, சென்னை-9.
இயக்குநர், கல்லூரிக் கல்வி, சென்னை-6.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9
உதிரிகள்/இருப்புக் கோப்பு.

*|ஆணைப்படி அனுப்பப்படுகிறது|*

*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்-முன்தேர்வுப் பயிற்சி மையம், சென்னை-மைய அரசால் பொறுப்பேற்கப்பட்ட, மைய, மாநில சமபங்கீடு திட்டத்தின் கீழ் சென்னை, முன்தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கி பயிலும் மாணவர்களின் உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.400/-லிருந்து ரூ.500/- ஆக உயர்த்தி ஒப்பளிக்கப்படுகிறது - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (ஆதிந.3) துறை

அரசாணை (நிலை) எண்.182, நாள் 14-11-1997

படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.74, ஆதி மற்றும் பந துறை, நாள் 28-3-1994.

மேலும் படிக்கப்பட்டது :

2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கடிதம் எண்.எச்.2/21676/95, நாள் 18-7-1995.

3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் நேர்முகக் கடிதம் எண்.54583/96, நாள் 4-4-1997.

- - - -

**ஆணை:**

மேலே வரிசை எண். ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை, முன்தேர்வுப் பயிற்சி மையத்தின் விடுதியில் தங்கிப் பயிலும் பயிற்சியாளர்களுக்கு உணவுக்கட்டணம்/பராமரிப்புப் படியினை 1-4-1992-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.250/-லிருந்து ரூ.400/-ஆக உயர்த்தி அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன.

2) மேலே வரிசை.எண்.இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் சென்னை, முன்தேர்வுப் பயிற்சி மையத்தின் விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களின் உணவுக் கட்டணத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.400/-லிருந்து ரூ.750/-ஆக கூட்ட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3) இப்பயிற்சி மையம் அரசால் பொறுப்பேற்கும் மைய மாநில திட்டத்தின் கீழ் செயல்படுவதால் உணவுக் கட்டணத்தை ரூ.400/-லிருந்து ரூ.750/-ஆக உயர்த்துவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

4) மேற்கூறிய சூழ்நிலையில், முன்தேர்வுப் பயிற்சி மையம் நன்கு செயலாற்றுவதற்கு ஏதுவாகவும், அம்மையத்தின் உணவுக் கட்டணத்தை மறு ஆய்வு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேலாகியதைக் கருத்திற் கொண்டும் சமைக்கும் உணவுப்பொருட்களின் விலை ஏற்றத்தைக் கவனத்தில் இருத்தி நல்லதரமான உணவினை வழங்கவும் மத்திய அரசின் ஆணை கிடைக்க இன்னும் சில காலம் ஆகும் என்பதாலும் சென்னை, முன்தேர்வுப் பயிற்சி மையத்தின் விடுதியில் தங்கி, அனைத்து இந்தியப் பணிகளின் தேர்வுகளுக்காக, பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் உணவுக் கட்டணத்தை மைய அரசின் பொறுப்பேற்கும் மைய-மாநில திட்டத்தின் கீழ் 50:50 என்ற விகிதாசார அடிப்படையில் பயிற்சி மற்றும் அதைச் சார்ந்த திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.400/-லிருந்து ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) ஆக இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மத்திய அரசின் ஆணைகள் கிடைக்கப்படும் நாள் வரை உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது.

5) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண் 35/SS/97 நாள், 23-10-1997இல் அளிக்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
முதல்வர், முன்தேர்வுப் பயிற்சி மையம்,
(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்காக), அண்ணாநகர்
(மேற்கு) சென்னை-40.
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை-18.
மாநலக் கணக்குத் தலைவர், சென்னை-18. (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

நகல்:

செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சி/நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ஒப்பம்).....................................
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பல்வேறு பயிற்சித் திட்டங்கள் - விளம்பரம் வாயிலாக பயிற்சி நிறுவனங்களை தேர்வு செய்தல் - 'தாட்கோ' வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து நிதி வழங்கி ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது - அரசாணை - வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை

அரசாணை (ப) எண்.184, நாள் 12-7-1997.

படிக்கப்பட்டது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எம்3/51829/95 நாள் 12-2-1997.

**ஆணை:**

ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பல்வேறு பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு பயிற்சியளிக்கும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து விளம்பரம் வாயிலாக விலைப்புள்ளிகள் (Quotations) பெறப்பட்டு தகுதி வாய்ந்த நிறுவனங்களைத் தெரிவு செய்து பயிற்சி அளிக்கும் பொறுப்பினை அவற்றிற்கு வழங்க வேண்டும் என ஆணையுரிமை வழங்கப் பெற்ற குழு (Empowered Committee) பரிந்துரைத்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு பயிற்சித் திட்டங்களை அளிக்கும் நிறுவனங்களை தெரிவு செய்வதற்கான விளம்பரச் செலவிற்கு தாட்கோ வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு வழங்க அரசு ஆணையிடுகிறது.

2) மேலே பத்தி 1-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை உடனடியாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு விடுவிக்குமாறு 'தாட்கோ'வின் மேலாண்மை இயக்குநர் வேண்டப்படுகின்றார்.

3) மேலே பத்தி 1-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பயன்படுத்தியமைக்கான பயனீட்டுச் சான்றிதழை 'தாட்கோ'வின் மேலாண்மை இயக்குநருக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் வேண்டப்படுகின்றார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர் :

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்,
சென்னை-5 (இணைப்புடன்- ஒப்புதல் அளிக்கப்பட்ட விளம்பரத்துடன்)
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை-101

நகல்:

நிதித்துறை, சென்னை-9
செயலரின் நேர்முக உதவியாளர், ஆதி மற்றும் பந துறை, சென்னை-9.
ஆதி மற்றும் பந அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதி மற்றும் பந (கமபா/அநமு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

(ஓம்)............................................
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - முன்னோடித் தேர்வுப் பயிற்சி நிலையம், சென்னை-முன்தேர்வு 1997-இல் (Preliminary Examination '97) தேதிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு சிறப்பு கருத்துரை/அறிவுரை வகுப்பு 18-8-1997 அன்று நடத்தப்பட்டது - செலவினம் ஒப்பளிக்கப்படுகின்றது-ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை

*அரசாணை (டி) எண்.246,* *நாள் 11-11-1997.*

படிக்கப்பட்டது:—

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் நே.மு.க. *எண்.ஏ2/38087/97, நாள் 12-8-1997 மற்றும் 30-8-1997.*

**ஆணை :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பார்வையில் படிக்கப்பட்ட கடிதங்களில் அனுப்பிய கருத்துருவின் அடிப்படையில் மத்திய தேர்வாணைக்குழு நடத்திய முன்தேர்வு 1997-இல் (Preliminary Examination '97) தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சிப் பெற்ற அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவிகளுக்கு 18-8-1997 அன்று காலை 10-00 மணி முதல் 5-00 மணி வரை சிறப்பு கருத்துரை அறிவுரை வகுப்பு (Counselling) சென்னை, நந்தனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலுள்ள கூட்ட அறையில் நடத்தப்பட்டதற்கான மொத்த செலவினம் ரூ.1876-க்கு (ரூபாய் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தாறு மட்டும்) அரசு அனுமதி அளிக்கிறது.

(2) இச்செலவினம் 1997-98 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுக்குள் செலவிடப்பட வேண்டுமென்றும் இச்சிறப்பு வகுப்பு சார்பான செலவினத்திற்கு 'தாட்கோ' சென்னை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ரூ.3000 முன்தொகையினை தாட்கோவிற்கு திரும்ப செலுத்த வேண்டுமென்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(3) மேலே பத்தி 1ல் அனுமதியளிக்கப்பட்ட செலவினம் கீழ்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01 பட்டியல் சாதியினர் நலன் - இதர செலவினம் - மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் யுஏ அனைத்திந்தியப் பணித்தேர்வு எழுதும் பட்டியல் சாதியின மாணவர் களுக்குத் தேர்வுக்கு முந்தைய பயிற்சி அளிக்கும் மையம் - 05. அலுவலகச் செலவினங்கள் - இதர சில்லரைச் செலவினங்கள் (குறியீட்டு எண்.2225 80 - 800 யுஏ 0521)".

(4) இவ்வரசாணை நிதித்துறையால் இசைவளிக்கப்பட்ட அ.சா. எண்.86032/நிதி (SW)/97, நாள் 22-10-1997ன் படி வெளியிடப்படுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
முதல்வர்,
முன்தேர்வுப் பயிற்சி மையம்
(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்காக)
அண்ணாநகர் (மேற்கு),
சென்னை-40
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை-6..
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை-35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பல்வேறு பயிற்சித் திட்டங்கள் - விளம்பரம் வாயிலாக பயிற்சி நிறுவனங்களை தேர்வு செய்ய 'தாட்கோ' வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து நிதி வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது - பயிற்சி நிறுவனங்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்ய, அரசுக்குப் பரிந்துரை நல்க சிறு குழு அமைக்கப்படுகிறது - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை

*அரசாணை (நிலை) எண். 178,* *நாள் 12-11-1997*

படிக்கப்பட்டது:

1) அரசாணை(ப) எண்.184, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12-7-1997.

மேலும் படிக்கப்பட்டது.

2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கடிதம் நக.எம்.3/51829/95, நாள் 19-9-1997.

ஆணை:

வரிசை எண்.1ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பல்வேறு பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு பயிற்சியளிக்கும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து விளம்பரம் வாயிலாக விலைப் புள்ளிகள் (Quotations) பெறப்பட்டு, தகுதி வாய்ந்த நிறுவனங்களை தெரிவு செய்து பயிற்சி அளிக்கும் பொறுப்பினை அவற்றிற்கு வழங்க வேண்டும் என ஆணையுரிமை வழங்கப்பட்ட குழு (Empowered Committee) பரிந்துரைத்தது அதனை அடிப்படையாகக் கொண்டு பயிற்சித் திட்டங்களை அளிக்கும் நிறுவனங்களை தெரிவு செய்வதற்கான விளம்பரச் செலவிற்கு 'தாட்கோ' வசமுள்ள மத்திய சிறப்பு நிதியிலிருந்து ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு வழங்க அரசு ஒப்பளித்து ஆணை வெளியிட்டது.

**2)** மேலே வெளியிடப்பட்ட ஆணைகளுக்கொப்ப செய்தித்தாள்களில் தந்த விளம்பரத்திற்குச் சற்றொப்ப அறுபது (60) விண்ணப்பங்கள் வந்துள்ளன. இவற்றுள் பெரும்பான்மை கணினிப் பயிற்சிக்கானது. மருத்துவ தொழில்நுட்பப் பயிற்சிகள், செவிலியர் பயிற்சி, Auto Electrical போன்ற பயிற்சிகள், விற்பனைத் திறன் போன்றவற்றிற்கும் விண்ணப்பங்கள் வந்துள்ளன.

**3)** விண்ணப்பங்கள் ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை நல்க கீழ்வரும் சிறுகுழுவை அரசு அமைத்து ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் | - தலைவர் |
| 2) | சிறப்புச் செயலர், நிதித்துறை | - உறுப்பினர் (நிதி) |
| 3) | திரு. உமாசங்கர், இ.ஆ.ப. | - உறுப்பினர் (கணினி) |
| 4) | டாக்டர் இந்திரா, துறைத்தலைவர், Microbiology, நெல்லை மருத்துவக் கல்லூரி. | - உறுப்பினர் (மருத்துவம்) |
| 5) | டாக்டர் சுசிலா மாரியப்பன், students Guidance, சென்னை பல்கலைக் கழகம். | - உறுப்பினர் (தொழில் நுட்பம்) |

6) திருமதி பூங்குழலி, - உறுப்பினர் (தொழில் நுட்பம்)
Deputy General Manager, தொலைபேசித்துறை

**4)** 15-11-1997க்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டுமாய் இக்குழு வேண்டப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் சென்னை-5.
சிறப்புச் செயலர், நிதித்துறை, சென்னை-9.
திரு. செ. உமாசங்கர், இ.ஆ.ப., இணை தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினிமயமாக்கம்) மற்றும் அரசு துணைச் செயலாளர், பொது (தேர்தல்) துறை, சென்னை-9.
டாக்டர் இந்திரா, துறைத் தலைவர், Microbiology, நெல்லை மருத்துவக் கல்லூரி,
டாக்டர் சுசிலா மாரியப்பன், Students Guidance, சென்னை பல்கலைக்கழகம்,
திருமதி பூங்குழலி, Deputy General Manager, தொலைபேசித்துறை, சென்னை-34.

*நகல்:*

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை-101.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறைச்செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு/குமபா) துறைகள், சென்னை-9

இருப்புக்கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**கே.எஸ். கோபால்,**
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - முன்தேர்வுப் பயிற்சி மையம், சென்னை-மைய அரசால் பொறுப்பேற்கப்பட்ட, மைய, மாநில சமபங்கீடு திட்டத்தின் கீழ் சென்னை, முன்தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கி பயிலும் மாணவர்களின் உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.400/-லிருந்து ரூ.500/-ஆக உயர்த்தி ஒப்பளிக்கப்படுகிறது - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (ஆதிந.3) துறை

அரசாணை (நிலை) எண் 182, நாள் 14-11-1997.

படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண்.74, ஆதி மற்றும் பந துறை, நாள் 28-3-1994.

மேலும் படிக்கப்பட்டது:

2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கடிதம் எண் எச்2/21676/95, நாள் 18-7-1995.

3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் நேர்முகக் கடிதம் எண் 54583/96, நாள் 4-4-1997.

**ஆணை:**

மேலே வரிசை எண் ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை, முன்தேர்வுப் பயிற்சி மையத்தின் விடுதியில் தங்கிப் பயிலும் பயிற்சியாளர்க்கு உணவுக்கட்டணம்/பராமரிப்புப் படியினை 1-4-1992-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.250/-லிருந்து ரூ.400/-ஆக உயர்த்தி அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன.

2) மேலே வரிசை. எண் இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் சென்னை, முன்தேர்வுப் பயிற்சி மையத்தின் விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களின் உணவுக் கட்டணத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.400/-லிருந்து ரூ.750/-ஆக கூட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) இப்பயிற்சி மையம் அரசால் பொறுப்பேற்கும் மைய, மாநில திட்டத்தின் கீழ் செயல்படுவதால் உணவுக் கட்டணத்தை ரூ.400/-லிருந்து ரூ.750/-ஆக உயர்த்துவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

4) மேற்கூறிய சூழ்நிலையில், முன்தேர்வுப் பயிற்சி மையம் நன்கு செயலாற்றுவதற்கு ஏதுவாகவும், அம்மையத்தின் உணவுக் கட்டணத்தை மறு ஆய்வு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேலாகியதைக் கருத்திற் கொண்டும் சமைக்கும் உணவுப்பொருட்களின் விலை ஏற்றத்தைக் கவனத்தில் இருத்தி நல்ல்தரமான உணவினை வழங்கவும் மத்திய அரசின் ஆணை கிடைக்க இன்னும் சில காலம் ஆகும் என்பதாலும் சென்னை, முன்தேர்வுப் பயிற்சி மையத்தின் விடுதியில் தங்கி, அனைத்து இந்தியப் பணிகளின் தேர்வுகளுக்காக, பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் உணவுக் கட்டணத்தை மைய அரசின் பொறுப்பேற்கும் மைய-மாநில திட்டத்தின் கீழ் 50:50 என்ற விகிதாசார அடிப்படையில் பயிற்சி மற்றும் அதைச் சார்ந்த திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.400/-லிருந்து ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) ஆக இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மத்திய அரசின் ஆணைகள் கிடைக்கப்படும் நாள் வரை உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது.

5) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண் 345/SS/97, நாள் : 23-10-1997இல் அளிக்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
முதல்வர், முன்தேர்வுப் பயிற்சி மையம்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்காக, அண்ணா நகர் (மேற்கு), சென்னை-40.
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை-18(பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

நகல்:

செயலர்,
திட்டம் மற்றும் வளர்ச்சி/நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

ஆணைப்படி /அனுப்பப்படுகிறது.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - மாநில ஆதிதிராவிடர் நலக்குழு - திருத்தியமைக்கப்படுகிறது-ஆணைகள்-வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (ஆதிந-3) துறை.

அரசு ஆணை (டி) எண்.91 நாள் 4-4-1997.

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.187, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 12-11-1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.190, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 15-11-1995.
3. அரசு ஆணை (நிலை) எண்.194, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 21-11-1995.

ஆணை:-

ஆதிதிராவிட மக்களின் நலனைப் பேணுவதற்காக மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் அமைக்கப்பட்ட மாநில ஆதிதிராவிட நலக்குழுவினைக் கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்து அரசு ஆணையிடுகிறது.

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் .. தலைவர்
2. அரசு தலைமைச் செயலர் .. துணைத் தலைவர்
3. திரு. வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர், சிதம்பரம் தொகுதி. .. உறுப்பினர்
4. திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள், சட்டமன்ற உறுப்பினர், நிலக்கோட்டை தொகுதி. .. உறுப்பினர்
5. திரு. ஜி. சொக்கலிங்கம், சட்டமன்ற உறுப்பினர், திருப்போரூர் தொகுதி. .. உறுப்பினர்
6. திரு. வி. கோவிந்தன், சட்டமன்ற உறுப்பினர், பேர்ணாம்பேட் தொகுதி .. உறுப்பினர்
7. திரு. நொ.வ. நன்னன், சட்டமன்ற உறுப்பினர், செங்கம் தொகுதி. .. உறுப்பினர்
8. திரு. ஏ. மாரிமுத்து, சட்டமன்ற உறுப்பினர், வானூர் தொகுதி. .. உறுப்பினர்
9. திரு. வி. பெருமாள், சட்டமன்ற உறுப்பினர், ஏற்காடு தொகுதி. .. உறுப்பினர்
10. திரு. கே. வேல்சாமி, சட்டமன்ற உறுப்பினர், நாமக்கல் தொகுதி. .. உறுப்பினர்
11. திரு. வி. பி. சிங்காரவேலு, சட்டமன்ற உறுப்பினர், வால்பாறை தொகுதி. .. உறுப்பினர்

12. திரு. என். தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர், குன்னூர் தொகுதி. .. உறுப்பினர்

13. திரு. டி. பூவேந்தன், சட்டமன்ற உறுப்பினர், பழனி தொகுதி. .. உறுப்பினர்

14. திரு. டி. கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர், உப்பிலியாபுரம் தொகுதி. .. உறுப்பினர்

15. திரு.பி. துரைசாமி, சட்டமன்ற உறுப்பினர், வரகூர் தொகுதி. .. உறுப்பினர்

16. திரு. எம். பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர், சீர்காழ் தொகுதி. .. உறுப்பினர்

17. திரு. செல்வராஜ் (என்கிற) கவிதைப்பித்தன், சட்டமன்ற உறுப்பினர், குளத்தூர் தொகுதி. .. உறுப்பினர்

18. திரு.கே. தங்கமணி, சட்டமன்ற உறுப்பினர், மானாமதுரை தொகுதி. .. உறுப்பினர்

19. திரு. சி.டி. தண்டபாணி, சட்டமன்ற உறுப்பினர், கோயம்புத்தூர் (மேற்கு) தொகுதி .. உறுப்பினர்,

20. திரு. வி. திசைவீரன், சட்டமன்ற உறுப்பினர், பரமக்குடி தொகுதி. .. உறுப்பினர்

21. திரு. வி.பி. இராஜன், சட்டமன்ற உறுப்பினர், இராஜபாளையம் தொகுதி .. உறுப்பினர்

22. திரு. டாக்டர் கே. கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர், ஒட்டப்பிடாரம் தொகுதி. .. உறுப்பினர்

23. திரு. ஆர். ஈஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர், வாசுதேவநல்லூர் தொகுதி. .. உறுப்பினர்

24. திரு. செங்கை சிவம், சட்டமன்ற உறுப்பினர், பெரம்பூர் தொகுதி. .. உறுப்பினர்

25. திரு. எம். இளங்கோ, வலசை செந்தாபுரம், கடையநல்லூர். .. உறுப்பினர்

26. திருமதி. ஐ. சுகன்யா, 138, கே.கே. நகர், காஜாமலை திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். .. உறுப்பினர்

27. நெல்லை. ஆர். சொல்லழகன், 48, அம்பேத்கார் நகர், வள்ளியூர் .. உறுப்பினர்

28. வடக்கலூர் திரு. ரெங்கசாமி. 3/128, வலக்கண்ணூர், அன்னூர் வழி, கோயம்புத்தூர். .. உறுப்பினர்

29. பாளை.ஐ. விஜயன், 27, திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. .. உறுப்பினர்

30. திரு.வி. பரஞ்சோதி, 1819, அண்ணாநகர் மேற்கு, சென்னை-40. .. உறுப்பினர்

31. மிக மேன்மை தாங்கிய அருள்தாஸ் ஜேம்ஸ், சென்னை பேராயர், மைலாப்பூர். .. உறுப்பினர்

32. அருட்தந்தை அந்தோணிராஜ், கல்லூரி இல்லம், சி.எஸ்.ஐ. சர்ச், பெருங்குடி, மதுரை. .. உறுப்பினர்

33. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர். .. செயல் உறுப்பினர்

(2) மேலே இரண்டாவது படிக்கப்பட்ட அரசு ஆணையில் கண்டுள்ள அதிகாரிகள் சிறப்பு அழைப்பாளர்களாக தொடர்ந்து பங்கேற்க வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(3) மாநில ஆதிதிராவிடர் நலக்குழு ஆண்டுக்கு இருமுறை கூட்டப்படவேண்டும். இதன் பணிகள் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(4) திருத்தியமைக்கப்பட்டுள்ள இம்மாநில ஆதிதிராவிட நலக்குழு ஒரு முதல் நிலைக்குழுவாக 1999 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை செயல்படும். இக்குழு உறுப்பினர்களுக்கு அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் விதிகளுக்குட்பட்டு பயணப்படி மற்றும் தினப்படி பெற உரிமை வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் பயணப்படி/தினப்படி பட்டியல்களை மேலொப்பமிடும் ஆணையுரிமை பெற்றவராக

இக்குழுக்களின் செயல்-உறுப்பினர் பொறுப்பினை வகிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் செயல்படுவார்.

(5) இச்செலவினம் "2225. ஆதிதிராவிடர் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01. ஆதிதிராவிடர் நலன் - 001. நெறிப்படுத்துலும் நிருவாகமும் - I. திட்டத்தில் சேராதது - AC. 05. அலுவலகச் செலவுகள் 02. ஏனைய சில்லறைச்செலவுகள்" (த.தொ.கு. 2225 01 001 AC 0526)

என்ற தலைப்பில் பற்று வைக்க வேண்டும்.

(6) இவ்வாணைக்கு அரசு ஆணை (நிலை) எண் 1177, நிதி (படிகள்.I), நாள்: 19-9-73 படி நிதித்துறையின் இசைவு தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்,

பெறுநர் :

அனைத்து உறுப்பினர்கள்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5 வழியாக.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம், சென்னன-101.
மாநிலக்கணக்காயர், சென்னை-18 (இருபடிகள்)
மாநிலக்கணக்காயர், சென்னை-6.
மாநிலக்கணக்காயர், சென்னை-35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
தலைமைச் செயலர், சென்னை-9.
செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்/உள்/நிதி/ஊரக வளர்ச்சி/கூட்டுறவு மற்றும் உணவு/கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம்/உயர்கல்வி/பள்ளிக்கல்வி துறை, சென்னை-9.
வருவாய் நிர்வாக முதன்மை ஆணையர், சென்னை-5.
நில. நிர்வாக ஆணையர், சென்னை-5.
காவல்துறைத்தலைவர், சென்னை.
கூடுதல் தலைமை காவல்துறைத் தலைவர்/ காவல் துறை தலைவர்/துணை காவல்துறை, தலைவர் (கொடுதடு), சென்னை.
ஊரகவளர்ச்சித்துறை, இயக்குநர், சென்னை-15.
கதர் மற்றும் கிராமத்தொழில் வாரிய தலைமை நிர்வாக அலுவலர், சென்னை-108.
மகளிர் மேம்பாட்டுக்கழக நிர்வாக இயக்குநர், சென்னை.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை-10.
தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தலைவர், சென்னை-5.
மின்சார வாரியத்தலைவர், சென்னை-2.
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய நிர்வாக இயக்குநர், சென்னை.

நகல்:

இதர அரசுச் செயலாளர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்க்ள்,
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின்
தனிச்செயலர், சென்னை-9.
அநமு பிரிவு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-9.
இ.கோ./உதிரிகள்.

*(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)*

பிரிவு அலுவலர்.

**அரசு ஆணை (டி) எண் 91, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள்: 4-4-97-ன் இணைப்பு.**

மாநில ஆதிதிராவிட நலக்குழுவின் பணிகள்.

(1) ஆதிதிராவிட நலப்பள்ளிகளின் கல்வித்தரம், பயிற்றுநிலை, வசதிகள் - மேம்பாட்டிற்கான அறிவுரைகள் நகல்கல்.

(2) விடுதிகளில் விளையாட்டு வசதிகள் நூலக மேம்பாடு, தேர்வு ஆயத்தப்பயிற்சிகள் அளிக்க உறுதுணை நகல்கல்.

(3) அரசுப்பணியிடங்களில் ஒதுக்கீடு நடைமுறையை ஆய்விடல்.

(4) கல்வி நிறுவனங்களில் ஒதுக்கீடு நடைமுறையை ஆய்விடல்.

(5) சிறப்பு உள்ளடக்கத்திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் சிறப்பு நிதியின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை ஆய்விடுதல், புதிதாக அறிவுரைகள் நகல்கல், இத்திட்டங்களை பரப்பும் வகை செய்தல்.

(6) 'தாட்கோ' திட்டங்களைப் பரப்பும் வகை செய்தல்.

(7) ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை, பயிர்நிலம் வழங்குதலையும், வழங்கியதைப் பேணுதலையும் ஆய்விடல்.

(8) நில உச்ச வரம்பு நிலங்கள், பூதான நிலங்கள் இவற்றை ஆதிதிராவிடர்க்கு அளித்தலையும் அளிக்கப்பட்ட நிலங்களைப் பேணலையும் ஆய்விடல்.

(9) ஆதிதிராவிடர் மேம்பாடு குறித்துப் பொதுவான ஆலோசனைகள் வழங்கல்.

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலர்.*

*(உண்மை நகல்)*

*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம்-மாநில ஆதிதிராவிடர் நலக்குழு-திருத்தியமைக்கப்பட்ட முதல் கூட்டம் நடத்துதல்-செலவினம்-ஒப்பளிப்பு ஆணை-வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை

அரசு ஆணை (2டி) எண்.29, நாள் : 6-6-1997,

படிக்கப்பட்டவை:

(1) அரசு ஆணை (டி) எண்.91, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நாள் 4-4-1997.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண்.ஆ2/17720/97-7, நாள் 26-5-1997.

ஆணை:

பார்வை இரண்டில் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ள நிலையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்டு, திருத்தியமைக்கப்பட்ட மாநில ஆதிதிராவிடர் நலக் குழுவின் முதல் கூட்டம் 10-6-1997 மற்றும் 11-6-1997-ல் உதகமண்டலத்தில் கூட்டப்படுவரினையொட்டி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு, ரூ.1.00 லட்சம் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) செலவு செய்வதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்தொகையினை தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு தொகுதி (1)-ன் பிரிவுக் கூறு 99-ன் கீழ் முன்பணமாகப் பெறவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார். மேலே பத்தி 1-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான விவரப்பட்டி மற்றும் செலவுச் சீட்டைப் பெற்று செலவினம் சரியான முறையில் சரிக்கட்டப்பட வேண்டும்.

(2) மேற்படி செலவினத்திற்கு தேவையான நிதி 1997-98-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில்/இறுதி மாற்ற மதிப்பீட்டில் ஒதுக்கப்படும் என்பதை எதிர்பார்த்து இச்செலவினைச் செய்ய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அனுமதிக்கப்படுகின்றார்.

(3) இச்செலவினத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படுவதினை எதிர்நோக்கி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தால் அனுப்பப்படும் பட்டியல்களை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5 கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

(4) இச்செலவினம் "2225. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01. ஆதிதிராவிடர் நலன் - 001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும். 1. திட்டத்தில் சேராதது - AC தலைமையிடப் பணியாளர்கள் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை - 05. அலுவலகச் செலவுகள் - 02. ஏனையச் சில்லறைச் செலவுகள் - 04. பயணச் செலவுகள் - 01. சுற்றுப்பயணப்படி. (த.தொகு.எண்.2225 01 001 AC 0526 மற்றும் 2225 01 001 AC 0419)"

என்ற தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(5) இவ்வாணை அலுவல் சார்பற்ற எண் 2771/FS/P/97, நாள் 5-6-97-ல் வழங்கப்பட்டுள்ள நிதிதுறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இ.கோ./உதிரிகள்/அநமு பிரிவு.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

(ஒப்பம்)......................................
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - பணி நியமனங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு மற்றும் சரியான பங்கேற்பு - கண்காணிக்கவும் உறுதி செய்யும் துறைகளில் பற்றாளரைக் குறித்தறிதல் - ஆணைகள் வெளியிடப்பட்டன.

---

ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத் (பமேச 2) துறை,

அரசாணை நிலை எண். 65 நாள். 9-4-1997

படிக்கப்பட்டது:

ஆணை :

ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கான இட் ஒதுக்கீடு விதி, நியமனங்களுக்கான சுழற்சிமுறை முதலியன கடை பிடிக்கப்படுவதையும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் பணிகளில் பங்கேற்பினையும் உறுதி செய்யும் பொருட்டும் துறைகளில் பற்றாளர் ஒருவரைக் குறித்தறிவது பற்றி அரசு ஆய்வு செய்து கீழே கூறியவாறு ஆணையிடுகிறது :

2. செயலகத்துறைகள், துறைத்தலைவர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள் அனைத்திலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இட ஒதுக்கீடு விதிப்படி நியமனம் செய்தல், பங்கேற்பு ஆகியவற்றைக் கண்காணிக்கவும் உறுதி செய்யவும் ஒரு பற்றாளர் (Nodal officer) இருப்பார்.

(i) செயலகத் துறைகளில் பணியாளர் தொகுப்புப் பணிகளை ஆற்றும் துணைச் செயலர்/இணைச் செயலர்/கூடுதல் செயலர் அல்லது சிறப்புச் செயலர் பற்றாளராக இருப்பார். இரண்டுக்கு மேற்பட்ட துறைகளை ஒரே செயலரின் கீழ் வருகையில் யாரேனும் ஒருவரை செயலர் தீர்மானிக்கலாம்.

(ii) செயலகப் பணியாளர் தொகுப்பைப் பொறுத்த அளவில் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை பற்றாளர் துறையாக (Nodal Department) இருக்கும். அத்துறையிலுள்ள செயலகப் பணியாளர் தொகுப்புப் பணிகளை ஆற்றும் இணைச் செயலாளர் பற்றாளராக இருப்பார்.

(iii) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பற்றாளராக இருப்பார்.

3. (i) பற்றாளர்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நியமனம், பங்கேற்பு ஆகியவற்றில் தத்தம் துறைகளில் ஒரு குறை தீர்க்கும் பாசறை (Grievance Cell) ஆகவும் செயல்படுவர். தனியார் அல்லது பணியாளர் அமைச்சர்களின் முறையீடுகள் இவர்களுக்கு அனுப்பப்படலாம்.

(ii) துறைகளில் இட ஒதுக்கீடு விதிகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமனம் செய்யப்பட்டுள்ளதா, செய்யப்படுகின்றனவா நியமனங்களின் சுழற்சிமுறை சரியானபடி பின்பற்றப்பட்டுள்ளதா, பின்பற்றப்படுகிறதா என்பவற்றை பற்றாளர்கள் கண்காணிக்கவும் உறுதிப்படுத்தவும் வேண்டும்.

(iii) ஆதிதிராவிட நல இயக்குநருக்கு அனுப்பப்படவேண்டும். ஆண்டு புள்ளி விவர அறிக்கைகளை அனுப்பும் பொறுப்பு இவர்களைச் சாரும்.

(iv) பற்றாளர்கள் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் இதற்கென ஒரு ஆய்வுக்கூட்டம் நடத்தி ஆய்வு அறிக்கையை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும். ஆய்வுக்கூட்டங்களில் முறையே ஏ.பி., சி.டி. பிரிவுகளைச் சார்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர் அதிகாரிகள் ஒவ்வொருவர் பங்கேற்க வேண்டும்.

(v) ஆய்வுக் கூட்டங்கள் சனவரி, ஏப்ரல், சூலை, அக்டோபர் ஆகிய மாதங்களில் 5-ஆம் தேதி நடக்கப்படவேண்டும். 15-ஆம் தேதிக்குள் ஆய்வு அறிக்கை ஆதிதிராவிட நல செயலருக்கு அனுப்பப்படவேண்டும். முதல் ஆய்வுக்கூட்ட அறிக்கை 15-7-97-க்குள் அனுப்பப்பட வேண்டும்.

4. ஆதிதிராவிடர் நல செயலர் ஆண்டுக்கு இரு முறையாவது சிற்சில பற்றாளர்களுடன் ஆய்வு நடத்தி சனவரி 31-ந் தேதிக்குள் அரசிற்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர் :

அனைத்துத் துறை அரசுச் செயலாளர்கள், சென்னை-9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்,
அனைத்து செயலகத் துறைகள், சென்னை-9
அனைத்து அரசுப்பொது நிறுவனங்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்கள்.

நகல் :

இயக்குநர்,
தேசிய ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நல ஆணையம்,
சாஸ்திரி பவன், சென்னை-6.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (அலுவலக நடைமுறைப்பிரிவு), சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முது நிலை நேர்முக எழுத்தர், சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் -இட ஒதுக்கீடு அரசுத்துறை மற்றும் அரசு சார் நிறுவனங்கள் - நியமனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு - ஒதுக்கீடு விதிகள் கடைபிடிக்கப்படுதல் மற்றும் ஒதுக்கீடு இருந்தும் நிரப்பப்படாது உள்ள பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமனத்தை உறுதி செய்தல் - மாநில அளவிலான கண்காணிப்புக்குழு அமைக்கப்படுகிறது - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (பமேச 2) நலத்துறை.

அரசாணை (நிலை) எண்.156 நாள் 13-9-97

ஆணை:-

அரசுப்பணிகளில் உள்ள பல்வேறு பணியிடங்களில் விதிகளின்படி ஆதிதிராவிடர், பழங்குடியினர் பங்கேற்பு/நியமனம் 19 விழுக்காடு (18 விழுக்காடு+1 விழுக்காடு) இருக்க வேண்டும். எனினும் பல்வேறு பணித்தொகுதிகளில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் பங்கேற்பு விதிக்கப்பட்ட விழுக்காட்டை எட்டவில்லை என்ற மன நிறைவற்ற நிலையை அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆகவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்கள் முறையாக நிரப்பப்படுவதைக் கண்காணிப்பதற்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாது உள்ள பணியிடங்களை ஒரு கால வரையறைக்குள் நிரப்பபடுவதற்குரிய வழிமுறைகளைக் காண்பதற்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் தலைமையில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கொண்ட குழுவை அமைப்பது பற்றி அரசு ஆய்வு செய்து, அவ்வாறே அமைக்க முடிவு செய்துள்ளது.

2. அவ்வாறே, கீழே கூறியவாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநில ஆதிதிராவிடர், பழங்குடியினர் இட ஒதுக்கீட்டுக் கண்காணிப்புக் குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் .. தலைவர்
2. திரு. செங்கை சிவம், சட்டமன்ற உறுப்பினர், பெரம்பூர் தொகுதி. .. உறுப்பினர்
3. திரு. எஸ். அழகுவேலு, சட்டமன்ற உறுப்பினர், கண்டமங்கலம் தொகுதி. .. உறுப்பினர்
4. திருமதி. கோமதி சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர், வலங்கைமான் தொகுதி. .. உறுப்பினர்
5. திரு. வி.பி. இராஜன், சட்டமன்ற உறுப்பினர், ராஜபாளையம் தொகுதி. .. உறுப்பினர்
6. திரு. எஸ். புரட்சிமணி, சட்டமன்ற உறுப்பினர், மங்களூர் தொகுதி. .. உறுப்பினர்
7. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், சட்ட மன்ற உறுப்பினர், நிலக்கோட்டை தொகுதி. .. உறுப்பினர்
8. திரு. ஜி. பழனிச்சாமி, சட்டமன்ற உறுப்பினர், திருத்துறைப்பூண்டு தொகுதி. .. உறுப்பினர்

9. திரு. சொ. கருப்புச்சாமி, சட்டமன்ற உறுப்பினர், சங்கரன்கோயில் தொகுதி. .. உறுப்பினர்

10. திரு. டாக்டர் கே. கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர், ஒட்டப்பிடாரம் தொகுதி. .. உறுப்பினர்

11. அரசுச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. .. செயல் உறுப்பினர்

இக்குழுவில் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அரசுச் செயலரும் உறுப்பினராக இருப்பார்.

3. குறுகிய காலத்தில் அனைத்துத் துறைகளையும் ஆய்வு செய்ய ஏதுவாக மூன்று பேர் அடங்கிய மூன்று துணைக் குழுக்களை குழுவின் தலைவர் அமைத்து கொள்ளலாகும். அரசுத்துறை, மாநில அரசு சார் பொது நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அனைத்துக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு, அதன்படியான நியமனங்கள், நியமனங்களில் காணப்படும் பின்னடைவுகள் ஆகியன பற்றி குழு ஆய்வுகளை மேற்கொண்டு கண்காணிப்பு செய்யும். ஒரு கால வரையறைக்குள் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்குரிய வழிமுறைகளையும் குழு அரசுக்கு எடுத்துரைக்கும்.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் செய்து வரும் நியமனத் தேர்வுகளிலும் ஒதுக்கீட்டு விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவது இக்குழு கூர்ந்தாய்வு செய்யும். குழு அரசுச் செயலர்கள், பொது நிறுவன முதன்மை நிருவாக அதிகாரிகள்/தலைவர்கள்/மேலாண்மை இயக்குநர்கள், பல்கலைக்கழக துணை வேந்தர்கள், பதிவாளர்கள் ஆகியோருடன் தக்க ஆய்வுகளை மேற்கொள்ளலாகும்.

5. இம்மாநிலக்குழு ஒரு முதல் நிலைக் குழுவாகச் செயல்படும். இக்குழு உறுப்பினர்களுக்கு அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் விதிக்குட்பட்டு பயணப்படி மற்றும் தினப்படி பெற உரிமை வழங்கப்படுகிறது. உறுப்பினர்களில் பயணப்படி/தினப்படி பட்டியல்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை துணைச் செயலர் மேலொப்பம் செய்வார்.

6. இச்செலவினம் "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பின்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01 ஆதிதிராவிடர் நலன் - 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் - I திட்டத்தில் சேராதது - ஏசி தலைமையிடப் பணியாளர்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை 05. அலுவலகச் செலவுகள். 02 ஏனைய சில்லரைச் செலவுகள்" (த.தொ.கு. 2225 01 001 ஏசி 0526) என்ற தலைப்பில் பற்று வைக்கவேண்டும்.

7. இவ்வாணைக்கு அரசாணை (நிலை) எண். 1177, நிதி (படிகள் I) நாள் 19-9-73-ன் படி நிதித்துறையின் இசைவு தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசுச் செயலர்.

பெறுநர் :

அனைத்து உறுப்பினர்கள் மற்றும் தலைவர் நேரடியாக

1. மாண்புமிகு அமைச்சர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் மற்றும் கொத்தடிமை ஒழிப்பு, சென்னை-9.
2. திரு. செங்கைசிவம், சட்டமன்றப்பேரவை உறுப்பினர், பெரம்பூர் தொகுதி.
3. திரு. எஸ். அழகுவேலு, சட்டமன்றப்பேரவை உறுப்பினர், கண்டமங்கலம் தொகுதி.
4. திருமதி கோமதி சீனிவாசன், சட்டமன்றப்பேரவை உறுப்பினர், வலங்கைமான் தொகுதி.
5. திரு. வி.பி. இராஜன், சட்டமன்றப்பேரவை உறுப்பினர், இராஜபாளையம் தொகுதி.
6. திரு. எஸ். புரட்சிமணி, சட்டமன்றப்பேரவை உறுப்பினர், மங்களூர் தொகுதி.
7. திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள், சட்டமன்றப்பேரவை உறுப்பினர், நிலக்கோட்டை தொகுதி.

8. திரு. ஜி. பழனிச்சாமி, சட்டமன்றப்பேரவை உறுப்பினர், திருத்துறைப்பூண்டி தொகுதி.
9. திரு. சொ. கருப்பசாமி, சட்டமன்றப்பேரவை உறுப்பினர், சங்கரன் கோயில் தொகுதி.
10. திரு. டாக்டர் கே. கிருஷ்ணசாமி, சட்டமன்றப்பேரவை உறுப்பினர், ஒட்டப்பிடாரம் தொகுதி.
11. அரசுச்செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-9 (செயல் - உறுப்பினர்)
12. அரசுச் செயலர், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, சென்னை-9 (உறுப்பினர்).
13. அனைத்துத்துறைகளின் அரசுச் செயலாளர்கள்.
14. செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப்பேரவைச் செயலகம், சென்னை-9.
15. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம், சென்னை-5.
16. அனைத்துத் துறைத்தலைவர்கள்.
17. அனைத்து மாநில அரசு சார் பொதுநிறுவனங்களின் முதன்மை நிருவாக அலுவலர்கள்.
18. உறுப்பினர் செயலாளர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.
19. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
20. உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை-20.
21. அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
22. தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டங்கள், அண்ணாபட்டு வளாகம், திருவள்ளுவர் சிலை அருகில், சேலம்-636 001.
23. அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பணியாளர்கள்.
24. அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
25. சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/சென்னை-35/ சென்னை-79/சென்னை-9.
26. மாநிலக்கணக்காய்வுத்தலைவர், தமிழ்நாடு, சென்னை-18.
27. மாநிலக்கணக்காய்வுத்தலைவர், தமிழ்நாடு, சென்னை-6.
28. மாநிலக்கணக்காய்வுத்தலைவர், தமிழ்நாடு, சென்னை-35.
29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
30. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இயக்குநர் அலுவலகம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய கமிஷன், தளம் 2-பிளாக் 5, சாஸ்திரிபவன், சென்னை-6.

நகல்:-

31. முதலமைச்சரின் சிறப்புச் செயலாளர், சென்னை-9.
32. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் மற்றும் கொத்தடிமை ஒழிப்பு அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
33. ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச்செயலாளரின் தனிச்செயலர், சென்னை-9.
34. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலக நடைமுறைப் பிரிவு) சென்னை-9.
35. அனைத்து செயலகத் துறைகள்.
36. நிதித் துறை (சமூகநலம்), சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**ஐ. லோகநாதன்,**
பிரிவு அலுவலர்

## தமிழ்நாடு நாடு அரசு

### சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - அரசுத் துறை / பொதுத் துறை நிறுவனங்கள் வாரியங்கள் மற்றும் அனைத்திந்திய பணிகள் ஆகியவற்றில் பணியாளர் தேர்வுக்காக அமைக்கப்படும் தேர்வுக் குழுக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆதிதிராவிடர் உறுப்பினர் இடம் பெறுதல் ஆணை வெளியிடப்பட்டன.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமேச) துறை

அரசு ஆணை (நிலை) எண்.163 நாள் 29-9-97.

ஆணை:

மைய அரசில் உள்ள அரசுப் பதவிகளுக்குப் பணியாளர் தேர்வுக்காக உள்ள குழு/வாரியம் ஆகியவற்றில் பட்டியல் இனத்தவர்/பட்டியல் பழங்குடியினர் ஒருவர் உறுப்பினராக இருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாக ஒன்று என்ற விதிமுறை மத்திய அரசில் உள்ளது. இவ்வாறு பணியாளர்களுக்கான தேர்வுக் குழுக்களில் ஆதிதிராவிடர் உறுப்பினர் இருக்க வேண்டும் என்பது கட்டாயமானதான ஒன்று என்ற விதிமுறை மாநில அரசில் இதுவரை கடைபிடிக்கப்படவில்லை. பதவியுயர்வுத் தேர்வுகளாயினும் சரி நேரடித் தேர்வுகளாயினும் சரி, ஆதிதிராவிடர்/பழங்குடியினர் தேர்வு பற்றிய விதிமுறைகள் பலப்பல இடங்களில் சரிவரக் கடைபிடிக்கப்படுவதில்லை என்பது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கண்ணோட்டத்திற்கு அவ்வப்போது கொண்டு வரப்படுகிறது. அது மட்டுமன்றி பல்வேறு தனியார் முறையீடுகளும் வந்துள்ளன. பல்வேறு காலகட்டங்களில் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியங்களில் கூட ஒரு ஆதிதிராவிடர்/பழங்குடியினர் உறுப்பினராக இடம் பெறவில்லை. இது தவிர இந்திய ஆட்சிப் பணி/இந்தியக் காவல் பணி/இந்திய வனப்பணி ஆகியவற்றுக்கான தேர்வுக்குழுக்கள் உட்பட்ட பல்வேறு பல துறை பதவியுயர்வுத் தெரிவுக் குழுக்களிலும் ஆதிதிராவிடர் ஒருவர் இருக்க வேண்டும் என்ற நியதி கடைபிடிக்கப்படுவதில்லை.

2. மேற்கூறிய நிலை குறித்து அரசு நன்கு ஆய்வு செய்தது. கீழ்க்கூறியவாறு எல்லா தேர்வுக் குழுக்களிலும் இனி ஒரு உறுப்பினராவது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பிலிருந்து நியமனம் செய்யப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது:-

1. அனைத்துத் துறைகளிலும் எந்தவொரு நேரடி நியமனத்திற்காகவும் அமைக்கப்படும் தேர்வுக்குழுவிலும்;
2. அனைத்துத் துறைகளிலும் எந்தவொரு பதவி உயர்விற்காக இட ஒதுக்கீடு விதி ஏற்கனவே வகை செய்யப்பட்டுள்ளதோ அப்பணியிடங்களுக்கான தேர்வுக் குழுவிலும்;
3. அனைத்து அரசு நியமன வாரிய உறுப்பினர் குழுவிலும், அவ்வாரியங்கள் அமைக்கும் ஒவ்வொரு அமர்வுகளிலும்;
4. அனைத்து அரசு சார் பொது நிறுவனங்களிலும், அரசு நிதிபெறும் எவ்வகை நிறுவனங்களிலும், கூட்டுறவு அமைப்புகளிலும் நேரடி/பதவியுர்வு நியமனங்களுக்கு அமைக்கப்படும் தேர்வுக் குழுவிலும்;
5. தமிழ்நாடு அரசுப் பணியாளர் உறுப்பினர் குழுவிலும், தேர்வாணையம் அமைக்கும் ஒவ்வொரு அமர்வுகளிலும்;
6. அனைத்திந்தியப் பணிகளுக்காக அமைக்கப்படும் எந்தவொரு தெரிவுக்குழுவிலும்..

3. மேலே பத்தி 2-ல் உள்ள ஆணைகளைத் தவறாது அனைத்து அதிகாரிகளும் செயல்படுத்தலாகும். அரசுச் செயலர்கள் தத்தம் கீழுள்ள துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்கள், இவ்வாணையைச் செம்மையாகச் செயல்படுத்துவது குறித்து உறுதி செய்யலாகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.ஏ. நம்பியார்,
அரசுத் தலைமைச் செயலாளர்.

பெறுநர் :

அரசுச் செயலர்கள், அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து பொதுத் துறை நிறுவன மேலாண் இயக்குநர்கள் அனைத்து வாரியங்கள்.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் - இவ்வாணை நகலை அனைத்து மாவட்ட/கோட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டப்படுகிறார்கள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
செயலர், தமிழ்நாடு அரசு தேர்வாணையம், சென்னை-2.
தலைவர், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை-20.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.

நகல்:

முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
ஆதிதிராவிடர் அலுவலர் நலச் சங்கங்கள்.
ஆதி மற்றும் பந (அந) துறை, சென்னை-9.
உதரி நகல்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - இடம் ஒதுக்கீடு சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகள் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நாடுநர்கள் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிக்கு சில தகுதிகள் தளர்த்தி சிறப்புத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (பமேச2) துறை**

*அரசாணை(நிலை) எண் 166 நாள் 16-10-1997.*

*படிக்கப்பட்டவை:*

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், கடிதம் எண். 8981/ஆர்.டி/94, நாள் 22-12-1994.
2. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கடிதம் எண். தொ.ஆ.69062/94, நாள் 23-12-1994.
3. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடிதம் எண்.தொ.ஆ/ 72366/96, நாள் 31-12-1996.
4. அரசாணை (நிலை) எண்.2/ஆதி(ம)பந, நாள் 2-1-1997.

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப்பணிகளில் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் வகுப்பைச்சார்ந்த தகுதி வாய்ந்த நாடுநர்கள் கிடைப்பதில்லை என்று தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் தேர்வாணையத்தின் அறிக்கைகள் கூறுகின்றன. இதனால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் நிரப்பப்படாமல் போவதுடன் ஆண்டுக்கு ஆண்டு பின்னடைவு கூடிக்கொண்டே போகிறது. சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் நியமனத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில் நுட்பக்கல்வித் தகுதி பள்ளியிறுதித் தேர்வு மற்றும் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்தில் ஆங்கிலம் மற்றும் தமிழில் மிகவேகத்தகுதி ஆகும். (S.S.L.C.& Technical Qualification in Typing and Shorthand Higher Speed both in English and Tamil ) இவ்வாறான தகுதி படைத்த நாடுநர்கள் கிடைக்கவில்லை என்றாலும் வேலைவாய்ப்பகங்களில் காத்திருப்போர் பட்டியலில் சுருக்கெழுத்துத் தட்டச்சுத் தகுதி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நாடுநர்கள் உள்ளனர்.

2. பல்வேறு துறைகளுக்கும் பொதுவான வகையான சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடத்தில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்கள் நிரப்பப்படாமல் பின்னடைவதை மாற்றி அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிக்கும் மாறுபட்டு வேறுவகையான சுருக்கெழுத்துத் தட்டச்சு தகுதி பெற்றுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து காத்திருக்கும் நாடுநர்கள் பெற்றுள்ள தகுதிகளையே அடிப்படையாகக் கொண்டு சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்களுக்கு ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் தேர்ந்தெடுக்கப்படலாம் எனவும், இதற்கென ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கென ஒரு சிறப்பு நியமனத்தேர்வு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தலாம் எனவும், தேவையான விதிகளுக்குத் தளர்வு அளிக்கப்படலாம் என்றும் அரசு முடிவு செய்துள்ளது.

3. அவ்வாறே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னடைவாக உள்ள சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்களுக்கு கீழ்வரும் தகுதியுடைய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நாடுநர்களுக்கெனச் சிறப்புத் தேர்வு நடத்தி நியமனம் செய்யப்படவேண்டுமென அரசு ஆணையிடுகிறது:-

(1) பள்ளியிறுதிப் படிப்பில் (பிளஸ் 2) அலுவலகத் தொழிற்கல்விப் பிரிவில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் (Secretarial Course - Typewriting (45 wpm.) and Shorthand English (80 wpm.)

(2) தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுத் தேறியவர்கள் (National Trade Certificate Typewriting) English 30 (wpm.) and Shorthand English (80 wpm.)

(3) வணிகவியல் பட்டயப்படிப்பில் ஆங்கிலத்தில் தட்டச்சு/சுருக்கெழுத்து பயின்று தேறியவர்கள்.,

இவ்வாறு மேலே குறிப்பிடப்பட்ட தகுதியுடைய ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த நாடுநர்களுக்கென தனியான சிறப்பு நியமனத் தேர்வு நடத்தி இதுவரை சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்களில் நிரப்பப்படாமல் பின்னடைவாக இருக்கும் 200 பணியிடங்களுக்கு (180 ஆதிதிராவிடர் + 20 பழங்குடியினர்) ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நாடுநர்களைத் தேர்ந்தெடுத்து வழக்கப்படி துறைகளில் நியமனம் செய்யப் பரிந்துரைக்குமாறு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினை அரசு கேட்டுக் கொள்கிறது. பரிந்துரைக்கப்படும் நாடுநர்கள் சார்பாக கல்வித்தகுதி விதிகள் அரசால் தளர்வு செய்யப்படும்.

3. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.கு.எண்.22398/B/97-1, நாள் 21-4-1997-ல் அத்துறை ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்

செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-5.
பெறுநர் (தொடர்ச்சி) அரசு ஆணை (நிலை) எண்.166, நாள் 16-10-1997
அரசுச்செயலர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை-9.
அனைத்துத் துறை அரசுச் செயலர்கள், சென்னை-9.
அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள்,
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள்,
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-18/ சென்னை-61/ சென்னை-35.
நிதித் துறை, சென்னை-5.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்-மாநில அளவிலான கண்காணிப்புக்குழு - நியமனங்களில் ஒதுக்கீடு விதிகள் கடைபிடித்தல் மற்றும் ஒதுக்கீடு இருந்தும் நிரப்பப்படாது உள்ள பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமனத்தை உறுதி செய்தல் - ஆய்வுக்கூட்டம் - செலவினம் - ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (பமேச2)

அ.ஆணை(4டி) எண்.14

நாள்: 27-10-97

1. அரசாணை (நிலை) எண்.156, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் நாள் 13-9-97.

ஆணை

பார்வையில் படிக்கப்பட்டுள்ள ஆணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரை தலைவராகக் கொண்டு மாநில அளவிலான கண்காணிப்புக்குழு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்கள் முறையாக நிரப்பப்படுவதை கண்காணிப்பதற்கும் நிரப்பப்படாது உள்ள பணியிடங்களை ஒரு கால வரையறைக்குள் நிரப்பப்படுவதற்குரிய வழிமுறைகளை காண்பதற்கும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆணையில் இம்மாநிலக்குழு ஒரு முதல் நிலைக்குழுவாகச் செயல்படும் என்றும், இக்குழு உறுப்பினர்களுக்கு அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் விதிகளுக்குட்பட்டு பயணப்படி மற்றும் தினப்படி பெற உரிமை வழங்கவும், உறுப்பினர்களின் பயணப்படி/தினப்படி பட்டியல்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை துணைச்செயலர் மேலொப்பம் செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட குழுவில் உறுப்பினர்களுக்கு அவ்வப்போது இருக்கும் விதிகளுக்குட்பட்டு பயணப்படி மற்றும் தினப்படிக்கான செலவினங்களை ஈடு செய்யவும், இது தொடர்பாக மற்ற செலவினங்களை ஈடு செய்யும் பொருட்டும் ஆகும் செலவினமாக ரூபாய் 75,000/- (ரூபாய் 50,000/- பயணப்படிக்காகவும் ரூபாய் 25,000/- சில்லரைச் செலவினத்திற்காகவும்) அனுமதி வழங்கிட அரசு ஆணையிடுகிறது. இத்தொகையினை (ரூ.75,000/- மட்டும்) தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு தொகுதி (I)-ல் பிரிவுக்கூறு 99-ன் கீழ் முன்பணமாகப்பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்/(பட்டியல்) துறை அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்கண்ட தொகை மொத்தம் (ரூ.75,000) முன்பணமாக பெறுவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (பட்டியல்) துறைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான விவரப்பட்டி மற்றும் செலவுச் சீட்டைப் பெற்று செலவினம் சரியான முறையில் மூன்று மாதங்களுக்குள் சரிக்கட்டப்படவேண்டும்.

3. மேற்படி செலவினத்திற்கு தேவையான நிதி 1997-98-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில்/இறுதி மாற்ற மதிப்பீட்டில் ஒதுக்கப்படும் என்பதை எதிர்பார்த்துச் செலவினம் செய்ய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அனுமதிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலிருந்து திருத்திய மதிப்பீடு/இறுதி மாற்று மதிப்பீட்டிற்கான தேவையான முன் மொழிவு நிதித்துறைக்கு அனுப்பப்படும்.

4. இச்செலவினத்திற்குள் தேவையான நிதி ஒதுக்கப்படுவதினை எதிர்நோக்கி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் அனுப்பப்படும் பட்டியல்களை அனுமதிக்குமாறு சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை-9 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

---

5. இச்செலவினம் "2251 - தலைமைச் செயலகம் - சமூக பணிகள்-00-தலைமைச்செயலகம்-சமூகப்பணிகள்-090 தலைமைச்செயலகம் -1 திட்டத்தில் சேராதது - ஏபி - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை 01. சம்பளம் (த.சொ.கு.2251-00-090-ஏபி -0101)

6. இவ்வாணை அலுவல் சார்பற்ற எண்.470/DS (RP) நாள் 24-10-97 வழங்கப்பட்டுள்ள நிதித்துறையில் இசைவுடன் வெளியிடப்படுகின்றன.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (அநமு/ஆதிந 10 சம்பளப்பிரிவு) துறை, சென்னை-9.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை-9.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை 18/சென்னை-35/ சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

நகல்

ஆதிந 10 பிரிவு
(திருத்திய மதிப்பீட்டில் கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்ய)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ஒப்பம்)........................................
பிரிவு அலுவலர்.

## சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - சிறப்பு மத்திய நிதியுதவித் திட்டம் 50% மான்ய விலையில் எண்ணெய் வித்துக்கள், தென்னங்கன்றுகள் மற்றும் ரசாயனப் பொருட்கள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்தது - ஒதுக்கீட்டை விடக் கூடுதலாக நாகப்பட்டினம் வேளாண்துறை இணை இயக்குநர் செலவு செய்தது - சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து விடுவித்தல் - ஆணையிடப்படுகிறது.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

*அரசாணை நிலை எண்.4* *நாள்: 1997 ஜனவரி 6.*

*படிக்க:*

*1. அரசாணை நிலை எண்.60, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 19-3-93.*

*2. மேலாண்மை இயக்குநர், தாட்கோ கடித எண்.எல்/9389/93 நாள் 3-11-95 மற்றும் 4-10-96.*

***ஆணை:***

பார்வை 1-ல் காணும் அரசாணையில், 1992-93 ஆம் ஆண்டிற்காக, மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் சுமார் 19,200 ஆதிதிராவிடர்கள் பயனடைவதற்காக, எண்ணெய் வித்துக்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோகத்திற்காக ரூ. 48 லட்சம் 50% மான்யமாக சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. மேற்கண்ட தொகை 20-12-93-ல் வேளாண்மைத் துறை இயக்குநருக்கு தாட்கோவால் விடுவிக்கப்பட்டது. மேற்கண்ட ரூ. 48 இலட்சத்தில், திட்டங்களுக்குச் செலவு செய்தது போக, செலவு செய்யப்படாத மீதமுள்ள தொகை ரூ. 15,82,961/-ஐ 4-1-95-ல் வேளாண்துறை இயக்குநர், தாட்கோவிற்குத் திரும்பச் செலுத்திவிட்டார். பின்னர், நாகப்பட்டினம் வேளாண்துறை இணை இயக்குநர், 1992-93 ஆம் ஆண்டிற்கு அவருக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிடக் கூடுதலாக ரூ. 35,550/- செலவு செய்ததாகவும், இதனை வேளாண்துறை இயக்குநர், தாட்கோவிற்குத் திருப்பிச் செலுத்திய தொகை ரூ. 15,82,961/-ல் இருந்து விடுவிக்க தாட்கோ மேலாண்மை இயக்குநர் கோரியுள்ளார்.

2. மேற்கண்ட தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துரு அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன் வைக்கப்பட்டது. குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

3. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலின்படி நாகப்பட்டினம் வேளாண்துறை இணை இயக்குநர் 1992-93 ஆம் ஆண்டிற்கு அவருக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாக செலவு செய்த ரூ. 35,550/- (ரூபாய் முப்பத்தைந்தாயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட தொகையில் செலவு செய்யப்படாததும், தாட்கோவிடம் 4-1-95 அன்று திரும்பச் செலுத்தியதுமான மீதமுள்ள சிறப்பு மத்திய நிதியுதவித் தொகையிலிருந்து வழங்க ஒப்பளிக்கப்படுகிறது.

4. மேற்கண்ட தொகையைக் கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநருக்கு வழங்குமாறு தாட்கோ, மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

பெறுநர்:

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.
நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர், தாட்கோ, சென்னை-101.

நகல்:

வேளாண்மை / நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு/கமபி) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
இயக்குநர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-6.
இ.கோ.உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**க. ஆறுமுகம்,**
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - சிறப்பு உள்ளடக்கத் திட்டம் - சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து செயல்படுத்தப்படும் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் - பயனாளிகள் தேர்வு செய்தல் - ஆணையிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை நிலை எண் 5 நாள்: 1997 ஜனவரி 9.

படிக்க:

1. அரசாணை நிலை எண் 184, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 29-12-1994.
2. வடாற்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண் பி.எச்.பி.எ.(அக்ரி) 126/96, நாள் 8-7-1996.
3. பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் கடித எண் 21698/இஏபி2/96, நாள்: 10-9-1996.

- - - -

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர்களுக்கான பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்வு செய்ய மாவட்ட அளவிலான குழு கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | .. | தலைவர் |
| 2. | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் | .. | உறுப்பினர் |
| 3. | மாவட்ட மேலாளர், தாட்கோ | .. | உறுப்பினர் |
| 4. | மாவட்ட முன்னோடி வங்கியின் மாவட்ட மேலாளர் | .. | உறுப்பினர். |
| 5. | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் | .. | உறுப்பினர் |
| 6. | வட்டார பட்டு வளர்ச்சித் துணை இயக்குநர் | .. | உறுப்பினர் |
| 7. | உதவிப் பட்டு வளர்ச்சி இயக்குநர் | .. | உறுப்பினர்-செயலர். |

மேற்கண்ட குழு பயனாளிகளின் பட்டியலை அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.

2. பட்டு வளர்ச்சித் திட்டத்தில் நிலம் சொந்தமாக உள்ள விவசாயிகளும், நிலமற்ற விவசாயிகளும் பயனாளிகள் ஆவர். இதுவரையில் நிலம் சொந்தமாக உள்ள பயனாளிகள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். மேற்கண்ட, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக்குழு தேர்ந்தெடுக்கின்ற பயனாளிகளின் பட்டியல் பட்டு வளர்ச்சி இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசு அப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கிறது. இந்த முறையில் சுணக்கம் ஏற்படுவதால், பட்டு வளர்ச்சித் திட்டத்தில் சேரவரும் பயனாளிகள் வேறு விவசாய வேலைகளுக்குச் சென்று விடுவதால், இத்திட்டத்தினைச் செயல்படுத்த இயலாமல் போகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு மற்றத் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தாட்கோ அமைத்துள்ள குழுவே, இந்தப் பயனாளிகளையும் தேர்ந்தெடுக்கலாம் என்றும் தாட்கோ குழுவில் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும்போது பட்டு வளர்ச்சி உதவி இயக்குநர் அழைக்கப்படலாம் என்றும் கருதப்படுகிறது.

3. மேலே பத்தி 2-ல் உள்ள கருத்துரு அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன்வைக்கப்பட்டது. குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலின்படி சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படும் பட்டு வளர்ச்சித் திட்டங்களின்கீழ் பயனாளிகளை, மற்ற திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தாட்கோ அமைத்துள்ள குழுவே தேர்ந்தெடுக்கும் என்றும், இந்த தாட்கோ குழுவில் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும்போது பட்டு வளர்ச்சி உதவி இயக்குநரையும் அழைக்கவேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலாளர்.

---

பெறுநர்:

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
இயக்குநர், பட்டு வளர்ச்சித் துறை, சேலம்-1.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி நீங்கலாக).
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.

நகல்:

நிதி/கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் காதித்துறை, சென்னை-9.
ஆணையர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு/கமபி) துறை, சென்னை-9.
இ.கோ. / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**ஓ.ட. தங்கரத்னா,**
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - தாட்கோ - கலப்பினக்கன்று வளர்ப்புத் திட்டம் - 1995-96 ஆம் ஆண்டிற்கு அனுமதித்தது - மாட்டுத் தீவனத்தில் விலை ஏற்றம் - கூடுதல் தொகை மான்யமாக வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

*அரசாணை நிலை எண் 6* — *நாள்: 1997 ஜனவரி 10.*

*படிக்க:*

1. *அரசாணை நிலை எண் 226, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 21-12-1995.*
2. *மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், நேர்முக கடித எண் 20471/எம்பி2/95, நாள் 25-7-1996.*

*ஆணை:*

பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில், 1995-96 ஆம் ஆண்டிற்கு பால் மாடு வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற கலப்பினக் கன்றுகளை வளர்ப்பதற்காகப் பால் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்களான சென்னை மாவட்டம் தவிர மீதி மாவட்டங்களிலுள்ள 2,000 ஏழை ஆதிதிராவிட விவசாயத் தொழிலாளிகள் மற்றும் சிறு விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு 100% மான்யமாக சிறப்பு மத்திய நிதியுதவித் தொகையிலிருந்து ரூ. 144 இலட்சம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது. பார்வை 2-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், மேற்காணும் அரசாணை வெளியிடும் சமயம் மாட்டுத் தீவனத்தின் விலை கிலோவிற்கு ரூ. 4 ஆக இருந்ததென்றும், ஆனால் தற்போது அதன் விலை ரூ. 6 ஆகக் கூடியதால், மேலும் ரூ. 69,60,000 கூடுதல் செலவாகுமென்றும், இக்கூடுதல் செலவினத் தொகையினை சிறப்பு மத்திய நிதியுதவித் தொகையிலிருந்து வழங்குமாறு கேட்டுள்ளார்.

2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் அவர்களின் கருத்துருவின் மீது ஆணை வேண்டி அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன்வைக்கப்பட்டது. அதிகாரம் அளிக்கப்பட்ட குழு இதனை ஏற்றுக் கொண்டுள்ளது.

3. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முடிவின்படி, 1995-96 ஆம் ஆண்டிற்கான கலப்பினக்கன்று வளர்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தத் தேவைப்படும் கூடுதல் தொகையான ரூ. 69,60,000 (ரூபாய் அறுபத்தொன்பது லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) 100% மான்யமாக தாட்கோ நிறுவனத்திடம் இருக்கும் மத்திய சிறப்பு நிதியிலிருந்து அளிக்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

4. மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், சென்னை-51, அவர்களுக்கு விடுவிக்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர், சென்னை அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், அவர்கள் இத்திட்டத்தைச் சரியான முறையில் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இத்திட்டத்திற்கு அனுமதிகப்பட்ட தொகையில் செலவிடப்படாமல் தொகை ஏதும் இருப்பின் அதை

உடனே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்கு திருப்பியளிக்கவேண்டும். மேலும் இத்திட்டம் தொடர்பான காலாண்டு முன்னேற்ற அறிக்கையினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபி) துறை, சென்னை-9-க்கு அனுப்புமாறும் அறிவுறுத்தப்படுகிறார்.

6. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் ஆகியோரும் இத்திட்டத்தின் செயல்பாடு பற்றி ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், சென்னை-51.
ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பண்ணை மேம்பாடு, சென்னை-51.
இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை-6.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.

நகல்:

செயலர், கால்நடை மற்றும் மீன்வளத்துறை நிதித்துறை, சென்னை-9.
இயக்குநர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-6.
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.
அனைத்து கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் (பால்பண்ணை).
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபி/அநமு) துறை, சென்னை-9.
இ.கோ./உதிரி.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

K.P. தங்கத்துரை,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

*ஆதிதிராவிடர் நலம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், முதலிப்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள பின்னலாடைத் தொழிற்பேட்டைக்கு அரசு முதலீட்டு மான்யம், வழங்குவது - ஆணையிடப்படுகிறது.*

---

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை*

*அரசாணை நிலை எண்.19* — *நாள்: 10-2-1997*

*படிக்க:*

*1. அரசாணை நிலை எண் 133, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 7-7-95.*

*2. தாட்கோ மேலாண்மை இயக்குநர், கடித எண். ஜி1/19494/93, நாள் 23-8-95.*

*ஆணை:*

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், முதலிப்பாளையம் மற்றும் ஈங்கூரில் அமைக்கப்படவுள்ள தொழிற்பேட்டைகளுக்கு நிதி கீழ்க்கண்டவாறு திரட்டப்படுமென்று ஆணையிடப்பட்டது:—

| | |
|---|---|
| தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) | 60% |
| பயனாளிகளின் பங்கு | 10% |
| அரசு முதலீட்டு மான்யம் | 15% |
| மத்திய சிறப்பு நிதியுதவியிலிருந்து பங்கு முதலீட்டுக்கு அரசின் பங்குத் தொகை | 5% |
| தாட்கோவினால் வழங்கப்படும் விளிம்புத்தொகை | 10% |

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசு முதலீட்டு மான்யம், முதலிப்பாளையம் மற்றும் ஈங்கூரில் அமைக்கப்படவுள்ள பின்னலாடைத் தொழிற்பேட்டைகளுக்கு அளிப்பது குறித்து ஆணை வழங்குமாறு தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கோரியுள்ளார்.

3. தொழிலில் பின்தங்கியுள்ள பகுதிகளில் அமையவுள்ள தொழிற்பேட்டைகளுக்கு மட்டும் ரூ. 15 இலட்சத்திற்கு மிகாமல் நிலையான முதலீட்டில் 15% அரசின் முதலீட்டு மான்யமாக வழங்கப்படுகிறது. ஆனால், கோவை மாவட்டம், திருப்பூர் வட்டாரத்திலுள்ள முதலிப்பாளையம் தொழிலில் பின்தங்கிய பகுதியாக இல்லை. இருப்பினும், முதலிப்பாளையத்தில் அமையவுள்ள பின்னலாடைத் தொழிற்பேட்டை ஆதிதிராவிடர்களுக்கென்றே அமையவுள்ளதால், சிறப்பு நிகழ்வாக நிலையான முதலீட்டில் 15%, அரசின் முதலீட்டு மான்யமாக வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அவ்வாறே கோவை மாவட்டம், திருப்பூர் வட்டாரத்திலுள்ள முதலிப்பாளையத்தில், ஆதிதிராவிடர்களுக்கென்றே அமைக்கவுள்ள பின்னலாடைத் தொழிற்பேட்டையில் 100 அலகுகளில் ஒவ்வொன்றுக்கும், சிறப்பு நிகழ்வாகக் கருதி, நிலையான முதலீட்டில் 15% அரசின் முதலீட்டு மான்யமாக வழங்குவதற்கு ஆணையிடப்படுகிறது.

4. பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி பயனாளிகள் மொத்தத் திட்டச் செலவில் 10% துணைப் பிணையமும் (Collateral security) அரசு 15% துணைப்பிணையமும் வழங்கவேண்டும். ஆனால், பயனாளிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழக்கமாகப் பின்பற்றும் வழிமுறைகளின்படி அது தரும் கடன்தொகையில் 25% மட்டும் துணைப் பிணையமாக செலுத்தினால் போதும். மொத்த திட்டச் செலவில் அரசு தருகின்ற 15% துணைப்பிணையத் தொகைக்கு (Collateral security) கூடுதலாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கும் கடன் தொகையில் 25%

பிணைத்தொகை இருக்குமானால், அந்த கூடுதல் வேறுபாட்டுத் தொகையை மட்டும் திருப்பூரில் பின்னலாடை முதலீட்டாளரிடம் பிணைத் தொகையாகப் பெறுவது போதுமானது என அரசு ஆணையிடுகிறது.

5. இந்த ஆணை நிதித்துறையின் 8-10-96 நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 3708/நி.செ./96 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

*பெறுநர்:*

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), சென்னை-14.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை, பெரியார் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, 35, 6.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.

*நகல்:*

இயக்குநர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-6.
நிதி, தொழில்துறை, சென்னை-9.
மாவட்ட மேலாளர், தாட்கோ, கோவை / பெரியார் மாவட்டம்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபி/அநமு) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**K.P. தங்கரத்னா,**
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பயிற்சி - துணைச் செவிலியர் பயிற்சி - அல்ட்ரூசா இண்டர்நேஷனல் ஸ்தாபனம் - 25 ஆதிதிராவிடப் பெண்களுக்கு துணைச் செவிலியர் பயிற்சி வழங்க மத்திய சிறப்பு நிதியுதவித் தொகையிலிருந்து நிதியுதவி அனுமதித்து உத்தரவு வழங்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

*அரசாணை நிலை எண். 44*      ***நாள்: 11-3-1997***

*படிக்க:*

அல்ட்ரூசா இண்டர்நேஷனல் ஸ்தாபனத் தலைவரின் 27-12-96 நாளிட்ட விண்ணப்பம்.

*ஆணை:*

*1997-98* ஆம் ஆண்டில் 25 ஆதிதிராவிடப் பெண்களுக்கு 12 மாதக் கால துணைச் செவிலியர் பயிற்சி அளிக்க மத்திய சிறப்பு நிதியிலிருந்து ரூ. 3,40,000/- வழங்க அல்ட்ரூசா இண்டர்நேஷனல் ஸ்தாபனம் கோரியுள்ளது.

2. அல்ட்ரூசா இண்டர்நேஷனல் ஸ்தாபனத்தின் கோரிக்கையை அரசு கவனத்துடன் ஆய்வு செய்தது. 25 ஆதிதிராவிடப் பெண்களுக்கு 1997-98-ல் 12 மாத காலம் துணைச் செவிலியர் பயிற்சி அளிக்க மத்திய சிறப்பு நிதியுதவித் தொகையிலிருந்து கீழ்க்கண்டவாறு ரூ. 3,16,000/- வழங்கலாம் என்று கருதி ஒப்புதலுக்காக அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன் வைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | பயிற்சி உதவித்தொகை ரூ. 300 ஒரு மாதத்திற்கு x25 மாணவிகள்x12 மாதங்கள் 300x25x12 | ரூ. 90,000/- |
| 2. | போக்குவரத்துச் செலவு (பயிற்சியாளர்) 250/- (மாதத்திற்கு) x25 பயிற்சியாளர்x12 மாதங்கள் 250x25x12 | ரூ. 75,000/- |
| 3. | சீருடை ரூ. 400 வீதம் 25 பயிற்சியாளர்களுக்கு ரூ. 400x25 | ரூ. 10,000/- |
| 4. | பயிற்றுநர் மற்றும் நிறுவனச் செலவு ஒரு நபருக்கு ரூ. 400 வீதம் 25 பயிற்சியாளர்களுக்கு 12 மாதங்களுக்கு ரூ. 400x25x12 | ரூ. 1,20,000/- |
| 5. | முதலுதவிப் பொருட்கள் வாங்க நபர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் 25 பேருக்கு | ரூ. 7,500/- |
| 6. | நிறுவனத்திற்காக போக்குவரத்து செலவினம் மாதம் ரூ. 500 வீதம் 12 மாதங்களுக்கு | ரூ. 6,000/- |
| 7. | புறநகர்ப் பகுதிகளில் மருத்துவ செயல்முறைத் திட்டம் தொடர்பாக முகாம்கள் நடத்த பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ. 300 வீதம் 25 நபர்களுக்கு (300x25) | ரூ. 7,500/- |
| | மொத்தம் .. .. | **ரூ. 3,16,000/-** |

அதிகாரம் அளிக்கப்பட்ட குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

3. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலுக்கி ... திராவிடப் ... 25
1997-98-ல் 12 மாத கா ... ் துணைச் செவிலியர் ... ட்ரூசா இ ... னல்

ஸ்தாபனத்திற்கு ரூ. 3,16,000/- (ரூபாய் மூன்று லட்சத்து பதினாராயிரம் மட்டும்) மத்திய சிறப்பு நிதியிலிருந்து மான்யமாக அளிக்க அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை தலைவர், அல்ட்ரூசா இண்டர்நேஷனல் நிறுவனத்திற்கு விடுவிக்குமாறு தாட்கோவின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இப்பயிற்சித் திட்டத்திற்கு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 25 பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து பயிற்சியளித்து பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கி பணியமர்த்துவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு அல்ட்ரூசா இண்டர்நேஷனல் நிறுவனம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. திட்டம் செயல்படுவது குறித்து, நிறுவனம் முன்னேற்ற அறிக்கையினை அரசுக்கும் மற்றும் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்கும் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
தலைவர், அல்ட்ரூசா இண்டர்நேஷனல் நிறுவனம், 20,
மாண்டியத் சாலை, எழும்பூர், சென்னை-8.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, 35, 6.

நகல்:

முதல்வர், சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை-3.
மருத்துவக் கல்லூரி இயக்குநர், சென்னை-5.
இயக்குநர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-6.
நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், தாட்கோ, சென்னை-101.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபி/அநமு) துறை, சென்னை-9.
(செயலீட்டுச் சான்றிதழ் பெறுவதற்காக)
இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

K.P. தங்கரத்னா,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

கருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - சிறப்பு மத்திய நிதியுதவி - கதர் கிராமத் தொழில் வாரியம் - காதித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இதுவரையிலும் அனுமதிக்கப்பட்டு செலவழிக்கப்படாமல் உள்ள தொகையினை தாட்கோவிற்கு திரும்பச் செலுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

*அரசாணை நிலை எண். 66* *நாள்: 10-4-1997*

*படிக்கவும்:*

1. *அரசாணை எண். 3191, சமூக நலத்துறை, நாள்: 27-12-82.*
2. *அரசாணை எண். 2738, சமூக நலத்துறை, நாள்: 3-12-84.*
3. *அரசாணை எண். 33, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 20-2-92.*
4. *அரசாணை எண். 266, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 7-12-92.*
5. *அரசாணை எண். 1, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 11-1-94.*
6. *தலைமைச் செயல் அலுவலர், கதர் கிராமத் தொழில் வாரியம் கடித எண். 86565/வி1(1)/96, நாள் 17-1-97.*

- - - -

***ஆணை:***

மத்திய சிறப்பு நிதியிலிருந்து காதித் துறைக்கு ஒப்பளிக்கப்பட்டு ஆதிதிராவிடர்களுக்குச் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் 21-1-97 அன்று ஆய்வு செய்து மேற்கொள்ளப்பட்டது. காதித்துறை செயலர் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் அலுவலர்களும் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தில், இதுவரையிலும் மத்திய சிறப்பு நிதி உதவியிலிருந்து ஒப்பளிக்கப்பட்டு சரிவரச் செயல்படுத்தப்படாமல் உள்ள திட்டங்கள் இனித் தொடர வேண்டுவதில்லை எனவும், ஏற்கனவே நிறைவேற்றாமல் உள்ள எண்ணிக்கைக்காக, ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள தொகையைக் காதித் துறையிடமிருந்து திரும்பப் பெறலாம் எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

2. இது வரையிலும், மத்திய சிறப்பு நிதியுதவியிலிருந்து ஒப்பளிக்கப்பட்டு சரிவரச் செயல்படுத்தப்படாமல் உள்ள கீழ்க்கண்ட திட்டங்களுக்கான செலவழிக்கப்படாத தொகையான ரூ. 73.11 இலட்சத்தினை காதித் துறையிடமிருந்து திரும்பப் பெறலாமென கருதப்பட்டது:

(1) காலணிப் பணிக்கூடம் மற்றும் தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்:

| ஆண்டு. | ஒப்பளிக்கப் பட்ட தொகை. | பயனாளிகள் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட காலணிப் பணிக் கூடம். | வழங்கப்பட்ட தையல் இயந் திரம். | இன்னும் வழங்கப் படவேண்டிய காலணிப் பணிக் கூடம். | இன்னும் வழங்கப் படவேண்டிய தையல் இயந் திரம். | தாட்கோ விடுவித்த தொகை. | காதிபோர்டு மூலம் செல வழிக்கப் பட்ட தொகை. | காதிபோர்டு மூலம் செல வழிக்கப் படாத தொகை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | (ரூபாய் லட்சத்தில்) | | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1991-92 | 200 | 2000 | 1653 | 700 | 347 | 1300 | 180 | 393.60 | 66.40 |
| 1992-93 | 200 | 2000 | 1616 | 1413 | 384 | 587 | 180 | (மூன்றாண்டு களுக்கும் சேர்த்து) | |
| 1993-94 | 200 | 2000 | 1216 | 176 | 784 | 1824 | 100 | | |
| மொத்தம் | .. | | **4485** | **2289** | **1515** | **3711** | **460** | | |

(2) தொகுப்பு வளர்ச்சித் திட்டங்களின் கீழ் காதி வாரியத்திற்கு ஒப்பளிக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள தொகையின் விவரங்கள்:

| வ.எண். | அரசாணை எண் மற்றும் நாள். | திட்டம். | செலவழிக்கப்படாமல் காதி வாரியத்தில் உள்ள தொகை. |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | | | மான்யத் தொகை (ரூ. லட்சத்தில்) |
| 1. | 3191 நாள் 27-12-92 | தருமபுரி மாவட்டம், கரூர் வட்டம் வீரப்பநாயக்கன்பட்டியில் நேபாளி தறி அலகு ஆரம்பித்தல். | 3.16 |
| 2. | 2738 நாள் 03-12-84 | திருநெல்வேலி மாவட்டம், உண்ணான் குளத்தில் நேபாளி தறி மையம் ஆரம்பித்தல். | 3.11 |
| 3. | 2738 நாள் 03-12-84 | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம், காளையார் கோவில் ஒன்றியம், நாட்டரசன் கோட்டையில் நேபாளி தறி அலகு ஆரம்பித்தல். | 0.44 |
| | | மொத்தம் | **6.71** |

| | | (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| (1) | காலணிப் பணிக்கூடம் மற்றும் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் காதி வாரியத்தில் செலவழிக்கப்படாமல் உள்ள தொகை. | 66.40 |
| (2) | தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செலவழிக்கப்படாத தொகை. | 6.71 |
| | மொத்தம் | **73.11** |

3. மேலே பத்தி 2 மற்றும் 3-ல் உள்ள கருத்துரு அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன்வைக்கப்பட்டது. குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலுக்கிணங்க மத்திய சிறப்பு நிதியுதவியிலிருந்து ஒப்பளிக்கப்பட்டு சரிவரச் செயல்படுத்தப்படாமல் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் காலணிப் பணிக்கூடம் மற்றும் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், தொகுப்பு வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு முறையே செலவழிக்கப்படாத தொகையான ரூ. 66.40 லட்சம் மற்றும் ரூ. 6.71 லட்சம் ஆக மொத்தம் ரூ. 73.11 லட்சத்தினை (ரூபாய் எழுபத்தி மூன்று லட்சத்து பதினொன்றாயிரம் மட்டும்) காதித் துறையிடமிருந்து திரும்பப் பெற அரசு ஆணை இடப்படுகிறது.

4. மேலே பத்தி 3-ல் திரும்பப் பெறுமாறு ஆணையிடப்பட்டுள்ள தொகையினை உடனடியாக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்கு திருப்பிச் செலுத்துமாறு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். திரும்பச் செலுத்தப்பட்டதற்கான அறிக்கையினை தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியமும் மேற்கண்ட தொகையைப் பெற்றுக் கொண்டதற்கான அறிக்கையை தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரும் அரசுக்கு விரைவில் அனுப்பிவைக்க வேண்டும்.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

*பெறுநர்:*

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை-108.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, 35, 6.
செயலர், நிதி, கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் காதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபி/ஆதிந5/அநமு) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5) துறை (தொகுப்பு வளர்ச்சித் திட்ட தொகை திரும்பப் பெற மேல் நடவடிக்கைக்காக).
இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**K.P. தங்கரத்னா,**
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - சிறப்பு உள்ளடக்கத் திட்டம் - தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் - 1996-97 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் - கலப்பினக்கன்று வளர்ப்புத் திட்டம் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் - சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து மானியம் ஒப்பளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை நிலை எண் 72 நாள்: 2-5-1997

படிக்க:

1. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநரின் நேர்முக கடித எண். 16571/எம்பி2.2/96, நாள் 17-9-1996.

2. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநரின் நேர்முக கடித எண். 13997/எம்பி2/96, நாள் 8-7-1996.

3. தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கடித எண். 14390/ஜி4/1996, நாள் 18-12-1996.

4. தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கடித எண். ஜி3/14391/1996, நாள் 19-2-1997.

ஆணை:

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநர் 1996-97 ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் திட்டங்களை அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளார்:—

| வ.எண். | திட்டத்தின் பெயர். | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்த திட்டச் செலவு. | தாட்கோ மான்யம். | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | கறவை மாடுகள் வழங்கும் திட்டம் | 6500 | 780.00 | 390.00 | 390.00 |
| 2. | கலப்பினக்கன்று வளர்ப்புத் திட்டம் | 2000 | 213.60 | 213.60 | .. |
| | மொத்தம் .. | **8500** | **993.60** | **603.60** | **390.00** |

மேற்கண்ட இரண்டு திட்டங்களைச் செயல்படுத்த ரூ. 603.60 இலட்சங்கள் மான்யமாக மத்திய சிறப்பு நிதியிலிருந்து ஒப்பளிக்கும்படி தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநர் கோரியுள்ளார். தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் இத்திட்டத்தைப் பரிந்துரைத்துள்ளார்.

2. மாவட்ட வாரியாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் மாடுகள், கடன், மான்யம் முதலியவை இரண்டு திட்டங்களுக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1. கறவை மாடுகள் வழங்கும் திட்டம்.

| வ.எண். | மாவட்டம்/ ஒன்றியம். | பயனாளிகளின் எண்ணிக்கை. | கறவை மாடுகளின் எண்ணிக்கை. | மான்யம். | வங்கிக் கடன். | மொத்த செலவு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | செங்கை-எம்ஜிஆர் | 500 | 1000 | 30.00 | 30.00 | 60.00 |
| 2. | தென்னாற்காடு-வள்ளலார் | 750 | 1500 | 45.00 | 45.00 | 90.00 |
| 3. | வடாற்காடு-அம்பேத்கார் | 750 | 1500 | 45.00 | 45.00 | 90.00 |
| 4. | தருமபுரி | 250 | 500 | 15.00 | 15.00 | 30.00 |
| 5. | சேலம் | 100 | 200 | 6.00 | 6.00 | 12.00 |
| 6. | பெரியார் | 350 | 700 | 21.00 | 21.00 | 42.00 |
| 7. | கோயம்புத்தூர் | 180 | 360 | 10.80 | 10.80 | 21.60 |
| 8. | நீலகிரி | 175 | 350 | 10.50 | 10.50 | 21.00 |
| 9. | மதுரை | 1000 | 2000 | 60.00 | 60.00 | 120.00 |
| 10. | திண்டுக்கல்-மன்னர் திருமலை | 300 | 600 | 18.00 | 18.00 | 36.00 |
| 11. | திருச்சி | 550 | 1100 | 33.00 | 33.00 | 66.00 |
| 12. | தஞ்சாவூர் | 300 | 600 | 18.00 | 18.00 | 36.00 |
| 13. | புதுக்கோட்டை | 50 | 100 | 3.00 | 3.00 | 6.00 |
| 14. | இராமநாதபுரம் | 425 | 850 | 25.50 | 25.50 | 51.00 |
| 15. | காமராஜர் | 350 | 700 | 21.00 | 21.00 | 42.00 |
| 16. | திருநெல்வேலி | 450 | 900 | 27.00 | 27.00 | 54.00 |
| 17. | கன்னியாகுமரி | 20 | 40 | 1.20 | 1.20 | 2.40 |
| | மொத்தம் .. | **6500** | **13000** | **390.00** | **390.00** | **780.00** |

## 2. கலப்பினக்கன்று வளர்ப்புத் திட்டம்.

| வ.எண். | மாவட்டம்/ஒன்றியம். | வழங்கப் படும் கன்றுகள். | கன்றுகளுக் கான தீவனத் தொகை (ஒரு கன்றுக்கு ரூ. 10.440 வீதம்). | மருத்துவச் செலவு (ஒரு கன்றுக்கு (ரூ. 40 வீதம்). | காப்பீடு (ஒரு கன்றுக்கு ரூ. 200 வீதம்). | மொத்த தொகை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | செங்கை-எம்ஜிஆர் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 2. | தென்னாற்காடு-வள்ளலார் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 3. | வடாற்காடு-அம்பேத்கார் | 400 | 41.760 | 0.160 | 0.800 | 42.720 |
| 4. | தருமபுரி | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 5. | சேலம் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 0.680 |
| 6. | பெரியார் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 7. | கோயம்புத்தூர் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 8. | நீலகிரி | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 9. | மதுரை | 200 | 20.880 | 0.080 | 0.400 | 21.360 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 10. | திண்டுக்கல் மன்னர் திருமலை | 150 | 15.660 | 0.060 | 0.300 | 16.020 |
| 11. | திருச்சி | 100 | 10.4400 | 0.040 | 0.200 | 10.680 |
| 12. | தஞ்சாவூர் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 13. | புதுக்கோட்டை | 50 | 5.220 | 0.020 | 0.100 | 5.340 |
| 14. | இராமநாதபுரம் | 75 | 7.830 | 0.030 | 0.150 | 8.010 |
| 15. | காமராஜர் | 75 | 7.830 | 0.030 | 0.150 | 8.010 |
| 16. | திருநெல்வேலி | 75 | 7.830 | 0.030 | 0.150 | 8.010 |
| 17. | கன்னியாகுமரி | 75 | 7.830 | 0.030 | 0.150 | 8.010 |
| | **மொத்தம்** | **2000** | **208.800** | **0.800** | **4.000** | **213.600** |

3. மேற்கண்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் கருத்துருக்கள் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன் வைக்கப்பட்டன. அக்குழு பத்தி 2-ல் கண்டுள்ளபடி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முடிவிற்கிணங்க, 1996-97-ல் 6500 ஆதிதிராவிடர்களுக்கு 13,000 கறவை மாடுகள் வழங்குவதற்காக 50% மான்யமாக ரூ. 390.00 லட்சமும் (ரூபாய் முன்னூற்றுத் தொண்ணூறு லட்சம் மட்டும்) 2,000 ஆதிதிராவிடர்களுக்கு கலப்பினக் கன்றுகள் வளர்ப்பதற்கு உதவியாக 100% மானியமாக ரூ. 213.60 லட்சமும் (ரூபாய் இருநூற்றுப் பதிமூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தாட்கோவிடமுள்ள சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பத்தி 4-ல் வழங்கப்பட்டுள்ள தொகையினை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநருக்கு விடுவிக்க அறிவுறுத்தப்படுகிறார். இத்திட்டம் தொடர்பாக செலவிடப்படாத தொகை தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருக்கு திருப்பிச் செலுத்தப்பட்டு அரசுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். மேலும் செலவீட்டுச் சான்றிதழ்கள் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்கும் திட்டத்தினை நிறைவேற்றியதற்கான சான்றிதழ்களை அரசுக்கும் அனுப்புமாறு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநரும், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோவும் இத்திட்டங்கள் சரியாகச் செயல்படுகின்றனவா என்பதை சரி பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் தொகையினை செலவிடுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

7. இத்திட்டங்களின் முன்னேற்றம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காலமுறை திட்ட ஆய்வுக் கூட்டங்களின்போது இத்திட்டங்களையும் ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலாளர்.

பெறுநர்:

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம்,
சென்னை-51.
ஆணையர் பால் உற்பத்தி மற்றும் பண்ணை மேம்பாட்டுத்துறை,
சென்னை-51.
கால்நடை பராமரிப்புத் துறை, சென்னை-6.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, 35, 6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).

நகல்:

செயலர், கால்நடை பராமரிப்பு/நிதித்துறை, சென்னை-9.
அனைத்து மண்டல/மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.
அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் (பால்பண்ணை).
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபி/அநமு) துறை, சென்னை-9.
இ.கோ./உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**K.P. தங்கரத்னா,**
*பிரிவு அலுவலர்.*

### தமிழ்நாடு அரசு

#### சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - சிறப்பு உள்ளடக்கத் திட்டம் - தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் - 1997-98 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் - கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம் மற்றும் கறவை மாடுகள் வழங்கல் திட்டம் - சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து மானியம் ஒப்பளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

#### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை நிலை எண். 88 நாள்: 5-5-1997

1. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநரின் நேர்முக கடித எண். 16571/எம்பி.2.2/96, நாள் 17-9-96.
2. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநரின் நேர்முக கடித எண். 13997/எம்பி2/96, நாள் 8-7-96.
3. தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கடித எண். 14390/ஜி4/96, நாள் 18-12-96.
4. தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கடித எண். 14391/ஜி3/96, நாள் 19-2-97.
5. அரசாணை நிலை எண். 72, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 2-5-97.

ஆணை:

பார்வை 5-ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில், 1996-97 ஆம் ஆண்டுக்கான கறவை மாடுகள் வழங்கும் திட்டம் மற்றும் கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டத்தில் 6,500 ஆதிதிராவிடர்களுக்கு 13,000 கறவை மாடுகள் வழங்க 50% மானியமாக ரூ. 390 லட்சங்களும், 2,000 ஆதிதிராவிடர்களுக்கு கலப்பினக் கன்றுகள் வழங்க 100% மானியமாக ரூ. 213.60 லட்சங்களும் வழங்கப்பட்டுள்ளது. இதே தொகையை இதே அளவு பயனாளிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டிற்கும் கீழ்க்கண்டவாறு வழங்க அதிகாரமளிக்கப்பட்ட குழு ஒப்புதல் அளித்துள்ளது:—

| வ.எண். | திட்டத்தின் பெயர். | பயனாளிகளின் எண்ணிக்கை. | மொத்த திட்டச் செலவு. | தாட்கோ மான்யம். | வங்கிக் கடன். |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | கறவை மாடுகள் வழங்கும் திட்டம் | 6500 | 780.00 | 390.00 | 390.00 |
| 2. | கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம் | 2000 | 213.60 | 213.60 | |
| | **மொத்தம்** .. | **8500** | **993.60** | **603.60** | **390.00** |

2. மாவட்ட வாரியாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் மாடுகள் கடன், மானியம் முதலியவை இரண்டு திட்டங்களுக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### 1. கறவை மாடுகள் வழங்கும் திட்டம்.

| வரிசை எண். | மாவட்டம்/ ஒன்றியம். | பயனாளிகளின் எண்ணிக்கை. | கறவை மாடுகளின் எண்ணிக்கை. | மான்யம். | வங்கிக் கடன். (ரூபாய் இலட்சத்தில்) | மொத்த செலவு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | செங்கை எம்ஜிஆர் | 500 | 1000 | 30.00 | 30.00 | 60.00 |
| 2. | தென்னாற்காடு வள்ளலார் | 750 | 1500 | 45.00 | 45.00 | 90.00 |
| 3. | வடாற்காடு அம்பேத்கர் | 750 | 1500 | 45.00 | 45.00 | 90.00 |
| 4. | தருமபுரி | 250 | 500 | 15.00 | 15.00 | 30.00 |
| 5. | சேலம் | 100 | 200 | 6.00 | 6.00 | 12.00 |
| 6. | பெரியார் | 350 | 700 | 21.00 | 21.00 | 42.00 |
| 7. | கோயம்புத்தூர் | 180 | 360 | 10.80 | 10.80 | 21.60 |
| 8. | நீலகிரி | 175 | 350 | 10.50 | 10.50 | 21.00 |
| 9. | மதுரை | 1000 | 2000 | 60.00 | 60.00 | 120.00 |
| 10. | திண்டுக்கல் மன்னர் திருமலை | 300 | 600 | 18.00 | 18.00 | 36.00 |
| 11. | திருச்சி | 550 | 1100 | 33.00 | 33.00 | 66.00 |
| 12. | தஞ்சாவூர் | 300 | 600 | !8.00 | 18.00 | 36.00 |
| 13. | புதுக்கோட்டை | 50 | 100 | 3.00 | 3.00 | 6.00 |
| 14. | ராமநாதபுரம் | 425 | 850 | 25.50 | 25.50 | 51.00 |
| 15. | காமராஜர் | 350 | 700 | 21.00 | 21.00 | 42.00 |
| 16. | திருநெல்வேலி | 450 | 900 | 27.00 | 27.00 | 54.00 |
| 17. | கன்னியாகுமரி | 20 | 40 | 1.20 | 1.20 | 2.40 |
| | **மொத்தம் ..** | **6500** | **13000** | **390.00** | **390.00** | **780.00** |

### 2. கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம்.

| வரிசை எண். | மாவட்டம்/ ஒன்றியம் | வழங்கப் படும் கன்றுகள் | கன்றுகளுக்கான கான தீவன தொகை (1 கன்றுக்கு ரூ. 10.440) | மருத்துவ செலவு (1 கன்றுக்கு ரூ. 40) | காப்பீடு (1 கன்றுக்கு ரூ. 200) | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | செங்கை எம்ஜிஆர் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 2. | தென்னாற்காடு வள்ளலார் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 3. | வடாற்காடு அம்பேத்கர் | 400 | 41.760 | 0.160 | 0.800 | 42.720 |
| 4. | தருமபுரி | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 5. | சேலம் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 6. | பெரியார் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 7. | கோயம்புத்தூர் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 8. | நீலகிரி | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 9. | மதுரை | 200 | 20.880 | 0.080 | 0.400 | 21.360 |
| 10. | திண்டுக்கல் மன்னர் திருமலை | 150 | 15.660 | 0.060 | 0.300 | 16.020 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 11. | திருச்சி | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 12. | தஞ்சாவூர் | 100 | 10.440 | 0.040 | 0.200 | 10.680 |
| 13. | புதுக்கோட்டை | 50 | 5.220 | 0.020 | 0.100 | 5.340 |
| 14. | ராமநாதபுரம் | 75 | 7.830 | 0.030 | 0.150 | 8.010 |
| 15. | காமராஜர் | 75 | 7.830 | 0.030 | 0.150 | 8.010 |
| 16. | திருநெல்வேலி | 75 | 7.830 | 0.030 | 0.150 | 8.010 |
| 17. | கன்னியாகுமரி | 75 | 7.830 | 0.030 | 8.150 | 0.010 |
| | மொத்தம் | **2000** | **208.800** | **0.800** | **4.000** | **213.600** |

3. 1998-99 ஆம் ஆண்டிலிருந்து கறவை மாடு வழங்கும் திட்டம் மாநிலம் முழுவதுமாக செயல்படுத்துவதற்குப் பதிலாக ஆதிதிராவிட மக்கள் தொகையின் அடிப்படையில் சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அந்தக் கிராமங்களில் உள்ள அனைத்து ஆதிதிராவிட குடும்பங்களும் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு ஒப்புதல் அளித்துள்ளது.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முடிவிற்கிணங்க 1997-98-ல் 6,500 ஆதிதிராவிடர்களுக்கு 13,000 கறவை மாடுகள் வழங்குவதற்காக 50% மானியமாக ரூ. 390.00 லட்சமும் (ரூபாய் முன்னூற்றுத் தொண்ணூறு லட்சம் மட்டும்) 2,000 ஆதிதிராவிடர்களுக்குக் கலப்பினக் கன்றுகள் வளர்ப்பதற்கு உதவியாக 100% மானியமாக ரூ. 213.60 லட்சமும் (ரூபாய் இருநூற்றுப் பதிமூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தாட்கோவிடமுள்ள சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலும், 1998-99-லிருந்து கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தைப் பரவலாக மாநிலம் முழுவதும் செயல்படுத்துவதற்குப் பதிலாக ஆதிதிராவிட மக்கள் தொகையின் அடிப்படையில், சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அந்தக் கிராமங்களிலுள்ள அனைத்து ஆதிதிராவிடக் குடும்பங்களும் பயனடையும் வகையில் செயல்படுத்துமாறு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் மேலாண்மை இயக்குநரை அறிவுறுத்தியும் ஆணையிடப்படுகிறது. இதற்கான தக்க கருத்துருக்களை 1997 நவம்பர்-டிசம்பர் திங்களில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பத்தி 4-ல் வழங்கப்பட்டுள்ள தொகையினை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநருக்கு விடுவிக்க அறிவுறுத்தப்படுகிறார். இத்திட்டம் தொடர்பாக செலவிடப்படாத தொகை தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருக்கு திருப்பிச் செலுத்தப்பட்டு அரசுக்கும் தெரிவிக்கப்படவேண்டும். மேலும் செலவீட்டுச் சான்றிதழ்கள் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்கும், திட்டத்தினை நிறைவேற்றியதற்கான சான்றிதழ்களை அரசுக்கும் அனுப்புமாறு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மேலாண்மை இயக்குநரும், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தாட்கோவும் இத்திட்டங்கள் சரியாகச் செயல்படுகின்றனவா என்பதை சரிபார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் தொகையினை செலவிடுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. இத்திட்டங்களின் முன்னேற்றம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காலமுறை திட்ட ஆய்வுக் கூட்டங்களின் போது, இத்திட்டங்களையும் ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

பெறுநர்:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், சென்னை-51.
ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பண்ணை மேம்பாடு, சென்னை-51.
இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, சென்னை-6.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).

நகல்:

செயலர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நிதித்துறை, சென்னை-9.
அனைத்து மண்டல/மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.
அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்கள் (பால் பண்ணை அனைத்து மாவட்டங்களும்).
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமப/அநமு) துறை, சென்னை-9.
இ.கோ./உ.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

ஒ.டா. தங்கராசு,
பிரிவு அலுவலர்.

நகல் :

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் - சிறப்பு உள்ளடக்கத் திட்டம் - 1992-93 - ஆடு அலகுகள் நிறுவுதல் - ஊழியர்களுக்குக் கூடுதல் செலவினம் மேற்கொண்டது - ஒப்பளிப்பு - ஆணையிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

*அரசாணை (நிலை) எண் 91* — *நாள்: 1997 மே 13.*

படிக்க:—

1. அரசாணை நிலை எண் 161, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 10-7-1992.
2. அரசாணை நிலை எண் 80, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 13-5-1996.
3. கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர், கடித எண் 112116/எஸ்சிஏ1/92, நாள் 31-8-1993 மற்றும் 30-1-1997.

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கால்நடை பராமரிப்புத்துறை பணியாளர்களுக்கு 1-5-1992 முதல் 30-4-1993 வரை ஊதியச் செலவினமாக ரூ. 2,49,000 ஒப்பளிப்பு செய்யப்பட்டது. ஆனால், பணியாளர்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையைவிட கூடுதலாக செலவழிக்கப்பட்ட ரூ. 53,778-ஐ வழங்குமாறு கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் கோரியுள்ளார். இந்தக் கூடுதல் செலவினம், 5% ஊதியம் அதிகப்படியாக அமைச்சுப் பணியாளர்களுக்கு அரசால் வழங்கப்பட்டதாலும் மற்றும் பஞ்சப்படி உயர்வின் காரணமாகவும் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட கூடுதல் செலவினத்தை தாட்கோவிடம் உள்ள சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து வழங்குமாறும் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் கோரியுள்ளார். மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 1-5-1995 முதல் 31-3-1996 வரையில் பணியாளர்கள் ஊதியச் செலவுக்காக ஒப்பளிக்கப்பட்ட ரூ. 2.70 லட்சத்தில் ரூ. 1.10 லட்சம் மட்டும் செலவழிக்கப்பட்டுள்ளதாக கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக ஆய்வு செய்தது. 1-5-1992 முதல் 30-4-1993 வரை பணியாளர்களுக்காக கூடுதலாக செலவழிக்கப்பட்ட ரூ. 53,778-ஐ கால்நடை பராமரிப்புத் துறைக்கு வழங்கலாமென்றும் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட ரூ. 2.70 இலட்சத்தில் செலவழிக்கப்பட்ட ரூ. 1.10 லட்சம் போக மீதமுள்ள ரூ. 1.60 லட்சத்தை தாட்கோவிற்கு திரும்பச் செலுத்துமாறு கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநருக்கு அறிவுறுத்தலாமென்றும் அரசு தீர்மானித்தது.

3. மேற்கண்ட கருத்துருக்கள் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டன. குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலின்படி, மேலே பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில், கால்நடை பராமரிப்புத்துறை பணியாளர்கள் சம்பளத்திற்கென வழங்கப்பட்ட ரூ. 2,49,000-ஐ விட கூடுதலாக செலவழிக்கப்பட்ட ரூ. 53,778-ஐ (ரூபாய் ஐம்பத்தி மூன்றாயிரத்து எழுநூற்று எழுபத்தி எட்டு மட்டும்) மான்யமாக சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநருக்கு வழங்க அரசு ஆணையிடுகிறது. மேலும், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பணியாளர்கள் ஊதியச் செலவிற்காக ஒப்பளிக்கப்பட்ட ரூ. 2.70 லட்சத்தில் செலவழிக்கப்பட்ட ரூ. 1.10 லட்சம் போக மீதமுள்ள ரூ. 1.60 லட்சத்தை (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தாட்கோவிற்கு திரும்பச் செலுத்துமாறு கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ. 53,778-ஐ கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநருக்கு வழங்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர், சென்னை-6.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.

நகல்:

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை/நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபி/அநமு) துறை, சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

சு. ஆறுமுகம்,
பிரிவு அலுவலர்.

நகல் :

**சுருக்கம்**

**ஆதிதிராவிடர் நலம் - பட்டு வளர்ச்சி - சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் பட்டு சுற்றுதல் மற்றும் பட்டு முறுக்கேற்றுதல் தொழில்பேட்டை அமைத்தல் - பயனாளிகளுக்கு பயிற்சி அளித்தல் - ஆணையிடப்படுகிறது.**

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

*அரசாணை நிலை எண். 92*      *நாள்: 1997 மே 13.*

*படிக்க:—*

*1. அரசாணை நிலை எண். 93, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 15-4-93.*

*2. அரசாணை நிலை எண். (டி)34, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 22-2-96.*

*3. பட்டு வளர்ச்சி இயக்குநர் கடித எண். 23534/இஏபி2/96 நாள் 16-10-96.*

***ஆணை:***

வரிசை எண். 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில், சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் தர்மபுரி, சேலம், வாணியம்பாடி, திருவண்ணாமலை, திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் தென்காசி ஆகிய 7 இடங்களில் பட்டு சுற்றுதல் மற்றும் முறுக்குதல் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 80 ஆதிதிராவிட பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், பல்வேறு காரணங்களால், மேற்கண்ட திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் வாங்குவதில் காலதாமதம் ஆகிறது என்று பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். 27-9-96-ல் பட்டு வளர்ச்சித் திட்ட முன்னேற்றத்தை ஆய்வு செய்தபோது பயனாளிகளுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி அளிக்கலாம் என்பதற்கும் ஆரம்பத்தில் வரிசை எண். 2-ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட திறமை மேம்பாட்டு திட்டப் பயிற்சி முறைகளின்படி குறைந்த பயனாளிக்கு பயிற்சி அளிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். ஈரோடு மற்றும் ஓசூரில், 40 பயனாளிகளுக்கு மேற்கண்ட பயிற்சி அளிக்க மதுரையில் உள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி மையம் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், இதற்கான பயிற்சி செலவு ரூ. 2.00 லட்சம் ஆகிறது என்றும், இதனை ஒப்பளிக்குமாறும் பட்டு வளர்ச்சி இயக்குநர் கோரியுள்ளார்.

2. மேற்கண்ட பட்டு வளர்ச்சித்துறை இயக்குநரின் கருத்துரு தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. பட்டு நூற்பு, மற்றும் பட்டு முறுக்கேற்றுதல் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்ட பின்பு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி (EDP) அளிக்கப்படலாம் என்றும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பயிற்சிக்காக வழங்கப்பட்ட ரூ. 4.62 லட்சத்திற்குள் ஈரோடு மற்றும் ஓசூரில் 40 பயனாளிகளுக்கு மதுரையில் உள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மையத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி (EDP) உட்பட அனைத்து பயிற்சியும் அளிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

3. மேற்கண்ட கருத்துரு அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

4. குழுவின் ஒப்புதலின்படி பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றுதல் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்ட பின்பு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி (EDP) அளிக்கப்படலாம் என்றும், மேலும், மேலே வரிசை எண். 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில்

பயிற்சிக்காக வழங்கப்பட்ட ரூ. 4.62 லட்சத்திற்குள் ஈரோடு மற்றும் ஓசூரில் 40 பயனாளிகளுக்கு மதுரையில் உள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மையத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி (EDP) உட்பட அனைத்துப் பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும் என்று பட்டு வளர்ச்சி இயக்குநருக்கு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
பட்டு வளர்ச்சி இயக்குநர், சேலம்-636 061.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, 35, 6.

நகல்:

கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் காதித்துறை, நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபி/அநமு) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

சு. ஆறுமுகம்,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - தாட்கோ - மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டம் - சென்னை மாவட்டத்தில் 30 ஆதிதிராவிடப் பெண்களுக்கு ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி அளித்து ஆட்டோ வாங்கிக் கொடுக்க மத்திய சிறப்பு நிதியிலிருந்து நிதி அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (நிலை) எண். 115 நாள்: 1997 ஜூன் 4.

படிக்க:

தொழில் வணிக இயக்குநரின் கடித எண். 104740/ஈடிபி1/97, நாள் 12-2-97.

**ஆணை:**

தொழில் வணிக இயக்குநர், பார்வையில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் சென்னையில் 30 ஆதிதிராவிடப் பெண்களுக்கு ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி அளித்து ஆட்டோ வாங்கிக் கொடுக்க மத்திய சிறப்பு நிதியுதவித் தொகையிலிருந்து கீழ்க்கண்டவாறு நிதி அனுமதிக்குமாறு கேட்டிருந்தார்.

| | | |
|---|---|---|
| அ. | நபர் ஒருவருக்கு ரூ. 18,000/- மான்யம் வீதம் 30 நபர்களுக்கு .. | ரூ. 5,40,000/- |
| ஆ | ஒரு நபருக்கு விளிம்புத் தொகை 20% ரூ. 12,000/- வீதம் 30 நபர்களுக்கு .. | ரூ. 3,60,000/- |
| இ. | பயிற்சி மான்யம் ரூ. 1500/- வீதம் 30 நபர்களுக்கு | ரூ. 45,000/- |
| ஈ. | வங்கிக் கடன் .. | ரூ. 9,42,000/- |
| உ. | பயனாளிகள் பங்குத் தொகை ரூ. 100 வீதம் 30 நபர்களுக்கு .. | ரூ. 3,000/- |

2. மேற்குறிப்பிட்டுள்ள தொழில் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, சென்னை மாவட்டத்தில் அமைந்திருக்கும் ஆதிதிராவிடர் ஆட்டோ ஓட்டுநர் சங்கங்களைத் தேர்வு செய்து சென்னை நகரில் மட்டும் 30 ஆதிதிராவிடப் பெண்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு அச்சங்கங்களின் மூலம் பயிற்சி அளித்து பயிற்சி முடிந்து பின்பு அவர்களுக்கு ஆட்டோ வாங்கிக் கொடுக்கலாம் எனவும், பயிற்சிக் கட்டணத்தை பயிற்சி அளிக்கும் அந்தந்த ஆட்டோ சங்கத்திற்கே கொடுக்கலாம் எனவும், இத்திட்டத்திற்கு மேலே பத்தி 1-ல் (அ) (ஆ மற்றும் (இ)-ல் குறிப்பிட்டுள்ள செலவினை தொழில் வணிக இயக்குநர் கேட்டுள்ளவாறு அனுமதிக்கலாம் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேலே பத்தி 2-ல் உள்ள கருத்துரு அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டது. குழு அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலுக்கிணங்க 1997-98 ஆம் ஆண்டில், சென்னை மாவட்டத்தில் அமைந்திருக்கும் ஆட்டோ ஓட்டுநர் சங்கங்களைத் தேர்வு செய்து சென்னை நகரில் மட்டும் 30 ஆதிதிராவிடப் பெண்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு ஆதிதிராவிடர் ஆட்டோ ஓட்டுநர் சங்கங்களின் மூலம் ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி அளித்து அவர்களுக்கு ஆட்டோ வாங்கிக் கொடுக்க மான்யமாக ரூ. 5,40,000/-மும் (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) பயிற்சி மான்யமாக ரூ. 45,000/-மும் (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) தாட்கோ நிறுவனத்திடமிருக்கும் மத்திய சிறப்பு நிதியுதவியிலிருந்தும், விளிம்புத் தொகையாக ரூ. 3,60,000/-மும் (ரூபாய் மூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) வழங்க அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை தொழில் வணிக இயக்குநர், சென்னை-5 அவர்களுக்கு விடுவிக்குமாறு தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இத்திட்டத்திற்கு சென்னையிலுள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 30 பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆதிதிராவிடர் ஆட்டோ ஓட்டுநர் சங்கங்களின் மூலம் பயிற்சி அளித்து ஆட்டோ ஓட்டுநர் உரிமம் பெற்றுக் கொடுத்து அவர்களுக்கு ஆட்டோ வாங்கிக் கொடுத்து திட்டத்தினைச் சிறப்பான முறையில் செயல்படுத்துமாறு தொழில் வணிக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இத்திட்டம் செயல்படுத்துவது குறித்த முன்னேற்ற அறிக்கை அரசுக்கும் மற்றும் மேலாண்மை இயக்குநர் தாட்கோவிற்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

தொழில் வணிக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, 35, 6.

நகல்:

இயக்குநர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-6.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், தாட்கோ, சென்னை-101.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முகச் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபி/அநமு) துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை.
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஓ.ட. தங்கராசு,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வேளாண்மைத்துறை - 1996-97 ஆம் ஆண்டிற்கான திட்டம் - விதைப்பண்ணைகள் அமைத்தல் - சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து மான்யம் ஒப்பளித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

அரசாணை நிலை எண். 118, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 1997 ஜுன் 10.
படிக்க:

வேளாண்மை இயக்குநரின் கடித எண். பி.டி.எஸ்.3/150226/96, நாள் 11-10-96.

**ஆணை:**

1996-97 ஆம் ஆண்டிற்கு, சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து மானியத்துடன் செயல்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட ஏனைய திட்டங்களுடன் ஆதிதிராவிடர்களுக்கு விதைப் பண்ணைகள் அமைப்பதற்கு உதவுவதற்கான திட்டம் ஒன்றும் வேளாண்மை இயக்குநர் அனுப்பியுள்ளார். முதல் கட்டமாக இதனை முன்னோடித் திட்டமாக கீழ்க்கண்ட 16 மாவட்டங்களில், 0.2 ஹெக்டேர் முதல் 1 ஹெக்டேர் வரை நிலம் சொந்தமாக உள்ள 2000 ஆதிதிராவிடர்களுக்கான மொத்தம் 1400 ஹெக்டேரில் விதைப் பண்ணைகள் அமைத்துச் செயல்படுத்தலாம் என்று வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்:

1. தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்
2. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்
3. அண்ணா மாவட்டம்
4. எம்.ஜி.ஆர். மாவட்டம்
5. தஞ்சாவூர் மாவட்டம்
6. நாகை காயிதே மில்லத் மாவட்டம்
7. திருவாரூர் ஏ.டீ. பன்னீர்செல்வம் மாவட்டம்
8. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்
9. கரூர் தீரன் சின்னமலை மாவட்டம்
10. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்
11. இராஜாஜி மாவட்டம்
12. சேலம் மாவட்டம்
13. வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்
14. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்
15. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்
16. வ.உ. சிதம்பரனார் மாவட்டம்

2. நிலம் சீர்படுத்துவதிலிருந்து விதை நெல் தயாரித்து, விநியோகம் செய்வதற்காக சிப்பம் தயாரிக்கும் வரையிலான ஏனைய பணிகளுக்காக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 5000 செலவாகும் என்று வேளாண்மை இயக்குநரால் கணக்கிடப்பட்டுள்ளது. 1400 ஹெக்டேரில் விதைப்பண்ணைகள் அமைப்பதற்காக ஹெக்டேருக்கு ரூ. 5000 வீதம் மொத்தம் ரூ. 70 லட்சம் செலவாகும் என்று கணக்கிட்டு மொத்த திட்டச் செலவையும் சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து மானியமாக வழங்க வேளாண்மை இயக்குநர் கோரியுள்ளார். இந்த விதைப்பண்ணைகள் தயாரிக்கின்ற விதை நெல்லை வேளாண் துறையின்

கொள்முதல் பிரிவு வாங்கிக்கொள்ளும். விதை மற்றும் இதர இடு பொருள்கள் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும். பயனாளிகளுக்கான கூலி மற்றும் இயந்திர சாமான்களுக்கான வாடகையை ஆதிதிராவிட விவசாயிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. மேற்கண்ட வேளாண்மை இயக்குநரின் கருத்துரு அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன்ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, இத்திட்டத்தை முழு மானியத்திற்குப் பதிலாக 75% மானியமும், 25% பயனாளியின் பங்குமாக செயல்படுத்தலாமென்று முடிவெடுத்துள்ளது.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முடிவிற்கிணங்க 1996-97-ல் மேலே பத்தி 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள 16 மாவட்டங்களில் 0.2 ஹெக்டேர் முதல் ஒரு ஹெக்டேர் வரையில் நிலம் சொந்தமாக வைத்துள்ள 2000 ஆதிதிராவிடர்களுக்கு 1400 ஹெக்டேரில் விதைப்பண்ணைகள் அமைக்க உதவியாக 75% மானியம் ரூ. 52.50 லட்சம் (ரூபாய் ஐம்பத்திரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து ஒப்பளித்து ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ. 52.50 லட்சத்தை வேளாண்மைத் துறை இயக்குநருக்கு விடுவிக்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேற்கூறிய மானியம் பயன்படுத்தியதற்காக சான்றிதழ்களை வேளாண்மை இயக்குநர், தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கும் அனுப்ப வேண்டும்.

7. மேற்கூறிய திட்டம் செயல்படுத்துவது பற்றிய முன்னேற்றம் குறித்த அறிக்கையை தாட்கோவிற்கும் அரசிற்கும் வேளாண்மை இயக்குநர் அனுப்பவேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசுச் செயலர்.

பெறுநர்:

இயக்குநர், வேளாண்மை துறை, சேப்பாக்கம், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், அண்ணா எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், நாகை காயிதே மில்லத், திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம், திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர், கரூர் தீரன் சின்னமலை, பெரம்பலூர் திருவள்ளுவர், இராஜாஜி, சேலம், வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.

நகல்:

செயலர், இந்திய அரசின் நல அமைச்சகம், புதுடெல்லி.
இயக்குநர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-6.
மாவட்ட, மண்டல மேலாளர்கள், தாட்கோ, நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபி/சிஉதி 2/அநமு) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது/ )

**சு. ஆறுமுகம்,**
பிரிவு அலுவலர்.

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், முதலிப்பாளையத்தில் பின்னலாடைத் தொழிற்பேட்டை அலகுகளுக்கு அரசின் முதலீட்டு மான்யம், தாட்கோவின் விளிம்புத்தொகை, பங்கு முதலீட்டுக்கு சிறப்பு மைய நிதியுதவித் தொகையிலிருந்து வழங்கவிருக்கும் பங்குத்தொகை ஆகியவற்றினை விடுவிப்பது - ஆணையிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

*அரசாணை நிலை எண். 126,* *நாள்: 1997 ஜூன் 27.*

*படிக்க:*

1. அரசாணை நிலை எண். 133, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 7-7-95.
2. அரசாணை நிலை எண். 19, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 10-2-97.

*மேலும் படிக்க:*

1. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் நேர்முக கடித எண். சிஎம்டி/டிஓ/95-96, நாள் 16-3-96.
2. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோவின் நேர்முக கடித எண். 8234/இ/முதலிப்பாளையம்/97, நாள் 18-2-97.

**ஆணை:**

முப்பெரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் ஒன்றான பின்னலாடைத் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தை அமல்படுத்துமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கு உத்திரவிட்டதைத் தொடர்ந்து ஒரு பின்னலாடைத் தொழிற்பேட்டை முதல் கட்டமாக 100 அலகுகளைக் கொண்டு முதலிப்பாளையத்தில் அமைக்க முடிவெடுக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தி சீரமைத்து 100 தொழிற்கூடங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டது. இதற்கான செலவு முதற்கட்டமாக சிறப்பு மைய நிதியுதவித் தொகையிலிருந்து வழங்கப்பட்டது. இதனை மீளப்பெறும் வகையில், ஒவ்வொரு பயனாளியிடமிருந்தும், ரூ. 12.50 லட்சம் வசூலிக்கப்படவேண்டும். மேலே 2-ல் படிக்கப்பட்ட அரசாணையில் தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதிகளில் அமைக்கவுள்ள தொழிற்பேட்டைக்கு வழங்குவது போல் முதலிப்பாளையம் பின்னலாடைத் தொழிற்பேட்டைக்கும் நிலையான முதலீட்டில் 15% முதலீட்டு மான்யம் வழங்க ஆணையிடப்பட்டது.

2. தேர்வு செய்த 100 பயனாளிகளில், 73 நபர்களுக்கு TIIC கடன் வழங்க இசைவு அளித்துள்ளதாக மேலாண்மை இயக்குநர், தாட்கோ தெரிவித்துள்ளார். 73 நபர்கள் சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில், 100 பயனாளிகளுக்கு விடுவிக்கப்படவேண்டிய சராசரித் தொகை கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| முதலீட்டிற்கு மொத்த அரசு மான்யம் | ரூ. 13.32 கோடி |
| பங்கு முதலீட்டிற்கு அரசின் பங்குத்தொகை | ரூ. 5.25 கோடி |
| தாட்கோவின் விளிம்புத்தொகை | ரூ. 10.50 கோடி |

3. முதலீட்டிற்கு அரசு மான்யம் விடுவிப்பதில், விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற முன்னுரிமைப்படி வழங்கப்படுவதால், ஒரு வருட கால தாமதம் ஏற்படக் கூடுமென்றும் இதனால் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) கடன் வழங்கி மான்யம் விடுவிக்கும்போது சரிக்கட்டுவது வழக்கம். அவ்வாறு வழங்கப்படுகின்ற பணத்திற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வட்டி வசூலிக்கும். இவ்வட்டியைத்

தவிர்ப்பதற்காக அரசு மான்யத் தொகையை சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து வழங்குமாறு பயனாளிகள் கேட்டுள்ளார்கள் என்று தாட்கோ மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். தாட்கோ வழங்கவுள்ள விளிம்புத்தொகை மற்றும் பங்கு முதலீட்டு சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து அரசு வழங்கவுள்ள பங்குத்தொகை இரண்டும் சேர்த்து ரூ. 15.75 கோடியாகும். நிலம் கையகப்படுத்தி தொழிற்கூடம் கட்டியதற்கு ஒவ்வொரு பயனாளியிடமிருந்தும் ரூ. 12.50 லட்சம் வீதம் ரூ. 12.50 கோடி நூறு பயனாளிகளிடமிருந்து வசூலிக்க இருப்பது போக ரூ. 3.25 கோடி விடுவிக்கவேண்டும். ஆனால், பின்னலாடைத் தொழிற்பேட்டை அமைப்பதற்காக மிகப்பெரிய தொகையை விடுவிக்க வேண்டியுள்ளதால், தாட்கோ வழக்கமாக செயல்படுத்துகின்ற திட்டங்களுக்கு விளிம்புத்தொகை தேவையென்பதாலும், விளிம்புத்தொகை சிறப்பு மைய உதவித் தொகையிலிருந்து விடுவிக்குமாறு மேலாண்மை இயக்குநர், தாட்கோ கேட்டுள்ளார்.

4. மேலே பத்தி 3-ல் உள்ள தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:

(1) முதலிப்பாளையம் திருப்பூர் பின்னலாடைத் திட்டத்திற்காக மாநில மான்யத் தொகையாக ரூ. 13.32 கோடியை (ரூபாய் பதிமூன்று கோடியே முப்பத்திரண்டு லட்சம் மட்டும்) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு (TIIC) அரசு விடுவிக்கிறது. இந்த மான்யத் தொகையை இந்தக் குறிப்பிட்ட திட்டத்திற்கென தனிக்கணக்கில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(2) நிலம் கையகப்படுத்தி சீரமைத்து தொழிற்கூடம் கட்டியதற்காக பயனாளிகளிடமிருந்து வசூலிக்க வேண்டிய ரூ. 12.50 கோடி போக மீதமுள்ள விளிம்புத் தொகை மற்றும் பங்கு முதலீட்டிற்கு அரசின் பங்குத்தொகை ஆகிய ரூ. 3.25 கோடியை (ரூபாய் மூன்று கோடியே இருபத்தைந்து லட்சம் மட்டும்) சிறப்பு மைய நிதியுதவித் தொகையிலிருந்து விடுவிக்க ஆணையிடப்படுகிறது.

5. பத்தி 4(1)-ல் உள்ள செலவினத்தை கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்றுவைக்க வேண்டும்:

``2885- Other outlays on Industries and Minerals - 01. Industrial Financial Institutions - 101. Assistance to Industrial Financial Institutions - Schemes in the Ninth Five Year Plan - II State Plan - JD. Assistance to the Tamil Nadu Industrial Investment Corporation Ltd., towards share Capital subsidy to Industrial units - 09. Grants-in-aid"
(DPCode 2885 01 101 JD 0909)

6. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புது பணி குறித்த செலவாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொது 1) துறை தனியாக பிறப்பிக்கும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வழங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இரு படிகளில் நிதி (வ.செ.பொது 1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி சென்னை, தொழில் வணிக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 300/டி.எஸ்.(ஆர்.பி)/97, நாள் 24-6-97-ல் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலாளர்.

பெறுநர்:

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
தொழில் வணிக இயக்குநர், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) சென்னை-14.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர், பெரியார் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, 35, 6.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.

நகல்:

இயக்குநர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-6.
நிதி, தொழில் துறை, சென்னை-9, நிதி (வ.செ.பொ.I) துறை, சென்னை-9.
மண்டல, மாவட்ட மேலாளர், தாட்கோ, ஈரோடு, கோயம்புத்தூர்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக உதவியர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபி/அநமு) துறை, சென்னை-9.
தலைவர், திருப்பூர் தாட்கோ பின்னலாடைத் தொழில் முனைவோர் சங்கம் 29, மஸ்தான் கோரி தெரு, ஆதம்பாக்கம், சென்னை-58.
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

சு. ஆறுமுகம்,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் - ஆதிதிராவிடர் நல சிறப்புக்கூறு திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி 1997-98 ஆம் ஆண்டிற்கான முதல் தவணை நிதியுதவியை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்திடம் ஒப்படைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.5) துறை

அரசாணை நிலை எண். 146, நாள்: 1997 ஆகஸ்டு 8.

படிக்கப்பட்டது:

1. மத்திய அரசு, நலத் துறை அமைச்சகத்தின் கடித எண். 11014/11/97 எஸ்சிடி-II நாள் 9-6-97.

ஆணை:

ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான ஆதிதிராவிடர் நல சிறப்புக்கூறு திட்டத்திற்கு மத்திய அரசு மாநிலங்களோடு இணைந்து பொறுப்பேற்று மத்திய சிறப்பு நிதியுதவியை ஒவ்வொரு ஆண்டும் அளித்து வருகிறது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் பல்வேறு பிற துறைகள் ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தும் வண்ணம் மேற்படி நிதியுதவி தாட்கோவின் அலுவல் பெயர் வைப்புத் தொகைக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

2. மத்திய அரசு பார்வையில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் 1997-98 ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் நல சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் முதல் தவணையாக மத்திய சிறப்பு நிதியுதவி ரூ. 11,98,84,000/- வழங்கியுள்ளது. மேற்படி நிதியுதவி ஆதிதிராவிடர் நல சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் மாநிலங்கள் ஏற்கனவே வழங்கி வரும் நிதியுதவி முயற்சிக்கு அதிகப்படியான நிதியுதவி ஆகும். இந்நிதியுதவியானது வருவாய் ஈட்டும் திட்டங்களுக்கு அந்தந்த வட்டார ஆதிதிராவிடர் மக்கட் தொகையின் பொருட்டு குறிப்பிட்ட பகுதி வாரியாக தான் செலவிடப்பட வேண்டும். இதில் செலவிடப்படாத எஞ்சிய தொகையை அடுத்த நிதியாண்டிற்கு எடுத்துச் செல்ல இயலாது. எஞ்சிய தொகை இருப்பின், அதை மத்திய அரசிற்கு திரும்ப ஒப்புவிக்க வேண்டும். மத்திய சிறப்பு நிதியுதவிக்கான பயன்படுத்து சான்றினை காலாண்டு தோறும் அந்தந்த காலாண்டு முடிவுற்ற பதினைந்து தினங்களுக்குள் மாநில அரசிடம் ஏற்கனவே உள்ள நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் காலமுறை அறிக்கையாக மத்திய அரசிற்கு அனுப்புமாறு கேட்டுள்ளது.

3. அதற்கேற்ப, அரசு 1997-98 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசினால் சிறப்பு நிதியுதவியாக வழங்கப்பட்ட ரூ. 11,98,84,000/- (ரூபாய் பதினோரு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்) மேலாண்மை இயக்குநர் தாட்கோவிற்கு அளிப்பதற்கு அனுமதி வழங்குகிறது. மேற்படி தொகையினை 1997-98 ஆம் ஆண்டிற்குள் பயன்படுத்துமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3-ல் கூறப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும்:

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01. ஆதிதிராவிடர் நலன் - 793. ஆதிதிராவிடர் நல சிறப்புக் கூறுத் திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - 111. மத்திய அரசு பொறுப்பேற்பவை SB - சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்

தொகுதிகளில் ஆதிதிராவிடருக்கான நலத் திட்டங்கள் - 09. உதவி மானியங்கள் (தகவல் தொகுப்பு குறியீடு எண். 2225 01 793 SB 0907)".

5. மேலே பத்தி 3-ல் வழங்கப்பட்ட பணமானது ரொக்கமாக வழங்கப்படலாகாது.. மாறாக, அது கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பிற்கு எதிராக சரிகட்டுதல் வாயிலாக வரவு செய்யப்படல் வேண்டும்:

"K - வைப்புத் தொகைகளும், முன்பணங்களும் (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் - 8443 - 00 - பொது வைப்புத் தொகைகள் - 800. பிற வைப்புத் தொகைகள் - AE. அரசு நிறுவனங்கள், கழகங்கள் முதலியவற்றின் வைப்புத் தொகைகள் - 52 தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தகவல் தொகுப்பு குறிப்பு எண். 8443 00 800 AE 520 E ".

மேலே பத்தி 3-ல் வழங்கப்பட்ட பணத்தை சரிகட்டல் வாயிலாக உடனடியாக எடுத்து தாட்கோ, மேலாண்மை இயக்குநருக்கு வழங்க சென்னை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும் அவர் சரிகட்டல் பட்டியை சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5-க்கு தாக்கல் செய்து இது குறித்து அறிக்கை ஒன்று அரசுக்கு உடனடியாக அனுப்ப வேண்டும்.

6. மத்திய சிறப்பு நிதியுதவித் தொகையிலிருந்து பல்வேறு கூறு திட்டங்களுக்கு 1997-98 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட பணத்திற்கான கணக்கை தனித்தனியாக கணக்கிட்டு பராமரிக்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், மத்திய சிறப்பு நிதியுதவி திட்டங்களுக்கான செலவின் விவரப் பட்டியல் குறித்த ஒவ்வொரு திங்களுக்கான முன்னேற்ற அறிக்கையை அடுத்தடுத்த திங்களில் 10 தினங்களுக்குள் அரசுக்கு அனுப்பப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் 5-8-97 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண். 356/DS(RP)/97 இசைவைப் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மாநில கணக்காயர், சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை-I), சென்னை-35 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை-2), சென்னை-6 (பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.

நகல்:

செயலாளர், மத்திய அரசு நலத் துறை அமைச்சகம், புதுதில்லி.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-6.
செயலாளர், நிதித் துறை, சென்னை-9.
செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை **(கமபா/அநமு), சென்னை-9.
**(மத்திய அரசின் நல அமைச்சகத்திற்கு சிறப்பு நிதி சம்பந்தப்பட்ட பயன்படுத்துதல் குறித்த காலாண்டு முன்னேற்ற அறிக்கையை ஒவ்வொரு காலாண்டு முடிந்த 15 தினங்களுக்குள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அனுப்ப வேண்டும்).

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பொ. பெருமாள்,
பிரிவு அலுவலர்.

TAMIL NADU GOVERNMENT

## ABSTRACT

Adi Dravidar Welfare - Economic Development Schemes for Scheduled Castes - Special Central Assistance to Special Component Plan for Scheduled Castes for the year 1997-98 - Release of first instalment to Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation - Orders - Issued.

---

**Adi Dravidar and Tribal Welfare (ADW.V) Department.**

G.O.Ms.No.146 Dated: 8th August 1997.

Read:

From the Government of India, Ministry of Welfare, New Delhi Lr.No.11014/11/96-SCD-II, Dated 9-6-97.

**ORDER:**

The Government of India are releasing each year, the Special Central Assistance for the economic development of Adi Dravidars in conjunction with the State's efforts in the Special Component Plan. The assistance so received is transferred to the Personal Deposit Account of Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation Limited for implementing Economic Development Schemes for Scheduled Castes by it, and through various other Departments.

2. The Government of India, in their letter read above, have sanctioned to this Government a sum of Rs. 11,98,84,000 towards first instalment as grant-in-aid for Special Central Assistance to Special Component Plan for Scheduled Castes for the year 1997-98. They have also stated that Special Central Assistance is an additive to the Special Component Plan of the States/Union Territories. It should be used only for specific sectorwise schemes covering SC population areawise, aimed at income generating development programme directly relevant to the economic development of SC population in the areas. They have further stated that any unspent balance amount cannot be carried forward for expenditure during the next financial year, but should be surrendered to the Central Government. The Government of India have also requested that the State Government should furnish quarterly progress report on the utilisation of SCA to the Government of India, Ministry of Welfare within fifteen days after the end of each quarter, in the prescribed proforma, already available with the State Government.

3. The Government now accordingly sanction the payment of a sum of Rs. 11,98,84,000 (Rupees Eleven crore ninety-eight lakhs and eighty-four thousand only) to the Managing Director, TAHDCO, for implementing economic development schemes for SCs for the year 1997-98. The Managing Director, TAHDCO is requested to utilise the amount within the financial year 1997-98 itself.

4. The expenditure should be debited to "2225. Welfare of Scheduled Castes and Scheduled Tribes and Other Backward Classes - 01. Welfare of Scheduled Castes. 793. Special Central Assistance for Scheduled Castes' Component Plan - Scheme in the Ninth Five-Year Plan - III. Centrally Sponsored - SB. Welfare schemes for Scheduled Castes in Integrated Rural Development Programme - Blocks under Special Component Plan - 09. Grants-in-aid (D.P.Code 2225 01 793 SB 0907)".

5. The amount sanctioned in paragraph 3 above shall not be paid in cash but shall be adjusted by contra credit to the Head of Account "K. Deposits and Advances (b) Deposits not bearing interest - 8443-00-Civil Deposits 800. Other Deposits - AE. Deposits of Government Companies, Corporations, etc. - 52. Deposits of TAHDCO

(D.P. Code 8443 00 800 AE 520E). The Director of Adi Dravidar and Tribal Welfare is authorised to draw and disburse the amount sanctioned in paragraph 3 above by adjustment to the Managing Director, TAHDCO, immediately. He shall present an adjustment bill to the Pay and Accounts Officer (EAST) Chennai-5 and also send a report to the Government thereon immediately.

6. The Managing Director, TAHDCO is directed to maintain separate accounts for the SCA funds operated and disbursed by him for the various components separately for the year 1997-98. He is also requested to send the progress of expenditure under SCA schemes each and every month, on or before the 10th of the succeeding month.

7. This order issues with the concurrence of the Finance Department vide its U.O.No.356/DS(RP)/ 97, dated 5th August 1997.

(By Order of the Governor)

**R. Christodas Gandhi,**
*Secretary to Government.*

**To**

The Director of Adi Dravidar and Tribal Welfare, Chennai-5.
The Managing Director, TAHDCO, Chennai-101.
The Accountant-General, Chennai-18. (By Name)
The Accountant-General, (Audit-I), Chennai-35. (By Name)
The Accountant-General, (Audit-II), Chennai-6. (By Name)
The Pay and Accounts Officer (East), Chennai-5.

**Copy to:**

The Secretary to Government of India, Ministry of Welfare, New Delhi.
The Director of Scheduled Castes and Scheduled Tribe, Chennai-6.
The Secretary to Government, Finance Department, Chennai-9.
The Secretary to Government, Planning and Development Department, Chennai-9.
The Private Secretary to Secretary to Government, Adi Dravidar and Tribal Welfare, Chennai-9. (AD&TW) Dept.
Personal Assistant to Deputy Secretary to Government, Chennai-9.
Senior Personal Assistant to Minister (Adi Dravidar and Tribal Welfare), Chennai-9.
The Adi Dravidar and Tribal Welfare (MEC/OP) Department, Chennai-9.
(The MEC Section is requested to furnish quarterly progress report on the utilisation of SCA to Government of India, Ministry of Welfare, within 15 days after the end of each quarter in the prescribed proforma).

*/Forwarded By Order/*

**பொ. பெருமாள்,**
*Section Officer.*

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - தாட்கோ - தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் - தாட்கோ மற்றும் அரசு நிறுவனங்கள் நிதி உதவி - அரசு ஊழியர்களின் குடும்பத்தினர்கள் நிதியுதவி பெறுவதற்கு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

*அரசாணை நிலை எண் 151,* *நாள்: 1997 ஆகஸ்ட் 29.*

*ஆணை:*

'தாட்கோ' நடத்தும் தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்களின் குடும்பத்தினரும் நிதியுதவி பெறத் தகுதியுடையவர்களாகச் செய்யலாம் என்று தாட்கோ மேலாண்மை இயக்குநர் அரசுக்கு அனுப்பிய கருத்துருவை அரசு ஆழ்ந்து ஆய்வு செய்தது.

2. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கான திட்டங்களுக்கு அரசு ஊழியர்களின் குடும்பத்தினர்கள் வருமான வரம்பு மிகுதியால் தகுதியுடையவராக மாட்டார். ஆகவே, இத்தகைய திட்டங்களுக்கு அரசு ஊழியர்கள் குடும்பத்தார் விண்ணப்பிக்கலாமா என்ற கேள்வியே எழுவதில்லை. ஆனால், தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவோரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000/-க்கு மிகாமல் இருக்கக்கூடாது என்று இருந்த விதியைத் தளர்த்தி வருமான வரம்பை நீக்கம் செய்து அரசு ஏற்கனவே அரசாணை நிலை எண் 252, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 29-10-91-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

3. இத்தகைய பொருத்தமான திட்டங்களில், அரசு ஊழியரின் குடும்பத்தினர் பயன்பெறுவது தவறில்லை என்றும், அதே வேளை பணி நடத்தை விதிகளுக்கு ஏற்ப தகவல் அளிக்க வேண்டும்/ஒப்புதல் பெறவேண்டும் என்றும் அரசு விளக்கம் அளிக்கிறது.

4. இந்த விளக்கத்தின் அடிப்படையில், ஆதிதிராவிடர் அரசு ஊழியர்களின் குடும்பத்தார், பிற தகுதிகளுக்குட்பட்டு, தாட்கோ தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் போன்று தாட்கோ மட்டுமல்லாமல் வேறு எந்த அரசு சார் நிறுவனங்கள் நடாத்தும் பொருத்தமான திட்டங்களிலும் பயன்பெறலாம் என்றும், அதுபோது தத்தம் பணி நடத்தை விதிகளுக்கு ஏற்ப உரிய அதிகாரிகளுக்குத் தகவல் அளிக்கவோ ஒப்புதல் பெறவோ வேண்டுமெனவும், அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அ. நம்பியார்,**
*தலைமைச் செயலாளர்.*

*பெறுநர்:*

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம், கிண்டி, சென்னை-32 ((டாய்கோ),

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிட்கோ), சென்னை-8.

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), சென்னை-16.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி), சென்னை-14.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), சென்னை-8.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்), சென்னை-35.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், (டிக்), சென்னை.
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை-108.
இயக்குநர், தொழில் வணிகத்துறை, சென்னை-5.
இயக்குநர், கைத்தறி மற்றும் துணை நூல் துறை, சென்னை-108.
பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள், சென்னை-10.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், மாதவரம், சென்னை-51.
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-5.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலைத்துறை, சென்னை-2.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அக்ரோ தொழில் கழகம், சென்னை-32.
தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு வேளாண் பொறியியல் கழகம், சென்னை-35.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பொறியியல் சேவை கூட்டுறவு மையம் (என்கோரபெட்), சென்னை-17.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்துத் துறை செயலர்கள், சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ (மேலாண்மை இயக்குநர், தாட்கோ மூலம்).
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
இயக்குநர், பட்டியலினத்தோர் துறை, சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18, சென்னை-35, சென்னை-6.

நகல்:

அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதலமைச்சரின் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்துப் பிரிவுகள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக செயலர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**சு. ஆறுமுகம்,**
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம் - ஆய்வு செய்ய பணியாளர் நியமனம் - நிதியுதவி அனுமதிக்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை நிலை எண் 169, நாள்: 1997 அக்டோபர் 20.

படிக்க:

1. அரசாணை நிலை எண். 226, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 21-12-96.
2. இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி, நேர்முக கடித எண். 6708/செ.ஆ/96, நாள் 13-2-96.

ஆணை:

படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிட விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு 1995-96 ஆம் ஆண்டுக்கு பால் மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற கலப்பினக் கன்றுகளுக்கு' உணவு, காப்பீடு, கால் மற்றும் வாய் சம்பந்தமான நோய்களைத் தடுப்பதற்கு மருந்து மற்றும் பராமரிப்புச் செலவிற்காக ரூ. 144 லட்சம் மதிப்பீட்டில் 100% மானிய உதவியுடன் மத்திய சிறப்பு நிதியிலிருந்து வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தினை இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி அவர்களின் மூலம் தொடர் ஆய்வு செய்வதற்கும் மேற்காணும் அரசாணையில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. அரசு ஆணையின்படி உயர்ரகக் கலப்பினக் கன்று வளர்ப்பு திட்டத்தினை ஆய்வு செய்வதற்காக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் இதற்காக 1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளுக்கு ரூ. 6.62 லட்சம் செலவாகும் எனவும், இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி அவர்கள் தம்முடைய கருத்துருவில் தெரிவித்துள்ளார். மேலும், இந்த ஆய்வின் முக்கிய குறிக்கோள், கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கும் பொருத்தமான பகுதிகளை அடையாளம் கண்டு, தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதலாகும். இதன் அடிப்படையில், முதல் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும், திட்டத்தின் மாதிரி ஆய்வாக 40% மேற்கொள்ளப்பட்டு அந்த ஆய்வினை மாவட்ட வாரியாக கலப்பினக் கன்றுகளின் வளர்ச்சி, எடை, சிறப்பு விகிதம் மற்றும் உணவு நடைமுறைகளை ஆய்வு செய்து மாதாந்திர அறிக்கையாகக் கொடுக்கப்படும் என இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

3. இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி மேலும் தெரிவிக்கையில், ஆய்வு செய்த இத்திட்டத்தின் சம்பந்தமாக ஒவ்வொரு ஆறு மாத கால இடைவெளிக்கு ஒருமுறை சாதனைப்பட்டியல் வெளியிடப்படும் எனவும், இதனால் பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் விளைவு மற்றும் திட்டம் பற்றிய உபயோகமான தகவல்கள் மற்றும் கலப்பினக் கன்றுகளின் உணவுப் பழக்க வழக்கங்கள், கன்றுகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் இறப்பு விகிதங்கள் ஆகிய விவரங்கள் தெரிய வருமென குறிப்பிட்டுள்ளார்.

4. இத்திட்டத்தினை விரிவுபடுத்தும்பொருட்டு, சென்னை, மதுரை, சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 3 நிர்வாகப் பகுதிகளாகப் பிரிக்கப்படும். இம்மூன்று பகுதிகளின் கீழ் அடங்கும் மாவட்டங்களின் விபரங்கள் இணைப்பு-1ல் உள்ளன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ஆராய்ச்சி அலுவலர், ஒரு கணிப்பொறி இயக்குநர், இரண்டு மேற்பார்வை ஆய்வாளர்கள் மற்றும் நான்கு பகுதி ஆய்வாளர்கள் மற்றும் ஊதிய விவரங்கள் கிழே தரப்பட்டுள்ளன:—

| வ.எண். | பதவியின் பெயர் | சென்னை | மதுரை | சேலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆராய்ச்சி அலுவலர் ரூ. 2200-75-2800-100-4000 | 1 | 1 | 1 | 3 |
| 2. | கணிப்பொறி இயக்குநர் ரூ. 1200-30-1560-40-2400 | 1 | .. | .. | 1 |
| 3. | மேற்பார்வை ஆய்வாளர் தொகுப்பு ஊதியம் (ரூ. 1500 இரு மாதத்திற்கு) | 2 | 2 | 2 | 6 |
| 4. | ஆய்வாளர் தொகுப்பு ஊதியம் (ரூ. 1000 ஒரு மாதத்திற்கு) | 4 | 4 | 4 | 12 |

மேற்காணும் பணியாளர்களுக்கு ஒரு ஆண்டிற்கான சம்பள இனச் செலவினங்கள் ரூ. 6.62 லட்சம் என்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆராய்ச்சி அலுவலர்கள் சம்பளம் மற்றும் படிகளைப் பெற்று வழங்கும் அதிகாரம் உடையவராவார்கள் என்றும் சம்பளம் சாரா பயணப்படி, தொகுப்பூதியம் போன்றவைகள் தலைமையிடத்தில் ஒப்புதலுடன் மட்டுமே பெறமுடியும் எனவும் இத்திட்டத்தினைக் குறித்த நேரத்தில் கூர்த்தாய்வு செய்வதற்குக் களப்பணியாளர்கள் பகுதிகளுக்குச் செல்லும்பொழுது அவர்களுக்கு உதவியாக சம்பந்தப்பட்ட மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் தேவையான களப்பணியாளர்களையும் மற்றும் ஜீப்பு (Jeep) வழங்கி ஆய்வாளர்களுக்கு உதவி செய்தல் வேண்டும் எனவும், இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்கள். மாவட்ட வாரியாக மாதிரி ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 2000. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரி ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ள மொத்த பயனாளிகளில் மாதிரி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள பயனாளிகளில் பொருத்தமான ஆய்வு, தோராயமான ஆய்வு போன்ற விவரங்கள் இணைப்பு 2-ல் தெரிவிக்கப்பட்டுள்ளன.

5. உயர்ரகக் கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டத்தினை ஆய்வு செய்வதற்கு பணியாளர்கள் நியமனம் பற்றிய இயக்குநர் அவர்களின் கருத்துரு மீது ஆணை வேண்டி அதிகாரம் அளிக்கப்பட்ட குழு முன்வைக்கப்பட்டது. அதிகாரம் அளிக்கப்பட்ட குழு இதற்கு இசைவளித்துள்ளது.

6. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முடிவின்படி கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டத்தினை தொடர் ஆய்வு செய்வதற்கு தேவைப்படும் தொகையான ரூ. 6.62 லட்சம் (ரூபாய் ஆறு லட்சத்து அறுபத்து இரண்டு ஆயிரம் மட்டும்) 100% மான்யமாக தாட்கோ நிறுவனத்திடம் இருக்கும் மத்திய சிறப்பு நிதியிலிருந்து அளிக்க இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

7. மேலே பத்தி 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி, சென்னை-108 அவர்களுக்கு விடுவிக்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர், சென்னை அறிவுறுத்தப்படுகிறார்.

8. இந்த ஒப்பளிப்பில் வழங்கப்பட்டுள்ள ஆய்வுப் பணியாளர்கள் யாவரும் ஆதிதிராவிட இனத்தவராகவே இருக்கவேண்டும். ஆறு திங்களுக்கு ஒருமுறை மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலருடனும், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை செயலருடனும் கூடிப்பேசி ஆய்வுப் பணியை சீராக மேற்கொள்ள வேண்டும்.

9. இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி அவர்கள் இவ்வாய்வானது சீரியான முறையில் செயல்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகையில் செலவிடப்படாத தொகையை மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்குத் திருப்பியனுப்ப வேண்டும். மேலும் இவ்வாய்வு தொடர்பாக காலாண்டு முன்னேற்ற அறிக்கையினை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமபா) துறை, சென்னை-9க்கு அனுப்புமாறு இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி அறிவுறுத்தப்படுகிறார்.

10. மேலே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி, சென்னை-108 அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க தேவையான உதவிகளை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் செய்வதற்கு தகுந்த அறிவுரையினை அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு வழங்குமாறு மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி, சென்னை-108. (இணைப்புடன்)

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், சென்னை-51. (இணைப்புடன்)

ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பண்ணை மேம்பாடு, சென்னை-51. (இணைப்புடன்)

இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, சென்னை-6. (இணைப்புடன்)

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101. (இணைப்புடன்)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5. (இணைப்புடன்)

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக). (இணைப்புடன்)

மாநிலக் கணக்காயர், சென்னை-18, 35, 6. (இணைப்புடன்)

நகல்: (இணைப்புடன்)

செயலர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, சென்னை-9.

இயக்குநர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-6.

அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் (பால்பண்ணை).

அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு/கமபா) துறை, சென்னை-9.

இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

**சு. ஆறுமுகம்,**
பிரிவு அலுவலர்.

**அரசாணை நிலை எண். 169, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 20-10-1997-ன் இணைப்பு.**

**இணைப்பு-1**

**கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம் ஆய்வு செய்ய பணியாளர் நியமனம் நிர்வாகப் பகுதிகள்.**

(1) (சென்னை) தலைமையிடத்தை மையமாகக் கொண்டு,

1. கடலூர்
2. விழுப்புரம்
3. காஞ்சிபுரம்
4. புதுக்கோட்டை
5. வேலூர்
6. திருவண்ணாமலை

(2) மதுரையை மையமாகக் கொண்டு,

1. கன்னியாகுமரி
2. திருநெல்வேலி
3. விருதுநகர்
4. தூத்துக்குடி

5. இராமநாதபுரம்
6. திண்டுக்கல்
7. திருச்சிராப்பள்ளி

(3) சேலத்தை மையமாகக் கொண்டு,
1. தருமபுரி
2. ஈரோடு
3. கோயம்புத்தூர்
4. உதகமண்டலம்
5. நாகப்பட்டினம்
6. தஞ்சாவூர்

/உண்மை நகல்/

சு. ஆறுமுகம்,
பிரிவு அலுவலர்.

அரசாணை நிலை எண். 169, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 20-10-1997-ல் இணைப்பு.

இணைப்பு-2

மாவட்ட வாரியாக மாதிரி ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை.

| மாவட்டத்தின் பெயர் | ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள மொத்த பயனாளிகள் | மாதிரி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள பயனாளிகள் பொருத்தமான ஆய்வு (20%) | தோராயமான ஆய்வு (20%) | மொத்தம் (40%) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. காஞ்சிபுரம் | 100 | 20 | 20 | 40 |
| 2. விழுப்புரம் | 125 | 25 | 25 | 50 |
| 3. வேலூர் மற்றும் திருவண்ணாமலை | 225 | 45 | 45 | 90 |
| 4. தருமபுரி | 125 | 25 | 25 | 50 |
| 5. சேலம் | 125 | 25 | 25 | 50 |
| 6. ஈரோடு | 100 | 20 | 20 | 40 |
| 7. கோயம்புத்தூர் | 100 | 20 | 20 | 40 |
| 8. நீலகிரி | 100 | 20 | 20 | 40 |
| 9. மதுரை | 175 | 35 | 35 | 70 |
| 10. திண்டுக்கல் | 125 | 25 | 25 | 50 |
| 11. திருச்சி | 125 | 25 | 25 | 50 |
| 12. தஞ்சாவூர் | 100 | 20 | 20 | 40 |
| 13. புதுக்கோட்டை | 75 | 15 | 15 | 30 |
| 14. இராமநாதபுரம் | 125 | 25 | 25 | 50 |
| 15. விருதுநகர் | 75 | 15 | 15 | 30 |
| 16. திருநெல்வேலி | 125 | 25 | 25 | 50 |
| 17. கன்னியாகுமரி | 75 | 15 | 15 | 30 |
| மொத்தம் | **2000** | **400** | **400** | **800** |

/உண்மை நகல்/

சு. ஆறுமுகம்,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தாட்கோ - தொழில் முனைவோர் முன்னேற்றத் திட்டம் - ஆதிதிராவிடர் பொறியியல் பட்டதாரிகளுக்கு சிப்காட் மூலம் தொழிற் பயிற்சி - சிறப்பு மைய நிதியுதவியிலிருந்து நிதி அனுமதிக்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை நிலை எண் 172 நாள்: 1997 அக்டோபர் 27.

படிக்க :

மேலாண்மை இயக்குநர், சிப்காட் கடித எண் பி.ஆர்/இடிபி/01/97, நாள் 14-7-97.

ஆணை:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் தொழிற்கல்விப் பட்டங்கள் பெற்று பலர் வேலை தேடி நிற்கிறார்கள். இத்தகையோர்க்கு சுயதொழில் முனைப்பில் ஈடுபடுவதற்கும் தொழில் வாய்ப்புகள் எங்கெங்கு உள்ளன என்பதை புலப்படுத்துவதற்கும் ஏதுவாக சிப்காட் போன்ற தொழில் நிறுவனங்கள் மூலமாக தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

2. சிப்காட் மேலாண் இயக்குநர் இத்தகைய ஒரு மாத பயிற்சித் திட்டம் ஒன்றை வகுத்தளித்துள்ளார். இதை ஆய்வு செய்து அரசு கீழ்வரும் ஆணைகளை வெளியிடுகிறது :

(i) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கான தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் தொடர் திட்டமாக இனி நடத்தப்படும்.

(ii) ஆண்டுதோறும் காலாண்டுக்கு இரண்டு பயிற்சித் திட்டங்கள் என மொத்தம் எட்டு பயிற்சிகள் நடத்தப்படும்.

(iii) நடப்பு 1997-98 ஆம் ஆண்டிற்கு மார்ச் 1998 இறுதிக்குள் நான்கு பயிற்சிகள் மட்டும் நடத்தப்படலாகும்.

(iv) இந்தப் பயிற்சிக்கான செலவினம் தொடர் செலவினமாக தொழிற் துறை நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படும். 1997-98 ஆம் ஆண்டிற்கான செலவினம் மட்டும் சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து (Special Central Assistance) அளிக்கப்படும்.

(v) முப்பது பேர் கொண்ட ஒரு பயிற்சிக்கான ஒப்பளிப்பு இணைப்பில் கண்டுள்ள வகைப்படி செலவிடப்படும்.

(vi) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருள் ஏற்கனவே சிறிய அளவிலோ பெரிய அளவிலோ தொழில் நடத்துவோர், தொழில் மேலாண் பதவிகளில் (Managerial Posts) இருப்போர் ஆகியோருக்குப் புதிதாகத் தொழிற்பட்ட படிப்பு பி.காம்., எம்.காம்., பட்டம் பெற்றுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கும் பட்டயம் பெற்றுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கும் இந்தப் பயிற்சிகள் நடத்தப்படும்.

3. (i) இந்தப் பயிற்சிகளை சிப்காட், சிட்கோ, டிக் ஆகிய (SIPCOT, SIDCO, TIIC) நிறுவனங்கள் கூட்டாக நடத்தும்.

(ii) இப்பயிற்சித் திட்டத்தை கீழ்வருவோர் கொண்ட பொறுப்புக்குழு செப்பமுற நடத்தி வரும்:

| | | |
|---|---|---|
| செயலர், தொழில் | .. | தலைவர் |
| செயலர், ஆதிதிராவிடர் நலம் | .. | துறைத் தலைவர் |
| மேலாண் இயக்குநர் சிப்காட் | .. | செயல்-உறுப்பினர் |
| மேலாண் இயக்குநர் சிட்கோ | .. | உறுப்பினர் |

மேலாண் இயக்குநர் டிக் .. உறுப்பினர்

மேலாண் இயக்குநர் தாட்கோ .. உறுப்பினர்

பயிற்சி நடத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளையும் நிதி ஒப்பளிப்புக்கு உட்பட்டு பொறுப்புக் குழுவே முடிவு செய்து கொள்ளலாகும்.

(iii) இப்பயிற்சித் திட்டத்திற்கு நடுவன் துறையாக சிப்காட் நிதிச் செலவினங்களைக் கையாளும் அரசு நிதி சிப்காட்டிற்கு வழங்கப்பட்டு நிதிக் கணக்குகளை சிப்காட் மேற்கொண்டு வரும்.

4. இந்தப் பயிற்சியில் பங்கு பெற்றோர்க்கு சுயதொழில், தொடங்குவதற்கு சிப்காட், சிட்கோ, டிக், தாட்கோ ஆகிய நிறுவனங்களால் நிலம்/கட்டிட ஒதுக்கீடு காலமுறைக் கடன் மானியக்கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும். பிற நிதி நிறுவனங்கள் மூலமாகவும் நிதி உதவி பெறவும் ஊக்கம் தரப்படும்.

5. இந்தப் பயிற்சியைத் தொழில் நிர்வாகம், நிதி ஆளுமை மனித வள மேம்பாட்டுப் பயிற்சி, பொருளாதாரத் திட்டமிடல் ஆகியவற்றில் தலை சிறந்தவர்களைக் கொண்டு மதிப்புறு வகையில் நடத்தவும், பயிற்சி பெற்றவர்கள் மன உரத்தோடு தொழில் முனைப்புகளில் ஈடுபடும் வகையில் தேர்ந்து வரவும் பொறுப்புக்குழு தக்க வடிவமைப்பு தந்து இந்தப் பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வரலாகும்.

6. அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலுக்கு ஏற்ப மேலே பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ளவாறு இந்தத் தொழில் முனைவோர் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் பயிற்சியளிக்க 1997-98 ஆம் ஆண்டுக்கு 30 நபர்களுக்கு ஒரு மாத பயிற்சிக்கு ரூ. 1.50 லட்சம் வீதம் நான்கு பயிற்சிகள் நடத்த ரூ. 6.00 லட்சம் (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) சிறப்பு மைய உதவி நிதியிலிருந்து அனுமதிக்கப்படுகிறது.

7. 1998-99 நிதி ஆண்டு தொடங்கி தொழில் துறையில் ரூ. 12 லட்சம் ஆண்டு நிதி ஒதுக்கீடாக வழங்கப்படும்.

8. மேலே பத்தி 6-ல் குறிப்பிட்டுள்ள தொகையான ரூ. 6.00 லட்சம் (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) சிறப்பு மைய நிதி உதவித் தொகையிலிருந்து மேலாண்மை இயக்குநர், சிப்காட், சென்னை-8 அவர்களுக்கு விடுவிக்குமாறு, மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இத்திட்டம் குறித்து காலாண்டுக்கான முன்னேற்ற அறிக்கையினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கமபா) துறைக்கும் மற்றும் தாட்கோவிற்கும் அனுப்புமாறு மேலாண்மை இயக்குநர், சிப்காட் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்குச் செலவு செய்யப்படாத எஞ்சிய தொகை இருப்பின் அதை மேலாண்மை இயக்குநர், தாட்கோவிற்குச் செலுத்துமாறு மேலாண்மை இயக்குநர், சிப்காட் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசுச் செயலர்.

பெறுநர்:

மேலாண்மை இயக்குநர், சிப்காட், சென்னை-8.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம், சென்னை-101.
இயக்குநர், தொழில் வணிகத்துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், சிட்கோ, சென்னை-16.
மேலாண்மை இயக்குநர், டிக், சென்னை-35.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி), சென்னை-14.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), சென்னை-8.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்), சென்னை-35.
இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-5.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5.
அனைத்துத் துறைச் செயலர்கள், சென்னை-9.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
(அனைத்து மாவட்ட/கோட்ட ஆதிதிராவிடர் நலக்குழு
உறுப்பினர்களுக்கும் நகல் வழங்க கோரப்படுகிறார்).
அனைத்து மாவட்ட மேலாளர்கள் (மேலாண்மை இயக்குநர்,
தாட்கோ வழியாக).
இயக்குநர், பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்,
சென்னை-6.
அனைத்து மாநில ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6.

*நகல்:*

முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)
அவர்களின் முதன்மை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலர், நிதி/தொழில்துறை/சிறுதொழில் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துணைச் செயலரின்
நேர்முக உதவியாளர், சென்னை.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்துப்
பிரிவுகள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபா/அநமு) துறை,
சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**சு. ஆறுமுகம்,**
பிரிவு அலுவலர்.

**இணைப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழில் முறைப் பயிற்றுநர் கட்டணம் 20 நாட்களுக்கு 4 தொகுதிக்கு (ரூ. 80 x 500) | .. | ரூ. 40,000 |
| 2. | பாடக் குறிப்புகள், பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ. 200 வீதம் (35 x 200) | .. | ரூ. 7,000 |
| 3. | பயிற்சிக் கூடத்திற்கு வாடகை ஒரு நாளைக்கு ரூ. 1000 வீதம் 30 நாட்களுக்கு (ரூ. 1000 x 30) | .. | ரூ. 30,000 |
| 4. | போக்குவரத்துச் செலவு (ஒரு கார்) 20 லிட்டர் x 20 நாள் ஒரு லிட்டர் ரூ. 30 வீதம் | .. | ரூ. 12,000 |
| 5. | பயிற்சியாளர்கள் தொழிற்கூடங்களைப் பார்வையிட வாகன உபயோகத்திற்காக 3 நாட்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 1500 வீதம் (1500 x 3) மற்ற செலவு ரூ. 500 | .. | ரூ. 5,000 |
| 6. | சிற்றுண்டி - 50 நபர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 10 வீதம் 20 நாட்களுக்கு 50 x 10 x 20 | .. | ரூ. 10,000 |
| 7. | துவக்க விழா மற்றும் நிறைவு விழாவிற்காக | .. | ரூ. 10,000 |
| 8. | சான்றிதழ் அச்சிட (ரூ. 200 x 30) | .. | ரூ. 6,000 |
| 9. | மதிய உணவு நபர் ஒருவருக்கு ரூ. 37.50 வீதம் 40 நபர்களுக்கு 20 நாட்களுக்கு (37.50 x 40 நபர் x 20 நாட்கள்) | .. | ரூ. 30,000 |
| | **மொத்தம்** | .. | **ரூ. 1,50,000** |

/உண்மை நகல்/

**சு. ஆறுமுகம்,**
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் - சிதம்பரம் நந்தனார் அரசு விடுதி வளாகத்தில் சுவாமி சகஜானந்தா நினைவரங்கம் - கட்டி முடிக்க - நிதி ஒதுக்கம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை.

*அரசு ஆணை (3D) எண்:41,* *நாள் : 22-5-1997.*

**ஆணை:**

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் நந்தனார் அரசு விடுதி வளாகத்தில் சுவாமி சகஜானந்தா நினைவரங்கத்தை கட்டி முடிக்க ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

2. பத்தி 1-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ. 10.00 இலட்சத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் பெற்று, அத்தொகையினை மேலாண் இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் அவர்களுக்குச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. சிதம்பரம் நந்தனார் அரசு விடுதி வளாகத்தில் சுவாமி சகஜானந்தா நினைவரங்கக் கட்டிடப் பணியினை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக செயல்படுத்தப்பட வேண்டும்.

4. பத்தி 1-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரின் தன் வைப்புக் கணக்கில் சேர்த்து, தேவையான செலவினத்தை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே பத்தி 1-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :—

> "2225-பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -01. பட்டியல் சாதியினர் நலன் - 800 ஏனைய செலவினங்கள் - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - JE. சமூக நலக் கூடங்கள் கட்டுதல்-17. சிறு பணிகள்"(தகவல் தொகுப்பு குறியீடு 2225 01 800 JE 1706)

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவு பெற்று, அத்துறையின் அலுவல் சார்பற்ற எண் 2300/FS/P/97, நாள் 13-5-97-ன் படி வெளியிடப்படுகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

**பெறுநர்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாவட்ட ஆட்சித் தலைவர், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், கடலூர்
மேலாண் இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம், சென்னை-101.

கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
நகல்: நிதித்துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ஒப்பம்)..............................................
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் - டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது - உயர்மட்டக் குழுவின் உறுப்பினர்களாக சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் - நியமனம் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை.

*அரசாணை (டி) எண்:154,* நாள் : *24-5-97.*

படிக்க:-

*அரசு ஆணை (நிலை) எண்: 52, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் : 22-3-95.*

***ஆணை:***

தமிழ்நாட்டில் பட்டியல் இன மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள். அவ்வாறு பட்டியல் இனத்தவர் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அரிய தொண்டுகளாற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது ஒன்றை ஆண்டுதோறும் வழங்க மேற்கண்டுள்ள அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், விருது பெறுபவரை தேர்ந்தெடுக்கும் உயர்மட்டக்குழு குறித்தும் அவ்வரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. அதன்படி, முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட உயர் மட்டக் குழுவில் நிதியமைச்சர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் ஆகியோர் தவிர, சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அலுவலக சார்பற்ற உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும். எனவே, நிலக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களையும், பெரம்பலூர் தொகுதி, நாடாளுமன்ற உறுப்பினர், திரு. ஏ. இராஜா அவர்களையும், டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது வழங்கும் உயர் மட்டக் குழுவில் உறுப்பினர்களாக நியமனம் செய்து அரசு ஆணைப் பிறப்பிக்கிறது.

*3. இந்த உயர் மட்டக்குழு கீழ்வருமாறு அமையும்:-*

| | | | |
|---|---|---|---|
| *தலைவர்* | - | | *முதலமைச்சர்* |
| *உறுப்பினர்கள்* | - | *1.* | *அமைச்சர் (நிதி) முதலமைச்சர் அவர்களே நிதி பொறுப்பையும் ஏற்றுள்ளார்.* |
| | | *2.* | *அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)* |
| | | *3.* | திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், சட்டமன்ற உறுப்பினர். |
| | | *4.* | திரு. ஏ. இராஜா, பாராளுமன்ற உறுப்பினர். |
| *அலுவல் உறுப்பினர்* | - | *5.* | தலைமைச் செயலாளர். |
| | | *6.* | நிதித் துறைச் செயலாளர். |
| | | *7.* | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர் *(செயல் உறுப்பினர்)* |

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

பெறுநர்:

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், சட்டமன்ற உறுப்பினர்,
நிலக்கோட்டை, அழகம்பட்டி, ஜம்புதுரை கோட்டை அஞ்சல்,
நிலக்கோட்டை வட்டம், கொடை ரோடு (வழி) திண்டுக்கல்
மன்னர் திருமலை மாவட்டம்.
திரு. ஏ. இராஜா, பாராளுமன்ற உறுப்பினர், பெரம்பலூர்
வட்டம், வேலூர் அஞ்சல், திருவள்ளுவர் மாவட்டம்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
தலைமைக் கணக்கு அலுவலர், சென்னை-35.

நகல்:

நிதித் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கொடுமைகளால் பாதிக்கப்பட்டோர் - 1997-1998 - வன் கொடுமைக்கு ஆளானோர், அவர் தம் குடும்பத்தார் மற்றும் அவரைச் சார்ந்திருப்போருக்கும் தீருதவி அளித்தல் - நிதி உதவி - நிதி ஒதுக்கீடு - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை.

அரசு ஆணை (நிலை) எண்.120, நாள் 12-6-97.

பார்வை:

1. அரசு ஆணை (நிலை) எண். 121, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 27-9-1996.
2. அரசு ஆணை (நிலை) எண்.28, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 24-2-1997.

ஆணை:

பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995, விதி 12(4)-ன் கீழ் வன்கொடுமைக்கு ஆளானோர், அவர் தம் குடும்பத்தார் மற்றும் அவரைச் சார்ந்திருப்போருக்கும் பணமாகவோ அல்லது பொருளாகவோ அல்லது இருவகைகளிலும் தீருதவி வழங்கப்பட வேண்டும். அதன்படி கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி தீருதவி கிடைக்க வழி செய்யும் நோக்குடன் 1996-1997-ஆம் நிதியாண்டில் மேற்குறிப்பிட்டோர் பயன் பெறும் வகையில் ரூபாய் 50,00,000 பார்வையில் கண்டுள்ள அரசாணைகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

2. பட்டியலில் கண்ட சாதியினர்/பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள், 1995, விதி 12(4)-இன் படி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக தீருதவிகள் வழங்கும் வகையில், 1997-98 ஆம் நிதி ஆண்டிற்கென ரூ. 31.66 இலட்சம் (ரூபாய் முப்பத்தி ஒன்று லட்சத்து அறுபத்தாறாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. இச் செலவினத்தைக் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235- சமூக பாதுகாப்பும், நலனும் -01 புது வாழ்வு - 200. ஏனைய நிவாரணப் பணிகள் - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் - VI. மத்திய, மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் - கலவரத்தால் பாதிக்கப்பட்ட பட்டியல் சாதியினர்/ பட்டியல் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு நிதியுதவி - 51 இழப்பீடு 02. ஏனைய இழப்பீடு" (தகவல் தொகுப்பு குறியீடு 2235 01 200 UA 5129).

3. மேலே பத்தி 2இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை, இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையை பத்தி 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பெற்று பயனாளிகளுக்கு வழங்க, மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

4. ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை செலவழிக்கப்பட்ட விவரம் மற்றும் பயனடைந்தோர் விவரம் ஆகியவற்றை மாதந்தோறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கும், அரசுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தியபடி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்ப வேண்டும்.

5. மைய அரசிடம் சம பங்கு நிதி உதவி பெற தனியே செயற்குறிப்பு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை, நிதித்துறையின் அலுவல் சார்பு எண் 244/D.S/R.P./97, நாள் 19-5-97 ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்,

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் சென்னை-5
அனைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள்.
காவல் துறைத்தலைவர், சென்னை-2.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
தலைமைக் கணக்காயர் சென்னை-18.
தலைமைக் கணக்காயர் (சிஏஎஸ்), சென்னை-9.
கருவூல கணக்கு இயக்குநர், சென்னை-35.
காவல் துறைத் துணைத் தலைவர் (குபாச) சென்னை-30.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
வருவாய்த்துறை ஆணையர், சென்னை-5.
நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

### மாவட்டங்களுக்கு தீருதவி பங்கீட்டிற்கான விவரம்.

| மாவட்டங்களின் பெயர்கள். (1) | தீருதவித் தொகைக்கான பங்கீடு விவரம். (2) |
|---|---|
| | ரூபாய் |
| 1. சென்னை | 20,000 |
| 2. அண்ணா | 25,000 |
| 3. வடாற்காடு அம்பேத்கர் | 25,000 |
| 4. தென்னாற்காடு வள்ளலார் | 25,000 |
| 5. தருமபுரி | 25,000 |
| 6. திருவண்ணாமலை சம்புவராயர் | 25,000 |
| 7. இராமநாதபுரம் | 1,50,000 |
| 8. திருச்சிராப்பள்ளி | 25,000 |
| 9. விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் | 25,000 |
| 10. சேலம் | 25,000 |
| 11. கோயம்புத்தூர் | 20,000 |
| 12. புதுக்கோட்டை | 25,000 |
| 13. பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர் | 3,00,000 |

| (1) | (2) |
|---|---|
| | ரூபாய் |
| 14. திண்டுக்கல் மன்னர் திருமலை | 50,000 |
| 15. தஞ்சாவூர் | 25,000 |
| 16. பெரியார் | 50,000 |
| 17. காமராசர் | 10,36,000 |
| 18. திருநெல்வேலி கட்டபொம்மன் | 3,00,000 |
| 19. சிதம்பரனார் | 3,50,000 |
| 20. நீலகிரி | 25,000 |
| 21. கன்னியாகுமரி | 20,000 |
| 22. நாகை காயிதே மில்லத் | 25,000 |
| 23. மதுரை | 3,00,000 |
| 24. இராஜாஜி | 25,000 |
| 25. பெரம்பலூர்-திருவள்ளுவர் | 25,000 |
| 26. எம்.ஜி.ஆர் | 20,000 |
| 27. திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் | 25,000 |
| 28. கரூர் தீரன் சின்னமலை | 25,000 |
| 29. வைகை தீரன் அழகுமுத்து | 1,50,000 |
| மொத்தம் | **31,66,000** |

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

நகல்:

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கொடுமைகளால் பாதிக்கப்பட்டோர் - 1997-98 - வன்கொடுமைக்கு ஆளானோர் அவர் தம் குடும்பத்தார் மற்றும் அவரைச் சார்ந்திருப்போருக்கும் தீருதவி அளித்தல் - நிதி உதவி - நிதி ஒதுக்கீடு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

அரசாணை (நிலை) எண் 128,

நாள் : 2-7-1997.

(1) அரசாணை (நிலை) எண் 120, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12-6-1997.

(2) மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண் 6/6858/97, நாள் 1-7-1997.

ஆணை:-

பட்டியலில் கண்ட சாதியினர்/பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள், 1995, விதி 12 (4)-இன் படி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக தீருதவிகள் வழங்கும் வகையில் 1997-98ஆம் நிதியாண்டிற்கென ரூ. 31.66 இலட்சம் (ரூபாய் முப்பத்தி ஒன்று இலட்சத்து அறுபத்தாறாயிரம் மட்டும்) பார்வையில் கண்டுள்ள அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட அரசாணையில் மதுரை மாவட்டத்திற்கு தீருதவி வழங்குவதற்காக ரூ.3/- இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(2) மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டம் மேலவளவு கிராமத்தில் 30-6-97 அன்று பட்டியல் இனத்தவர் பிற இனத்தவரால் கொலை செய்யப்பட்டதால் இவர்களுக்குத் தீருதவி வழங்க, கூடுதலாக ரூ.15/- இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம்) ஒதுக்கீடு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையில் கண்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(3) அரசு, மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையை ஏற்று, பயனாளிகளுக்கு வழங்க ரூ.15/- இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) கூடுதலாக ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கிறது. இச்செலவினத்தைக் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235 - சமூக பாதுகாப்பும் நலனும் - 01 புது வாழ்வு - 200 ஏனைய நிவாரணப் பணிகள் - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் - VI மத்திய மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் - கலவரத்தால் பாதிக்கப்பட்ட பட்டியல் சாதியினர்/ பட்டியல் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு நிதியுதவி - 51 இழப்பீடு - 02. ஏனைய இழப்பீடு" (தகவல் தொகுப்பு குறியீடு 2235 01 200 UA 5129)

(4) ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை செலவழிக்கப்பட்ட விவரம் மற்றும் பயனடைந்தோர் விவரம் ஆகியவற்றை மாதந்தோறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கும், அரசுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தியபடி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்ப வேண்டும்.

(5) மேலே பத்தி 3-ல் கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூபாயான ரூ. 15/- இலட்சத்திற்கு 1997-98 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் பெறுவதற்கான உரிய கருத்துருவினை அனுப்பும்படியும், மைய அரசிடம் சம பங்கு நிதி உதவி பெற தனியே செயற்குறிப்பு அனுப்பி வைக்கும்படியும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(6) இவ்வரசாணை, நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 3247/FS/P/97, நாள் 2-7-1997 ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்:

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர், மதுரை.
காவல்துறைத் தலைவர், சென்னை-2.
மதுரை மாவட்ட கருவூல அலுவலர், மதுரை.
தலைமைக் கணக்காயர், சென்னை-18.
தலைமைக் கணக்காயர் (சி.ஏ.எஸ்.), சென்னை-9.
கருவூல கணக்கு இயக்குநர், சென்னை-35.
காவல்துறை துணைத் தலைவர் (கு.பா.ச), சென்னை-30.
மதுரை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மதுரை.
வருவாய்த்துறை ஆணையர், சென்னை-5.
நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ஒப்பம்).......................................
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

குற்றவியல் வழக்குகள் - பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் 1989 - உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் வழக்குகள் தொடர்பாக - அறிவுரைகள் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,

அரசாணை (நிலை) எண் 134, நாள் : 17-7-97.

பார்வை:

உள்துறையின் அரசாணை (நிலை) எண் 3070, நாள் 14-12-79.

---

ஆணை:

மாவட்டங்களில், கீழ்நிலை நீதிமன்றங்களில் தள்ளுபடி செய்யப்படும் குற்றவியல் சம்பந்தப்பட்ட வழக்குகளுள், மாவட்ட ஆட்சியர்கள் பரிந்துரை செய்து உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யக் கருதும் வழக்குகள் அரசின் உள்துறை மூலம் ஆய்வு செய்யப்பட்டு, உயர்நீதி மன்ற குற்றவியல் வழக்குரைஞருக்கு மேல்முறையீடு செய்ய, உள்துறை மூலம், பார்வையிற் கண்டுள்ள ஆணையின்படி கருத்துருக்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

2. 1989, பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டத்தின் செயல்பாடுகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் வருகின்றன. பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) விதிகள் 1995, விதி 9-இன்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலர் பற்றாளராக (Nodal Officer) 16-10-95 நாளிட்ட அரசு கடித எண் 28391/கு.உ.பா./95-1- இன் படி அமர்த்தப்பட்டுள்ளார். 1995 விதிகளுள் விதி 16-இன் கீழ் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவின் செயல் உறுப்பினராகவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலர் உள்ளார். 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளில் மாவட்ட நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்பின் மீது உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டிய வேளைகளில், இதற்கான பரிந்துரைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு அனுப்பி அத்துறையே உயர்நீதிமன்ற குற்றவியல் வழக்குரைஞருக்கு அறிவுறுத்தலாம் என அரசு கருதுகிறது.

3. அதன்படி மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாநகரங்களில் காவல்துறை ஆணையாளர்களும் பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில், கீழ்நிலை நீதிமன்றங்களின் தீர்ப்புகளின் மீது மேல்முறையீடு செய்ய வேண்டுகையில் தமது பரிந்துரைகளை இனி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு அனுப்ப வேண்டும் என அரசு ஆணை இடுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இப்பரிந்துரைகள் மீதான ஆய்வை மேற்கொண்டு உயர்நீதிமன்ற குற்றவியல் வழக்குரைஞருக்கு ஏற்ற அறிவுரைகளை நல்கும் என அரசு ஆணை இடுகிறது.

4. இந்த அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து புதிய நடைமுறைகள் செயல்பாட்டிற்கு வரும். காவல் துறைத் தலைவரும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், தொடர்புடைய சாராலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகளை வழங்கலாகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி.**
அரசுச் செயலர்.

பெறுநர்:

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
காவல் துறைத் தலைவர், சென்னை-2.
காவல்துறை ஆணையர், சென்னை-8.
காவல்துறை ஆணையர், மதுரை.
காவல் துறை ஆணையர், கோயம்புத்தூர்.
காவல்துறை ஆணையர், திருச்சிராப்பள்ளி.
காவல்துறை ஆணையர், சேலம்.
காவல் துறை ஆணையர், திருநெல்வேலி.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104.
அரசு குற்றவியல் வழக்குரைஞர், உயர்நீதிமன்றம், சென்னை-104.
காவல்துறை துணைத் தலைவர் (கு.உ.பா.), சென்னை-30.
அனைத்து மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள்.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்,
சென்னை-5.

அனைத்து செயலகத் துறைகள்.
செயலர் உள்துறை, சென்னை-9.
செயலர், சட்டத்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
சட்டத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை,
சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ஒப்பம்).........................................
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பட்டியலில் கண்ட இனத்தவர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் மற்றும் விதிகள் 1995 - பாதிக்கப்பட்டோர் - வன்கொடுமைக்கு ஆளான பட்டியலில் கண்ட இனத்தவர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர், அவர்தம் குடும்பத்தார் மற்றும் அவரைச் சார்ந்திருப்போருக்கு தீருதவி அளித்தல் - நிதி ஒதுக்கீடு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை.

அரசாணை (நிலை) எண் 142, நாள் 5-8-97.

பார்வை:

1) அரசாணை (நிலை) எண்.120, ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12-6-97.

2) மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.6/6858/97, நாள் 1-7-97.

3) அரசாணை (நிலை) எண்.128, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 2-7-97.

4) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.96993/96, டி9, நாள் 19-6-97.

5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் ந.மு.க.எச்4/28156/97, நாள் 26-6-97.

6) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண்.62350/97 இக, நாள் 15-7-97.

ஆணை:

பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியிலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைப்புத் தடுப்பு) விதிகள், 1995, விதி 12(4)-ன் கீழ் வன்கொடுமைக்கு ஆளான பட்டியலில் கண்ட இனத்தவர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர், அவர்தம் குடும்பத்தார் மற்றும் அவரைச் சார்ந்திருப்போருக்குப் பணமாகவோ அல்லது பொருளாகவோ அல்லது இருவகைகளிலுமோ தீருதவி வழங்கப்பட வேண்டும். அதன்படி, கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகத் தீருதவி கிடைக்க வேண்டுமென்ற நோக்குடன் முதல் தவணையாக ரூ.31.66 இலட்சம் பார்வையிற் கண்ட முதல் அரசாணையில் 1997-1998 ஆம் நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்து அதனை அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளித்து ஆணை வழங்கப்பட்டது.

2) மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டபடி வன்கொடுமைக்கு ஆளாகிக் கொலையுண்ட பட்டியலில் கண்ட இனத்தவர் ஆறு பேர்களின் குடும்பங்களுக்கு உடனடியாகத் தீருதவி வழங்கும் பொருட்டு இந்நிதியாண்டில் மேலும் ரூ.15.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து பார்வையில் கண்ட அரசாணை மூன்றில் ஆணையிடப்பட்டுள்ளது.

3) இவ்வாறு பல்வேறு மாவட்டங்களில் பட்டியலில் கண்ட இனத்தவர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் காரணமாக அவர்தம் குடும்பத்தினருக்கு உடனடியாகத் தீருதவி வழங்கும் பொருட்டுத் தேவைப்படும் நிதியைக் கருத்தில் கொண்டு மாவட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளார்.

4) அரசு, ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் பரிந்துரையை ஆய்வு செய்து அதனடிப்படையில் நடப்பு நிதியாண்டில் மொத்தம் ரூ. 1.00 கோடி தீருதவித் தொகை வழங்குவதற்கென நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது. எனவே, பார்வையிற் கண்ட முதல் மற்றும் மூன்றாவது அரசாணையில் ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.46.66 இலட்சத்துடன் கூடுதலாக ரூ. 53.34 இலட்சத்தைத் தீருதவி வழங்க ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. இச்செலவினத்தை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :—

"2235 - சமூக பாதுகாப்பும், நலனும் - 01 புதுவாழ்வு 200. ஏனைய நிவாரணப் பணிகள் - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் VI மத்திய, மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் - கலவரத்தால் பாதிக்கப்பட்ட பட்டியல் சாதியினர்/ பட்டியல் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு நிதியுதவி - 51. இழப்பீடு 02 ஏனைய இழப்பீடு" (தகவல் தொகுப்பு குறியீடு 2235 01 200 UA 5129).

5) மேலே பத்தி 4-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையை பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பெற்று வன்கொடுமைகளுக்கு ஆளான பட்டியலில் கண்ட இனத்தவர் மற்றும் பட்டியலில் கண்டுள்ள பழங்குடியினர் குடும்பத்தாருக்கு விதிகளில் கண்டவாறு தீருதவி அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

6) ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை செலவழிக்கப்பட்ட விவரம் மற்றும் பயனடைந்தோர் விவரம் ஆகியவற்றை மாதந்தோறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கும், அரசுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தியபடி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்ப வேண்டும்.

7) மேலே பத்தி 4-ல் கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.53.34 இலட்சத்திற்கு 1997-98-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்திய மதிப்பீட்டில் பெறுவதற்கான உரிய கருத்துருவினை அனுப்பும்படியும் மைய அரசிடம் சமபங்கு நிதி உதவி பெற தனியே செயற்குறிப்பு அனுப்பி வைக்கும்படியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.3692/FS/P/97, நாள் 29-7-97 ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்.
காவல்துறைத் தலைவர், சென்னை-2.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
தலைமைக் கணக்காயர், சென்னை-18.
தலைமைக் கணக்காயர் (சி.ஏ.எஸ்.), சென்னை-9.
கருவூல கணக்கு இயக்குநர், சென்னை-35.
காவல்துறைத் துணைத் தலைவர் (குபாச), சென்னை-30.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
வருவாய்த்துறை ஆணையர், சென்னை-5.
நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை,
சென்னை-9.
முதலமைச்சரின் செயலர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

இணைப்பு

மாவட்டங்களுக்குத் தீ நிதவி பங்கீட்டிற்கான விவரம்.

| மாவட்டங்களின் பெயர்கள். (1) | | திருதவித் தொகைக்கான பங்கீடு விவரம். ரூபாய். (2) |
|---|---|---|
| 1. | சென்னை | — |
| 2. | காஞ்சிபுரம் | 9,000 |
| 3. | வேலூர் | 25,000 |
| 4. | கடலூர் | 25,000 |
| 5. | தருமபுரி | 25,000 |
| 6. | திருவண்ணாமலை | 25,000 |
| 7. | இராமநாதபுரம் | 25,000 |
| 8. | திருச்சிராப்பள்ளி | 25,000 |
| 9. | விழுப்புரம் | 12,00,000 |
| 10. | சேலம் | 2,00,000 |
| 11. | கோயம்புத்தூர் | 25,000 |
| 12. | புதுக்கோட்டை | 5,00,000 |
| 13. | சிவகங்கை | 3,00,000 |
| 14. | திண்டுக்கல் | 3,00,000 |
| 15. | தஞ்சாவூர் | 3,00,000 |
| 16. | ஈரோடு | 25,000 |
| 17. | விருதுநகர் | 4,00,000 |
| 18. | திருநெல்வேலி | 4,25,000 |
| 19. | தூத்துக்குடி | 2,00,000 |
| 20. | நீலகிரி | 4,00,000 |
| 21. | கன்னியாகுமரி | - |
| 22. | நாகப்பட்டினம் | - |
| 23. | மதுரை | - |
| 24. | நாமக்கல் | 25,000 |
| 25. | பெரம்பலூர் | 25,000 |
| 26. | திருவள்ளூர் | 5,00,000 |
| 27. | திருவாரூர் | - |
| 28. | கரூர் | 25,000 |
| 29. | தேனி | 3,25,000 |
| | மொத்தம் | **53,34,000** |

இரா. கிருத்துதாசு காந்தி,
*அரசு செயலர்.*

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பட்டியலில் கண்ட இனத்தவர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் - இறந்தவர்களின் ஈமக்கிரியைச் சடங்கிற்கு வழங்கப்பட்ட தொகை ரூ.200-லிருந்து ரூ.500 ஆகவும், ஆண்டு வருமான வரம்பை ரூ.5000-லிருந்து ரூ.24,000 ஆகவும் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை.**

அரசாணை (நிலை) எண் 144, நாள் 6-8-1997

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.465, சமூகநலத்துறை, நாள் 24-7-1978.
2. அரசாணை (நிலை) எண்.1137, சமூகநலத்துறை, நாள் 18-4-1986.
3. அரசாணை (நிலை) எண்.25, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 7-2-1992.

ஆணை:-

பட்டியல் இனத்தவர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் கிறித்தவ மதத்திற்கு மாறிய பட்டியல் இனத்தவர் இறந்தால் அன்னாரின் ஈமச் சடங்கிற்காக இறந்தோரின் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.5,000 க்கு மிகாமல் இருந்தால் ரூ.200- உதவித்தொகை வழங்க மேலே படிக்கப்பட்ட அரசாணை மூன்றில் குறிப்பிட்டபடி ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த உதவித் தொகையை உயர்த்துவது குறித்து அரசு ஆய்வு செய்தது.

2. ஆய்வுக்குப்பின், பட்டியல் இனத்தவர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய பட்டியல் இனத்தவர்களில் எவரேனும் இறந்தால் அன்னாரின் ஈமச்சடங்கிற்காக வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையை ரூ.200-லிருந்து ரூ.500/-ஆக உயர்த்தி வழங்கவும் இவ்வுதவித் தொகை வழங்குவதற்கு இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.5000-லிருந்து ரூ.24,000-ஆக உயர்த்தவும் அரசு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இந்த ஆணை 15-4-1997 முதல் நடைமுறைக்கு வரும்.

3. மேற்காணும் செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

"2225 பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02 பட்டியல் பழங்குடியினர் நலன் - 80. ஏனைய செலவுகள் - I. திட்டத்தில் சேராதது AA. ஈமக்கடன் செலவுக்குத் தொகை கொடுத்தல் - 09. உதவி மானியங்கள் (த.தொ.கு.2225 02 80 AA 0909)

4. இது ஒரு புது துணைபணி குறித்த (New Instrument of Service) செலவாகும். காலப்போக்கில் இதற்குச் சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்துறை (வ.செ.பொ.1) தனியாகப் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்குத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இருபடிகளில் வெளியிடும் ஆணையின் நகலுடன் நிதித்துறை (வ.செ.பொ.1)-க்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு. எண்.357/.D.S/.R.P/97 நாள் 6-8-1997-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசு செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை-5
இயக்குநர் ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-15.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை.
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
ஆணையர், சேலம் மாநகராட்சி, சேலம்.
ஆணையர், திருச்சி மாநகராட்சி, திருச்சி.
ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி.
இயக்குநர், தகவல் மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
மாநில கணக்குத் துறைத் தலைவர், சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர், சென்னை-18. (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-9.

நகல்:-

அரசு செயலர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-9.
அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சென்னை-9.
ஆதிதிராவிட நல அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை-9.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9
நிதி (வ.செ.பொ.I.) துறை சென்னை-9.
நிதி (ச.ந.) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ஒப்பம்)..........................................
பிரிவு அலுவலர்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடுதடு) துறை.

அரசாணை (நிலை) எண் 177, நாள் : 12 நவம்பர் 1997.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை - ஆதிதிராவிடர் நலம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு வாரவிழா - விழாவுக்கான செலவினங்களுக்காக ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.**

---

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை எண் 1729, வேலைவாய்ப்பு மற்றும் கூட்டுறவுத் துறை, நாள் 9-12-1958.
2. அரசாணை எண்.171, சமூக நலத்துறை, நாள் 2-2-1971.
3. அரசாணை (டி) எண் 8, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 8-1-1997.
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் நேர்முகக் கடித எண் வி1/25449/97, நாள் 19-6-1997.

---

**ஆணை—(நிலை) எண், 177, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை, நாள் 12-11-1997.**

ஆதிதிராவிடர் நலம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு வார விழா ஆண்டுதோறும் சனவரித் திங்கள் 21 முதல் 30 முடிய கொண்டாடப்பட்டு வருகிறது. படிக்கப்பட்ட அரசாணை எண் 3-இல் இவ்விழா கொண்டாடுவதற்கு மாவட்டத்திற்கு ரூ.2,350 வீதமும் சென்னை மாவட்டத்திற்கு ரூ.3,000 வீதமும் செலவு செய்யத் திருத்திய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

2. இந்த வார விழாவைச் சீராக வகுத்து நடத்துவதற்கும் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளார். அதை அரசு ஆழ்ந்து ஆய்விட்டுப் பார்வையில் கண்ட அரசாணைகளை மேலோச்சிக் கீழ்வரும் ஆணைகளை வெளியிடுகிறது:—

3. ஆதிதிராவிடர் நலம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு வார விழா கீழ்வரும் பாங்கில் எடுக்கப்படும்:-

ஏழு நாட்கள் விழா கீழ்வரும் நிலைகளில் நடத்தப்படும்.

(அ) முதல் நாள் விழா.-ஒரு நாள் அல்லது ஒரு வாரக் கண்காட்சி நடத்தப்படும். இதை ஆதிதிராவிடர் நலத்துறையும், செய்தி-சுற்றுலாத்துறையும் கூட்டாகச் சேர்ந்து நடத்தும்.

(ஆ) இரண்டாம் நாள் விழா:-மாவட்ட அளவில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளிலும், கல்லூரி/ பள்ளி விடுதிகளிலும் பயிலும் மாணவ/மாணவியர்களைக் கொண்டு நாட்டியம், நாடகம், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்ற கலைப் போட்டிகள் நடத்தப்படும். இந்த விழாவினை மாவட்ட மற்றும் கோட்ட அளவிலான ஆதிதிராவிடர் நலக் குழுக்கள் நடத்தும்.

(இ) மூன்றாம் நாள் விழா:- நாட்டுநலப் பணித் திட்டத்தின் (என்.எஸ்.எஸ்.) மூலமாக கல்லூரி மாணவ/ மாணவியர் ஓரு ஆதிதிராவிடர் குடியிருப்புக்குச் சென்று அவ்வூரில் மேல்நிலை வகுப்புகளில் (+1 மற்றும் +2) படிக்கும் மாணவ, மாணவியர்களுடனும் அவர் தம் பெற்றோர்களுடனும், அவர்தம் கூடப்பிறந்தோருடனும் தேநீர் அருந்தி மனமகிழ் நிகழ்ச்சியில் பங்கேற்பர்.

(ஈ) நான்காம் நாள் விழா:- அனைத்து மதத் தலைவர்களையும், ஆதிதிராவிடர் சான்றோர்களையும் ஒன்றுகூட்டி நல்லிணக்கக் கூட்டங்கள் நடத்தப்படும். வன்கொடுமைத் தடுப்புச்

சட்டக்கூறுகள் குறித்து காவலதிகாரிகள், வழக்கறிஞர்கள், நீதிபதிகளைக் கொண்டு கருத்தரங்கங்கள் நடத்தப்படும். இந்த விழாவினைக் காவல் துறைக் குடியியல் உரிமைகள் பாதுகாப்புப் பிரிவு நடத்தும்.

(உ) **ஐந்தாம் நாள் விழா:-** நாடகம் மற்றும் திரைப்படத் துறையினரைக் கொண்டு, கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படும். இந்த விழாவினை மாவட்டக் கலைமன்றங்கள் நடத்தும்.

(ஊ) **ஆறாம் நாள் விழா:-** சமுதாயத்தில் முன்னேறிய நிலையிலுள்ள அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், தொழில்முனைவோர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரைக் கொண்டு சமுதாய பொருளாதார முன்னேற்றச் சிந்தனைக் கூட்டங்கள் நடத்தப்படும். இந்த விழாவினை மாவட்டத் தொழில் மையம் (D.I.C.) நடத்தும்.

(எ) **ஏழாம் நாள் விழா.-** இறுதி நாள் நிகழ்ச்சியாக ஒரு பெருவிழா நடத்தப்படும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சிறப்புத் தகுதி பெற்றோர்கான பரிசுகள், ஊக்கத்தொகை வழங்குதல், தொழில் முனைவோர்க்கான நிதி உதவிகள் நல்குதல் போன்றன இவ்விழாவில் ஏற்பாடு செய்யப்படும். ஏழாம் நாள் விழாவை முந்தைய ஆறு நாள் விழாக்களுக்குப் பொறுப்பானவர்கள் அடங்கிய விழாக் குழு நடத்தும். மாவட்ட ஆதிதிராவிட நல அதிகாரி இக்குழுவின் செயல் உறுப்பினராகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும் இருப்பார்.

4. ஆதிதிராவிட நலம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு வார விழாக்களை மாவட்ட அளவில் ஆண்டுதோறும் நடத்த மாவட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ. 15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வீதமும் மாநில அளவில் சென்னையில் நடத்த ஆண்டுக்கு ரூ. 65,000 (ரூபாய் அறுபத்தைந்தாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) செலவு செய்ய ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன். 01. பட்டியல் சாதியினர் நலன். 800 ஏனைய செலவு-ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் VI. மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள், UH. பிரச்சாரச் செலவுகள் 08. விளம்பரமும் பிரச்சாரமும்"
(த.தொ.கு.2225.01.800 U.H. 0808)

6. 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக ரூ.1.00 இலட்சம் 1997-98 திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். 1997-98 திருத்த மதிப்பீடு/ இறுதித் திருத்த மதிப்பீட்டிற்குக் கருத்துரு அனுப்பும் போது இக் கூடுதல் செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. 1997-98 திருத்த மதிப்பீடு திருத்த /இறுதித் திருத்த மதிப்பீட்டை எதிர்நோக்கி, சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு),சென்னை-5 மற்றும் மாவட்டக் கருவூல அலுவலர்கள் பட்டியல் சரியாக இருக்கும்பட்சத்தில், பட்டியல்களை அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.485/து.செ./ஆர்பி./97, நாள் 5-11-1997-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசுச் செயலர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-5.
அனைத்துக் கோட்ட ஆட்சித் தலைவர்கள் (அனைத்துக் கோட்ட/மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர்களுக்கும் நகல் வழங்க வேண்டப்படுகிறார்)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
மாவட்டக் கணக்காயத் தலைவர், சென்னை-6.
மாவட்டக் கணக்காயத் தலைவர், சென்னை-18.

மாவட்டக் கணக்காயத் தலைவர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
காவல் துறைத் துணைத் தலைவர் (கு.பா.ச.), சென்னை-5.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
செயலர்கள்/துறைத் தலைவர்கள், அனைத்து மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரிகள்
நாட்டு நலப் பணித் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்.
மாவட்ட தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர்கள்.
மாவட்ட தொழில்மைய மேலாளர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு உறுப்பினர்கள்.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (அ.ந.(மு.) பிரிவு, சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

(ஒப்பம்)..........................................
பிரிவு அலுவலர்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை.**

அரசாணை (நிலை) எண்.183, நாள் 14 நவம்பர் 1997.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்-தீண்டாமையை ஒழிக்க உறுதிமொழி-திருத்திய ஆணை வெளியிடப்படுகிறது.

---

பார்வை:-

1. அரசாணை (நிலை) எண்.489, சமூக நலத் துறை, நாள் 31-5-1972.
2. அரசாணை (நிலை) எண்.3, சமூக நலத் துறை, நாள் 2-1-1974.
3. அரசு நேர்முகக் கடிதம் எண் 84057/அதிந-1/77-3, நாள் 25-1-1978.

**ஆணை-(நிலை) எண் 183, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை, நாள் 14-11-1997.**

ஒவ்வொரு ஆண்டும் சனவரித் திங்கள் 30ஆம் நாளன்று தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அத்தருணம் இரண்டு நிமிட மௌனத்திற்குப் பிறகு தீண்டாமை ஒழிப்புக்கான உறுதிமொழி எடுக்கப்படுகிறது. இந்த உறுதிமொழியின் வாசகம் பார்வை மூன்றிலுள்ள அரசு நேர்முக கடித எண் 84057/ஆதிந-1/77-3, நாள் 25-1-1978-ல் தரப்பட்ட உறுதிமொழி வடிவத்திற்குப் பதிலாகப் பார்வை ஒன்றிலுள்ள அரசு ஆணை எண் 489, சமூக நலம், நாள் 31-5-1972-இல் தெரிவிக்கப்பட்டு, பார்வை இரண்டிலுள்ள அரசு ஆணை எண்.3, சமூகநலம், நாள் 2-1-1974-இல் வலியுறுத்தப்பட்டபடி இனி அமையும் என அரசு ஆணையிடுகிறது. இனிவரும் ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டிலும் சனவரித் திங்கள் 30ஆம் நாள் தியாகிகள் தினத்தன்று இரண்டு நிமிட மௌனத்திற்குப்பின் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உறுதிமொழி எடுக்கப்பட வேண்டும் என ஆணையிடப்படுகிறது:-

### தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி.

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின் படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீதும் தெரிந்தோ தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

### Pledge Against Untouchability.

I, being a citizen of India owing my unswerving and whole-hearted allegiance to the Constitution, am aware that untouchability is abolished under our Constitution. I do hereby solemnly declare that I shall not by any word, deed or thought, observe or practice, consciously or subconsciously, social discrimination in any form based on untouchability against any individual. I am also aware that it is my duty to work sincerely and faithfully towards the creation of a free and casteless society in accordance with the letter and spirit of the Constitution. I do solemnly declare that it shall always be a sincere expression of my complete loyalty to the Constitution of India.

2. ஒவ்வொரு ஆண்டும் சனவரித் திங்கள் 30 ஆம் நாள் தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப்படும்போது இரண்டு நிமிட மௌனத்திற்குப் பிறகு மேற்குறிப்பிட்ட வகையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

எடுக்கப்படவேண்டும் என அனைத்து துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலர்.*

*பெறுநர்:*

அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து செயலகத் துறைகள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
ஆணையர், மதுரை, கோவை, சேலம் திருநெல்வேலி, திருச்சி மாநகராட்சிகள்.
சென்னையிலுள்ள அனைத்துத் துறைத் தலைமை அலுவலகங்கள் (மைய அரசின் ஆளுகைக்குட்பட்டவை).
செயலர், மைய அரசு, உள்துறை, புதுடெல்லி.
செயலர், பொதுத்துறை சென்னை-9.
தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு, சென்னை-9.
துணைச் செயலர், பொதுத்துறை, சென்னை-9.
இயக்குநர், சென்னை அகில இந்திய வானொலி நிலையம், சென்னை-4.
இயக்குநர், சென்னைத் தொலைக்காட்சி நிலையம், சென்னை-5.
அனைத்து வருவாய்க் கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
காவல்துறைத் தலைவர், சென்னை-2.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதலமைச்சரின் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (அ.ந.மு.) பிரிவு, சென்னை-9.
கோப்பிற்கான தூய நகல்.
தொ.கோ.

*(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)*

*(ஒப்பம்)........................................*
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

கொத்தடிமை-கொத்தடிமை மறு வாழ்வு திட்டங்களைச் செயல்படுத்துதல் - மாநில அளவில் தலைமைச் செயலரின் தலைமையில் உயர் மட்டக்குழு அமைத்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந-8) நலத்துறை.

அரசு ஆணை நிலை எண்: 122, நாள்: 20-6-1997.

படிக்கப்பட்டன:

1. அரசு ஆணை நிலை எண்:2768, சமூக நலத்துறை, நாள்: 19-11-1983.
2. அரசு ஆணை நிலை எண்: 226, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 9-10-1992.

ஆணை:

கொத்தடிமைகளாய் இருந்து விடுவிக்கப்பட்ட நபர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களை ஆய்வு செய்யவும், ஒப்புதல் அளிக்கவும், மாநில தெரிவுக்குழு (Screening Committee) ஒன்று தலைமை செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் மறுவாழ்வுத் திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கும் அதிகார ஒப்படைப்பு மாவட்ட ஆட்சியர்களுக்கு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் வழங்கப்பட்ட பிறகு மேற்படி குழு கூடுவதற்கான தேவை எழவில்லை.

3. கொத்தடிமைகள் மறுவாழ்வுக்கான திட்டங்களுக்கு மாநில அரசு அளவில் உரிய முன்னுரிமை அளிக்கும் நோக்கத்துடன், மாநில அளவில் மேற்படி திட்டத்தைச் செயல்படுத்தும் தற்போதைய நடைமுறைகளை மேம்படுத்தி வலிமைப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு கருதி, தலைமைச் செயலர் அவர்களின் தலைமையின் கீழ் உயர்மட்டக்குழு ஒன்றினை அமைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளது.

4. மத்திய அரசு கூறியுள்ள ஆலோசனைகளை அரசு நன்கு ஆய்ந்த பின்னர், தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு உயர்மட்டக்குழு ஒன்றை பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் அமைக்கப்பட்ட குழுவிற்குப் பதிலாக, கீழ்க்காணும் உறுப்பினர்களை அமைத்து ஆணையிடுகிறது:—

1. தலைமைச் செயலாளர் ... தலைவர்
2. அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, சென்னை. ... உறுப்பினர்
3. அரசு செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை. ... உறுப்பினர்
4. அரசு செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை. ... உறுப்பினர்
5. அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை அல்லது வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை. ... உறுப்பினர்

6. ஆணையர், தொழிலாளர் நலம், சென்னை ... உறுப்பினர்

7. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை. ... உறுப்பினர் செயலர்

8., 9., 10, 11. மாவட்ட கண்காணிப்புக்குழுவில் உறுப்பினராக உள்ள அலுவல் சாரா உறுப்பினர்களில் நால்வர். ... உறுப்பினர்

12., 13. இருமாவட்ட ஆட்சித்தலைவர்கள். ... உறுப்பினர்கள்.

5. மேலே பத்தி 4-ல் அமைக்கப்பட்டுள்ள குழு பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளை வகுத்து, அவை செயல்படுத்தப்படும் விதத்தை மேற்பார்வையிடும்:—

(1) கொத்தடிமைத் தொழிலாளரைக் கண்டறிய வீடுதோறும் கணக்கெடுப்பு நடத்துவதற்குச் செய்துள்ள ஏற்பாடுகளை ஆய்வு செய்தல்.

(2) அவ்வாறு நடத்தப்படும் கொத்தடிமைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் திரட்டிக் கொடுக்கப்பட்ட அடிப்படை விவரங்களை ஆய்வு செய்தல்.

(3) கொத்தடிமைத் தொழிலாளர்முறை (ஒழிப்புச்) சட்டம், 1976-ன் பிரிவு 21-ன் கீழ் கொத்தடிமைகள் விடுவிப்பில் உள்ள முன்னேற்றம் மற்றும் விடுவிப்புச் சான்றுகளை ஆய்வு செய்தல்.

(4) மறுவாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.

(5) கொத்தடிமைத்தனத்திற்கு திரும்பச்செல்வதை தடுக்க உறுதியான செயல்பாடுகள்.

(6) பொதுமக்களின் புகார்களையும், குறைகளையும் கேட்டு அவற்றின் மீது பல நிலைகளில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அறிதல்.

6. இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி, கொத்தடிமை மறுவாழ்வுத் திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்யும். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் சட்டம், ஒழுங்கு வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற இனங்களை ஆய்வு செய்ய நடத்தப்படும் காலமுறைக் கூட்டங்கள் நிகழ்ச்சி நிரலில் மேற்படி இனம் நிலையான இனமாக இருக்க வேண்டும்.

7. இக்குழு முதல் நிலைக் குழுவாகச் செயல்படும். இக்குழுக்கூட்டங்கள் நடைபெற, உறுப்பினர்-செயலர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

தலைமைச் செயலாளர், சென்னை-9.

அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை-9.

அரசு செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.

அரசு செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்றை, சென்னை-9.

அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை-9.

வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.

ஆணையர், தொழிலாளர் நலம், சென்னை-18.

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-9.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-6.

செயலாளர், தொழிலாளர் நல அமைச்சகம், புதுடெல்லி-110 001.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையகம், புதுடெல்லி.

தலைவர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையகம், சாஸ்திரிபவன், சென்னை-6.

நகல்:-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.

இருப்பு கோப்பு/உதிரிகள்.

/உத்திரவுப்படி அனுப்பப்படுகிறது/

பா.நா. 20-6-1997.

ஒப்பம்.......................

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கொத்தடிமை ஒழிப்புபற்றி தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் விளம்பரம் செய்ய ஒலி, ஒளி நிகழ்ச்சிகள் தயாரித்தல் - ஒப்புதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

அரசு ஆணை (டி) எண் 123 நாள்: 2.5.97.

படிக்கப்பட்டன:-

1. அரசு ஆணை (நிலை) எண் 145, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, நாள்: 20.8.96.
2. அரசு ஆணை (நிலை) எண் 167, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 20.12.96.
3. அரசு ஆணை (நிலை) எண் 50, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, நாள்: 3.3.97.
4. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண் 60756/96, நாள்: 10.3.97.

ஆணை:

பார்வை 3-ல் படிக்கப்பட்ட அரசு ஆணையில், ஏனைய இனங்களுடன், கொத்தடிமை விழிப்புணர்ச்சி பற்றி தொலைக்காட்சியில் துணுக்கு விளம்பரங்கள் வெளிவர மற்றும் விளம்பரம் தயாரிக்க, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு ரூ.3.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. பார்வை 4-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, மூலம் ஒளிநாடா (Video Cassette) தயார் செய்து, அதனைத் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்வதற்காக, கொத்தடிமை முறை ஒழிப்பு பற்றிய சிறு குறிப்பு ஒன்றை அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி, அரசு ஒப்புதல் பெறப்பட்டதும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு அனுப்பித் தொலைக்காட்சியில் 30 நிமிடங்களுக்கு மேற்படாமல் ஒளிப்பரப்பு செய்யும் வகையில் ஒளிநாடா தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படும் என்று தெரிவித்து கொத்தடிமைத் தொழில் முறை ஒழிப்பு பற்றிய சிறு குறிப்பிற்கு அரசின் ஒப்புதலை வேண்டியுள்ளார்.

3. கொத்தடிமை ஒழிப்பு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மீதான கொடுமைகள் தடுப்பு, ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலப்பணிகள் பற்றிய துணுக்கு விளம்பரங்களை (FILLERS) தொலைக்காட்சி, வானொலியில் செய்வதற்கு ரூ.3.00 இலட்சம் ஒப்பளிப்பு உள்ளதாலும், ஏற்கனவே இதுகுறித்து சோழா கிரியேஷன்ஸ் என்னும் நிறுவனத்துடன் விரிவாக எண்ணப் பரிமாற்றங்கள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், இதுகுறித்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அனுப்பியுள்ள "கொத்தடிமைத் தொழில் முறை ஒழிப்பு" பற்றிய குறிப்பினை அரசு ஏற்று பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் தலைமைத் தயாரிப்பாளரைத் தொடர்பு கொண்டு விளம்பரம் செய்வதற்கான ஒலி, ஒளி நிகழ்ச்சிகள் சோழா கிரியேஷன்ஸ் நிறுவனம் வாயிலாகத் தயாரிக்க மேல் நடவடிக்கையினைத் தொடருவதற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்

நல இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்குகிறது. இந்த ஒலி, ஒளித் தயாரிப்புகள் தொலைக்காட்சிகளிலும், வானொலியிலும் சிறு, சிறு துணுக்குச் செய்திகளாக (FILLERS) ஒரு சில மணித்துளிகளில் மீண்டும் மீண்டும் விளம்பரப்படுத்தத் தக்க வகையில் அமைய வேண்டும்.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

இரா. கிருத்துதாசு காந்தி,
*அரசுச் செயலர்.*

*பெறுநர்:*

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
இயக்குநர், தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, சென்னை-113.
தலைமைத் தயாரிப்பாளர், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, சென்னை-113.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை-5.

*நகல்:-*

சோழா கிரியேஷன்ஸ், கே. 22, காஞ்சி நகர், சவுத் போக் ரோடு, தி.நகர், சென்னை-17.
உதிரி நகல்/இருப்புக் கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

*ஜி. சதாசிவம்.*
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

கொத்தடிமை முறை ஒழிப்பு - விழிப்புணர்ச்சி இயக்கம் நடத்துதல் தேசிய அளவிலான கூட்டம் நடத்துவதற்கு அனுமதி மற்றும் கூடுதல் நிதி வழங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந. 8) நலத் துறை

*அரசாணை (டி) எண் 177* *நாள்: **26.6.97.***

*படிக்கப்பட்டவை:*

*(1)* அரசாணை நிலை எண் 167, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள். 20-12-96.

*(2)* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேர்முகக் கடித எண் எச்.3/60756/96, நாள்: 22-4-97.

---

**ஆணை:**

மேற்குறிப்பிட்டுள்ள நேர்முகக் கடிதத்தில் தேசிய அளவில் கொத்தடிமை முறை ஒழிப்பு பற்றி சென்னையில் கூட்டம் நடத்தி இதர மாநிலங்களும் இதனை உணரும் வகையில் செய்திட வழக்கறிஞர் திரு. சிராஜ்சேட், அவர்களது நிறுவனமான ``CAREBOLA" மூலம் நடவடிக்கை மேற்கொள்ள தோராயமாக ரூ.2,08,000/ மதிப்பீட்டில் தயாரித்துக் கொடுத்துள்ள கருத்துருவினை அனுப்பியுள்ளார். என்றும், சென்னையில் தேசிய அளவிலான கருத்தரங்கம் நடத்த தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு நிதி அளிக்கவும், மாவட்டங்களில் விளக்கக்கூட்டம் நடத்தவும் தலா ரூ.1.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.2.00 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றும் , இதில் மாவட்ட அளவிலான கூட்டங்கள் ஏற்கனவே மதுரையில் 4-2-97, 5-2-97 மற்றும் 6-2-97 ஆகிய நாட்களில் அனைத்து மாவட்ட அலுவலர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டுவிட்டது என்றும், இக்கூட்டங்களில் கலந்து கொண்ட தொண்டு நிறுவனங்களுக்கு போக்குவரத்துக் கட்டணம் வழங்கலாம். என 4-3-1997 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது என்றும், அதன்படி வடாற்காடு அம்பேத்கார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலிருந்து மட்டும் ரூ.1538.20 போக்குவரத்துக் கட்டணம் வழங்கக்கோரி முன் மொழிவு வரப்பெற்றதாகவும், இதற்கெனத் தோராயமாக மொத்தம் ரூ.10,000/- நிதி தேவைப்படலாம் என்றும், இது போக மீதம் ரூ.1,90,000 தொகை உள்ளது என்றும், திரு சிராஜ்சேட் அவர்களின் கோரிக்கைப்படி, சென்னையில் தேசிய அளவிலான கூட்டம் நடத்துவதற்குத் தேவையான ரூ. 2,08,000- த்தில் கையிருப்பில் உள்ள ரூ. 1,90,000 போக மீதம் ரூ.18,000 (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) கூடுதலாக நிதி தேவைப்படுவதாகக் கூறி அதனை வழங்கும்படியும், தேசிய அளவிலான கூட்டம் சென்னையில் நடத்துவதற்கு ஒப்புதல் அளிக்கும்படியும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கோரியுள்ளார்.

2. மேலே பத்தி 1-ல் குறிப்பிடப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தது. அதன்படி கொத்தடிமை முறை விழிப்புணர்ச்சி, பற்றி தேசிய அளவிலான கருத்தரங்கம் நடத்த மேற்சொன்ன அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) ``CAREBOLA" தொண்டு நிறுவனத்திற்கு வழங்கி அத்தொண்டு நிறுவனம் மூலம் கருத்தரங்கினை நடத்தவும் அரசு அனுமதி வழங்குகிறது.

*(ஆளுநரின் ஆணைப்படி)*

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலாளர்.*

பெறுநர்:

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5.

நகல்:

திரு.எம்.சிராஜ்சேட்,
திட்ட இயக்குநர்,
கேர்போலா,
35, ரட்டன் பஜார்.
சென்னை-600 003.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

/உத்திரவுப்படி அனுப்பப்படுகிறது/

ஜி. சதாசிங்வம்.
பிரிவு அலுவலர்.

பா.நா. 26-6-97

தமிழ்நாடு அரசு

சுருக்கம்.

கொத்தடிமை முறை ஒழிப்பு - விழிப்புணர்ச்சி இயக்கம் நடத்துதல் தேசிய அளவிலான கூட்டம் நடத்த கூடுதல் நிதி வழங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந.8) நலத்துறை.

அரசு ஆணை (டி) எண் 207. நாள்: 14.8.1997.

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை நிலை எண் 167, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள். 20.12.96.
2. அரசு ஆணை நிலை எண் 177, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள். 26.6.1997.
3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேர்முக கடித எண் எச்.3/60756/96, நாள் 18.7.1997.

- - - -

ஆணை:

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் கொத்தடிமை முறை ஒழிப்பு குறித்து தேசிய அளவிலான கருத்தரங்கம் சென்னையில் நடத்த ஒப்பளிப்புச் செய்யப்பட்ட ரூ.1.00 இலட்சத்தை கேர்போலா தொண்டு நிறுவனத்திற்கு வழங்கி, அத்தொண்டு நிறுவனம் மூலம் கருத்தரங்கினை நடத்த பார்வை இரண்டில் கண்டுள்ள அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வை மூன்றில் கண்டுள்ள கடிதத்தில், மேற்படி கருத்தரங்கினை நடத்த குறைந்த பட்சம் ரூ.2.00 இலட்சமாவது செலவு ஆகும் என்று கேர்போலா அமைப்பாளர் திரு. எம். சிராஜ்சேட் அவர்கள் தெரிவித்துள்ளபடியால், மாவட்ட அளவில் கூட்டங்கள் நடத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 1 இலட்சத்தில் மதுரையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு தொண்டு நிறுவனங்களுக்கு பயணப்படி வழங்க ரூ.10,000 போக மீதமுள்ள ரூ. 90,000-த்தைத் தேசிய அளவிலான மேற்படி கருத்தரங்கினை கூடுதலாக செலவு செய்ய அனுமதி அளித்து, இத்தொகையினை கேர்போலா நிறுவனத்திற்கு வழங்க அனுமதி அளிக்குமாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தது. அதன்படி, ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ.1.00 இலட்சம் போக கொத்தடிமை முறை விழிப்புணர்ச்சி பற்றி மாவட்ட அளவில் கூட்டங்கள் நடத்த பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.00 இலட்சத்தில் மீதமுள்ள ரூ.90,000 -த்தில் ரூ.25,000 (ரூபாய் இருபத்தையாயிரம் மட்டும்) மேற்படி கருத்தரங்கிற்கென கூடுதலாக கேர்போலா தொண்டு நிறுவனத்திற்கு வழங்க அரசு அனுமதி வழங்குகிறது.

4. பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.25,000 (ரூபாய் இருபத்தையாயிரம் மட்டும்)-ஐ கேர்போலா நிறுவன அமைப்பாளர் திரு. எம். சிராஜ்சேட் அவர்களுக்கு உடனடியாக வழங்குமாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண் 200/எஸ். எஸ்./97-1, நாள்: 13.8.1997-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-6.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.

நகல்:

திரு. எம். சிராஜ்சேட்,
அமைப்பாளர், கேர்போலா, 35, ரட்டன் பஜார்,
சென்னை-600 003.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/உத்திரவுப்படி அனுப்பப்படுகிறது/

ஜி. சதாசிங்வம்.
பிரிவு அலுவலர்.

பா.நா. 14.8.1997.

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

ஆதி திராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலம் - நில எடுப்பு —தமிழ்நாடு ஆதி திராவிடர் நில எடுப்புச் சட்டம் 31/1978 நடைமுறைப்படுத்துதல் - நில எடுப்பு நடவடிக்கைகள் முடிப்பதற்கான காலவரையறை - திருத்தப்பட்ட காலவரையறை (நில எடுப்பு தொடர்பான திட்டம் மற்றும் ஆய்வு குறித்த மதிப்பாய்வு) அறிக்கை - ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஆதி திராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத்துறை

*அரசாணை நிலை எண் 14* **நாள்: 31-1-97**

*படிக்கப்பட்டன:*

(1) அரசாணை நிலை எண் 1309, வருவாய்த் துறை, நாள்: 26-09-86.

(2) அரசாணை நிலை எண் 143, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 01-08-95.

*மீண்டும் படிக்க:*

(3) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5 கடிதம் ந.க.எண் ஆ1/35556/95, நாள்: 13-09-95.

(4) நில நிர்வாக ஆணையர், சென்னை-5 கடித எண் 11/49137/95, நாள்: 21-12-95.

---

*ஆணை:*

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் மத்திய நில எடுப்புச் சட்டம் 1894-ன் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து நில எடுப்பு நடவடிக்கைகளிலும் ஒரு செயலுக்கும் அடுத்த செயலுக்குமிடையே ஏற்படக்கூடிய கால அளவு குறித்துப் பின்பற்றப்பட வேண்டிய ஒரு புதிய திருத்திய காலவரையறை (நில எடுப்பு நடவடிக்கைகளுக்கிடையேயான கால அளவு குறித்த திட்டம் மற்றும் ஆய்வு குறித்த மதிப்பாய்வு) அறிமுகப்படுத்தப்பட்டது. 22-.11-94 தேதியிட்ட உச்ச நீதி மன்றத் தீர்ப்புக்குப் பின் ஆதி திராவிடர் வீட்டுமனை, மயானம், குடியிருப்பு மற்றும் மயானம் ஆகியவற்றுக்கான பாதை வசதி போன்ற ஆதி திராவிடர்களுக்கான அனைத்து நில எடுப்புக்களும் தமிழ்நாடு ஆதி திராவிடர் நில எடுப்புச் சட்டம் 31/1978-ன் கீழ் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டுமென பார்வை இரண்டில் கண்ட அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மத்திய நில எடுப்புச் சட்டம் 1894-ன் கீழ் மேற்கொள்ளப்படும் நில எடுப்பு நடவடிக்கைகளுக்கு இடையே கால வரையறை பின்பற்றப்படுவதைப் போல தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/1978-ன் கீழ் மேற்கொள்ளப்படும் நில எடுப்பு நடவடிக்கைகளுக்கிடையேயும் காலவரையறை குறித்த ஒரு திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

2. இது குறித்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் தமிழ்நாடு ஆதி திராவிடர் நில எடுப்புச் சட்டம் 31/1978-ன் கீழ் மேற்கொள்ளப்படும் நில எடுப்பு நடவடிக்கைகளில் பின்பற்ற வேண்டிய காலவரையறை குறித்த திட்டம் ஒன்றை அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியிருந்தார். மேற்கண்ட காலவரையறை குறித்த திட்டம் நில நிர்வாக ஆணையரால் சில குறிப்பிட்ட மாவட்ட வருவாய் அலுவலர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. இவற்றின் அடிப்படையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநரால் வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய திருத்திய காலவரையறை குறித்த திட்டம் 20 நடவடிக்கைகளுக்கான கால அட்டவணையுடன் அரசுக்கு அனுப்பப்பட்டது. இப் புதிய காலவரையறை குறித்த திட்டம் அரசினால் அனைத்து மாவட்டாட்சியர்களுக்கும் அனுப்பப்பட்டு அவர்களின் கருத்து

கோரப்பட்டது. இப்புதிய காலவரையறை, நில எடுப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு 100 நாட்களுக்குள் தீர்ப்பாணை வழங்கவும், 110 தினங்களுக்குள் பயனாளிக்கு பட்டா வழங்கவும், வழிவகை செய்கிறது. தீர்ப்பாணை வழங்கியபின் மேற்கொள்ளப்படும் பின் நடவடிக்கைகளான தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லை குறித்து சட்டம் 1923-ன் பிரிவு 13-ன் படி அறிவிக்கை வெளியிடுவது உட்பட அனைத்து நடவடிக்கைகளும் 232 தினங்களுக்குள் முடிவடைந்து விடும்.

3. தமிழ்நாடு ஆதி திராவிடர் நில எடுப்புச் சட்டம் 31/1978-ல் மேற்கொள்ளப்படும் நில எடுப்பு நடவடிக்கைகளின் பல்வேறு நிலை குறித்த பட்டியல் இவ்வாணையில் இணைப்பு 'அ' வில் உள்ளது இணைப்பு 'ஆ' வில் உள்ள காலவரையறை குறித்த வரை படத்தில் உள்ள நில எடுப்பு நடவடிக்கைகளின் பல்வேறு நிலைகளின் அடிப்படையில் அமைந்தவை. ஒவ்வொரு நில எடுப்புக் கோப்பிலும் வைக்கப்பட வேண்டிய சரி பார்ப்புப் பட்டியல் இணைப்பு 'இ'யில் கொடுக்கப்பட்டுள்ளது. நில எடுப்பு நடவடிக்கைகளின் பல்வேறு நிலைகளில் செயல்பட வேண்டிய முறை பற்றி இணைப்பு 'ஈ'யில் கொடுக்கப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு ஆதி திராவிடர் நில எடுப்புச் சட்டம் 31/1978ன் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து நில எடுப்பு நடவடிக்கைகளிலும் இப்புதிய திருத்திய காலவரையறை முறை பின்பற்றப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்த அனைத்து மாவட்டாட்சியர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள்/மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர்கள் ஆகியோருக்குத் தக்க அறிவுரைகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் வெளியிடப்படும். இப்புதிய காலவரையறை முறை செயல்படுத்தப்படும் விதத்தை ஓராண்டு காலத்திற்குக் கண்காணித்து தக்க ஆய்வுக்குப்பின் இக்காலவரையறை முறையில் ஏதேனும் மாறுதல்கள் செய்ய வேண்டியிருப்பின் அது குறித்த கருத்துக்களை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுப்பும்படி அனைத்து மாவட்டாட்சியர்களிடமிருந்தும் இது குறித்து ஆய்வறிக்கை வரப்பெற்றவுடன் அவற்றை ஆய்வு செய்து தன்னுடைய கருத்துகளை உடனடியாக அரசுக்கு அனுப்பும்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

/ஆளுநரின் ஆணைப்படி/

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்டாட்சியர்கள்
அனைத்து துறைத் தலைவர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (அநமு) மற்றும்
அனைத்து நில எடுப்பு பிரிவுகள் துறை.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர்
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
வருவாய் துறை, சென்னை-9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

## இணைப்பு அ

### நில எடுப்பு நடவடிக்கைகளின் பல்வேறு நிலைகள்

| நடவடிக்கை குறியீடு. (1) | நடவடிக்கை. (2) |
|---|---|
| க. | நிலம் தேர்வு செய்தல்/நிலம் ஆய்வு செய்தல்/நில எடுப்பு அலுவலரால் [தனி வட்டாட்சியர் (ஆதிந)] புலத்தணிக்கை செய்யப்படுதல். |

| (1) | (2) |
|---|---|
| கா. | உட்பிரிவு ஆவணங்கள், விற்பனைப்புள்ளி தயார் செய்தல், கிராமக் கணக்குகள் நகல் எடுத்தல் |
| கி. | பிரிவு 4(2)ன் கீழ் படிவம் 1-ல் நிலச் சொந்தக்காரரை இனங்கண்டு அறிவிப்புக்கொடுத்து அவரிடமிருந்து ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் பெற்று விசாரணை மேற்கொள்ளுதல். |
| கீ. | நில எடுப்பு முன்மொழிகள் தனி வட்டாட்சியரால் மாவட்டாட்சியருக்கு அனுப்பப்படுதல். |
| கு. | பயனாளிகள் தேர்வு செய்தல் |
| கூ. | மாவட்டாட்சியர் நில எடுப்பு முன்மொழிவின் மீது ஆணை பிறப்பித்தல். |
| கெ. | மாவட்ட அரசிதழில் பிரிவு 4(1) அறிவிக்கை வெளியிடப்படுதல் |
| கே. | தீர்ப்பாணை நடத்துவது குறித்து படிவம் 3ல் நிலச்சொந்தக்காரருக்கு அறிவிப்புக் கொடுத்தல். |
| கை. | தீர்ப்பாணை விசாரணை நடத்துதல். |
| கொ. | விற்பனைப்புள்ளி விவரங்கள் தொகுத்து நில மதிப்பீட்டறிக்கை தயார் செய்து மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்/மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் ஆகியோரின் ஒப்புதலுக்கு அனுப்புதல். |
| கோ. | நில மதிப்பிட்டறிக்கை சரிபார்த்து மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்/மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் ஆகியோரால் ஒப்புதல் அளிக்கப்படுதல். |
| கௌ. | தீர்ப்பாணை வழங்குதல் |
| ச. | வீட்டுமனை வரைப்படம், பட்டாக்கள் தயாரித்தல். |
| சா. | தீர்ப்பாணை வழங்கியபின் ஈட்டுத்தொகையைப் பெற்றுக் கொள்ளும்படி நில உரிமையாளருக்கு அறிவிப்புக் கொடுத்தல்/நிலச் சொந்தக்காரர்களின் சம்மதம் இல்லாத இனங்களில் அல்லது பிற தகராறுகள் உள்ள இனங்களில் ஈட்டுத்தொகையை நீதிமன்றங்களில் வைப்பீடு செய்தல். |
| சி. | தனி வட்டாட்சியரால் நிலம் கையகப்படுத்தப்படுதல். |
| சீ. | பட்டா வழங்குதல், அளந்து பிரிக்கப்பட்ட மனைகளில் நில அளவைக் கற்கள் ஊன்றுதல், பயனாளிகளுக்கு அவரவரின் இடத்தை அத்துக் காட்டுதல், கிராமக் கணக்குகளில் மாற்றம் செய்தல். |
| சு. | தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லை குறித்த சட்டம் 1923, பிரிவு 9 (2)-ன்படி அறிவிப்புகள் வெளியிடுதல். |
| சூ. | உட்பிரிவு ஆவணங்கள் இறுதி கூர்ந்தாய்வு செய்தல். |
| செ. | வட்டக் கணக்குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல். |
| சே. | தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைக்குகுறித்தச் சட்டம் 1923-ன் பிரிவு 13-ன் படி அறிவிக்கை வெளியிடுதல். |

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

## இணைப்பு 'ஆ'

### தமிழ்நாடு ஆதிதிராவிட நில எடுப்புச் சட்டம் 31/78-க்கான கால அட்டவணை




கால அட்டவணை :

| | | | |
|---|---|---|---|
| 1. | தீர்ப்பாணை வழங்கும் வரை | .. | 100 நாட்கள் |
| 2. | பட்டா வழங்கி, பயனாளிகளுக்கு அவரவர்க்குரிய இடத்தை எல்லைக்கல் ஊன்றி அத்துக்காட்டுதல் | .. | 110 நாட்கள் |
| 3. | தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லை குறித்த சட்டம் 1923 இன்படி நடவடிக்கை எடுத்தல். | .. | 232 நாட்கள் |

(உண்மை நகல்)

சு. ஆறுமுகம்,
பிரிவு அலுவலர்.

## இணைப்பு 'இ'

### சரி பார்ப்புப் பட்டியல் அட்டவணை

### நில எடுப்பு குறித்த அலுவலகக் கோப்பு எண்

| நடவடிக்கை குறியீடு. | நில எடுப்பு நடவடிக்கை. | அனுமதிக் கப்பட்ட நாட்கள். | காலவரையறைப்படி நடவடிக்கை தொடங்கப் பட்டு முடிக்கப்பட வேண்டிய காலம். | புலத் தணிக்கை செய்யப் பட்ட நாள்/ பணி முடிவுற்ற நாள். | நடவடிக்கை முடிக்க நில எடுப்பு அலுவலர் உண்மையில் எடுத்துக் கொண்ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| க. | நிலம் தேர்வு செய்தல்/நிலம் ஆய்வு செய்தல்/நில எடுப்பு அலுவலரால் தனி வட்டாட்சியர் (ஆதிந) புலத்தணிக்கை செய்யப்படுதல் | 7 | ... முதல்<br>... வரை | | |
| கா. | உட்பிரிவு ஆவணங்கள், விற்பனைப்புள்ளி விவரங்கள் தயார் செய்தல் கிராமக் கணக்குகள் நகல் எடுத்தல் | 15 | | | |
| கி. | பிரிவு 4(2)-ன்கீழ் படிவம் 1-ல் நிலச் சொந்தக்காரரை இனங்கண்டு அறிவிப்புக் கொடுத்து அவரிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் பெற்று விசாரணை மேற்கொள்ளுதல் | 22 | | | |
| கீ. | நில எடுப்பு முன்மொழிகள் தனி வட்டாட்சியரால் மாவட்டாட்சியருக்கு அனுப்பப்படுதல். | 10 | | | |
| கு. | பயனாளிகள் தேர்வு செய்தல் | 21 | | | |
| கூ. | மாவட்டாட்சியர் நில எடுப்பு முன்மொழியின் மீது ஆணை பிறப்பித்தல் | 5 | | | |
| கெ. | மாவட்ட அரசிதழில் பிரிவு 4(1) அறிவிக்கை வெளியிடப்படுதல் | 30 | | | |
| கே. | தீர்ப்பாணை நடத்துவது குறித்து படிவம் 3-ல் நிலச் சொந்தக்காரருக்கு அறிவிப்புக் கொடுத்தல். | 7 | | | |
| கை. | தீர்ப்பாணை விசாரணை நடத்துதல் | 15 | | | |
| கொ. | விற்பனைப்புள்ளி விவரங்கள் தொகுத்து நில மதிப்பீட்டறிக்கை தயார் செய்து மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்/மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் ஆகியோரின் ஒப்புதலுக்கு அனுப்புதல் | 10 | | | |
| கோ. | நில மதிப்பீட்டறிக்கை சரிபார்த்து மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்/மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் ஆகியோரால் ஒப்புதல் அளிக்கப்படுதல். | 10 | | | |

| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
|---|---|---|---|---|---|
| கௌ. தீர்ப்பாணை வழங்குதல் | | 7 | | | |
| ச. | வீட்டுமனை வரைபடம், பட்டாக்கள் தயாரித்தல் | 30 | | | |
| சா. | தீர்ப்பாணை வழங்கியபின் ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளும்படி நில உரிமையாளருக்கு அறிவிப்புக் கொடுத்தல்/ நிலச் சொந்தக்காரர்களின் சம்மதம் இல்லாத இனங்களில் அல்லது பிற தகராறுகள் உள்ள இனங்களில் ஈட்டுத்தொகையை நீதி மன்றங்களில் வைப்பீடு செய்தல். | 22 | | | |
| சி. | தனி வட்டாட்சியரால் நிலம் கையகப்படுத்தப்படுதல். | 1 | | | |
| சீ. | பட்டா வழங்குதல், அளந்து பிரிக்கப்பட்ட மனைகளில் நில அளவைக் கற்கள் ஊன்றுதல் பயனாளிகளுக்கு அவரவரின் இடத்தை அத்துக் காட்டுதல், கிராமக் கணக்குகளில் மாற்றம் செய்தல் | 10 | | | |
| சு. | தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைக் குறித்த சட்டம் 1923 பிரிவு 9 (2)-ன்படி அறிவிப்புக்கள் வெளியிடுதல் | 22 | | | |
| சூ. | உட்பிரிவு ஆவணங்கள் இறுதி கூர்ந்தாய்வு செய்தல் | 10 | | | |
| செ. | வட்டக் கணக்குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல் | 10 | | | |
| சே. | தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைக் குறித்த சட்டம் 1923-ன் பிரிவு 13-ன்படி அறிவிக்கை வெளியிடுதல். | 90 | | | |

**(உண்மை நகல்)**

**சு. ஆறுமுகம்**
*பிரிவு அலுவலர்.*

**இணைப்பு 'ஈ'**

நில எடுப்பு நடவடிக்கைகளின் பல்வேறு நிலைகளில் செயல்பட வேண்டிய முறை.

1. கையகப்படுத்த வேண்டிய நிலம் தேர்வு செய்து தனிவட்டாட்சியர் (ஆதிந) புலத் தணிக்கை செய்தபின், நிலச் சொந்தக்காரர்களுக்கு அறிவிப்புக் கொடுக்கும் நடவடிக்கையை செயல்படுத்தும் காலத்திலேயே, பயனாளிகளின் பட்டியல் தயாரித்தல் உட்பிரிவு ஆவணங்கள், விற்பனைப்புள்ளி விவரங்கள் தயார் செய்தல் கிராமக் கணக்குகளின் நகல் எடுத்தல் போன்ற காரியங்கள் தொடங்கப்பட வேண்டும்.

2. அதைப்போலவே நில எடுப்பு முன்மொழிவு மாவட்டாட்சியரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 4(I) அறிவிக்கை மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்கும் காலத்திலேயே வீட்டுமனை வரைபடம் தயாரித்தல், பட்டா தயாரித்தல் ஆகிய பணிகள் தொடங்கப்பட்டு முடிக்கப்பட வேண்டும். இரண்டுக்குமான கால அளவு ஒரே மாதிரி 30 நாட்களே.

3. மேலும் மாவட்ட அரசிதழில் 4(I) அறிவிக்கை வெளியிட்ட பின் தீர்ப்பு விசாரணை நடத்த நிலச் சொந்தக்காரர்களுக்கு அறிவிப்புக் கொடுத்து, விசாரணை முடிந்து தீர்ப்பாணை வெளியிடப்படும் அதே கால கட்டத்தில், நிலம் கையகப்படுத்தப்படும் அதே பகுதியில் ஓராண்டுக்கு முன் வரை நடந்த விற்பனைப்புள்ளி விவரங்களைத் தொகுத்து அதனடிப்படையில் நில மதிப்பீட்டறிக்கை

தயார் செய்து அவற்றை மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்/மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் ஆகியோரின் ஒப்புதலுக்கு அனுப்பி அவர்களின் ஒப்புதலைப் பெறும் பணிகளும் முடிவடைய வேண்டும்.

4. ஆக தீர்ப்பாணை வெளியிடப்படும் நாட்களுக்குள் வீட்டுமனை வரைப்படங்கள், பட்டா விற்பனைப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் நில மதிப்பீட்டறிக்கை தயார் செய்து ஒப்புதல் பெறுவது போன்ற பணிகளும் முடிவடைய வேண்டும்.

5. தீர்ப்பாணை வெளியிட்டு பயனாளிகளுக்குப் பட்டா வழங்குவதற்கு முன் ஈட்டுத்தொகையை நிலச் சொந்தக்காரருக்கு வழங்குவது/நீதிமன்றத்தில் வைப்பீடு செய்வது போன்ற பணிகள் முடிக்கப்பட வேண்டும்.

6. வீட்டு மனைகளில் நில அளவைக்கல் ஊன்றுதல் பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்படும் இடத்தை அத்துக் காட்டுதல் பணிகள் நடைபெறும்போதே பிற நில எடுப்பு நடவடிக்கைகளும் தொடங்கி முடிக்கப்பபட வேண்டும்.

(உண்மை நகல்)

**சு. ஆறுமுகம்**
பிரிவு அலுவலர்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

கடிதம் எண் 34287/நிஎ4(2)/96-1, நாள்: 03-02-97

**அனுப்புநர்:**

திரு. தி. கோ. வரதன், பி.எஸ்.ஸி.,
அரசு துணைச் செயலாளர்.

**பெறுநர்:**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மதுரை மாவட்டம்,
மதுரை.

அய்யா,

பொருள்: ஆதி திராவிடர் நலம்-நில எடுப்பு-கிராமப்புறங்களில் நபர் ஒன்றுக்கு 3 சென்ட்வீதம் உயர்த்தி வழங்க ஆணையிட்டது சில விளக்கங்கள் கோரியது-பதில் அளிக்கப்படுகிறது.

பார்வை: (1) அரசாணை (நிலை) எண்: 112, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள்: 17-9-96.

(2) தங்களின் கடித எண் 140554/ஆதி-9/96, நாள்: 26-11-96.

- - - -

பார்வையிற் கண்டுள்ளவைகளின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுவதுடன், பார்வை இரண்டில் கேட்டுக் கொண்டுள்ளபடி, அரசானை 112, நாள் 17-9-96-க்குப் பிறகு வழங்கப்படும் பட்டாக்கள் அனைத்தும் 3 சென்ட் வீதம் தான் இருக்க வேண்டும் என்ற தெளிவுரை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடுகளில் செயலர் அவர்களால் ஏற்கனவே தெளிவு படுத்தப்பட்டது. எனினும் தற்போது தாங்கள் மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளபடி 17-9-96-க்குப் பின் வழங்கப்படும் பட்டாக்கள் அனைத்தும் 3 சென்ட் வீதம் தான் இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு துணைச் செயலருக்காக.

நகல் :

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
நில நிர்வாக ஆணையர், சென்னை-5.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

கடிதம் எண் 31074/நிஎ4(2)/96-1, நாள்: 7-2-97

அனுப்புநர்:

திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை-600 005

அய்யா,

பொருள் - ஆதி திராவிடர் நலம்-நில எடுப்பு-தனியார் பேச்சு வார்த்தை மூலம் விலைக்கு வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கக் கோரியது-அறிவுரைகள்-வழங்கப்படுகிறது.

பார்வை -(1) அரசு ஆணை நிலை எண் 2046, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 11-12-90.

(2) அரசு ஆணை (நிலை) எண் 146, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 14-08-95.

- - - -

பார்வை ஒன்றில் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கும் பொருட்டு நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் தனியார் நிலங்களை வாங்கலாம் என ஆணையிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் தனியார் நிலங்களை நேரடி பேச்சு வார்த்தை மூலம் விலைக்கு வாங்குவதற்கு நிலத்தின் விலை வழிகாட்டி நெறி (Guide line) விலையை விட 150%க்குக் குறைவான உள்ள இனங்களில் ரூ.20,00,000 லட்சம் வரை மாவட்ட ஆட்சியர்களின் தலைமையிலான குழுவிற்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்பட்டது.

3. இவ்வாறு தனியார் நிலங்களை நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் வாங்கும்பொழுது அந்நிலங்களைப் பதிவு செய்வதற்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்களிலிருந்து விலக்களிக்க கோரி சில மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றன.

4. மேலே உள்ள மாவட்ட ஆட்சியர்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்த பின்னர், தற்போது தனியார் நிலங்களை நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் விலைக்கு வாங்கும் பொழுது அந்நிலங்கள் அரசின் பெயரிலேயே பதிவு செய்யப்படுவதால், அவ்வாறு செய்யப்படும் பத்திரப் பதிவிற்கு, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு எண் 3-ன் கீழ் உள்ள காப்பு வாசகப்படி முத்திரைத் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 1% பதிவுக் கட்டணத்தை நில எடுப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்தே செலவு செய்து கொள்ளும்படியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

5, இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புகை அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
அரசு செயலருக்காக.

நகல்:

நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம்., சென்னை-5
அனைத்து நில எடுப்பு பிரிவுகள், ஆதிபந. துறை, சென்னை-9.

இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

நே.மு.க.எண் 4416/நிஎ4(2)/97-1, நாள் 03-03-97

அன்பார்ந்த திரு

பொருள்- ஆதி திராவிடர் நலம்-நில எடுப்பு-நில எடுப்பு அறிவிக்கை விளம்பரம் மாவட்டங்களில் நாளேடுகளில் மாதாமாதம் வெளியிடுதல் அறிவுரைகள் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/78-ன் கீழ் ஆதி திராவிடர் பழங்குடியினருக்குக் காசிலா வீட்டுமனைகள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு வழங்கப்படும் வீட்டுமனைகள் பற்றிய விவரங்களை நான்கு திங்களுக்கு ஒருமுறை கீழ்வரும் படிவத்தில் ஒரு உள்ளூர்த் தமிழ் நாளிதழில் ஊரறிய செய்தி வெளியீடு தர வேண்டுகிறேன். மே 20, செப்டம்பர் 20, சனவரி 20 ஆகிய தேதிகளில் இச்செய்தி வெளியீடு வரலாகும். மே 20-ந் தேதி வெளியீட்டில் கடந்த ஆண்டு முழுமையுமான (ஏப்ரல்-மார்ச்) நில எடுப்பு விவரங்கள் மொத்தமாக அடங்க வேண்டும்.

2. மாவட்டச் சேதிகளை நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மாநிலத் தொகுப்பாக இயக்குநர் அரசுக்கு அனுப்ப வேண்டும். மாநில ஆண்டுத் தொகுப்பு அச்சுப் பதிப்பாக சூன் இறுதிக்குள் வெளியிடப்படும்.

3. 1996-97 ஆண்டுக் தொகுப்பை வரும் மே 20 அன்று வெளியிடத் தக்க முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

4. படிவம்:-

| கலம் 1. | கலம் 2. | கலம் 3. |
|---|---|---|
| வட்டம் | புல எண்-விரிவு | தீர்ப்பாணை நாள் |
| ஊர் | | பட்டா வழங்கிய நாள் |
| மனை பெற்றோர் எண்ணிக்கை | | இழப்பீட்டுத் தொகை |

தங்கள் அன்புள்ள,

பெறுநர்:

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

நாள் 1-7-97

கடிதம் (நிலை) எண் 127,

அனுப்புநர்

திரு.ஆர். கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நில நிருவாக ஆணையர்
சேப்பாக்கம், சென்னை-600 005.

ஐயா,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - ஆதி திராவிடர்களுக்கென நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்களில் பொது நன்மைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களில்-ஆக்கிரமிப்பு முறைப்படுத்தல் தொடர்பாக - அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

பார்வை: தங்களின் கடித எண எஃப்1/39699/94, நாள் 01.8.1994 வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டது.

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள தங்கள் கடிதத்தில் ஆதி திராவிடர்க்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கு நில எடுப்பு செய்ததில், பொது நோக்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தலாமா என்பது குறித்து அறிவுரை வழங்கக் கோரப்பட்டது.

2. மேற்கண்ட கருத்தினை அரசு நன்கு பரிசீலனை செய்ததில், பொது நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதால் ஆதி திராவிடர் குடும்பங்கள் ஆரோக்கியமற்ற, கும்பலான நிலையில் வசிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தும். மேலும் பொது நோக்கத்திற்கென்று இடம் ஒதுக்கீடு செய்வது அரசு ஏற்றுக்கொண்ட ஒரு கொள்கையாகும். எனவே அவ்வாறு ஒதுக்கப்பட்ட பொது இடங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவது அரசின் கொள்கைக்கு முரண்பாடான ஒன்றாக அமைந்துவிடும். அது மட்டுமின்றி இவ்வாக்கிரமிப்புகளை முறைப்படுத்துவது, பிற பொது இடங்களிலும் இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் உருவாக ஊக்கமளிப்பதாகிவிடும். எனவே ஆதி திராவிடர்க்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நில எடுப்பு செய்ததில், பொது நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தத் தேவையில்லை என அரசு அறிவுரை வழங்குகிறது.

3. இக்கடிதம் கிடைக்கப் பெற்றதற்கு ஒப்புகை அளிக்க வேண்டப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) சு. ஆறுமுகம்
அரசு செயலாளருக்காக.

நகல்:

அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து நில எடுப்பு பிரிவுகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

கடிதம் எண் 31959/நிஎ4(2)/96-2, நாள்: 23-7-1997

அனுப்புநர்

திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்

அய்யா,

பொருள்: ஆதிதிராவிடர் நலம்-நில எடுப்பு - தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்கு நில எடுப்பு சட்டம் 31/78-ன்கீழ் தீர்வாணை வழங்கும் முன் - நில எடுப்பு செய்தல், பட்டா வழங்குதல் குறித்து- அறிவுரை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்கென நில எடுப்பு சட்டம் 31/78 அமுலாக்கப்பட்டதின் அடிப்படையில் மாவட்டங்களில் நில எடுப்பு நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள 23-9-1996, 29-10-1996 மற்றும் 31-10-1996 ஆகிய நாட்களில் திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் செயலர் அவர்கள் ஆய்வு செய்தார். அதுசமயம் பின்வரும் இனங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது:-

அ. தமிழ்நாடு சட்டம் 31/78-ன் கீழ் நில எடுப்பு நடவடிக்கைகள் துவக்கப்பட்ட இனங்களில் நில எடுப்பு (Taking Possession) செய்வது நிருவாகப் பணியா அல்லது சட்டப்பிரிவுகளின் கீழ் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையா ?

ஆ. அரசு சட்ட அலுவலரை கலந்து ஆலோசித்து தீர்வாணை வழங்கும் முன் நிலமெடுத்து (Taking Possession) வரைபடம் மற்ற நிருவாகப் பணிகள் முடிக்கப்பட்டால் நில எடுப்புக்குத் தேவைப்படும் மொத்தக்காலம் குறைக்கப்பட்டு அதிகமான எண்ணிக்கையில் நிலம் கையகப்படுத்தப்பட்டு வீட்டுமனைப்பட்டா வழங்கலாம்.

இ. இவ்வாறு கால வரையறை குறைக்கப்பட்டால் 4 (2) அறிவிப்புக்குப் பிறகு நில உரிமையாளர்கள் நில எடுப்பு செய்வதைத் தவிர்க்க குறுகிய காலத்தில் மற்றவர்களுக்கு விற்க இயலாது.

2. மேற்கண்ட விவாதங்களை ஆய்வு செய்த பின்னர், பின்வரும் தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன:

அ. நிலமெடுப்பு (Taking Possession) தமிழ்நாடு சட்டத்தின் கீழ் எடுக்க வேண்டிய நடவடிக்கை அல்ல.

ஆ மத்திய சட்டம் 1894-ல் நிலமெடுப்பு செய்வதில் அதிக காலம் எடுத்துக் கொள்வதைத் தவிர்க்கும் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட எளிய சட்டம் தமிழ்நாடு சட்டம் 31/78 ஆகும். ஆகையால், தீர்ப்பாணை வழங்கிய பிறகு தான் நிலம் எடுக்கப்படும் (Taking Possession) என்கிற மாவட்ட நிலமெடுப்பு அலுவலர்களின் கருத்து இன்னும் பழைய சட்டத்தின் சிந்தனையில் இருப்பது தெளிவாகிறது. எனவே, தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலச் சட்டம் 31/78-ன் கீழ் பிரிவு 4(1) அறிவிக்கை வெளியிடப்பட்ட பின் நிலம் அரசு வசம் வந்துவிடுவதால் உடன் பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்வதில் சட்டத்தில் மறுப்பேதும் இல்லை.

இ. நில உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகையை ஒப்பளிப்பு செய்யாமல் பட்டா வழங்கப்படுமானால், அவருக்கு நேரிடக்கூடிய இக்கட்டான பொருளாதார நிலைமை மன வேதனைகளைக் கருத்தில் கொண்டு விதிகளில் கண்டுள்ள 15 நாட்கள் உள்பட 29 நாட்களுக்குள் தீர்ப்பாணை விசாரணை முடித்து தீர்ப்பாணை வழங்கவும், இணையாக வரை படம் தயாரித்தல் மற்ற பிற நிருவாகப் பணிகளையும் இந்த 29 நாட்களுக்குள் முடித்து தீர்ப்பாணைத் தொகை மற்றும் பட்டா ஆகிய இரண்டையும் ஒரே சமயத்தில் வழங்குவதற்கும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. மேலே பத்தி 2-ல் கூறப்பட்டுள்ள தெளிவுரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு சட்டம் 31/78-ன் கீழ் மேற்கொள்ளப்படும் நில எடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள
அரசுச் செயலருக்காக.

நகல்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5.
நில நிருவாக ஆணையர், சென்னை-5.
அனைத்து நில எடுப்பு பிரிவுகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (நி.எ. 4) துறை**

*அரசாணை (நிலை) எண் 171,* *நாள்: 22-10-1997*

**சுருக்கம்**

*சமத்துவபுரம்-மாவட்டங்களில் சமத்துவபுரம் குடியிருப்பு அமைத்தல்-புதிய திட்டம்-செலவினம் ஒப்பளிப்பு-ஆணைகள் வெளியிடப்படுகின்றன.*

---

*ஆணை:*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு விடுதலைப் பொன் விழா ஆண்டையொட்டி தமிழகத்தில் ஐம்பது இடங்களில் அனைத்து சாராரும் ஒன்று சேர்ந்து குடியிருக்கும் வகையில் “சமத்துவபுரங்கள்” உருவாக்க 4-8-1997 அன்று முதலமைச்சர் தலைமையில் நடந்த உயர்மட்ட செயல்பாட்டுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டது.

2. அவ்வாறே, தமிழகத்தில் 50 இடங்களில் 100 மனைகளுக்கு குறையாமல் நில எடுப்பு செய்யப்பட்டு ஆதிதிராவிடர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், பிற இனத்தவர் ஆகிய அனைவருக்கும் 5 சென்ட் வீட்டுமனைகள் இலவசமாக வழங்கவும், அம்மனைகளில் வீடுகள் கட்டிக்கொள்ள ஒவ்வொருவருக்கும் ரூ.35,000 மானியமாக வழங்கவும் அரசு ஒப்புதலளிக்கிறது.

3. உருவாக்கப்படும் சமத்துவபுரக் குடியிருப்புகள் கீழ்க்கண்ட வகையில் அமைக்கப்படும்:-

(1) ஒவ்வொரு இடமும் குறைந்தது 100 மனைகள் கொண்டதாக அமையும்.

(2) மனை ஒன்றுக்கு 5 சென்ட் நிலம் வழங்கப்படும்.

(3) 30 அடி அகல வீதிகள்/சாலைகள் அமைக்கப்பட்டு வடிகாலுடன் கூடிய தார்ச்சாலைகளாகவும் அமைக்கப்படும்.

(4) குடிநீர் வசதி, மின் வசதி முழுமையாகப் படைக்கப்பட்டிருக்கும்; தெருக் குழாய்களும், தெரு விளக்குகளும் தேவையான அளவில் அரசுச்செலவில் அமைத்துத் தரப்படும். வீட்டு இணைப்புகள் அவரவர் செலவில் வழங்கப்படலாகும்.

(5) ஒவ்வொரு சமத்துவபுரத்திற்கும் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கப்பட வேண்டும். குடிமைப் பொருள் வழங்கு கடை, தொலைக்காட்சி, பூங்கா ஆகிய பொது வசதிகளும் அமையப்பெற்றிருக்கும்.

(6) தேவையின் அடிப்படையில் ஒரு துவக்கப்பள்ளி ஆரம்பிக்கப்படலாம்.

(7) வீட்டுமனைகள் அனைவரும் ஒருங்கிணைந்து வாழுமாறு பின்னிப் பிணைந்து வழங்கப்படலாகும். ஒரே இனத்தவர் ஒரே வரிசையாக அமைவது தவிர்க்கப்பட்டு பல்வகையினரும் அடுத்தடுத்து உறையும் சுற்றமும் சூழலும் உருவாக்கப்படலாகும்.

(8) வீடு கட்டிக் கொள்வதற்காக ஒவ்வொரு மனைதாரருக்கும் வழங்கப்படும் மானியமான ரூ.35,000 தவிர கூடுதலாக அவரவர் விருப்பத்திற்கேற்ப வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் சங்க விதிகளுக்கு உட்பட்டு கடனுதவி வழங்கும். (நலிந்த பிரிவினருக்கு சமவெளிப் பகுதிகளில் ரூ.10,000; மலைப்பகுதிகளில் ரூ.12,000 நகரப்பகுதிகளிலுள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.70,000)

(9) மானிய உதவிக்கான நிதி மாவட்ட ஆதி திராவிட நல அதிகாரியால் வழங்கப்படும்.

(10) அந்தந்தப் பயனாளிகளே தத்தம் வீடுகளைக் குறிப்பிடப்பெற்ற பரப்பிற்குக் குறையாமல் வடிவமைத்துக் கட்டிக் கொள்ளலாகும்.

4. சமத்துவபுரத்தில் அமையவிருக்கும் 100 வீடுகளில் ஆதி திராவிடர்களுக்கு 40 வீடுகளும், பிற்பட்டோருக்கு 25 வீடுகளும், மிகவும் பிற்பட்டோருக்கு 25 வீடுகளும், மற்றவர்களுக்கு 10 வீடுகளும் என்று வகுத்தளிக்கப்பட வேண்டும். பிற்பட்டோர், மிகவும்பிற்பட்டோர், மற்றவர்களிடமிருந்து போதிய விண்ணப்பம் இல்லாத தருணத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உரிய வகையில் வகுத்தளிக்கலாம்.

5. சமத்துவபுரத்திற்கு எடுக்கப்படும் நிலத்திற்கான மதிப்பில் 40 சதவீதம் ஆதி திராவிடர் நலத் துறையும், 60 சதவீதம் பிற்பட்டோர், மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறையும் வழங்கும். தேவையான நிலத்தைத் தனியார் இசைவுடன் பெறலாகும். மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரி நில எடுப்புக்குப் பொறுப்பாயிருப்பார். மாவட்ட அளவில் செலவினம் முழுமையும் ஆதி திராவிடர் நலத்துறை கணக்கிலேயே எடுக்கப்பட்டு, மாநில அளவில் ஆதிதிராவிடர் நலத் துறை பிற்பட்டோர் நலத்துறையிலிருந்து இச் செலவினத்தை ஈடு செய்து கொள்ளும். ஆதிதிராவிடர் நல இயக்குநர், பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரிடமிருந்து இத்தொகையைப் பெற்றுக் கொள்ளலாகும்.

6. பயனாளிகள் தேர்வைச் சீரிய முறையில் செய்யும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சாரும். மின் இணைப்புக்காகவும், குடிநீர்த் திட்டத்திற்காகவும் அந்தந்தத் துறைகள் ஏற்கனவேயுள்ள ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் சமத்துவபுரங்களுக்கு முன்னுரிமை தந்து பணிகளை மேற்கொள்ளலாம் அல்லது தனி நிதி ஒதுக்க அந்தந்தத் துறைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கருத்துரு பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

7. இத்திட்டத்திற்காகும் செலவினம் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-80 பொது-800 ஏனைய செலவுகள்-ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்-II. மாநிலத் திட்டம் JF. "சமத்துவபுரம்" உருவாக்குதல் 09 உதவிமானியங்கள்" (த.தொ.கு.2225 80 800 JF 0906).

8. மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

9. கணக்குகளில் மேற்கொள்ள புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இது புதுப்பணி குறித்த செலவாகும். காலப்போக்கில் இதற்குச் சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு-செலவு பொது-I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இரு படிகளில் நிதித் (வரவு-செலவு பொது-I) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு எண் 457/து.செ.(ஆர்.பி.)/97, நாள் 21-10-1997-ன்படி பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசுச் செயலர்.

பெறுநர்:

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை-18.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை-18 (பெ)
மாநில தலைமைக் கணக்காயர், (தணிக்கை), சென்னை-35.
மாநில தலைமைக் கணக்காயர், (தணிக்கை-1), சென்னை-35.(பெ)
மாநில தலைமைக் கணக்காயர் (தணிக்கை-2), சென்னை-35.
மாநில தலைமைக் கணக்காயர் (தணிக்கை-2), சென்னை-35 (பெ).
கருவூல ஆணையர், சென்னை-35.
அனைத்து மாவட்ட கருவூல அதிகாரிகள்.
பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர்,
சென்னை-5.

நகல்:

அனைத்து செயலர்கள்,
தலைமைச் செயலர், சென்னை-9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதலமைச்சரின் தனி அலுவலர் (O.S.D.).
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
அனைத்து அமைச்சர்கள்.
அனைத்து மண்டல ஆணையர்கள்.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
நிதித் (வரவு-செலவு பொது-1) துறை, சென்னை-9.
நிதித் (சமுக நலம்) துறை, சென்னை-9.
நிதித் (வரவு செலவு பொது-2) துறை, சென்னை-9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அ.ந.மு.) துறை,
சென்ன-9.
உதிரி/இருப்புக் கோப்பு.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது.

பிரிவு அலுவலர்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

கடித (நிலை) எண் 181, நாள் 14.11.97

அனுப்புநர்

திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ. ஆ. ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள்.
அனைத்து மண்டல ஆணையர்கள்.

அய்யா,

பொருள்- ஒப்படை-நிலம்-அரசுப் புறம்போக்கு நிலங்கள்-மறுப்பு இல்லாத இனங்களில் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துதல்-பேரறிஞர் அண்ணா நினைவு நாளை ஒட்டி பட்டா வழங்கும் வார விழா கொண்டாடுதல்-அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை- வருவாய்த்துறையின் அரசாணை (1டி) எண் 542, நாள் 6.11.97.

- - - -

1998 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை ஒட்டி இலவச பட்டா வழங்கும் வார விழா கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை ஒட்டி 1998 பிப்ரவரி 3-ம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை இலவசப்பட்டா வழங்கும் விழா கொண்டாடுமாறு பார்வையில் காணும் அரசாணையில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

2. இதற்காக 1997-98 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் நலத்துறையில் வீட்டுமனை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.15.25 கோடியை முழுமையாக செலவு செய்ய முனைப்பான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்களும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரும் மேற்கொள்ள வேண்டும்.

3. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்பணி நிறைவேற்றப்படுவதை அவ்வப்போது ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்குமாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மண்டல ஆணையர்கள் (Zonal Commissioners) மாவட்டங்களுக்கு முகாம் செல்லும்போது அவர்களும் இப்பணியினை ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இவ்வாணையை பெற்றுக் கொண்டதற்காக ஒப்புதல் அளிக்கும்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

**இரா. கௌரி,**
அரசுச் செயலாளருக்காக.

நகல்:
முதலமைச்சரின் செயலர், சென்னை-9.
முதலமைச்சரின் சிறப்புச் செயலர், சென்னை-9.
அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்),
சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு) துறை,
சென்னை-9.
இ.கோ./உ.ப

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பட்டியல் வகுப்பு/பழங்குடியினருக்கான சான்றிதழ்-சாதிச்சான்றிதழ் வழங்குவதை சரிபார்க்க மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் குழுக்கள் அமைப்பது—ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந. 2) துறை

அரசாணை (2டி) எண் 18 நாள் 1-4-97

படிக்கப்பட்டது:

1. உரிமைஇயல் மேல் முறையீடு எண். 5854/94 (1994) எஸ்.எஸ்.சி 241-ல் இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பு. நாள் 2-9-94.
2. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கடிதம் எண் எல். Dis. 88750/93 (Q). நாள் 4-10-96.

*ஆணை:*

பட்டியல் சாதியினர், பழங்குடியினர் ஆகியோருக்கு வழங்கப்படும் சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை அறியும் பொருட்டு, மாவட்ட வாரியான விழிப்புக் குழுக்களையும், மாநில அளவிலான கூர்நோக்கும் குழுவையும் அமைக்கவும், அவைகளுக்கான செயல்பாடுகளை வரையறுக்கவும் கோரி முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அனுப்பிய முன்மொழிவினை அரசு ஆய்ந்து ஆய்விட்டு பின்வருமாறு ஆணையிடுகிறது:—

(1) சாதிச்சான்று வழங்குவதில் தற்போதுள்ள நடைமுறையில் எந்த மாற்றமும் தேவையில்லை. (அரசாணை (நிலை) எண். 516, வருவாய்த் துறை, நாள் 17-4-1986 மற்றும் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கடித எண். க்யு2/52694/96, நாள் 27-7-96).

(2) ஒவ்வொரு மாவட்டத்திலும் விழிப்புணர்வுக்குழு ஒன்றும் மாநில அளவிலான கூர்நோக்குக் குழு ஒன்றும் கீழ்க்கண்டவாறு அமைக்கப்படும்.

*(அ) மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக்குழு:*

1. மாவட்ட ஆட்சித் தலைவர் .. தலைவர்
2. மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரி .. செயல் உறுப்பினர்

*(ஆ) மாநில அளவிலான கூர்நோக்குக் குழு:*

1. செயலர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை .. தலைவர்
2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் .. செயல் உறுப்பினர்
3. இயக்குநர், மலைவாழ் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், உதகமண்டலம் .. உறுப்பினர்

2(i) மாவட்டக் குழு அந்தந்த மாவட்டங்களில் வட்டாட்சியர்கள் வழங்கியுள்ள சாதிச்சான்றுகளையும், மாநிலக்குழு மாநிலத்திலுள்ள கோட்டாட்சியர்கள் வழங்கும் பழங்குடியினர் சான்றுகளையும் மேலாயவு செய்யும்.

(ii) மாவட்டத்தில் நடப்பாண்டில் வழங்கப்பட்ட சான்றுகளில் பரவலாக (at random) நூறு சான்றிதழ்களை மாவட்டக்குழு ஆய்விட்டுச் சரிபார்க்கும். சான்றிதழ்கள் உரிய படிவத்தில் தரப்பட்டுள்ளனவா, அதிகாரியின்கையொப்பம் மெய்யானதா, உரிய இனச்சான்று வழங்கப்பட்டுள்ளதா என்பனவற்றை இக் குழு சரிபார்க்கும். தேவையான இடத்து விண்ணப்பதாரரை நேர்விசாரணைக்கும் இக்குழுவோ, குழுத்தலைவரோ, குழு உறுப்பினரோ அழைக்கலாம். கோட்டாட்சியர்களைக் கொண்டும் விசாரணை மேற்கொள்ளலாம். கல்லூரி நுழைவு, தாட்கோ கடன் விண்ணப்பம், ஊரக வளர்ச்சித் திட்டக் கடன் விண்ணப்பம் ஆகிய நேர்வுகளுக்கு வழங்கப்பட்டுள்ள சாதிச்சான்றுகளும் நூறுள் அடங்க வேண்டும். ஏற்கனவே புகார்கள் வந்த இனங்கள் கட்டாயமாகச் சரிபார்க்கப்பட வேண்டும்.

(iii) ஒவ்வோராண்டும் பெப்ருவரி இறுதிக்குள் நூறு இனங்களுக்கும் ஆய்வு முடிக்கப்பட்டு மார்ச் 20க்குள் ஆதி திராவிடர் நலத்துறை செயலருக்கும், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கும் நிறைவறிக்கை அனுப்பப்பட வேண்டும். அறிக்கையின் படிவம் இணைப்பில் காண்க.

3. மாநிலக்குழு மாநிலத்தின் பல்வேறு கோட்டாட்சியர்கள் வழங்கிய பழங்குடி சான்றுகளைத் தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழங்கும் மேலாணைகளையும் (ஏற்கனவே சார்பு அதிகாரிகளால் வழங்கப்பட்ட சான்றுகளை உறுதி செய்தோ, மறுத்தலித்தோ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேலாணை இடலாம்) மேலாய்வு செய்யும். இக்குழுவும் பரவலாக நூறு சான்றுகளை மேலாய்விடும். மாநிலக்குழு தமது ஆய்விற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தோ, ஆதி திராவிடர் நல இயக்குநரிடமிருந்தோ விசாரணை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளலாம். தேவையான இடத்து குழுவை நேர் விசாரணையும் மேற்கொள்ளும். தொழில் கல்விக் கூடங்களில் சேரும் ஆதி திராவிட மாணவர்களில் மூன்று சதவீதம் (3%) பேர்களின் சான்றுகளையும், நூறு சதவீதம் (100%) பழங்குடியினர் சான்றுகளையும், இக்குழு சரி பார்க்கும். மாநிலக் குழுவும் ஆண்டு இலக்கினை மார்ச் இறுதிக்குள் முடித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

4. பொய்ச்சான்று வழங்கியவர்/பெற்றவர் மீதான குற்றவியல் துறை நடவடிக்கைகளையும் மாவட்டக் குழுக்களும், மாநிலக்குழுவும் கண்காணிக்கலாகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்:

முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்,
சென்னை-5.
பிற்பட்டோர் மற்றும் மிகப் பிற்பட்டோர் நலத்துறை, சென்னை-9
வருவாய்த் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், மலைவாழ் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்,
உதகமண்டலம்.
செயலர், கல்வித் துறை, சென்னை-9.
செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை,
சென்னை-9.
செயலர், வேளாண்மைத் துறை, சென்னை-9.
செயலர் சட்டத்துறை, சென்னை-9.
இயக்குநர், கல்வித் துறை, சென்னை-9.
இயக்குநர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை,
சென்னை-9.
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை-9.
இயக்குநர், சட்டத்துறை, சென்னை.

உண்மை நகல்

(ஒப்பம்)

பிரிவு அலுவலர்.

## படிவம்

| வரிசை எண். | சாதிச்சான்றிதழ் பெற்றவரின் பெயர் மற்றும் முகவரி. | சாதிச்சான்றிதழ் மெய் | சாதிச்சான்றிதழ் போலி | சாதி சான்று போலி எனில் அதை வழங்கியவர்/பெற்றவர் மீதான குற்றவியல் துறை நடவடிக்கையின் விபரம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) |

/உண்மை நகல்/

(ஒப்பம்).............................................

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம்—கணினி, அச்சு மற்றும் தொலைநகல் இயந்திரம் வாங்குவது செலவினம் வழங்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந 1) துறை

*அரசு ஆணை நிலை எண். 58* — *நாள் 26-3-1997*

*படிக்கப்பட்டது:*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண். எப். சி. எஸ்.III / 69614/94, நாள் 16-10-96.

*ஆணை:*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஒரு மின் தட்டச்சு இயந்திரம், ஒரு கணினி மற்றும் ஒரு தொலை நகல் இயந்திரம் வாங்குவதற்கு ரூ. 2.23 இலட்சம் அனுமதி வழங்க அரசை கோரியுள்ளார்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலித்து கீழ்க் காண்பவற்றை மட்டும் ரூ. 1.20 இலட்சம் செலவில் வாங்குவதற்கு அவருக்கு அனுமதி வழங்குகிறது:—

| | | ரூ. |
|---|---|---|
| 1. | ஒரு கணினி (Computer) (PC At Pentium C 100 Mhz, 630 MB HDD 14" SVGA Colour Monitor, 1.44 MF PDD, Window 95Tamil Word Processor MS Office prof.) | 50,000 |
| 2. | ஒரு அச்சு இயந்திரம் (Printer) (132 Col. 24 PIN 300 CPS) | 22,000 |
| 3. | யுபிஎஸ் (1 கே.வி.ஏ. 30 நிமிட மின்கலத்துடன்) (1KVA 30 Min. back up on line maintenance free battery) | 20,000 |
| 4. | ஒரு தொலைநகல் இயந்திரம் (Fax) | 28,000 |
| | மொத்தம் .. | 1,20,000 |

(ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்)

குளிர்சாதன வசதி தேவையில்லை என அரசு கருதுகிறது.

3. மேலும், எழுது பொருட்கள் வாங்க வருடத்திற்கு ரூ. 5,000 (ரூபாய் ஐந்தாயிரம்) மும் மற்றும் மேசை நாற்காலிகள் வாங்க ரூ. 5,000 (ரூபாய் ஐந்தாயிரம்)மும், செலவிட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், தலைமைச் செயலகத்தில் உள்ள திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையினைக் கலந்து கணினி வாங்கவும், மேற்குறிப்பிட்ட சாதனங்களை வாங்குவதற்கான வழக்கத்தில் உள்ள நடைமுறைகளை பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேற்குறிப்பிட்ட செலவினத்தினை கீழ்க்கண்ட தலைப்பில் பற்று வைக்கப்படலாம்:—

"2225. ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் 01 ஆதிதிராவிடர் நலன் 001-நெறிபடுத்துதலும் நிர்வாகமும்-I. திட்டமில்லாத செலவினம்—ஏசி தலைமையிடப் பணியாளர்—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—19—இயந்திரமும், சாதனமும் I. வாங்குதல்(தகவல் தொகுப்பு முறையீடு 2225 01 001 ஏசி 1909).

6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தற்போது வழங்கப்பட்டுள்ள இச் செலவினத்தை 1996-97-ம் ஆண்டிற்கு அனுப்பப்படும் இறுதியான திருத்தியமைக்கப்பட்ட ஒதுக்கீட்டிலான (FMA) செயற்குறிப்பில் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் 24-1-1997 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண். 27/கூ.செ. (த.பி)/97-இல் இசைவைப் பெற்று வெளியிடப்படுகிறது.

---

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18 / (பெயரில்)
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-6 / (பெயரில்)
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35 / (பெயரில்)

நகல்:

நிதி / திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (அநமு) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
உதிரிகள் 2.

(ஆணைப்படி அனுப்பலாகிறது)

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம், சென்னை—நிழற்பட நகலெடுக்கும் கருவி—வாங்குதல்—ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆநந 1) துறை**

அரசு ஆணை (டி) எண். 160 நாள் 30-5-1997

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண். 883, சமூக நலம், நாள் 30-03-1988.
2. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கடித எண். சுநபி 3/30283/95, நாள் 13-12-1996 மற்றும் 26-3-1997.

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இய்க்ககத்திற்கு நிழற்பட நகலெடுக்கும் கருவி (Xerox Machine) வாங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு வாங்கப்பட்டுள்ள கருவி தற்பொழுது பழுதடைந்துள்ளது என்றும், பழுது பார்க்க இயலாத அளவிலுள்ளதாகவும், ஒன்பது ஆண்டுகளுக்கு முன் வாங்கப்பட்ட இக் கருவியில் 9,29,761 நகல்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், படிக்கப்பட்ட தனது கடிதத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், நிழற்பட நகலெடுக்கும் புதிய கருவியின் விலை ரூ. 1,96,350 என்றும் மோடி நிறுவனத்தினர் பழுதடைந்துள்ள கருவியை ரூ. 40,000-க்குத் திரும்ப வாங்கிக் கொண்டு, ரூ. 1,56,350-க்கு புதுக்கருவி வழங்க சம்மதித்துள்ளதாகவும், இது போல அரசின் சில துறைகளில் புது கருவிகள் வாங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து இயக்ககத்தி ந புதிய நிழற்பட நகலெடுக்கும் கருவி ஒன்று வாங் ரிக்குமாறு இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

2. இயக்குநரின் கருத்துருவை அரசு கூர்ந்தாய்வு செய்தது. பழுதடைந்து உள்ள பழைய நிழற்பட நகலெடுக்கும் கருவியை ரூ. 40,000-க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) திரும்ப விற்று, எஞ்சிய தொகையான ரூ. 1,56,350-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து, ஐம்பத்தி ஆறாயிரத்து முந்நூற்று ஐம்பது மட்டும்)கீழ்க்கண்டவாறு புதுக்கருவி வாங்க அரசு ஒப்புதலளிக்கிறது.

| | | |
|---|---|---|
| | (அ) புதுக்கருவியின் விலை | ரூ. 1,96,350 |
| (-) | (ஆ) பழைய கருவியின் விலை | ரூ. 40,000 |
| | ஒப்பளிக்கப்படும் தொகை | **ரூ. 1,56,350** |

(ரூபாய் ஒரு இலட்சத்து, ஐம்பத்தி ஆறாயிரத்து முந்நூற்று ஐம்பது மட்டும்.)

3. மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்: "2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன்-01. பட்டியல் சாதியினர் நலன்—001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும்-I. திட்டத்தில் சேராதது—AC. தலைமையிடப் பணியாளர்கள்—ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை—19. இயந்திரமும் சாதனமும்—01. வாங்குதல் (தகவல் தொகுப்பு குறியீடு எண். 2225 01 001 AC 1918)."

4. தேவையான நிதி ஒதுக்கம் திருத்திய மதிப்பீடு 1997-98-ல் ஒதுக்கீடுச் செய்யப்படும்.

மேற்படிய செலவினத்தை வரவு செலவு திருத்திய மதிப்பீடு 1997-98-க்கு அனுப்பும்போது சேர்த்து வைக்கப்படுமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண் 266/துசெ (ஆர்.பி/97 நாள் 29-5-97-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

பெறுநர்

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை 600 005.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 600 005.
மாநிலக் கணக்காயர், சென்னை 18/சென்னை 6 / சென்னை 35.

நகல்

நிதித்துறை, சென்னை 600 009
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) துறை, சென்னை 9.

/உண்மை நகல்/

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்—பிரிக்கப்பட்ட மாவட்டங்கள்—பணியாளர்—மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகங்களுக்குப் பணியாளர்-ஆணை—வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந 1) துறை

*அரசு ஆணை நிலை எண். 67* — *நாள் 15-4-1997*

*படிக்கப்பட்டவை:*

1. *அரசு ஆணை (நிலை) எண். 913, வருவாய், நாள் 30-4-95.*
2. *அரசு ஆணை (நிலை) எண். 914 வருவாய், நாள் 30-9-95.*
3. *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண். இ2/48237/95, நாள் 11-11-95.*
4. *அரசு ஆணை (நிலை) எண். 1388, வருவாய், நாள் 27-12-96.*
5. *அரசு ஆணை (நிலை) எண். 1389, வருவாய், நாள் 27-12-96.*
6. *அரசு ஆணை (நிலை) எண். 1390, வருவாய், நாள் 27-12-96.*
7. *அரசு ஆணை (நிலை) எண். 1391, வருவாய், நாள் 27-12-96.*
8. *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேர்முக கடித எண். இ2/48237/95, நாள் 31-1-97.*
9. *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண். இ2/35323/96, நாள் 6-1-97, 31-1-97, 13-2-97 மற்றும் 26-2-97.*

*ஆணை:*

மேலே படிக்கப்பட்ட அரசு ஆணைகளில் திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், செங்கற்பட்டு மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட்டு ஆணைகள் இடப்பட்டுள்ளன. புதிய மாவட்டங்களுக்கு, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் சில பணியிடங்கள் ஏற்கனவே வருவாய்த் துறையின் மூலம் அளிக்கப்பட்டு விட்டன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளை வெளியிடும்பொழுது, பல பணியிடங்கள் புதிய மாவட்டங்களுக்கு வழங்கப்படவில்லை. மேலும், தாய் மாவட்டங்களில் ஏற்கனவே இருப்பிலுள்ள தலைமைக் கணக்காளர், இளநிலைப் பொறியாளர், பணி மேற்பார்வையாளர், உதவி கணக்கு அலுவலர், வரைவாளர், அலுவலக உதவியாளர் போன்ற பணியிடங்கள் விடுபட்டுள்ளன.

2. மேலே படிக்கப்பட்ட வருவாய்த் துறை அரசு ஆணைகளில் ஆதிதிராவிடர் நலப் பிரிவைப் பொறுத்த வரையில் வெளியிடப்பட்ட ஆணைகள் இணைப்பிலுள்ளவாறு மாற்றி அமைக்கப்படுகின்றன. பிரிக்கப்பட்ட தாய் மாவட்டங்களில் ஏற்கெனவே இருந்து, விடுபட்ட பணியிடங்கள் தொடரப்படுகின்றன. மாவட்டங்களிலுள்ள பொறியியல் பணியாளர் பணியிடங்கள் கலைக்கப்படவில்லை. தற்பொழுது மாநிலம் முழுவதுமுள்ள பொறியாளர்கள் பணித் தொகுப்பினை அனைத்து மாவட்டங்களின் தேவையையும் நிறைவேற்றும் வண்ணம் தக்க பகிர்மானம் செய்து, அரசுக்குத் தெரிவிக்குமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. திருச்சி மாவட்டத்தைப் பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட பெரம்பலூர் திருவள்ளுவர் மற்றும் கரூர் தீரன் சின்னமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பணியிடங்கள் மட்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஆணைகளை மேலோச்சி தற்போது உருவாக்கப்பட்டுள்ள

1. மதுரை
2. வைகை வீரன் அழகு முத்துகோன்
3. சேலம்
4. இராசாசி
5. அண்ணா
6. எம்.ஜி.ஆர்.
7. நாகை காயிதே மில்லத்
8. ஏ.டி. பன்னீர்செல்வம்
9. திருச்சி
10. கரூர் தீரன் சின்னமலை
11. பெரம்பலூர் திருவள்ளுவர்

மாவட்டங்களிலும் உள்ள ஆதிதிராவிடர் நலத் துறை பணியாளர் அமைப்பு இணைப்பில் கண்டுள்ளவாறு அமையும். இணைப்பில் கண்டுள்ள பணியிடங்கள்யாவும் நிரந்தரப் பணியிடங்களாக அமையும்.

4. புதிதாக உருவாக்கப்பட்ட பெரம்பலூர் திருவள்ளுவர், கரூர் தீரன் சின்னமலை, எம்.ஜி.ஆர். ஏ.டி. பன்னீர்செல்வம், வைகை வீரன் அழகுமுத்துகோன் மற்றும் இராசாசி மாவட்டங்களுக்கு டீசல் ஈப்பும் அதற்கான எரிபொருள் வழங்கவும், தேவையான அறைகலன்கள் வாங்கவும் கீழ்க்கண்டவாறு ஒப்பளிக்கப்படுகிறது.

மாவட்டம் ஒன்றுக்கு:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஈப்பு (டீசல்) மகிந்திரா MM 750 DP (4WD) Hard Top | : | ரூ. 3,23,000 (ரூபாய் மூன்று இலட்சத்தி இருபத்தி மூன்றாயிரம் மட்டும்) |
| 2. | எரிபொருள் (டீசல்) | : | அரசு விதிகளின்படி |
| 3. | அறைகலன்கள் | : | ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) |

தொலைபேசி, தொலைநகளி (FAX), கணினி, செராக்சு ஆகியன வழங்குவது குறித்துத் தனியே ஆணைகள் வழங்கப்படும்.

5. தாய் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ள பணியிடங்களுக்கான அறைகலன்களை மாற்றப்படும் பணியாளர் தாய் மாவட்டத்திலிருந்து தம்முடன் எடுத்து செல்ல வேண்டும்.

6. இந்நிகழ்வில் ஏற்படும் செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:—

**1. பணியாளர் தொகுதி**

"2225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்பட்டோர் நலம்—80. பொது நலன்—001. நெறிபடுத்தலும் நிர்வாகமும்—I திட்டத்தில் சேராதது—AA ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மாவட்ட பணியாளர்கள்—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—01 ஊதியம் (2225 80 001 AA 0007).

**2. ஈப்பு**

"2225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்பட்டோர் நலம்—80. பொது—001. நெறிபடுத்தலும் நிர்வாகமும்—I திட்டத்தில் சேராதது—AA ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை—21. மோட்டார் வண்டிகள்—01. வாங்குதல் (2225 80 001 AA 2103).

(அரசு ஆணை நிலை எண். 67, ஆதி மற்றும் ப.ந. துறை, நாள் 15-4-97)

3. அறைகலன்கள்

05. அலுவலகச் செலவுகள்-2. இதர செலவுகள்
(2225 80 001 AA 0525.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு. எண். 126/கூ.செ. (டிபி)/97, நாள் 17-3-97ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றன.)

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், திருச்சி, கரூர், பெரம்பலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், சேலம், மதுரை, தேனீ, நாமக்கல், திருவாரூர்.
மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள், திருச்சி, கரூர், பெரம்பலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், சேலம், மதுரை, தேனீ, நாமக்கல், திருவாரூர்.
மாவட்ட கருவூல அலுவலர்கள், திருச்சி, கரூர், பெரம்பலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், சேலம், மதுரை, தேனீ, நாமக்கல், திருவாரூர்.
வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை-15.
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை 18, சென்னை 6, சென்னை 35.

நகல்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர் நிதி, வருவாய், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) துறை, சென்னை 9.

/ஆணைப்படி அனுப்பலாகிறது/

# இணைப்பு

| வரிசை எண் | பணியின் பெயர் | மதுரை | சேலம் | எம்.ஜி. ஆர் | நாகை | திருச்சி | மொத்தம் | மதுரை | வைகை வீ.அ.மு | சேலம் | இராசாசி | அண்ணா | எம்.ஜி.ஆர். | நாகை | ஏ.டி. பன்னீர்செல்வம் | திருச்சி | கரூர் தீரன் சின்னமலை | பெரம்பலூர் திருவள்ளுவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பழைய மாவட்டங்களின் பணியிட எண்ணிக்கை | | | | | | புதிய மாவட்டங்களுக்கு வழங்க வேண்டிய பணியிடங்கள் | | | | | | | | | | | |
| 1 | ஆதிதிராவிடர் நல அலுவலர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 11 |
| 2 | தலைமை உதவியாளர் (கண்காணிப்பாளர்) | 2 | 2 | 2 | 1 | 1 | 8 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 11 |
| 3 | உதவியாளர் | 5 | 10 | 7 | 4 | 11 | 37 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 5 | 3 | 3 | 3 | 35 |
| 4 | இளநிலை உதவியாளர் | 4 | 2 | 4 | 3 | 6 | 19 | 2 | 2 | 2 | - | 2 | 2 | 3 | 1 | 4 | - | - | 17 |
| 5 | தட்டச்சர் | 2 | 1 | 3 | 1 | 1 | 8 | 1 | 1 | 1 | - | - | 2 | 1 | 1 | 1 | - | - | 9 |
| 6 | இளநிலை உதவியாளர், தட்டச்சர் | - | - | - | - | - | - | 1 | 1 | 1 | 4 | - | 3 | - | 2 | - | 4 | 4 | 20 |
| 7 | பதிவறை எழுத்தர் | 1 | 2 | 1 | 1 | 1 | 6 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 11 |
| 8 | அலுவலக உதவியாளர் | 2 | 4 | 5 | 2 | 6 | 19 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 22 |
| 9 | ஓட்டுநர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 11 |
| 10 | உதவி கணக்கு அலுவலர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | - | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | 5 |
| 11 | தனிவட்டாட்சியர் (நில) | - | - | - | - | 1 | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | 1 |
| 12 | தலைமை கணக்கர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | - | 1 |
| 13 | இளநிலை பொறியாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | - | 5 |
| 14 | பணி மேற்பார்வையாளர் | 1 | 2 | 2 | 1 | 2 | 7 | 1 | - | 2 | - | 1 | - | - | - | 1 | - | - | 1 |
| 15 | லஸ்கர் | 1 | 2 | 1 | 1 | 2 | 7 | 1 | - | 2 | - | 1 | - | 1 | - | 2 | - | - | 7 |
| 16 | மசால்சி | - | - | - | - | 1 | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | 1 |
| 17 | காவலர் | - | - | - | 1 | 1 | 2 | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | 2 |
| 18 | வரைவாளர் | - | 1 | - | 1 | 1 | 3 | - | - | - | - | - | - | 1 | - | 1 | - | - | 3 |
| 19 | மேல்நிலை கணக்கர் | - | - | - | - | 1 | 1 | - | - | - | - | - | - | - | - | | - | 1 | 1 |
| | | 23 | 31 | 30 | 21 | 40 | 145 | 17 | 14 | 19 | 15 | 18 | 16 | 19 | 14 | 24 | 14 | 14 | 184 |

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

/உண்மை நகல்/

GOVERNMENT OF TAMIL NADU

## ABSTRACT

Adi Dravidar Welfare—Guarantee—State Government Guarantee for repayment of loan extended by NSFDC—Orders issued.

---

### Adi Dravidar and Tribal Welfare Department

G.O.Ms.No. 52, Dated: 20-3-1997

Read:

1. From the Managing Director, TAHDCO, Lr. No. G1/12200/93, dated 27-6-96 and 3-10-96.
2. From the Joint Managing Director, TAHDCO, Lr. No. G1/7723/96, dated 21-10-96.
3. From the Chairman and Managing Director, TAHDCO, Lr. No. G3/11470/95, dated 20-11-96 and 4-12-96.

**Order:**

The Managing Director, Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation (TAHDCO) has informed that the National Scheduled Castes and Scheduled Tribes Finance and Development Corporation (NSFDC) has agreed to extend loans for the following schemes to the extent indicated against them subject to the condition that the State Government guarantees the repayment of the loan:-

| | | (Rs. in lakhs) |
|---|---|---|
| 1. Rehabilitation of Accident victims | : | 11.46 |
| 2. Textile Weaving I (8 units) | : | 48.80 |
| 3. Textile Weaving II (3 Units) | : | 6.00 |
| 4. Powerlooms (100 Units) | : | 110.00 |
| 5. Autorickshaws (200 Units) | : | 34.80 |
| **Total** | : | **211.06 Lakhs** |

2. The Managing Director, TAHDCO has also informed that the Board of Directors of TAHDCO in a sitting on 19-9-96 has authorised the Managing Director to address the Government for providing a Block Guarantee of Rs. 20 crores to the NSFDC for the year 1996-97. The Managing Director, TAHDCO has requested that Block Guarantee for Rs. 20 crores may be given to NSFDC for the year 1996-97.

3. The Government have examined the request of the Managing Director, TAHDCO. The Government have decided to give a Block Guarantee for an amount equivalent to sanctions already conveyed by NSFDC through their letter of intent. NSFDC has so far issued Letter of intent for an amount totalling Rs. 211.06 lakhs.

4. In exercise of powers conferred by Article 293(i) of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby guarantee the repayment of the loan amount of Rs. 211.06 lakhs (Rupees Two hundred and eleven lakhs and six thousand only) and interest thereon by the TAHDCO to the NSFDC, New Delhi.

5. The following shall form the security for giving Government guarantee to the loan advanced by the NSFDC:—

Each of the beneficiary under the programme, indicated in the paragraph one above, should execute the Equitable Mortgage deed in favour of Chairman and Managing Director, TAHDCO to secure the loan amount.

6. The Government also authorise the Chairman and Managing Director, TAHDCO to execute necessary documents on their behalf and to communicate copies thereof to the Government and also to the Accountant General, Tamil Nadu.

7. The viability of each project should be carefully assessed by TAHDCO. Great care should be taken to prevent bad debts.

8. This order issues with the concurrence of Finance Department *vide* its U.O. No. 849/FS/P/97, dated 28-2-97.

**(By Order of the Governor)**

**R. Christodas Gandhi,**
*Secretary to Government.*

**To**

The Chairman and Managing Director, TAHDCO, Chennai-101 (4 copies)
The Managing Director, NSFDC, New Delhi.
The Accountant General, Chennai-18/35/6.

**Copy to:**

The Secretary to Government of India, Ministry of Welfare, New Delhi.
The Director of Adi Dravidar and Tribal Welfare, Chennai-5.
All District Manager, TAHDCO, The Director of SCs & STs., Chennai-6.
The Secretary to Government, Finance Department, Chennai-9.
The Finance (LC) Department, Chennai-9.
The Sr.P.A. to Minister (Adi Dravidar and Tribal Welfare), Chennai-9.
The P.S. to Secretary to Government, AD & TW Department, Chennai-9.
The P.A. to Deputy Secretary to Government, AD & TW Department Chennai-9.
The Adi Dravidar and Tribal Welfare (MEC/OP) Department, Chennai-9.
SF/SC.

/Forwarded By order/

*Section Officer.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

உதவி—பங்குமூலதன உதவி—தாட்கோவிற்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்கு மூலதன உதவி—1997-98 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் பங்கு விடுவித்தல்—ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.5) துறை.

---

*அரசு ஆணை (நிலை) எண் 105,* *நாள். 22-5-97.*

*ஆணை:*

ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படுகின்ற தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்திற்காகத் தாட்கோ அதனுடைய பங்கு மூலதனத்திலிருந்து விளிம்புத் தொகை உதவி அளித்து வருகிறது. இதற்காக ஆண்டு தோறும் மத்திய அரசும் மாநில அரசும் தாட்கோவின் பங்கு மூலதனத்தில் 49:51 என்ற விகிதத்தில் முதலீடு செய்கின்றன. இவ்வகையில் 1997-98 ஆம் ஆண்டிற்கான வரவு-சலவுத் திட்டத்தில் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்துகின்ற திட்டங்களின் கீழ் ரூ. 650 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டிலிருந்து ஆதிதிராவிடர் நல திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த வேண்டியிருப்பதால் மாநில அரசின் பங்கு மூலதன உதவித் தொகையான 51% ஐ அதாவது ரூ. 331.50 இலட்சத்தை தாட்கோவிற்கு உடனடியாக விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

2. 1997-98 வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 650 இலட்சத்தில் 1997-98ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்காக தாட்கோவின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்காக ரூ. 331.50 இலட்சம் (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தி ஒன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) விடுவித்து அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

3. மேலே பத்தி 2-ல் அனுமதிக்கப்பட்டுள்ள தொகையை உடனடியாக பெற்று தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருக்கு வழங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவ்வாறு செய்தபின் அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

4. இதற்கான செலவு கீழ்க்கண்ட தலைப்பு கணக்கின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:—

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினரின் மேம்பாட்டிற்கான மூலதன ஒதுக்கீடு—01 ஆதிதிராவிடர் நலம்—190. பொது உடமை மற்றும் இதர நிறுவனங்களின் முதலீடு—எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்கள்—VI மாநிலம் மற்றும் மத்திய அரசுகள் செலவினம் சமமாக ஏற்கப்படுகின்ற திட்டங்கள்—யுசி தாட்கோவின் பங்கு மூலதனத்தில் முதலீடு—22 முதலீடுகள் (4225 01 190 யுசி 2209) எதிர்வரவு வைத்தல் கே. வைப்புத் தொகைகள்—மற்றும் முன்பணங்கள் (பி) வட்டியில்லாத வைப்புத் தொகைகள் 8443.00-உரிமையியல் வைப்புத் தொகைகள்—800. இதர வைப்பு தொகைகள்—ஏஇ அரசு நிறுவனங்கள் மற்றும் கழகங்கள் ஆகியவற்றில் வைப்புத் தொகைகள் 52—தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தகவல் தொகுப்பு குறிப்பு எண். 8443 00 800 எஇ 520 இ)"

5. பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்கு 1997-98ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்காகத் தற்போது விடுவிக்கப்பட்டுள்ள தொகை தாட்கோவின் தனி வைப்புக் கணக்கில் வைத்து ஆதிதிராவிடர்களுக்கு விளிம்புத் தொகையாக தேவைப்படும் போது வழங்கப்படலாம்.

6. இந்த ஆணை நிதித்துறையின் இசைவை அ.சா.கு.எண். 2446/FS/P/97, நாள். 19-5-97 -ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி.
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5. (இரண்டு நகல்கள்)
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101 (4 நகல்கள்)
சம்பள கணக்கு அலுவலர், நல அமைச்சகம், மத்திய அரசு, நியு டெல்லி.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18 (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர்(தணிக்கை.1), சென்னை-35 (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர்(தணிக்கை.2), சென்னை-6 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
செயலாளர், மத்திய அரசு அமைச்சகம், புது டெல்லி.
தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-6 (2 நகல்கள்)

நகல்:

செயலர், நிதித்துறை, சென்னை-9.
செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, சென்னை-9.
நிதி (நிதி ஒதுக்கீடு 2) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலரின் தனிச்செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
இணைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபி/ஆதிந.1/அந/ஆதிந. 5) துறை, சென்னை-9.

/ஆணைப்படி வெளியிடப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

**Copy of G.O. (D) No. 186, (AD.W.V.), Dated 15-7-1997.**

## GOVERNMENT OF TAMIL NADU

### Abstract

Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation—Board of Directors—Appointment of Nominee of National Scheduled Castes/Scheduled Tribes Finance and Development Corporation as Director in the Board of Directors of TAHDCO—Thiru P.K. Das, Deputy General Manager (Project), National Scheduled Castes/Scheduled Tribes Finance and Development Corporation, New Delhi—Orders—Issued.

---

**Adi Dravidar and Tribal Welfare (ADW.–V.) Department**

G.O.(D).No. 186. Dated: 15-7-1997.

READ:

1. G.O.Rt.No.1., Adi Dravidar and Tribal Welfare Department, dated 6-1-92.
2. From Chairman and Managing Director TAHDCO letter No. F1/5433/97, dated 28-4-97.

**ORDER:**

In exercise of powers conferred by Articles 60(2) of the Memorandum and Articles of Association of Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation, the Governor of Tamil Nadu hereby nominates Thiru P.K.Das, Deputy General Manager (Project), National Scheduled Castes/Scheduled Tribes Finance and Development Corporation, New Delhi as Director, TAHDCO in the place of Thiru K. Jayakumar, Ex-General Manager (Projects) National Scheduled Castes/Scheduled Tribes Finance and Development Corporation.

2. The Managing Director, TAHDCO is requested that Thiru P.K. Das, may be invited to attend the Board meeting of TAHDCO. All the communications in this regard may be sent to his office address.

(By order of the Governor)

**(Sd.) R. Christodas Gandhi,**
*Secretary to Government.*

To

The Managing Director, TAHDCO, Chennai-101.
Thiru P.K. Das, Deputy General Manager (Projects), National Scheduled Castes/Scheduled Tribes Finance and Development Corporation, New Delhi.
All other Directors of TAHDCO, through the Managing Director, TAHDCO, Chennai-101.
The General Manager, National Scheduled Castes/Scheduled Tribes Finance and Development Corporation, New Delhi.
The Director and Ex-Officio, Commr. for Scheduled Castes/Scheduled Tribes, Chennai-6.
The Registrar of Companies, Chennai-6.

The Regional Director, Company Law Board, Chennai-6.
The Director of Adi Dravidar and Tribal Welfare, Chennai-5.
The Accountant-General, Chennai-18.
The Accountant-General, Chennai-35.
The Accountant-General (Audit), Chennai-
The Pay and Accounts Officer, Chennai-6.
The Secretary to Governor, Chennai-32.
The Secretary to Government Finance (BG. II) Department, Chennai-9.

/True Copy/

Section Officer.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம்—தாட்கோ நிறுவனத்தின் இயக்குநர் குழுமம் மற்றும் பங்காளர் பட்டியல்—சில மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.5) துறை.

அரசு ஆணை (டி) எண் 227 நாள். 22-9-97.

1. அரசாணை (வாலாயம்) எண் 32, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 17-2-95.
2. அரசாணை (டி) எண் 2, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 3-1-97.
3. அரசாணை (டி) எண் 178, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 26-6-97.
4. தாட்கோ கடித எண் எப்.1/11972/97, நாள் 19-8-97.
5. தாட்கோ கடித எண் எப்.1/11973/97, நாள் 19-8-97.

தாட்கோ கடித எண் எப்.1/11872/97, நாள் 20-8-97.

**ஆணை:**

டாக்டர் எஸ். குருமூர்த்தி, இ.ஆ.ப., முன்னாள் முதன்மை செயல் அலுவலர், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், அவர்களுக்குப் பதிலாக திரு. அஜய் பட்டாச்சார்யா, இ.ஆ.ப., அவர்கள் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் முதன்மைச் செயல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளதால், திரு. அஜய் பட்டாச்சார்யா, இ.ஆ.ப., அவர்களை தாட்கோ நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தில் ஒரு இயக்குநராக நியமித்தும் அவர் பணியிடத்திற்கு பால் உற்பத்தித் துறை ஆணையராக நியமனம் செய்யப்பட்ட டாக்டர் எஸ். குருமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களை தாட்கோ நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தில் ஒரு இயக்குநராக நியமித்தும் மற்றும் திரு. அஜய் பட்டாச்சார்யா அவர்களின் பொறுப்பிலுள்ள தாட்கோ நிறுவனத்தின் பங்குகளை டாக்டர் எஸ். குருமூர்த்தி அவர்களின் பெயருக்கு மாற்றம் செய்தும், தாட்கோ நிறுவனத்தின் முன்னாள் மேலாண்மை இயக்குநர் திரு. வி.கே. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்களுக்குப் பதிலாக திரு. டி.எஸ். ஜவஹர், இ.ஆ.ப., தாட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளதால், திரு. வி.கே. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்களின் பொறுப்பிலுள்ள தாட்கோ நிறுவனத்தின் பங்குகளை திரு. டி.எஸ். ஜவஹர், இ.ஆ.ப., அவர்களின் பெயருக்கு மாற்றம் செய்தும் ஆணை வெளியிடப்படுகிறது.

2. தாட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மேற்கண்ட மாற்றங்களை செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்:

திரு. டி.எஸ். ஜவஹர், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
திரு. வி.கே. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், சென்னை-10.
டாக்டர் எஸ். குருமூர்த்தி, இ.ஆ.ப.,
ஆணையர்,
பால் உற்பத்தி துறை, சென்னை.
திரு. அஜய் பட்டாச்சார்யா, இ.ஆ.ப.,
முதன்மைச் செயல் அலுவலர், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், சென்னை-108.
மற்ற அனைத்து இயக்குநர்களுக்கு தாட்கோ மேலாண்மை இயக்குநர் வழியாக, சென்னை-101.
அரசு செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
நிதி (ப்பிபிஇ) துறை, சென்னை-9.
தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், புதுடில்லி.
மாநில கணக்காயர், சென்னை-9.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-35.
அமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (நலம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

இரா. கௌரி,
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம்—தாட்கோ நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் ஒருவரையும்—சிப்காட்டின் சார்பில் ஒருவரையும் இயக்குநர்களாக நியமித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.5) துறை.

அரசு ஆணை (டி) எண். 231. நாள். 24-9-1997.

படிக்கப்பட்டது:

1. தாட்கோ கடித எண். எப்1/651/97, நாள். 19-2-97.
2. அரசு நேர்முக கடித எண். 6708/ஆதிந.5/97, நாள். 18-3-97.
3. தாட்கோ கடித எண். எப்1/2533/97, நாள். 24-3-97, 26-4-97, 27-5-97 மற்றும் 25-6-97.

ஆணை:

7 -2- 97 அன்று நடைபெற்ற தாட்கோ நிறுவனத்தின் 115வது இயக்குநர் குழுமக் குழுக்கூட்டத்தில் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிப்காட் இயக்குநர்களாக நியமிக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தின் தாட்கோ நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தில் இயக்குநர்களாக நியமிக்கலாம் என தாட்கோ நிறுவனம் கருத்துரு அனுப்பியுள்ளது.

1. திரு. வி.எஸ். பட்டாபிராமன்,
   பொது மேலாளர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்,
   சென்னை.
2. திரு. T. மீனாட்சி சுந்தரம்,
   பொது மேலாளர் (திட்டங்கள்-நிதி) சிப்காட், சென்னை.

2. மேற்கண்ட தாட்கோ நிறுவனத்தின் கருத்துருவின் அடிப்படையில் திரு. வி.எஸ். பட்டாபிராமன், பொது மேலாளர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சென்னை அவர்களையும் திரு. T. மீனாட்சி சுந்தரம், பொது மேலாளர் (திட்டங்கள்-நிதி) சிப்காட், சென்னை அவர்களையும் தாட்கோ நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தில் இயக்குநர்களாக நியமித்து ஆணை வெளியிடப்படுகிறது.

3. தாட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இது குறித்து தகுந்த மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
மேலாண்மை இயக்குநர், சிப்காட், சென்னை-600 008.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்.
தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்,சென்னை-14.
மற்ற அனைத்து இயக்குநர்களுக்கும் தாட்கோ மேலாண்மை
இயக்குநர் வழியாக, சென்னை-101.

அரசுச் செயலர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
நிதி (ப்பிபிஇ) துறை, சென்னை-9.
தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார
மேம்பாட்டுக் கழகம், புதுடில்லி.
மாநில கணக்காயர், சென்னை-9.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-35.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை,
சென்னை-9.

---

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்.

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

*பழங்குடியினர் நலம் - 1997-98-ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத்திட்டம் பழங்குடியினர் குக்கிராமங்களுக்கு மின்வசதி அளித்தல் ஆணைகள் வெளியிடப்பட்டது.*

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே) துறை**

அரசாணை (3டி)எண் 34, நாள் 5-5-1997

படிக்கப்பட்டது:

1) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட திட்ட நிதிக்குழுவிற்கான கருத்துரு.

2) 7-3-1997 நாளிட்ட தமிழ்நாடு மின்வாரிய கடித எண்.SE/RE&I(O)/RE2/E/D.No.142/97

**ஆணை:**

1997-98-ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத் திட்டத்தில் பழங்குடியினர் குடியிருப்புகளில் மின்வசதி அளிக்க பழங்குடியினர் துணைத்திட்ட ஆவணத்தில் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.30.00 இலட்சம் நடப்பு நிதியாண்டில் (1997-98) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம், கண்காணிப்புப் பொறியாளர், கிராமப்புற மின்வசதி மற்றும் மேம்பாடு அவர்கள் பழங்குடியினர் குடியிருப்புகளில் மின்வசதி அளிப்பதற்கு ஏதுவாக ரூ.57.00 இலட்சம் (ரூபாய் ஐம்பத்து ஏழு இலட்சம் மட்டும்) அரசின் மானியத் தொகையாக (100%) முதற்கண் வழங்குமாறு ஒரு கருத்துருவினை அரசின் ஏற்புக்காக அனுப்பியுள்ளார்.

2) அரசு இக்கருத்துருவினை ஏற்று இணைப்பில் உள்ள பழங்குடியினர் குடி[illegible] 5 மட்டும் மின்வசதி அளிக்க ரூ.29.96 இலட்சம் (ரூபாய் இருபத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றாறாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்க ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ. 29.96 இலட்சத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் சென்னை-2க்கு காசோலை மூலம் வழங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4) இச்செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கலாம்.

"2225 பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02 பட்டியல் பழங்குடியினர் நலன் - 796 பட்டியல் பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத்திட்டப் பணிகள் மாநிலத் திட்டம் - ஜேஜ பழங்குடியினர் கிராமங்களில் மின்வசதித் திட்டங்கள் - 16 பெரும்பணிகள்.
(த.தொ.கு.எண்.2225 - 02- 796 - ஜே.ஜ.1002).

5) இவ்வாணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையினை பயன் படுத்தியதற்கான பயன்பாட்டு சான்றிதழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. காண்க நிதித்துறையின் 29-4-1997 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண்.1952/செயலர், நிதி(தனி)/97.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசு செயலர்.*

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல, இயக்குநர், சென்னை-5.
தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை-2.
மாவட்ட ஆட்சித்தலைவர், பெரம்பலூர் திருவள்ளூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை-18 (பெயரிட்ட உறையில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.

நகல்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) துறை,
மற்றும் (கமபி) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**இணைப்பு**

***1997-98 ஆம் ஆண்டில் பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் பெரம்பலூர் திருவள்ளூர் மாவட்டம், துறையூர் வட்டம், பச்சை மலையில் உள்ள பழங்குடியின குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கப்படும் குடியிருப்புகளின் விவரம்.***

| வ.எண். | சிற்றூர்களின் பெயர் | | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1) | மருதை | 100% | 9 | 10.24 |
| 2) | பரத்தல் | மானியம் | 7 | 12.95 |
| 3) | எருமைப்பட்டி | | 7 | 6.77 |
| | | மொத்தம் | **23** | **29.96** |

(ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரம் மட்டும்)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பழங்குடியினர் நலம் - 1997-98ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத் திட்டம் - ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியில் உள்ள பழங்குடியினர் குக்கிராமங்களுக்கு குடிநீர் வசதி அளித்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே) துறை**

*அரசு ஆணை (3டி) எண் 35* — *நாள் 5-5-1997.*

**படிக்கப்பட்டது:**

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்திலிருந்து பெறப்பட்ட திட்ட நிதிக்குழுவிற்கான கருத்துரு.
2. 5-3-1997 நாளிட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண் 72795/ஏஈ7/ஆர்.II/97.

**ஆணை:**

1997-98ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் ஒரு பகுதியாக பழங்குடியினர் குக்கிராமங்களில் குடிநீர் வசதி அளித்தல் பழங்குடியினர் துணைத்திட்ட ஆவணத்தில் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் பழங்குடியினர் துணைத்திட்டப் பகுதிகளில் உள்ள 41 குடியிருப்புகளுக்கு ரூ.75.00 இலட்சம் செலவினத்தில் குடிநீர் வழங்கல் ஓர் கருத்துருவினை அரசின் ஏற்புக்கு அனுப்பியுள்ளார்.

2. அரசு இக்கருத்துருவினை பரிசீலித்து ரூ.50.05 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) செலவினத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் உள்ள 32 பழங்குடியின குடியிருப்புகளுக்கு மட்டும் 1997-98ஆம் ஆண்டில் இணைப்பில் உள்ளவாறு குடிநீர் வசதி அளிக்க அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.50.05 இலட்சத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இய்க்குநர் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. இச்செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கலாம்:

"2225 பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02 பட்டியல் பழங்குடியினர் நலன் - 796 பட்டியல் பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத்திட்டப் பணிகள் II மாநிலத்திட்டம் - ஜே.எச். பழங்குடியினர் பகுதி துணைத்திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கு திட்டங்கள் - உதவித்தொகைகள் (த.தொ.கு.2225-02-796-ஜே.எச்-1102)

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. காண்க நிதித்துறையின் 29-4-1997 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண் 1956/செயலர், நிதி/தனி/ 97.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலர்.*

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5 (இ)
தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டு திட்டம், சேலம்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18 (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வடஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், தர்மபுரி, சேலம் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டங்கள்.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை, சென்னை-9.
கருவூல அலுவலர், வேலூர், திருவண்ணாமலை - சம்புவராயர், தர்மபுரி, சேலம், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டங்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.

நகல்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமப) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கே. எஸ். கோபால்,
பிரிவு அலுவலர்.

**5-5-1997 நாளிட்ட அரசு ஆணை (3டி) எண் 35-ன் இணைப்பு**

**இணைப்பு**

| வ.எண். (1) | மாவட்டத்தின் பெயர் (2) | மலையின் பெயர் (3) | குடியிருப்புகளின் எண்ணிக்கை (4) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) (5) |
|---|---|---|---|---|
| 1. | விழுப்புரம் இராமசாமி படையாச்சி | கல்ராயன் | 4 | 8.30 |
| 2. | வடஆற்காடு அம்பேத்கர் | ஜவ்வாது | 4 | 19.20 |
| 3. | திருவண்ணாமலை சம்புவராயர் | ஜவ்வாது | 9 | 3.60 |
| 4. | சேலம் | (அ) கல்ராயன் | 1 | 0.75 |
| | | (ஆ) பச்சைமலை | 1 | 5.00 |
| | | (இ) ஏற்காடு | 2 | 1.50 |
| 5. | திருச்சி-பெரும்பிடுகு முத்தரையர் | பச்சைமலை | 6 | 4.50 |
| 6. | நாமக்கல் இராஜாஜி | கொல்லிமலை | 5 | 7.20 |
| | | | **32** | **50.05** |

(மொத்தம் ரூபாய் ஐம்பது இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்)

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பழங்குடியினர் நலம் - 1997-98 ஆம் ஆண்டில் பழங்குடியினர் துணைத்திட்டம் - பண்டைய பழங்குடியினர்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (பமே) துறை

*அரசாணை (3டி) எண் 36* — *நாள்:5-5-1997*

*படிக்கப்பட்டது:*

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட திட்ட நிதிக்குழுவிற்கான கருத்துரு.

***ஆணை:***

*1997-98* ஆண்டிற்கான ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக பண்டைய பழங்குடியினர்களுக்கு சில பொருளாதார திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

*2.* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பண்டைய பழங்குடியினர் பொருளாதார முன்னேற்றத்திட்டத்தின் கீழ் ரூ. *48.93* இலட்சம் செலவினத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள திட்டங்களை செயல்படுத்த அரசின் அனுமதி கோரியுள்ளார்.

| | திட்டம் | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| *1.* | கோயமுத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் இருளர் குடும்பங்களுக்கு வீடு ஒன்றுக்கு ரூ.*29,000/-* செலவினத்தில் *117* வீடுகள் கட்டுதல். | *33.93* |
| *2.* | *300* இருளர் குடும்பங்களுக்கு ஆடு அலகுகள் வழங்குதல்.<br>விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் *(50)*<br>தர்மபுரி *(50)* கோயமுத்தூர் *(70)*<br>பெரியார் *(50)* திருவண்ணாமலை *(50)*<br>வடஆற்காடு அம்பேத்கார் *(30)* | *15.00* |
| | மொத்தம் | ***48.93*** |

*3.* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருக்களை அரசு ஆய்வு செய்தது. இத்திட்டங்களுக்கு *1997-98*ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.*44.00* இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் திட்டங்களுள் கீழ்க்கூறிய திட்டங்களை அவற்றுக்கெதிராக குறிப்பிடப்பட்டுள்ள தொகை செலவில் செயல்படுத்தப்பட அரசு ஒப்புதல் அளிக்கிறது:-

| | திட்டம் | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| *1.* | கோயமுத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் இருளர் குடும்பங்களுக்கு வீடு ஒன்றுக்கு ரூ.*29,000/-* செலவினத்தில் *100* வீடுகள் கட்டுதல் | *29.00* |
| *2.* | *300* இருளர் குடும்பங்களுக்கு ஆட்டு அலகுகள் வழங்குதல்,<br>விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் *(50)* தர்மபுரி *(50)* கோயமுத்தூர் *(70)*<br>பெரியார் *(50)* திருவண்ணாமலை சம்புவராயர் *(50)*<br>வடஆற்காடு அம்பேத்கார் *(30)* | *15.00* |
| | மொத்தம் | ***44.00*** |

மேலே குறிப்பிடப்பட்டவாறு மொத்தம் ரூ.44.00 இலட்சம் (ரூபாய் நாற்பத்திநான்கு இலட்சங்கள் மட்டும்) செலவு இத்திட்டங்களுக்கான மேற்கொள்ளப்பட அரசு ஒப்பளிக்கிறது.

4. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேலே பத்தி 3இல் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டங்களுக்காகும் செலவினத்தை முன்பணமாகக் கருவூலத்தில் இருந்து பெறவும், பின்னர் தகுந்த விவரப்பட்டியல் மற்றும் செலவுச் சீட்டுகள் சரிகட்டும் பட்டிகளைக் கருவூலத்தில் ஈடு செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

5. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஆட்டு அலகுகள் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநரின் ஆலோசனைப்படி வாங்கி வழங்கப்பட வேண்டும். வீடுகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மூலம் கட்டப்பட வேண்டும்.

6. மேலே பத்தி 3இல் ஏற்பளிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.44.00 இலட்சத்தில் ரூ.40/- இலட்சம் மத்திய அரசால் வழங்கப்படும் சிறப்பு மைய அரசு நிதி உதவியிலிருந்து ஈடு செய்யப்பட வேண்டும்.

7. இதற்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் மேற்கொள்ளப்படும்.

"2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02. பட்டியல் பழங்குடியிநர் நலன் - 796. பட்டியல் பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத்திட்டப் பணிகள்—II மாநிலத்திட்டம் - JK ஆதிவாசிகள் மேம்பாடு - 09. உதவி மானியங்கள் (த.தொ.கு.2225 02 796 JK 0901).

8. இந்த ஆணை நிதித்துறை ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. காண்க 29-4-1997 நாளிட்ட நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 1957/செயலர்/நிதி/(தனி)/97.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
அரசுச் செயலாளர்.

பெறுநர்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயமுத்தூர், தர்மபுரி, விழுப்புரம் இராமசாமி படையர்ச்சியார், பெரியார், திருவண்ணாமலை சம்புவராயர்.
வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டங்கள்.
தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், சேலம்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18 (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-35 (பெயரில்)
கருவூல அலுவலர், கோயம்புத்தூர், தர்மபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, ஈரோடு.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு)(கமபி)த் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

கே. எஸ். கோபால்.
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பழங்குடியினர் நலம் - 1997-98 ஆம் ஆண்டின் பழங்குடியினர் துணைத்திட்டம் - சிதறி வாழும் பழங்குடியினருக்கான சமூக பொருளாதார முன்னேற்றத்திட்டங்கள் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட திட்ட நிதிக்குழு கருத்துரு.*

*ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (ப.மே.) துறை*

*அரசாணை (3டி) எண் 37* *நாள்:5-5-1997*

*படிக்கப்பட்டது:*

*ஆணை:*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் 1997-98 ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின்கீழ் சிதறி வாழும் பழங்குடியினர்களுக்கு கீழ்காணும் சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை ரூ.42.55 இலட்சம் செலவீனத்தில் செயல்படுத்தலாமென கருத்துருக்களை அனுப்பி அரசின் ஒப்பளிப்பைக் கோரியுள்ளார்.

| | திட்டம். | | தொகை. (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சிதறி வாழும் பழங்குடியினர்களுக்கு ஆட்டு அலகுகள் வழங்குதல், தர்மபுரி (100), சேலம் (100), பெரியார் (50), கோயமுத்தூர் (50) | : | 15.00 |
| 2. | சிதறி வாழும் பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டுதல்; சேலம் மாவட்டம். 50 வீடுகள் பெரியார்மாவட்டம். 45 வீடுகள் | : | 27.55 |
| | மொத்தம் | | **42.55** |

2. அரசு மேலே பத்தி 1-ல் கூறப்பட்ட திட்டக் கருத்துருக்களை ஏற்று ஆணையிடுகிறது. மேலே பத்தி 1இல் தெரிவித்துள்ள திட்டங்களை 1997-98ஆம் ஆண்டில் செயல்படுத்த மொத்தம் ரூ.42.55 இலட்சம் (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) செலவிடப்பட அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது.

3. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேலே பத்தி 1இல் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்காகும் செலவினத்தை முதலில் முன்பணமாகக் கருவூலங்களிலிருந்து பெறவும் பின்னர் தகுந்த பட்டியல் மற்றும் செலவுச் சீட்டுகளுடன் சரிக்கட்டப்பட்டு கருவூலங்களில் தாக்கல் செய்து ஈடுசெய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

4. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஆட்டு அலகுகள் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநரின் ஆலோசனைப்படி வாங்கி வழங்கப்பட வேண்டும். வீடுகள், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மூலம் கட்டப்படவேண்டும்.

5. மேலே பத்தி 2இல் ஏற்பளிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.42.55 இலட்சத்தில் ரூ.30.00 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்படும் சிறப்பு மைய அரசு உதவி நிதியிலிருந்து ஈடுசெய்யப்பட வேண்டும்.

6. இத்திட்டத்திற்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் மேற்கொள்ளப்படும்:-

"2225 -பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02 பட்டியல் பழங்குடியினர் நலன் - 796 பட்டியல் பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்-II மாநிலத் திட்டம் - ஜே.எல். பரவலாக வாழும் பழங்குடியினர் -09 உதவி மானியங்கள்.

(த.தொ.கு.எண்.2225 02 796 ஜே.எல். 0909)"

7. இந்த ஆணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. காண்க 29-4-1997 நாளிட்ட நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 1954/செயலர்/நிதி (தனி)/97.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம், சேலம்.
மாவட்ட ஆட்சித்தலைவர்கள், கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, பெரியார் மாவட்டம்.
கருவூல அலுவலர், கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, ஈரோடு.
பொது சுகாதாரம் (மற்றும்) நோய்த் தடுப்புத்துறை இயக்குநர், சென்னை-6.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-35 (பெயரிட்ட உறையில்)
துணைச்செயலாளர், மத்திய அரசு, சமூகநலத்துறை (பழங்குடியினர் நலப்பிரிவு). புதுடில்லி.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (கமப) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (அந) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பழங்குடியினர் நலம் - பழங்குடியினர் துணைத்திட்டம் 1997-98 ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப் பகுதிகளில் வீட்டுவசதித்திட்டம் செயல்படுத்துதல் - ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (பமே) துறை

அரசாணை (3டி) எண்38. நாள் 5-5-97.

படிக்கப்பட்டது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட திட்ட நிதிக்குழு கருத்துரு.

**ஆணை:**

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப் பகுதிகளில் 1997-98ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் வீடு ஒன்றுக்கு ரூ.29,000/-வீதம் 36 வீடுகள் ரூ.10.44 இலட்சம் செலவீனத்தில் கட்டுவதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் கருத்துரு ஒன்றினை அரசின் ஏற்புக்காக அனுப்பியுள்ளார்.

2. அரசு தக்க ஆய்விற்குப் பிறகு தருமபுரி மாவட்டம் சித்தேரி மலைப்பகுதியில் காரப்பாடி கிராமத்தில் வீடு ஒன்றுக்கு ரூ.29,000/- வீதம் 36 வீடுகள் கட்டுவதற்காக ரூ.10.44 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சத்து நாற்பத்து நான்கு ஆயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்க அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.10.44 இலட்சத்தை 36 வீடுகள் கட்டுவதற்காக சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திற்குப் பெற்று வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு இசைவு வழங்கப்படுகிறது. இவ்வீடுகள் சவகர் வேலை வாய்ப்புத்திட்டத்தில் விதிக்கப்பட்ட வரம்புகளுக்குட்பட்டு கட்டப்படவேண்டும். இத்திட்டத்தின் செயல்பாட்டினை ஆய்வு செய்து அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இச்செலவீனம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2225-பட்டியல் சாதியின-பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02 பட்டியல் பழங்குடியினர் நலன் - 796 பட்டியல் பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத்திட்டப் பணிகள் II மாநிலத்திட்டம் - JN பழங்குடியினர் ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டப் பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தல் - 17 சிறுபணிகள்.
(த.தொ.கு.2225-02-796-JN-1708)"

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. காண்க நிதித்துறையின் 29-4-1997 நாளிட்ட அலுவல்சார்பற்ற எண்.1953/செயலர், நிதி (தனி)/97.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம், சேலம்.
மாவட்ட ஆட்சித்தலைவர், தர்மபுரி மாவட்டம்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-6 (பெயரில்).
மாநில கணக்காய்வுத் தலைவர், (தணிக்கை), சென்னை-18.
கருவூல அலுவலர், தர்மபுரி,

நகல்:

திட்டம் (மற்றும்) வளர்ச்சித் துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், (கமப) (அந) பிரிவு, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
உதிரி/இருப்புக்கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பழங்குடியினர் நலம் - பழங்குடியினர் ஆய்வு மையம், உதகமண்டலம் - ஆட்சிக்குழு, நிதிக்குழு அமைக்கப்பட்டது - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ப.மே.) துறை

அரசாணை (நிலை) எண்.145 நாள்: 7 ஆகஸ்ட் 1997.

படிக்கப்பட்டது.

1. 13-9-1995 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசாணை நிலை எண்.161.
2. 4-11-1996 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசாணை நிலை எண்.145.
3. 30-12-1996 அன்று பழங்குடியின ஆய்வு மைய செயல்பாடு குறித்து நடைபெற்ற ஆய்வுக்கூட்ட நடவடிக்கைக் குறிப்பு.
4. 4-12-1996, 30-12-1996 நாளிட்ட பழங்குடியினர் ஆராய்ச்சி மைய இயக்குநரின் கடித எண்.2542/ம.ம.ஆ/96.
5. 17-3-1997 மற்றும் 9-5-1997 நாளிட்ட பழங்குடியினர் ஆராய்ச்சி மைய இயக்குநரின் கடித எண்.98/அ2/97.

ஆணை:

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கட்டுபாட்டில் இயங்கி வந்த உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினர் ஆய்வு மையம், படிக்கப்பட்ட அரசாணை 1 இல் வெளியிடப்பட்ட ஆணையின்படி அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. படிக்கப்பட்ட அரசாணை 2 இல் இம்மையத்தின் இயக்குநர் பணியிடம் நிரப்பப்பட்டது.

2. உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினர் ஆய்வு மையம் சிறந்த முறையில் செயல்பட எத்தகைய நிர்வாக அமைப்பு இருக்கலாம் என்பது குறித்து கலந்துரையாடப்பட்டு சில கருத்துருக்கள் ஏற்கப்பட்டன. பழங்குடியினர் ஆய்வு மையத்தின் செயல்பாடுகளை முறைப்படுத்தி வழிநடத்துவதற்கு ஒரு ஆட்சிக்குழு மற்றும் நிதிக்குழு ஆகியவை அமைக்கப்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. இதனடிப்படையில் உதகமண்டலத்திலுள்ள பழங்குடியின ஆய்வு மையத்திற்கு ஆட்சிக்குழு மற்றும் நிதிக்குழு அமைப்பதற்கான கருத்துருக்களை பழங்குடியினர் ஆய்வு மைய இயக்குநர், அரசின் ஏற்புக்கு அனுப்பியுள்ளார்.

4. இக்கருத்துருக்களை அரசு ஆய்வு செய்தது. உதகண்டலத்திலுள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்தின் நிருவாகம், செயல்பாடு ஆகியவற்றை நல்ல கட்டமைப்புக்குள் கொண்டு வந்து வழிநடத்தும் பொருட்டு பழங்குடியினர் ஆய்வு மையத்துக்கான ஆட்சிக்குழு, நிதிக்குழு (Governing Council, Finance Committee) ஆகியவை அமைக்கப்படவேண்டுமென அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே உதகமண்டலத்தில் உள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்திற்கான ஆட்சிக்குழு, நிதிக்குழு ஆகியவற்றை அமைத்து அரசு ஆணையிடுகிறது. ஆட்சிக்குழு, நிதிக்குழு கீழே கூறியவாறு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொண்டதாக அமையும் என அரசு ஆணையிடுகிறது.

## ஆட்சிக்குழு

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் | .. | தலைவர் |
| 2. | அரசுச் செயலர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | .. | துணைத்தலைவர் |
| 3. | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5. | .. | உறுப்பினர் |
| 4. | இணைச்செயலர், இந்திய அரசு, நல அமைச்சகம், புதுடெல்லி. | .. | உறுப்பினர் |
| 5. | அரசு சிறப்புச்செயலாளர், நிதித்துறை, சென்னை-9. | .. | உறுப்பினர் |
| 6. | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம், சென்னை-6. | .. | உறுப்பினர் |
| 7. | தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் சேலம். | .. | உறுப்பினர் |
| 8. | திட்ட அலுவலர், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். | .. | உறுப்பினர் |
| 9. | முனைவர், வ.அய். சுப்ரமணியம், தலைவர் மற்றும் இயக்குநர், இந்திய திராவிட மொழியியல் சங்கம் திராவிட மொழியியல்களுக்கான பன்னாட்டுப் பள்ளி, புனித சேவியர் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா-695586. | .. | உறுப்பினர் |
| 10. | முனைவர் வ. கருப்பையன், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர். மானிடவியல் துறை, சென்னை பல்கலைக்கழகம், சென்னை-5. | .. | உறுப்பினர் |
| 11. | இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு மையம், மு. பாலாடா, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். | | உறுப்பினர்-செயலர் அமைப்பாளர். |

## நிதிக்குழு

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுச்செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9. | .. | தலைவர் |
| 2. | இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5. | .. | உறுப்பினர். |
| 3. | அரசு துணைச்செயலாளர், நிதித்துறை, சென்னை-9. | .. | உறுப்பினர் |
| 4. | இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு மையம், மு. பாலாடா, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். | .. | உறுப்பினர் - செயலாளர். |

5. இப்போது அமைக்கப்பட ஆணையிடப்பட்ட இரு குழுக்களும் இவ்வாணை வெளியிட்ட நாள் முதல் மூன்றாண்டுகள் ஆயுட்காலம் கொண்டவையாக இருக்கும். பழங்குடியினர் ஆய்வு மையத்தினை அரசின் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள இடப்பட்ட அரசாணை (நிலை) எண்.161, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 13-9-1995 இல் ஆய்வு மையத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் ஆய்வு மையத்தின் நடவடிக்கைகளையும், செயல்பாடுளையும் முறைப்படுத்தி ஆட்சிக்குழு வழிநடத்தும், பழங்குடியினர் ஆய்வு மையம் ஒரு தன்னாட்சி நிறுவனமாகச் செயல்படிக்கூடிய வகையில் ஆட்சிக்குழு வழிகளை வகுக்கும். மேலும் மையத்தின் செயல்பாடுகள், செலவினங்களுக்கான வழிகாட்டுதல், திட்ட ஒப்புதல், அன்றாட நடப்புகள் ஆகியவற்றை ஆட்சிக்குழு முடிவு செய்யலாகும். இதர நிதி தொடர்பான நிருவாகம், வழிகாட்டுதல், ஆலோசனை முதலியவை குறித்து நிதிக்குழு முடிவு செய்யலாகும்.

6. உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்தில் செயல்பாட்டிற்கு ஒட்டு மொத்தத்தொகை (Block Grant) வழங்கப்படவேண்டுமென்கிற பழங்குடியினர் ஆய்வு மைய இயக்குநரின் கருத்துரு அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இம்மையத்திற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்தான் அரசுக்கு அனுப்பவேண்டும் என்று அரசு

ஆணையிடுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரே இம்மையத்தின் வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு அதிகாரி ஆவார்.

7. இக்குழுக்கள் ஆண்டுக்கு இருமுறை மற்றும் தேவை ஏற்படும்போது கூட்டப்படவேண்டும். இக்குழுக்கள் ஒரு முதல் நிலைக் குழுவாக செயல்படும். இக்குழு உறுப்பினர்களுக்கு அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் விதிகளுக்குட்பட்டு பயணப்படி மற்றும் தினப்படி பெற உரிமை வழங்கப்படுகிறது. இச்செலவினங்கள் மாநில அரசு அலுவலர் பொறுத்தமட்டில் அவர்கள் தற்போது ஊதியம் பெற்று வரும் கணக்குத் தலைப்பில் பெற்றுக்கொள்ளலாம். உறுப்பினர்களின் பயணப்படி/தினப்படி பட்டியல்களை மேலொப்பமிடும் ஆணையுரிமை பெற்றவராக இக்குழுக்களின் செயல் உறுப்பினர் பொறுப்பை வகிக்கும் பழங்குடியினர் ஆய்வு மைய இயக்குநர் செயல்படுவார்.

8. மாநில அரசு அலுவலர் அல்லாத மத்திய அரசு அலுவலர் உட்பட்ட பிற உறுப்பினர்களுக்கான பயணப்படி/தினப்படி பழங்குடியினர் ஆய்வு மையத்தின் கீழ்க்காணும் செலவுக் கணக்குத் தலைப்பில் மேற்கொள்ளப்படும்:-

"2225-பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-02. பட்டியல் பழங்குடியினர் நலன் -800 ஏனைய செலவு-ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் -VI. மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் - UA. பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தல் (த.தொ.கு.எண்.2225 02 800 - UA - 0007)"

9. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அத்துறையின் 5-8-1997 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண்.62103/நிதி (சந) 97-1ல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசு செயலாளர்.

பெறுநர்

அனைத்து உறுப்பினர்கள் மற்றும் தலைவர் நேரடியாக

1. மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-9.
2. அரசு செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
3. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
4. இணைச்செயலர், இந்திய அரசு நல அமைச்சகம், புதுடில்லி-110 001.
5. அரசு சிறப்புச் செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
6. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தேசீய ஆணையம், சென்னை-6.
7. தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டங்கள், சேலம்.
8. திட்ட அலுவலர், மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம், புதிய பால்பண்ணை வளாகம், குன்னூர் ரோடு, உதகமண்டலம்-643 001.
9. முனைவர் வ.அய். சுப்ரமணியம், தலைவர் மற்றும் இயக்குநர் இந்திய திராவிட மொழியியல் சங்கம், திராவிட மொழியியல்களுக்கான பன்னாட்டுப்பள்ளி, புனிதசேவியர் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா-695 586.
10. முனைவர் வ. கருப்பையன், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், மானிடவியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5.
11. அரசு துணைச்செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
12. இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு மையம், மு. பாலாடா, உதகமண்டலம் 643 004, நீலகிரி மாவட்டம்.

13. இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
14. இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு மையம், மு. பாலாடா, உதகமண்டலம்-643 004.
15. மாநிலக் கணக்காய்வுத்தலைவர், தமிழ்நாடு, சென்னை-18.
16. மாநிலக் கணக்காய்வுத்தலைவர், தமிழ்நாடு, சென்னை-6.
17. மாநிலக் கணக்காய்வுத்தலைவர், தமிழ்நாடு, சென்னை-35.
18. மாவட்டக் கருவூல அலுவலர், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.
19. சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
20. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
21. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலரின் தனிச்செயலர், சென்னை-9.
22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அ.ந.மு.)பிரிவு, சென்னை-9.
23. நிதித்துறை (சமூகநலம்), சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**கே. எஸ். கோபால்,**
*பிரிவு அலுவலர்.*

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பழங்குடியினர் நலம் - பழங்குடியினர் துணைத் திட்டம் -1997-98ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் செயல்படுத்துதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ப.மே) துறை

அரசாணை (4 டி) எண்.11, நாள் 3-9-1997 .

படிக்கப்பட்டது:

(1) 5-2-1997, 22-4-1997 நாளிட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதங்கள் எண்.16428/97/ஓ.எம்.3.

(2) 20-3-1997, 16-5-1997 நாளிட்ட வேளாண்மைப் பொறியியல் தலைமைப் பொறியாளரின் கடிதங்கள் எண். எஸ்.சி2/1866/97.

(3) 24-4-1997 நாளிட்ட முதன்மை வனத்துறைத் தலைவரின் கடிதம் எண்.எஸ்.எஸ்.3/67745/96

(4) 4-4-1997 நாளிட்ட தலைமைப் பொறியாளரின் (பொது நீர்வளம்) கடிதம் எண்.94(4)/39488/97.

(5) 24-5-1997 நாளிட்ட கால்நடைத்துறை இயக்குநரின் கடிதம் எண்.13752/டிஎம்சி/97

(6) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடிதம் எண்.எப்3/6096/97, நாளிட்டது 4-7-1997.

ஆணை:

இம்மாநிலத்தில் கீழ்க்கூறிய ஒன்பது ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் பழங்குடியினர் துணைத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம்.
2. ஏற்காடுமலை, சேலம் மாவட்டம்
3. ஆழியூத்துமலை, சேலம் மாவட்டம்
4. பச்சைமலை, சேலம் மாவட்டம்
5. கல்ராயன்மலை, சேலம் மாவட்டம்
6. ஜவ்வாது/ஏலகிரிமலை, வேலூர் மாவட்டம்.
7. கல்ராயன்மலை, விழுப்புரம் மாவட்டம்
8. பச்சமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
9. சித்தேரிமலை, தருமபுரி மாவட்டம்

மேற்கூறிய பகுதிகளில் வாழும் பழங்குடியினர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவும், பழங்குடியினக் குடும்பங்களிலுள்ள அனைவரும் பங்கேற்கும் வகையில் கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு, சமுதாய வளர்ச்சி, சாலைவசதி, குடிநீர், மின்சாரம், வனத்திட்டங்கள், தோட்டக்கலை, வீட்டுவசதி, சிறுபாசனம், வயதுவந்தோருக்கான முறைசாராக் கல்வி, பட்டுவளர்ப்பு, மண்வளப்பாதுகாப்பு, கிராமக் கைத்தொழில், ஆரம்ப சுகாதாரம், பொது மருத்துவம், சமூகநலம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2. பழங்குடியினர் துணைத்திட்டத்தின்கீழ் ஒரு பகுதியாக இத்திட்டங்களைச் செயல்படுத்தும் துறைத்தலைவர்களிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

3. நடப்பு நிதியாண்டில் (1997-98) பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்களைத் தொடர்புடைய துறைகளின் மூலம் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது. இவ்வாணையில் ஒப்பளிக்கப்படும் செலவினங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் அடிப்படையில் அமைந்துள்ளன. பணியாளர்களுக்குத் தேவைப்படும் செலவினத்தை அந்தத் துறைகளே ஏற்கவேண்டும். சேவைத் துறைகளான மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலம், கல்வி ஆகியவற்றிற்கு மட்டும் இன்றியமையாத தேவையின் அடிப்படையில் ஓரளவு பணியாளர் செலவினத்தைப் பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் கருதப்படலாகும்.

***1. கால்நடைப் பராமரிப்பு***

(I) கால்நடைப் பராமரிப்புத்திட்டத்தில் கீழ்க்காணும் திட்டங்களை ரூ. 68,99,450.00(ரூபாய் அறுபத்து எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஒனபதாயிரத்து நானூற்றைம்பது மட்டும்) செலவினத்தில் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது.

***(அ) கறவை மாடுகள் வழங்குதல்:***

இத்திட்டத்தின் கீழ் 150 அலகுகள் கறவைப் பசுக்கள் பழங்குடியினப் பயனாளிகளுக்கு வழங்க ரூ.15,01,750/ (ரூபாய் பதினைந்து இலட்சத்து ஆயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) செலவினத்துக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்தொகை பழங்குடியினப் பயனாளிகளுக்கு மானியம் வழங்கவும், 5 விழுக்காடு காப்பீட்டுத்தொகை வழங்கவும், தடுப்பூசிச் செலவினத்துக்காகவும் பயன்படுத்தப்படும். இச்செலவினப் பட்டியல்கள் இவ்வாணையில் இணைப்பு I இல் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.12000/-மதிப்பில் இரண்டு கறவைப் பசுக்கள் வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படும். விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த கல்ராயன் மலையைப் பொருத்தமட்டில் இம்மானியத்தொகை 75 விழுக்காடு ஆகும். இத்திட்டத்தில் வழங்கப்படும் கறவைப்பசுக்கள் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி வரையறுத்துள்ள விலைக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

***(ஆ) செம்மறி ஆடுகள் வழங்குதல்:***

இத்திட்டத்தின்கீழ் 240 அலகுகள் செம்மறி ஆடுகள் பழங்குடியினப் பயனாளிகளுக்கு வழங்க ரூ. 23,43,200/- (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) செலவினத்துக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்தொகை பழங்குடியினப் பயனாளிகளுக்கு மானியம் வழங்கவும், காப்பீட்டுத் தொகை வழங்கவும், போக்குவரத்துச் செலவினங்களை ஏற்கவும் பயன்படுத்தப்படும். இச்செலவினப் பட்டியல்கள் இவ்வாணையின் இணைப்பு-I (அ)-இல் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு ரூ. 18,000/- மதிப்பில் 20 ஆட்டுக் கடாரிகளும் ஒரு ஆட்டுக் கடாவும் வழங்கப்படும். இதில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படும். விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த கல்ராயன் மலையைப் பொருத்தமட்டில் இம்மானியத் தொகை 75 விழுக்காடு ஆகும். இத்திட்டத்தின்கீழ் ஆடுகளை வளர்க்கவும் இனப்பெருக்கம் செய்யவும் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு பயனாளிக்கும் ஆடுகளைப் பட்டி கட்ட ரூ. 300/- மானியமாக அளிக்கப்படும்.

2. இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ள கால்நடைத் தீவனச் செலவினத்தைச் சிறிது சிறிதாகத் தேவைக்கேற்றபடி பட்டியல்கள் கொடுத்து தொடர்புடைய கருவூலங்களிலிருந்து பெற கால்நடைத் துறை உதவி இயக்குநர்களுக்கு அரசு அனுமதி அளிக்கிறது. பழங்குடியினப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு, வழங்கப்பட்ட நாளிலிருந்து எட்டு மாதங்களுக்குத் தீவனங்கள் வழங்கப்பட வேண்டுமாதலால் இக்கால்நடைத் தீவனங்கள் 1997-98 ஆம் நிதியாண்டிற்குப் பின்னரும் தேவைப்படின் 1998-99 ஆம் நிதியாண்டிலும் தீவனங்களுக்கான செலவினத்தைப் பெற்று வழங்கக் கால்நடைத்துறை உதவி இயக்குநர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

3. பழங்குடியினர் துணைத் திட்டத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட ஒன்பது கால்நடை மருந்தகங்கள், ஒன்பது நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் மூன்று துணை நிலையங்களை மேலும் தொடர ரூ. 30,54,400/- (ரூபாய் முப்பது இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து நானூறு மட்டும்) செலவுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது. இந்நிலையங்களுக்கான பணியாளர் செலவினத்தை 1-4-1998 தொடங்கி கால்நடைப் பராமரிப்புத் துறையே தனது துறைச் செலவினத்தில் மேற்கொள்ள வேண்டும்.

4. மேலும் பத்தி 1 (அ) (ஆ)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"2403 00 கால்நடை வளர்ப்பு 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II. மாநிலத் திட்டம் - ஜே.ஏ. விலங்குகள், பறவைகள் வழங்குதல்".
(த.தொ.கு.2403 00 796 ஜே.ஏ. 0005)

**2. கூட்டுறவு:**

(1) கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் உள்ள பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இணைப்பு 2-இல் விவரிக்கப்பட்டுள்ளபடி ரூ. 84.64 இலட்சத்திற்கான (ரூபாய் எண்பத்து நான்கு இலட்சத்து அறுபத்து நாலாயிரம் மட்டும்) செலவுகளை மேற்கொள்வதற்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது.

2. மேலே ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைகளைப் பெற்று பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க சென்னை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத் துணைப் பதிவாளருக்கு (பண்ணை) அதிகாரம் அளிக்கப்படுகிறது.

3. இச்செலவினங்கள் கீழே கூறப்பட்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்றிடப்படுதல் வேண்டும்.

"2425 கூட்டுறவு - 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் - II. மாநிலத் திட்டம் - ஜே.ஏ. பழங்குடியினர் பகுதிகளில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவி - 11. மானியம் (த.தொ.கு. 2425 00 796 ஜே.ஏ. 1106)".

**3. சமுதாய வளர்ச்சி:**

(1) சமுதாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் தாலுக்கா பச்சை மலைப்பகுதியில் உள்ள வண்ணாடு புதூர் பகுதியில் உள்ள உண்டு உறைவிடப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டித்தர ரூ. 5.23 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(2) மேலே பத்தி (1)-இல் ஒப்பளிக்கப்பட்ட பணியினை தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளதால் மேற்படி தொகையினை தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களுக்குப் பெற்று வழங்குமாறு ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(3) இப்பணியினை ஒப்படைத்த நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் முடித்து அதற்கான அறிக்கையை தாட்கோ மேலாண்மை இயக்குநர் அரசுக்கு அனுப்பி வைக்கலாகும்.

(4) இச்செலவி...த்தைப் பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்க...

"2515 00 - இதர ஊர... வளர்ச்சித் திட்டம் - 796 பட்டியல் பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐ...தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - ஜே.ஏ. ஒருங்கிணைந்த பழங்குடியினர் ...மம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சமுதாய வானொலிப் பெட்டிகள் வழங்குவது 09. உதவி மானியங்கள்".
(த.தொ.கு. 2515 00 796 - ஜே.ஏ. 0902)

**4. வனத்துறை:**

(1) பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதிகளில் கீழ்க்காணும் வனத்துறைத் திட்டங்களை ரூ. 147.70 இலட்சம் (ரூபாய் நூற்று நாற்பத்து ஏழு இலட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்) செலவினத்தில் இணைப்பு-3 (அ) (ஆ)-இல் உள்ளவாறு செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது.

| | திட்டம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | காடு வளர்ப்பு 376 எக்டேர் இணைப்பு-3 (அ)படி | 31.20 |
| 2. | பழங்குடியினர் கிராமக் காடுகள் (5 நிலையங்கள்) சந்தனப் பண்ணைகள் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்கள் இணைப்பு-3 (ஆ) படி | 18.50 |
| 3. | பணியாளர் ஊதியம் | 98.00 |
| | மொத்தம் | 147.70 |

(ரூபாய் நூற்று நாற்பத்து ஏழு இலட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்)

(2) இத்திட்டத்தினை செயல்படுத்த பழங்குடியினர்களையே பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்றும், அவர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்றும் இப்பணிகள் ஒப்பந்தக்காரர் மூலம் செயல்படுத்தப்பட வேண்டியிருப்பின் பழங்குடியின் ஒப்பந்தக்காரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் தேவைப்படின் இப்பணிகளை நியமனம் மூலம் பழங்குடியினர்களுக்கு வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது. முதன்மை வனத்துறைத் தலைவர் அவர்கள் இத்திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து அவ்வப்போது அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(3) இச்செலவினங்கள் ஒவ்வொரு திட்டத்திற்கும் இணைப்பு 3(இ)-இல் கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்றுவைக்கலாம்.

*5. தோட்டக்கலை:*

(1) பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் திட்டங்களை ரூ. 114.890 இலட்சம் செலவினத்தில் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது. இச்செலவினத்தில் ரூ. 40.00 இலட்சம் மைய அரசிடமிருந்து பெறப்படும் மத்திய சிறப்பு நிதியிலிருந்து சரிக்கட்டப்படும்.

(அ) பழங்குடியினர் தனிப்பட்ட பழத்தோட்டப் பண்ணைகளை அமைக்க பழங்குடியினருக்கு உதவும் திட்டத்திற்கு ரூ. 56.960 இலட்சம் (ரூபாய் ஐம்பத்து ஆறு இலட்சத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) செலவினம் மேற்கொள்ள அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது. இத்திட்டம் வழக்கம்போல இணைப்பு 4(அ)-இல் கண்ட விவரத்தின்படி செயல்படுத்தப்படும்.

(ஆ) அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள் இணைப்பு 4(ஆ)-இல் கண்டபடி பராமரிப்பதற்கான செலவு ரூ. 22.93 இலட்சம் (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரம் மட்டும்) மேற்கொள்ள அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது.

(2) தோட்டக்கலைத் துறையில் பணியாளர் ஊதியம், ஊர்திச் செலவு மற்றும் இதர அலுவலகச் செலவுகள் ஆகியவற்றுக்கென ரூ. 35.00 இலட்சம் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளப்பட அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது. 1-4-98 முதல் இப்பண்ணைகளை பழங்குடியினரே மேற்கொள்ளும் வகைமுறைகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலர் தோட்டக்கலைத் துறை இயக்குநருடனும், வேளாண்மை துறை அரசுச் செயலருடனும் ஆய்வு மேற்கொண்டு 1997 செப்டம்பர்-அக்டோபருக்குள் தக்க ஆணைகள் பிறப்பிக்கலாம்.

(3) மேலே பத்தி (1) (அ) (ஆ)-இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையைப் பெறவும், அவற்றைத் தொடர்புடைய அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள் வசம் பிரித்தளிக்கப்படவும், தக்கவாறு முறைப்படி செலவிடப்படவும் அரசு அனுமதி அளிக்கிறது.

(4) மேலுள்ள பத்திகளில் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் கீழ்க்கூறிய கணக்குத் தலைப்புகளில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*பத்தி (1):*

*2401 00 பயிர் வளர்ப்பு - 796 பட்டியல் பழங்குடியினர் பகுதிகளில் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - ஜே.ஏ. பழங்குடியினர் பகுதிகளில் வேளாண்மைத் திட்டங்கள் - தோட்டக்கலை, மலைத்தோட்டப் பயிர்கள் துறை இயக்குநரால் நிறைவேற்றப்படுபவை (2401 00 796 ஜே.ஏ. 0007) மற்றும் ஜே.பி. சேலம் மாவட்டம் கல்ராயன் குன்றுகள், கொல்லிமலை ஆகிய இடங்களில் உள்ள பழங்குடியின மக்களுக்கான பெரிய அளவில் பழத்தோட்டங்கள் அமைத்தல்.*
*(த.தொ.கு.2401 00 796 ஜே.பி. 0005).*

*பத்தி (2):*

*2401 00 பயிர் வளர்ப்பு - 796 பட்டியல் பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - ஜே.எப். சேலம் மாவட்டம் கொல்லிமலை மற்றும் கல்ராயன் குன்றுகளில் பழங்குடியினருக்கான பெரிய அளவிலான பழத்தோட்டம் அமைக்கும் திட்டத்தின்கீழ் நடைமுறைச் செலவுகள்.*
*(த.தொ.கு.2401 00 796 ஜே.எப். 0007).*

தகரகுப்பம், சிறுமலை (அருநூத்துமலை) படசோலை பண்ணைகள்

2401.00 பயிர் வளர்ப்பு 796 பட்டியல் பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II. மாநிலத் திட்டம் - ஜே.ஈ. பழங்குடியினர் பகுதிகளில் தோட்டக்கலை திட்டங்களின்கீழ் நடைமுறைச் செலவுகள்.
(த.தொ.கு. 2401-00-796 ஜே.ஈ-0009).

*6. சிறுபாசனம்:*

(1) பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதிகளில் இணைப்பு 5-இல் உள்ளவாறு சிறுபாசனத் திட்டங்களை ரூ. 23.00 இலட்சம் (ரூபாய் இருபத்து மூன்று இலட்சம் மட்டும்) செலவினத்தில் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது. இச்செலவினத்தில் ரூ. 10.00 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்படும் சிறப்பு மத்திய நிதியிலிருந்து சரிக்கட்டப்படும்.

(2) இச்செலவினத்தைக் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கவேண்டும்.

"2225 பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02. பட்டியல் பழங்குடியினர் நலன் - 796 பட்டியல் பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - ஜே.ஈ. பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் சிறு பாசனத் திட்டங்கள் - 17. சிறுபணிகள்".
(த.தொ.கு. 222-02-796-ஜே.ஈ.-1706)

**7. மண்வளப் பாதுகாப்பு:**

(1) பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் இணைப்பு 6-இல் உள்ளவாறு மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களை ரூ. 70.00 இலட்சம் (ரூபாய் எழுபது இலட்சம் மட்டும்) செலவினத்தில் நூறு சதவீத மானியத்தில் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது. இச்செலவினத்தில் ரூ. 30.00 இலட்சம் மைய அரசால் வழங்கப்படும் சிறப்பு மத்திய நிதியிலிருந்து சரிக்கட்டப்படும்.

(2) இச்செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கவேண்டும்.

"2402 00 மண்வள நீர்வளப் பாதுகாப்பு - 796. பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II. மாநிலத் திட்டம் - ஜே.ஏ. பழங்குடியினர் பகுதி துணைத் திட்டப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள்".
(த.தொ.கு. 2402-0-796 ஜே.ஏ.-0006).

4. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. காண்க 8-8-97 நாளிட்ட நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 175/சி.செ./97.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி,**
*அரசுச் செயலாளர்.*

*பெறுநர்:*

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, சென்னை-6.
கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைப் பதிவாளர், என்.வி. நடராசன் மாளிகை, 170, பெரியார் ஈ.வெ.ஆர். நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-10.
ஊரக வளர்ச்சி இயக்குநர், பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை, சென்னை-15.
முதன்மை வனத்துறைத் தலைவர், பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை, சென்னை-15.
தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர், 735 அண்ணா சாலை, சென்னை-2.
பொறியாளர் முதல்வர், தலைமைப் பொறியாளர் (பொது) நீர் நிலவள நிறுவனம், சென்னை-5.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)
சென்னை-35.
தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், அண்ணா
பட்டு வளாகம், (2-வது மாடி) திருவள்ளுவர் சிலை அருகில்,
சேலம்-636 001.
மாட்ட ஆட்சித் தலைவர், சேலம்.
மாட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை.
மாட்ட ஆட்சித் தலைவர், வேலூர்.
மாட்ட ஆட்சித் தலைவர், தர்மபுரி.
மாட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி.
மாட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம்.
மாட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம்.
மாட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல்.
மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-6.
மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-6. (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-18.
மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-18.
(பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-35.
மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-35.
(பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
மாவட்டக் கருவூல அலுவலர்கள், சேலம், திருவண்ணாமலை,
வேலூர், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், காஞ்சிபுரம்,
நாமக்கல்.

நகல்:

கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, சென்னை-9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.
சென்னை-9.
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-9.
சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை, சென்னை-9.
வேளாண்மைத் துறை, சென்னை-9.
பொதுப்பணித்துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.
துணைச் செயலாளர், இந்திய அரசு நல அமைச்சகம் (பமே)
சாஸ்திரி பவன், புதுடில்லி-110 001.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அ.ந.) (கமபி) துறை,
சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கே.எஸ். கோபால்,
பிரிவு அலுவலர்.

அரசாணை (4டி) எண்.11 ஆதி(ம) பந துறை, நாள் 3-9-97

**இணைப்பு-1** **கால்நடை பராமரிப்பு**

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

## பழங்குடியினப் பயனாளிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டு கறவைப் பசுக்கள் வழங்குவதற்கான ஒட்டுமொத்தத் தேவையைக் காட்டும் அறிக்கை

| வ.எண். | மாவட்டம்/ மலைப்பகுதியின் பெயர் | வழங்கப்பட உள்ள அலகுகளின் எண்ணிக்கை | அலகு ஒன்றின் விலை ரூ. | மானியம் 50%-70% * | காப்பீட்டுத் தொகை | வெக்கை நோய்த் தடுப்பூசி ஒரு அலகுக்கு ரூ. 40/- வீதம் தொகை ரூபாய் | தீவனத்துக் கான தொகை | அலகு ஒன்றுக்கு போக்குவரத்துச் செலவு ரூ. 500/- வீதம் ரூபாய் | பயிற்சிக் கான தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| **அ.** | **சேலம் மாவட்டம்** | | | | | | | | | |
| 1. | கொல்லி | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| 2. | ஏற்காடு | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| 3. | கல்ராயன் | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| 4. | பச்சமலை | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| 5. | அருநூத்துமலை | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| **ஆ.** | **திருவண்ணாமலை** | | | | | | | | | |
| 6. | ஜவ்வாது | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| **இ.** | **வேலூர்** | | | | | | | | | |
| 7. | ஏலகிரி | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| **ஈ.** | **தர்மபுரி மாவட்டம்** | | | | | | | | | |
| 8. | சித்தேரி | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| **உ.** | **திருச்சிராப்பள்ளி** | | | | | | | | | |
| 9. | பச்சமலை | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,45,675 |
| **ஊ.** | **விழுப்புரம்** | | | | | | | | | |
| 10. | கல்ராயன் | 15 | 12000 | 90000 | 9000 | 600 | 36000 | 7500 | 2575 | 1,40,675 |
| | **மொத்தம்** | **150** | .. | **945000** | **90000** | **6000** | **360000** | **75000** | **25750** | **15,01,750** |

(*) மானியத் தொகை வீதம் .. வ.எண்.1 முதல் 9 .. 50%

வ.எண்.10 .. 75%

/உண்மை நகல்/

## இணைப்பு-1(ஆ)

### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (கால்நடை பராமரிப்பு)

**பழங்குடியினர் பயனாளிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டு செம்மறி ஆடு அலகுகள் வழங்குவதற்கான ஒட்டு மொத்தத் தேவையைக் காட்டும் அறிக்கை**

| வ.எண். | மாவட்டம்/ மலைப் பகுதியின் பெயர் | வழங்கப்பட உள்ள அலகுகளின் எண்ணிக்கை | அலகு ஒன்றின் விலை ரூபாய் | மொத்த மானியம் 50%-75% * | அலகு ஒன்றுக்கு ரூ. 200 வீதம் மொத்தமான சுகாதார மற்றும் நோய்த் தடுப்புக்கான செலவு ரூபாய் | மொத்தப் பயிற்சித் தொகை ரூபாய் | பெரு மொத்தத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| அ. | சேலம் மாவட்டம் | | | | | | |
| 1. | கொல்லி | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| 2. | ஏற்காடு | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| 3. | கல்ராயன் | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| 4. | பச்சமலை | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| 5. | அருநூத்துமலை | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| ஆ. | திருவண்ணாமலை | | | | | | |
| 6. | ஜவ்வாது | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| இ. | வேலூர் | | | | | | |
| 7. | ஏலகிரி | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| ஈ. | தர்மபுரி மாட்டம் | | | | | | |
| 8. | சித்தேரி | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| உ. | திருச்சிராப்பள்ளி | | | | | | |
| 9. | பச்சமலை | 24 | 18,000 | 2,16,000 | 4,800 | 2,720 | 2,23,520 |
| ஊ. | விழுப்புரம் | | | | | | |
| 10. | கல்ராயன் | 24 | 18,000 | 3,24,000 | 4,800 | 2,720 | 3,31,520 |
| | **மொத்தம்** | **240** | .. | **22,68,000** | **48,000** | **27,200** | **23,43,200** |

* மானியத் தொகை வீதம் வ.எண். 1-9 .. 50% வ.எண். 10 .. 75%

/உண்மை நகல்/

## இணைப்பு-2 (கூட்டுறவு)

### பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதிகளிலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

| நடைமுறையிலுள்ள திட்டங்கள் | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப் பகுதிகள் | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டமில்லாத பகுதிகள் | மொத்தம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. உறுப்பினர்களுக்கு பங்குத் தொகை மானியம் | 4.74 | 0.38 | 5.12 |
| 2. வட்டி மானியம் | 74.50 | 0.95 | 75.45 |
| 3. போக்குவரத்து மானியம் | 1.76 | 0.33 | 2.09 |
| 4. வாகனங்கள் பராமரிப்புக்கான மானியம் | 1.76 | 0.22 | 1.98 |
| மொத்தம் | **82.76** | **1.88** | **84.64** |

(உண்மை நகல்)

## இணைப்பு-3(அ) காடு வளர்ப்பு

ரூ. இலட்சத்தில்

| வ.எண். | மேற்கொள்ளப்படவுள்ள பணிகளின் விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| **(அ)** | **சேலம் மாவட்டம்-கொல்லிமலை (சேலம் மாவட்டம்) :** | |
| 1. | 6 எக்டேர் பரப்பில் ரூ. 3900 கணக்கில் சீகைக்காய்ப் பயிரிடுதல் | 0.23 |
| 2. | 15 எக்டேர் பரப்பில் ரூ. 5100 வீதம் பலா மரப் பயிர் எழுப்புதல் | 0.76 |
| 3. | 1995-96, 1996-97ஆம் ஆண்டுகளில் 45 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட பழைய மரக்கன்றுகளை எக்டேர் ஒன்றுக்கு ரூ. 600 வீதம் பராமரித்தல் | 0.26 |
| 4. | மரக்கன்றுகளை உண்டாக்கி பழங்குடியினருக்கு வழங்குதல்-வேளாண் காடுகள் திட்டத்தின்கீழ் கன்று ஒன்றுக்கு ரூ. 2 வீதம் 25000 கன்றுகள் அளித்தல் | 0.50 |
| 5. | மரக்கன்றுகளை கவனித்து, பராமரித்து வெற்றிகரமாக பிழைக்கும் வகையில் செயல்படுத்திய பழங்குடியினருக்கு ஊக்குவிப்பு நிதித்தொகை அளித்தல் - ஒரு கன்றுக்கு ரூ. 2.50 வீதம் 20000 கன்றுகளுக்கு | 0.50 |
| | | **2.25** |
| **(ஆ)** | **சேலம் மாவட்டம், ஏற்காடுமலை :** | |
| 1. | பலா உட்பட்ட பல சிறுவன மகசூல் தரும் பயிர்கள் 30 எக்டேர் பரப்பில் உண்டாக்கி வளர்த்தல் எக்டேருக்கு ரூ. 4200 வீதம் 30 எக்டேர் | 1.26 |
| **(இ)** | **ஆத்தூர் கோட்டம்-பச்சமலை, பெரிய கல்ராயன்மலை மற்றும் அறுநூத்துமலை :** | |
| 1. | பச்சமலை பெரிய கல்ராயன் மலை, அறுநூத்துமலைப் பகுதிகளில் ஒவ்வொரு பகுதியிலும் 5 எக்டேர் வீதம் 15 எக்டேர் பரப்பில் சீகைக்காய் பயிர் வளர்த்தல் - எக்டேருக்கு ரூ. 3900 | 0.59 |
| 2. | பச்சமலை, பெரிய கல்ராயன்மலை, அறுநூத்துமலைப் பகுதிகளில் ஒவ்வொரு பகுதியிலும் 5 எக்டேர் வீதம் 15 எக்டேர் பரப்பில் பலா மரப்பயிர் உண்டாக்கி வளர்த்தல் - எக்டேருக்கு ரூ. 5100 வீதம் | 0.77 |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| 3. | பழைய மரக் கன்றுகளை 1-ஆவது, 2-ஆவது ஆண்டுகள் பராமரித்தல் 132 எக்டேர்-எக்டேருக்கு ரூ. 600 வீதம் | 0.79 |
| 4. | மரக்கன்றுகளை உண்டாக்கி பழங்குடியினருக்கு வழங்குதல் வேளாண் காடுகள் திட்டத்தின்கீழ் கன்று ஒன்றுக்கு ரூ. 2.00 வீதம், 30000 கன்றுகள் பச்சமலை, பெரிய கல்ராயன்மலை, அறுநூத்துமலை பகுதிகளில் பகுதி ஒன்றுக்கு 10000 கன்றுகள் வீதம் | 0.60 |
| | | **2.75** |
| **(ஈ) அரூர் கோட்டம் - சித்தேரி மலைகள் :** | | |
| 1. | 60 எக்டேரில் எக்டேருக்கு ரூ. 3850/- வீதம் சந்தன மர நாற்றுகள் எழுப்புதல் | 2.31 |
| 2. | வேளாண்-வனத் திட்டத்தில் நாற்று ஒன்றுக்கு ரூ. 20 வீதம் 20000 நாற்றுகள் எழுப்பி வழங்குதல் | 0.40 |
| 3. | பழைய பயிர்களை பாதுகாத்துப் பராமரித்தல் எக்டேருக்கு ரூ. 600 வீதம் 60 எக்டேர்களுக்கு | 0.36 |
| | | **3.07** |
| **(உ) கள்ளக்குறிச்சி கோட்டம், கல்ராயன்மலை :** | | |
| 1. | 50 எக்டேரில், எக்டேர் ஒன்றுக்கு ரூ. 70000 வீதம் மூங்கில் தோட்டம் எழுப்புதல் | 3.50 |
| 2. | 20 எக்டேரில், எக்டேர் ஒன்றுக்கு ரூ. 4200 வீதம், காடுபடு பொருள்களான கடுக்காய், பலா மரத் தோட்டங்களை எழுப்புதல் | 0.84 |
| 3. | 1995-96, 1996-97 ஆம் ஆண்டுகளில் 390 எக்டேர்/5 கி.மீ. பரப்புக்கு மேல் எழுப்பப்பட்ட பழைய தோட்டப் பயிர்களை எக்டேர்/கி.மீ. ஒன்றுக்கு ரூ. 600 வீதம் பாதுகாத்துப் பராமரித்தல் | 2.34 |
| 4. | வேளாண்-வனத்திட்டத்தில் 20000 நாற்றுக்களை நாற்று ஒன்றுக்கு ரூ. 2 வீதம் எழுப்பிப் பழங்குடியினருக்கு வழங்குதல் | 0.40 |
| | | **7.08** |
| **(ஊ) வேலூர் மாவட்டம்-சவ்வாதுமலை :** | | |
| 1. | 25 எக்டேரில், எக்டேர் ஒன்றுக்கு ரூ. 7000 வீதம் பல்வகையான செடிகளை எழுப்புதல் | 1.75 |
| 2. | 10 கி.மீ. தூரத்திற்கு, 1 கி.மீ.க்கு ரூ. 7000 வீதம் சாலை நிழல் தரும் மரங்களை எழுப்புதல் | 0.70 |
| 3. | எக்டேர் ஒன்றுக்கு ரூ. 600 வீதம் 25 எக்டேரில் உள்ள பழைய தோட்டப் பயிர்களைப் பாதுகாத்துப் பராமரித்தல் | 0.15 |
| 4. | பழங்குடியினரின் பட்டா நிலத்தில் பயிரிடுவதற்காக இலவசமாகக் கொடுக்கப்பட்ட சந்தனமர நாற்றுக்களை நட்டு அவைகளை வெற்றிகரமாகப் பாதுகாக்க பிழைத்திருக்கும் கன்று ஒன்றுக்கு ரூ. 4 வீதம் 20000 நாற்றுகளுக்கு ஊக்குவிப்பு நிதித்தொகை வழங்க | 0.80 |
| | | **3.40** |
| **எ. வேலூர் மாவட்டம்-திருப்பத்தூர் கோட்டம் :** | | |
| 1. | எக்டேர் ஒன்றுக்கு ரூ. 7000 வீதம் 30 எக்டேர் பரப்பில் மூலிகை மற்றும் காடுபடு பொருட்கள் நாற்றுக்களை எழுப்ப | 2.10 |
| 2. | எக்டேர் ஒன்றுக்கு ரூ. 600 வீதம் 150 எக்டேரில் உள்ள பழைய தோட்டப் பயிர்களைப் பாதுகாத்துப் பராமரித்தல் | 0.90 |
| 3. | 50 பழங்குடியினக் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 20 வீதம் விலை ரூ. 15 வீதம் தென்னங்கன்றுகள் எழுப்பி இலவசமாக வழங்குதல் | 0.15 |
| 4. | 50 பழங்குடியினக் குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு 20 கன்றுகள் விலை ரூ. 30 என ஒட்டு மாமரக் கன்றுகள் வாங்கி | |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| 5. | பலா மற்றும் தேக்கு மரக் கன்றுகளை நாற்று ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 10000 நாற்றுக்களை வழங்க | 0.50 |
| | | **3.95** |

**ஏ. திருவண்ணாமலை மாவட்டம்-திருவண்ணாமலை**

| | | |
|---|---|---|
| 1. | 50 எக்டேரில், எக்டேர் ஒன்றுக்கு ரூ. 7000 வீதம் பல்வகையான செடிகளை எழுப்புதல் | 3.50 |
| 2. | 50 பழங்குடியினக் குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு 20 கன்றுகள் வீதம் விலை ரூ. 15 ஒன்று என தென்னங்கன்றுகளை எழுப்பி இலவசமாக வழங்குதல் | 0.15 |
| 3. | 50 பழங்குடியினக் குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு 20 கன்றுகள் வீதம் ரூ. 30 விலையில் ஒட்டு மா மரக் கன்றுகளை வாங்கி வழங்குதல் | 0.30 |
| | | **3.95** |

**ஐ. திருச்சிராப்பள்ளி மாவட்டம்-திருச்சிக் கோட்டத்திலுள்ள பச்சமலைப் பகுதி**

| | | |
|---|---|---|
| 1. | பழங்குடியினர் பகுதியில் 10 எக்டேர் பரப்பில் ஒரு எக்டேருக்கு ரூ. 3900 வீதம் சில்வர் ஓக் மரத் தோட்டங்களை எழுப்ப | 0.39 |
| 2. | பழங்குடியினர் நிலங்களில் செடி ஒன்றுக்கு ரூ. 21 வீதம் ஒட்டு முந்திரிச் செடிகளை எழுப்ப | 0.42 |
| 3. | 20 எக்டேர் பழங்குடியினர் சுற்றுப் பகுதிகளில் எக்டேர் ஒன்றுக்கு ரூ. 3900 வீதம் கடுக்காய் தோட்டம் எழுப்ப | 0.78 |
| 4. | பழங்குடியினர் பகுதிகளில் 20 எக்டேர் பரப்பில் எக்டேர் ஒன்றுக்கு ரூ. 7000 வீதம் மூங்கில் மரக் கன்றுகள் எழுப்ப | 1.40 |
| 5. | புறம்போக்கு மற்றும் பழங்குடியினரின் பட்டா நிலத்தில் பல்வேறு திட்டங்களின்கீழ் வெற்றிகரமாக எழுப்பிப் பாதுகாத்துள்ள பலவகை மரங்கள் /பயிர்களுக்கு, கன்று ஒன்றுக்கு ரூ. 2 வீதம் 25000 கன்றுகளுக்கு | 0.50 |
| | | **3.49** |

## சுருக்கம்

### காடு வளர்ப்புப் பணிகள்

| வ.எண். | கோட்டம் | பயிர் வளர்ப்பு பரப்பளவு | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சேலம் | 51 எக்டேர் | 3.51 |
| 2. | ஆத்தூர் | 30 எக்டேர் | 2.75 |
| 3. | அரூர் | 60 எக்டேர் | 3.07 |
| 4. | கள்ளக்குறிச்சி | 70 எக்டேர் | 7.08 |
| 5. | வேலூர் | 35 எக்டேர் | 3.40 |
| 6. | திருப்பத்தூர் | 30 எக்டேர் | 3.95 |
| 7. | திருவண்ணாமலை | 50 எக்டேர் | 3.95 |
| 8. | திருச்சி | 50 எக்டேர் | 3.49 |
| | | மொத்தம் | **31.20** |

/உண்மை நகல்/

## இணைப்பு 3(ஆ)

| வ.எண். | மையத்தின் பெயர் | கிராமத்தின் பெயர் | மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | (ரூ. இலட்சத்தில்) |
| 1. | திருவண்ணாமலை திருவண்ணாமலை கோட்டம் | மேல்கோமிட்டேரி | 1. கவனிக்கும் பணிகள்<br>2. வளரும் மரங்கள் தொகுதி மேம்படுத்தல்<br>3. மத்திய நாற்றங்கால்<br>4. அடிப்படை சந்தனமரப் பகுதிகள் ஏற்படுத்தல் | 3.00 |
| 2. | வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் கோட்டம் சவ்வாதுமலை | மேல்குட்டத்தூர் | மேற்படி | 3.00 |
| 3. | சேலம் மாவட்டம் பச்சைமலை, கல்ராயன் அறுநூத்துமலை, ஆத்தூர் கோட்டம் | 1. பொலநாடி<br>2. பள்ளிக்காடு<br>3. அறுநூத்துமலை<br>4. சானமட்டி<br>5. ஆலடிப்பட்டி<br>6. பெரியவேலம்பட்டி<br>7. சின்னவேலம்பட்டி<br>8. கண்கட்டி ஆலா<br>9. கீரைப்பட்டி<br>10. புழுதிக்குட்டை | மேற்படி | 3.00 |
| 4. | தர்மபுரி சித்தேரிமலை அரூர் கோட்டம் | 1. நொச்சிமுட்டை<br>2. எரக்கலான்காடை<br>3. தாழையூத்து<br>4. கருலாரம்பட்டி<br>5. கலசப்பாடி<br>6. அரசநாத்தம்<br>7. கொட்டக்காடு<br>8. புளியமரத்துவளவு<br>9. கிணத்துவளவு<br>10. ஜக்காம்பட்டி<br>11. நடுவளவு<br>12. ஆலனூர்<br>13. சித்தேரி<br>14. மாம்பாறை<br>15. நிலநன்கொடை<br>16. ஓமத்தை<br>17. மாத்துக்காடு<br>18. பரவளவு<br>19. கொண்டாளம்மடவூர்<br>20. கல்விவளவு | மேற்படி | 3.00 |
| | | | பச்சமலையில் பழங்குடியினர் நிலத்தில் மண்வளப் பாதுகாப்புக்கு அடுக்குத் தளம் அமைத்தல் மண் அரிப்பு தடுப்புச் சுவர்கள் அமைத்தல். எக்டேருக்கு 5000/- வீதம் 50 எக்டேர் | 2.50 |
| 5. | திருச்சிராப்பள்ளி, பச்சமலை திருச்சி கோட்டம் | | 1. கவனிக்கும் பணிகள் (Tending Operations)<br>2. வளரும் மரங்கள் தொகுதி மேம்படுத்தல்<br>3. மத்திய நாற்றங்கால்<br>4. அடிப்படை சந்தன மரப் பகுதி ஏற்படுத்துதல். | 3.00 |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| | | | பழங்குடியின மகளிர் பாவிதின் பைகளில் காடு வளர்ப்புப் பணிகளுக் காகவும் அவர்களுடைய நிலங்களில் பயிரிடுவதற்காகவும் 80,000 நாற்றுகளை எழுமி எழுப்புதல் | 1.00 |
| | | | | **18.50** |

## சுருக்கம்-19

| வ.எண். | கோட்டத்தின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை | காடு வளர்ப்புப் பணிகள் | பழங்குடியினர் நிலத்தை ஏற்ற இறக்கத் தளம் அமைத்தல்/மண் அரிப்புத் தடுப்புப் பணிகள் ஆகியவை மூலம் மேம்படுத் தப்பட்டுள்ள பரப்பு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை கோட்டம் | 3.00 | 1. கவனிக்கும் பணிகள் 2. வளரும் மரங்கள் தொகுதி மேம்படுத்தல் 3. மத்திய நாற்றங்கால் 4. அடிப்படை சந்தனமரப் பகுதி | |
| 2. | திருப்பத்தூர் (ஜவ்வாதுமலை) | 3.00 | | |
| 3. | ஆத்தூர் (பச்சமலை கல்ராயன், அறுநூத்துமலை) | 3.00 | | |
| 4. | அரூர் (சித்தேரி) | 5.50 | | 50 ஹெக்டேர் |
| 5. | திருச்சிராப்பள்ளி (பச்சமலை) | 4.00 | 8 குடும்பங்கள் | |
| | | **18.50** | **8** | **50 எக்டேர்** |

## சுருக்கம்

| | | | (ரூ. லட்சத்தில்) தொகை |
|---|---|---|---|
| 1. | காடு வளர்ப்பு | 376 எக்டேர் | 31.20 |
| 2. | பழங்குடியினர் கிராமக் காடுகள் (சந்தனப்பண்ணை) 5 மையம் | | 18.50 |
| | | | **49.70** |

## இணைப்பு-3(இ)

### வனத்துறை செலவினங்களுக்குரிய கணக்குத் தலைப்புகள்

| திட்ட விவரம் | ஒப்பளிப்புத் தொகை | கணக்குத் தலைப்பு |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | |
| | | 4406 - காடு வளர்ப்பு - வனவிலங்குகள் குறித்த மூலதனச் செலவு - 01. காடு வளர்ப்பு 796. பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II. மாநிலத் திட்டம் |
| மரங்கள் நடுதல் முதலியன [இனம் 1 பத்தி 4 (I) ஆணையில்] | 31.28 | JB. பழங்குடியினர் பகுதிகளில் மலைத்தோட்டங்கள் அமைத்தல் |
| 2. பழங்குடியினர் கிராமக் காடுகள் (சந்தனப்பண்ணைகள்) [இனம் 4 பத்தி 4 (I) ஆணையில்] | 18.50 | JD. சந்தமரத் தோட்டங்களில் துறைப் பணிகள் |
| | | 2406 - காடு வளர்ப்பும் வன விலங்குகளும் 01. காடு வளர்ப்பு 796. பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம். |
| **பணியாளர் ஊதியம்:** | | |
| [இனம் 3 பத்தி 4 (I) ஆணையில்] | | |
| பள்ளிகள், பழங்குடியினர் மாணவர் தங்கும் விடுதி ஆகியவற்றின் ஆசிரியர் முதலியோர் ஊதியம் | 39.00 | JA. பழங்குடியினர் பகுதிகளில் மலைத் தோட்டங்கள் அமைத்தல் |
| கல்ராயன் மலை வனப்பகுதி காடுகள் பராமரிப்பு மற்றும் வளர்ப்புக்கான பணியாளர் ஊதியம் முதலியன | 39.00 | JB. கல்ராயன் மலையிலுள்ள காடுகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் |
| சந்தனமரத் தோட்டங்களில் துறையின் பணிகளுக்காக உள்ள பணியாளர்கள் | 20.00 | JD. சந்தனமரத் தோட்டங்களில் துறையின் பணிகள் |

/உண்மை நகல்/

## தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் 1997-98

### இணைப்பு-4 (அ) தோட்டக்கலை

| வ.எண். | விபரம். | கல்ராயன்மலை சேலம் மாவட்டம். | | கல்ராயன்மலை விழுப்புரம் மாவட்டம். | | பச்சமலை மற்றும் சேலம் திருச்சி மாவட்டம். | | கொல்லிமலை நாமக்கல் மாவட்டம். | | சேர்வராயன்மலை சேலம் மாவட்டம். | | அருநூத்துமலை சேலம் மாவட்டம். | | சித்தேரிமலை தர்மபுரி மாவட்டம். | | ஏலகிரிமலை வேலூர் மாவட்டம். | | சவ்வாதுமலை திருவண்ணாமலை மாவட்டம். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொருள் | நிதி | பொருள் | நிதி | பொருள் | நிதி | பொருள் | நிதி | பொருள் | நிதி | பொருள் | நிதி | பொருள் | நிதி | பொருள் | நிதி | பொருள் | நிதி | பொருள் | நிதி |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| | | | | | | (ரூ. லட்சத்தில்) | | | | | | | | (ரூ. லட்சத்தில்) | | | | | | | |
| 1. | பழங்குடியினர் நிலத்தில் பழத் தோட்டம் அமைத்தல் ஒரு ஏக்கர்/பயனாளி ஒருவருக்கு | 400 | 7.00 | 400 | 7.00 | 400 | 7.00 | 400 | 7.00 | 400 | 7.00 | 400 | 7.00 | 200 | 3.5 | 200 | 3.5 | 200 | 3.5 | 3000 | 52.500 |
| 2. | இரண்டாம் ஆண்டு தொடர் நடவடிக்கை 3250 ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் | 450 | 0.45 | 500 | 0.50 | 450 | 0.45 | 500 | 0.50 | 250 | 0.25 | 250 | 0.25 | 250 | 0.25 | 300 | 0.30 | 300 | 0.30 | 3250 | 3.250 |
| 3. | தோட்டக்கலை பயிற்சி 9 நபர்களுக்கு 3 தோட்டக்கலை பண்ணைகளில் 120 நாட்களுக்கு தோட்டக்கலை செடிகள் உற்பத்தி வளர்ப்பு மற்றும் பராமரிப்பு மற்றும் தெரிந்துகொள்ள | 4 | 0.144 | .. | .. | | .. | 3 | 0.108 | .. | .. | 2 | 0.072 | .. | .. | .. | .. | .. | .. | 9 | 0.324 |
| 4. | இதர செலவினங்கள் போக்குவரத்து செலவினங்கள் | | 0.118 | .. | 0.118 | .. | 0.118 | .. | 0.118 | .. | 0.118 | .. | 0.118 | .. | 0.059 | .. | 0.060 | .. | 0.060 | .. | 0.886 |
| | | | **7.702** | | **7.618** | | **7.568** | | **7.726** | | **7.368** | | **7.440** | | **3.809** | | **3.860** | | **3.860** | | **56.960** |

/உண்மை நகல்/

## தோட்டக்கலை

### இணைப்பு 4 (ஆ)

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | சேலம், கருமான் துறையிலுள்ள மாபெரும் பழப்பண்ணைப் பராமரித்தல் | 13.13 |
| 2. | வேலூர் மாவட்டம், தகரகுப்பம் அரசு தோட்டக்கலைப் பண்ணையைப் பராமரித்தல் | 3.89 |
| 3. | சேலம் மாவட்டம் சிறுமலை (அறுநூத்து மலை) அரசு தோட்டக்கலைப் பண்ணையைப் பராமரித்தல் | 2.00 |
| 4. | சேலம் மாவட்டம் படசோலையிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையைப் பராமரித்தல் | 3.91 |
| | மொத்தம் .. | **22.93** |

## சி. பாசனம்

### (இணைப்பு -5)

| வ.எண். | மாவட்டம்/ வட்டம் | திட்டத்தின் பெயர் | செலவினம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் | தொன்னூர் கிராமம் வண்ணாடு குக்கிராமத்தில் குறுக்கேயுள்ள ஓடையில் தடுப்பணை கட்டுதல். | 5.00 |
| 2. | திருச்சிராப்பள்ளி, மாவட்டம், துறையூர் | டாப்செங்காட்டுப்பட்டி கிராமம், தென்புறநாடு குக்கிராமத்தில் குறுக்கேயுள்ள ஓடையில் தடுப்பணை கட்டுதல் | 5.00 |
| 3. | தர்மபுரி மாவட்டம் அரூர் | சித்தேரி மலையிலுள்ள சித்தேரி கிராமத்திலுள்ள ஜோலுது ஓடையில் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 7.00 |
| 4. | வேலூர் மாவட்டம் வேலூர் | ஜவ்வாது மலையிலுள்ள பீஞ்சமந்தை கிராமத்தில் அருகிலுள்ள முத்தம் குடிசைப் பகுதியில் குறுக்கே ஓடும் காட்டு ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல். | 6.00 |
| | | மொத்தம் | **23.00** |

## 26. மண்வள பாதுகாப்பு

### ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் - பழங்குடியினரின் துணைத்திட்டத்தின் கீழானது-1997-98 ஆம் ஆண்டிற்கு மலைவாழ் மக்களுக்கான மண்வளப் பாதுகாப்பு பணிகளில் முன்மொழியப்பட்டுள்ள பணிகளின் விவரம் (தொகை ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | பணியின்விவரம் | அலகு | விழுப்புரம் | | வேலூர் | | திருவண்ணாமலை | | தர்மபுரி | | சேலம் | | நாமக்கல் | | திருச்சி ராப்பள்ளி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கல்ராயன் மலை | | ஜவ்வாது மலை | | ஜமுனாமருதூர் ஜவ்வாது கல்-ராயன் மலைகள் | | சித்தேரி மலை | | சேர்வராய் பெரிய கல்ராயன், ஏற்காடு மலைகள் | | கொள்ளி மலைகள் | | பச்சமலை | | | |
| | | | பணி கள் | தொகை | பணி கள் | தொகை | பணி கள் | தொகை | பணி கள் | தொ. கை | பணி கள் | தொ கை | பணி கள் | தொ கை | பணி கள் | தொ கை | பணி கள் | தொ கை |
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. | 9. | 10. | 11. | 12. | 13. | 14. | 15. | 16. | 17. | 18. | 19. |
| 1. | சமஉயர கல்வரப்பு தாவர வகை தடுப்புடன் | ஹெக் டேர் | 43.00 | 5.20 | 25.00 | 3.03 | - | - | 37.00 | 4.50 | 75.00 | 9.08 | 65.00 | 7.87 | 40.00 | 4.84 | 285.00 | 34.52 |
| 2. | நிலமட்டம் செய்தல் | ஹெக்டேர் | - | - | 50.00 | 5.00 | 10.00 | 1.00 | 10.00 | 1.00 | - | - | - | - | - | - | 70.00 | 7.00 |
| 3. | நீர்கொண்டு செல்ல குழாய் அமைத்தல் | | - | - | 10.00 | 1.00 | 50.00 | 5.00 | 40.00 | 4.00 | - | - | - | - | - | - | 100.00 | 10.00 |
| 4. | பாசன தடுப்பு/அணை | எண்கள் | 1 | 1.25 | - | - | - | - | - | - | - | - | 2 | 2.50 | - | - | 3 | 3.75 |
| 5. | சிறிய தடுப்பு அணை தாவர வகை தடுப்புடன் | எண்கள் | 10 | 1.21 | - | - | 27 | 3.27 | - | - | 12 | 1.20 | - | - | 12 | 1.45 | 6 | 7.13 |
| 6. | நடுத்தர தடுப்பு அணை தாவர வகை தடுப்புடன் | எண்கள் | 4 | 2.20 | - | - | - | - | - | - | - | - | - | - | 6 | 3.30 | 10 | 5.50 |
| 7. | சட்டிக்கலைப்பை கொண்டுஉழுதல் | ஹெக் டேர் | - | - | - | - | 50 | 0.50 | 35.00 | 0.35 | - | - | - | - | 25 | 0.25 | 110 | 1.10 |
| 8. | காடு வளர்ப்பு | ஹெக்டேர்- | - | | 50 | 0.25 | | - | - | - | - | - | - | - | - | - | 5 | 0.25 |
| 9. | பண்ணைக் காடு | ஹெக்டேர் | - | - | 10 | 0.75 | - | - | - | - | - | - | - | - | - | - | 10 | 0.75 |
| | மொத்தம் | ஹெக்டேர் | 43.00 | 9.86 | 100 | 10.03 | 110 | 9.77 | 122 | 9.85 | 75 | 10.28 | 65 | 10.37 | 65 | 9.84 | 580 | 70.00 |
| | | | 15 | | | - | 27 | | | - | 12 | | 2 | | 18 | | 74 | |
| | பயனாளிகளின் எண்ணிக்கை எண்கள் | | 120 | | 120 | | 125 | | 120 | | 105 | | 105 | | 105 | | 800 | |

/உண்மை நகல்/

கே.எஸ். கோபால்
பிரிவு அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பழங்குடியினர் நலம் - தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மூலம் பழங்குடியினர்களுக்காக 1997-98-ம் ஆண்டில் திட்டங்களை செயல்படுத்துவது-ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே) துறை

அரசு ஆணை 3ப எண் 59 நாள்: 6-11-1997.

படிக்கப்பட்டது:

8-5-1997 மற்றும் 22-8-1997 நாட்களிட்ட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் அவர்களின் கடித எண் 19742/SSI (3)/97

**ஆணை:**

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் அவர்கள் 1997-98-ம் ஆண்டில் பழங்குடியினர்களுக்காக செயல்படுத்தப்பட வேண்டி பின்வரும் திட்டங்களை பார்வையில் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் அரசின் ஏற்புக்கு அனுப்பி உள்ளார்.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவீனம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | தேனீ வளர்ப்புத் தொழிலில் பழங்குடியினர்களுக்கு பயிற்சி அளித்தல் (ஜவ்வாதுமலை, கொல்லிமலை) | 580 | 3.625 |
| 2. | பழங்குடியினர் துணைத்திட்டப் பகுதிகளில் இலவசமாக தேன்கூடு வழங்குதல் (ஜவ்வாதுமலை, கொல்லிமலை) | - | 36.540 |
| 3. | தேனீ வளர்ப்பினை மேம்படுத்துவதற்கான பயிற்சி | 20 | 0.375 |
| 4. | பழங்குடியின தொழில் முனைவோரால் தேனீ வளர்ப்பு ஏற்படுத்துதல் | - | 5.000 |
| 5. | அபின்மல்லிபெரா தேனீ வளர்த்தலுக்கான முன்னோடித் திட்டம் (ஜவ்வாது மலை கொல்லிமலை) | - | 2.000 |
| 6. | ஊறுகாய் செய்வதற்கான பயிற்சி மற்றும் அதற்கான நிதி உதவி | 70 | 2.540 |
| 7. | புளியம்பழம் பதப்படுத்துவதற்கான உதவித் தொகை | 350 | 3.500 |
| | மொத்தம் .. | **1020** | **53.580** |

பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக தற்போது தற்காலிகமாக உள்ள 70 பணியிடங்களுக்கான பணியாளர் செலவீனமாக ரூ.40.00 இலட்சத்திற்கு நடப்பு நிதியாண்டில் 1996-97 ஒப்பளிப்பு கோரியுள்ளார்.

2. இக்கருத்துரு அரசால் கவனமாக ஆய்வு செய்யப்பட்டது. தீவிர ஆய்வுக்குப் பின்னர் 1997-98-ம் ஆண்டு பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் மேலே பத்தி 1-ல் உள்ள திட்டங்களுக்குள் வரிசை எண் 2-ல் உள்ள திட்டத்தினை மட்டும் இந்த ஆண்டில் செயல்படுத்துவதற்காக ரூ.36.540 இலட்சம் (ரூபாய் முப்பத்து ஆறு இலட்சத்து ஐம்பத்து நான்கு ஆயிரம் மட்டும்) செலவிடப்பட அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது. இதில் ரூ.10.00 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்படும் சிறப்பு மத்திய அரசு உதவி நிதியிலிருந்து ஈடு செய்யப்பட வேண்டும். மேலும் ரூ.13.070 இலட்சம் (ரூபாய் பதிமூன்று இலட்சத்து ஏழாயிரம் மட்டும்) பணியாளர்கள் செலவீனத்திற்காக அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது.

3. கருவூலம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர் அவர்கள் மேலே பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வைப்புத் தொகையாக கீழே குறிப்பிட்டுள்ள கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய அலுவல் பெயர் வைப்புத்தொகை கணக்குத் தலைப்பில் பற்று வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

K-Deposits and Advances - (b) Deposits not bearing interest-8443. Civil Deposits 800-Other Deposits-AE Deposit of Government Companies/Corporations, etc. 34 Deposit of Tamil Nadu Khadi and Village Industries Board.(D.P.Code.8443-00-800-AE-340.G)

4. இத்திட்டத்திற்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் மேற்கொள்ளப்படும்:-

2851-00 கிராமம் மற்றும் சிறுதொழில்கள் - 796 பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் - ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - JA பழங்குடியினர்களுக்காக தேன்கூடு வழங்குதல் -09-உதவி மானியங்கள்
(த.தொ.கு.2851-00-796-JA-0905)

5. இவ்வாணை நிதித்துறையின் 29-10-1997 நாளிட்ட அ.சா.எண் 360/சி.செ./97-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசுகாந்தி,**
அரசு செயலர்.

பெறுநர்

தலைமை செயல் அலுவலர்,
தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியம்,
சென்னை-108.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், 9ஜி-3, ராய் நகர், கொமாரசாமிப்பட்டி, சேலம்-7.
மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-18,
மாநில கணகாய்வுத் தலைவர்,
தமிழ்நாடு, சென்னை-35 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79.
மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-6.
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை-15.

நகல்:

செயலர்,
கைத்தறி, கைவினை பொருட்கள் கதர் மற்றும் துணிநூல்,
சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) மற்றும் (கமபி) துறை
துணைச் செயலர், மத்திய அரசு நல அமைச்சகம்,
புதுடில்லி-110 001.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**கே.என். கோபால்,**
பிரிவு அலுவலர்.